ஸம்புடம் 23] APRIL, 1935 [ஸஞ்சிகை 10

462

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

பவ ௵



பங்குனி ௴

PUBLISHED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha,

MADRAS.

ஸ்ரீ:

# விஷய ஸூசிகா.


1. ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்வரூபமும் தர்மமும்: -
   வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால்
   செய்யப்பட்ட உபந்யாஸம்]. ... 641
2. குருபக்தி:—(ஸ்ரீ. உப. V. S. வெங்கடேச பாட்டாச்சாரியர்) ... 649
3. ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்:—
   [ஸ்ரீ. உ. ப. வித்வான் ஐபா க்ருஷ்ணதாதாசார்யர்] ... 653
4. மீமாம்ஸா ஸங்க்ரஹம்:—[திவான் பஹதூர்
   ஸ்ரீ. உப. வி. கே. ராமானுஜாசார்யர்.] ... 658
5. க்ருஹஸ்தன் ஆவது எப்படி:—[ஸ்ரீ. உப. வே.
   பண்டித அனந்தாசார்யர், பச்சையப்பன் காலேஜ்] ... 669
6. க்ரந்த விமர்சம்:— ... 672
7. கடிதங்கள்:— ... 672
8. ஸம்பாதகீயம்:— ... 682
9. பரிகர விஜயம்:—[புத்தங்கோட்டகம் வித்வான்
   ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்.] ... 123
10. திவ்ய ஸூரி சரிதம்:—
   [வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 121


---


ஸ்ரீ:

## ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி —
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற
ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ர
ஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின்
வ்யாக்யானத்துடன் கூடியது] ... ... ரூ 0 8 0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை
யின் வ்யாக்யானத்துடனும் புத்தங்கோட்டகம்
வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய
வ்யாக்யானத்துடனும் கூடியது ... ... ரூ 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தியாகராயநகர் போஸ்ட்,
மதிராஸ்.

குரு உட்கார்ந்து சொல்லும்போது தான் நின்றுகொண்டும் அவர் நிற்கும்போது ஸமீபத்தில் நின்றுகொண்டும் அவர் தனக்கெதிராக வந்து சொல்லும்போது தானெதிர்கொண்டு போயும் அவர் நடக்கும்போது தான் பின்றொடர்ந்து ஓடிக்கொண்டும்,

அவர் பராங்முகமாக விருக்கும்போது அவர் முகத்துக் கெதிராக வந்தும் அவர் தூரத்திலிருக்கும்போது கிட்ட வந்தும், படுத்துக்கொண்டிருக்கும்போதும், சமீபத்திலிருக்கும்போதும், தன் தேஹத்தை வணங்கிக்கொண்டும் அவர் ஆஜ்ஞையைக் கேழ்க்கவும் மறுமொழி சொல்லவும் வேண்டியது.

குருவின் ஆஸநத்திற்கும் படுக்கைக்கும் தன் ஆஸநமும் படுக்கையும் தாழ்ந்திருக்கவேண்டியது. குரு பார்க்குமிடத்தில் தன்னிஷ்டப்படி ஆஸநத்திலுட்காரக்கூடாது.

குருவின் பெயரை அவரில்லாத இடத்திலும் குரு உபாத்யாயர் என்ற மரியாதை சொல்லன்றி சொல்லக்கூடாது. அவரது நடத்தை, நடை, சொல்லு, (அதாவது-அவர் பகவானை பூஜிக்கும்போதும், ஜபாதிகள் பண்ணும்போதும் செய்கிற செய்கையைப்போல் தானும் நடப்பது, அவரைப் போல் தானும் பேசுவது) இவைகளைத்தான் அநுஸரிக்கலாகாது.

எந்த விடத்தில் குருவிற்கு அபவாதமும் நிந்தையும் சொல்லப்படுமோ அவ்விடத்தில் தன் காதுகளை மூடிக்கொள்ளவேண்டியது.

சிஷ்யன் குருவைப் பழித்தால் கழுதையாகவும், நிந்தித்தால் (இருக்கின்ற தோஷத்தைச் சொல்வது - பழித்தல், இல்லாததைச் சொல்வது - நிந்தித்தல்) நாயாகவும், குருவின் தநத்தை (பொருளை) அநுபவித்தால் புழுவாகவும், அவர் பெருமையைக் கண்டு பொறாமைப்பட்டால் கீடமாயும் (உலண்டு பூச்சி) மாயும் பிறக்கிறான். தான் தூரத்திலிருந்துகொண்டு மற்றொருவனை அனுப்பி குருவிற்குப் பணிவிடை செய்விப்பது கூடாது. தனக்குக் கோபம் நேரிட்டிருக்கும்போதும், குரு பக்ஷியோடிருக்கும்போதும் தான் அங்கு போய் ஆஹாரம் செய்யக்கூடாது. வாஹநத்திலும் (உயர்ந்த) ஆஸநத்திலிருந்துகொண்டும் (குரு இருக்கும்போது) புஜிக்கக்கூடாது. இறங்கித்தான் புஜிக்கவேண்டும்.

எதிர் காற்று அடிக்கும்போதும் பின் காற்று அடிக்கும்போதும் குருவிற்கு எதிரில் உட்காருவது கூடாது. குருகேட்காதிருக்கும்போது அந்ய விஷயத்தை ஒருபோதும் தானாக சொல்வது கூடாது.

மாட்டுவண்டி, குதிரைவண்டி, ஒட்டகம், உப்ரிகை, படிகள், கற்பலகை, ஓடம் இதுகளில் சிஷ்யன் ஸமமாக உட்காரலாம்.

இப்படி அநேகமுறைகளிருக்கின்றன. அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதும் கஷ்டமல்ல. குருவானவர், நமக்கு வித்யையை போதித்து அதனால் காலவிசேஷத்தில் ஓர் பெரிய உத்யோகத்தைப் பெற்றுக்கொண்டு ஸுகமாக இருக்கும்படியான கார்யத்தை செய்து வைக்கிறவராகையால், அவரிடம் நாம் ஏன் இத்தனை மரியாதையோடு இருக்கக்கூடாது? குருவானவர் நமக்கு சொல்லிக் கொடுக்கும் வித்யைக்கு ப்ரத்யுபகாரமாக எதை அபேக்ஷிக்கிறார் என்றால், பணம் வாங்கிக்கொண்டாலும் அவ்வளவு ஸந்தோஷப்படாத கார்யம் ஒன்றே உளது. மரியாதையாக இருந்துகொண்டு, அவர் சொல்லிக்கொடுக்கும் பாடத்தை நன்றாக சிந்தனை பண்ணி, பதில் பாடம் சொல்லும்படியான அவ்வளவு திறமையை உண்டுபண்ணிக்கொண்டால், அதுதான் அவருக்கு மிகவும் ஸந்தோஷத்தை உண்டாக்கும்.

மாளவிகாக்நிமித்ரத்தில், கணதாஸர் என்பவரிடம் மஹாராணியானவள் தன் அந்தரங்கஸகியான மாளவிகையைக் கொண்டு விட்டு அவளுக்கு நாட்யத்தை சொல்லிக்கொடுக்கும்படி சொன்னாள். அவரும் அதேபடி கற்பித்து வைத்தார். ராணியானவள் ஒரு ஸமயம் தன் வேலைக்காரியை விட்டு மாளவிகை நன்றாகப் பாடம் கற்றுக்கொள்ளுகிறாளா? நன்றாக வருகிறதா? என்று கேட்டுவரும்படி அனுப்பினாள். அந்தப்படி அவளும் கணதாஸரைக் கேட்டாள். அவர் அவளுக்கு பதில் சொல்லுகிறார்:—

"யத்யத் ப்ரயோகவிஷயே பாவிகமுபதிச்யதே மயா தஸ்யை |
தத்தத் விசேஷகரணாத் ப்ரத்யுபதிசதீவ மே பாலா ||"

என்று பதில் சொன்னார். இதன் கருத்து:—

["பாடங்களில் என்ன என்ன விஷயங்களை நான் அவளுக்கு உபதேசிக்கிறேனோ; அவைகளை எல்லாம் அவள் மறுபடியும் எனக்கே நன்றாக உபதேசிக்கிறாள் போலிருக்கிறது" என்பது] கணதாஸர் சம்பளம் வாங்கிக்கொண்டாலும் தான் தன் சிஷ்யை நன்றாக படிக்கிறதைப்பற்றி ரொம்ப ஸந்தோஷப்படுகிறார் என்று தெரிகிறது. ஆகலால் குருவிற்கு நாம் படித்த பாடங்களை நன்றாகச் சிந்தனை பண்ணி மறுபடியும் சொல்லுவதில் இருக்கும் ஸந்தோஷம் உலகில் ஒன்றிலும் கிடையாது.

குருவினிடம் பாடம் கற்பிக்கவேண்டி சில ப்ரத்யுபகாரங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது:—

"குருசுச்ரூஷயா வித்யா புஷ்கலேந தநேந வா |
அதவா வித்யயா வித்யா சதுர்த்தோ நோபலப்யதே" இதி ||

462

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

# வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 23] பவ௵ பங்குனி மீ [ஸஞ்சிகை 10

ஸ்ரீ:

## ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்வரூபமும் தர்மமும்.

[இது, மாம்பலம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையில்,
[வங்கீபுரம் ஸ்ரீ. உப. வே. வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்]

(ஸஞ்சிகை 9, பக்கம் 613 தொடர்ச்சி)

ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்வரூபம் எப்படிப்பட்டது என்பது விவரிக்கப்பட்டது. இனி அவர்களால் அநுஷ்டிக்கப்படவேண்டிய தர்மங்கள் யாவை என்பதை விசாரிப்போம். அவைகளுள் ப்ரதானமானது என்னவென்றால், சாஸ்த்ரங்களில் விஹிதங்களாயுள்ள வர்ணாச்ரம தர்மங்களைத் தவறாது அவர்கள் அநுஷ்டித்தல் வேண்டும் என்பதே. இதை ஸ்ரீ தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் பரக்க அருளிச்செய்திருக்கிறார்.

"வேண்டிற்றுச் செய்து திரியவமையுமோவென்னில் அது இவனுக்கு ஸ்வரூபமன்று என்று அருளிச்செய்தபடியாலே '[illegible]' என்று ஆளவந்தார் அருளிச்செய்தபடியே சாஸ்த்ர விருத்தங்கள் தைவ ப்ரக்ருதியான இவன் ஸ்வரூபத்திற்குப் பொருந்தாமையாலும்,

158956



"ச்ருதி ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே |
ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ: ||"

[ச்ருதியும் ஸ்ம்ருதியும் என்னுடைய ஆஜ்ஞைகள். ஆகையால் அவைகளை மீறி நடக்கிறவன் என்னுடைய கட்டளையைக் கடந்தவனாவான்; அவன் என்னை த்ரோஹிக்கிறவனே. அவன் என்னிடம் பக்தி செய்பவனுனாலும் வைஷ்ணவனாகமாட்டான்] என்று அடிமை கொள்ளுகிறவன் அருளிச்செய்திருக்கிறபடியாலும் இவன் சரீரத்தோடிருந்த காலமெல்லாம் சாஸ்த்ர வச்யனாய் அடிமை செய்யவேண்டுமென்பது திருவுள்ளம்."

"அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்ய ச |
ஸங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதாஸ்தாபநாய ச ||
ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவதேவஸ்ய சார்ங்கிண: |
மநீஷீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத் ||"

[வேத விஹிதங்களான தர்மங்கள் உச்சிந்நங்களாகப் போகாமலிருக்கும் பொருட்டும், புத்ரன் முதலானவர்களைப் பரிபாலிக்கும்பொருட்டும், தத்வத்தை அறியாமலிருக்கும் ஸாமாந்ய ஜநங்களுக்கு தர்ம நிச்சயத்தைச் செய்விக்கும் பொருட்டும், நாலு வகைப்பட்டுள்ள வர்ணத்தாருக்குள் ஏற்பட்டிருக்கும் நியமம் குலையாமலிருக்கும் பொருட்டும், எனக்கும் விஷ்ணுவுக்கும் ஸந்தோஷம் உண்டாகும் பொருட்டும், பகவானைச் சரணமாக அடைந்தவர்கள் வைதிக ஆசாரங்களை மநஸ்ஸால் கூட தாண்டக்கூடாது] என்று பிராட்டியும் நியமித்திருக்கிறாள். இந்த விஷயத்தைப் பூர்ணமாக விசாரித்து, ஸ்ரீ தேசிகன் பின் வரும் காரிகைகளால் இதன் தாத்பர்யத்தை க்ரோடீகரித்திருக்கிறார்.

"ஆஜ்ஞாநுஜ்ஞாவிபாகேந த்வேதா சாஸ்த்ரீயபத்ததி: |
நிக்ரஹாநுக்ரஹாயாஸ்ய வ்யாஸாத் தத்த்வயே ||
அநுஜ்ஞயா ப்ரவ்ருத்தேऽபி கைங்கர்யாதிஸம்பவே |
ஆஜ்ஞாதிக்ரமதோஷஸ்ய ப்ராணியதோஷதா தத்யய: ||"

[சாஸ்த்ரீயமான ஸ்ரீ பகவத் கைங்கர்யத்தின் மார்க்கம், ஆஜ்ஞா கைங்கர்யமென்றும் அநுஜ்ஞா கைங்கர்யமென்றும் இருவகைப்படும். இவைகளுள் ஆஜ்ஞா கைங்கர்யத்தின் அநுஷ்டாநமானது பகவானுக்கு நம்மிடம் நிக்ரஹ புத்தி உண்டாகாமல் தடுக்கும்; அநுஜ்ஞா கைங்கர்யமானது அந்தந்த அநுஜ்ஞா கைங்கர்ய ப்ரகரணத்திற் சொல்லப்பட்டுள்ள பகவத் ப்ரீதியைப் பலமாகவுடையது. அநுஜ்ஞா கைங்கர்யத்தைச் செய்பவன் அந்தக் கைங்கர்யமானது பகவதாஜ்ஞைக்கு அவிருத்தமாயிருக்கின்றதா வென்பதைப் பார்த்தே அதில் ப்ரவர்த்தித்தல் வேண்டும். அவனுடைய ப்ரவ்ருத்தியானது பகவதாஜ்ஞைக்கு விருத்தமாக இருக்கும்படி ப்ரஸங்கித்தால், பகவதாஜ்ஞையைத் தாண்டினதால் உண்டாகும் தோஷம் அவனை விடமாட்டாது. ஆகையால் சாஸ்த்ரீய நியமங்களை ஒருவனும் மீறி நடக்கக் கூடாது].



"வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந் |
விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யத்தத்தோஷகாரக: ||"

[விஷ்ணுவை ஆராதிக்கும் முறையில் வர்ணாச்ரம விதிகளுக்கு உள்ளடங்கி அவனை ஆராதிப்பதே அவனுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கும். அந்த விதிகளை மீறி அவனை ஆராதிப்பது சரியான ஆராதநமாக மாட்டாது] என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விடத்தில் 'அந்ய: பந்தா:' (வேறு ஒரு வழியும்) என்று ஸாமாந்யமாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும், வாக்ய ஸ்வாரஸ்யத்தை அநுஸரித்து, அதற்கு, 'ச்ருதிஸ்ம்ருதி விஹிதபத்ததிக்ரமேண கேவலம் விஷ்ணோ: வ்ரதநாமஸங்கீர்த்தந திவ்யசேஷ்டிதாநுகரணாதி:' (ச்ருதி ஸ்ம்ருதிகளிற் சொல்லப்பட்டுள்ள நியமங்களைக் கடந்து விஷ்ணுவின் வ்ரதமென்றும் அவனுடைய நாம ஸங்கீர்த்தநமென்றும் அவனுடைய திவ்ய சேஷ்டிதங்களின் அநுகரணமென்றும் இத்யாதியான வ்யாபாரத்தைச் செய்வது) என்று விசேஷித்து அர்த்தம் கொள்ளவேண்டுமென்று பெரியோர்கள் நிஷ்கர்ஷித்திருக்கிறார்கள்.

இதனால் ஏற்படுவது என்னவெனில், பகவத் ப்ரீதியை அபேக்ஷிப்பவர்களெல்லாரும் பகவானுடைய ஆஜ்ஞையாகிற ச்ருதி ஸ்ம்ருதிகளுக்குக் கட்டுப்பட்டே நடத்தல் வேண்டுமென்பதே. ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் பகவத் ப்ரீதியையே எதிர்பார்ப்பவரானதால், அவர்கள் அவசியம் வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநங்களைக் கைவிடக்கூடாது என்பது தவிதம்.

சாஸ்த்ரம் இவ்விதம் விதிக்கையிலும், சில தேவாலயங்களில் பெருமாள் புறப்பாடு முதலான சில கைங்கர்யங்கள் ஸாயம் ஸந்த்யா காலங்களிலும், உத்ஸவாந்தத்தில் நடக்கவேண்டிய சாத்துமுறை முதலியவைகள் அகாலத்தில் உபக்ரமிக்கப்பட்டு மறுதினம் ஸூர்யோதயகாலம் அதிக்ரமிக்கும் வரையிலும் நடத்தப்பெற்று வருகின்றன. இன்னும் இம்மாதிரி சாஸ்த்ர விதிகளுக்கு விருத்தங்களான சில ஆசாரங்கள் பெரியோர்களால்

அநுமோதிக்கப்பட்டே பலவிடங்களில் அநுஷ்டாநத்தில் வந்துகொண்டிருக்கின்றன. இவையெல்லாம் பகவந் முகோல்லாஸத்திற்கு ஹேதுவாகுமோவென்பதே அடியேனுடைய சங்கை. இவை அநிவார்யங்களாக நேர்ந்தால், அப்பொழுது நாம் சக்த்யபாவத்தைக் கைப்பற்றி பகவந் நிக்ரஹத்திலிருந்து ஒரு விதமாகத் தப்பித்துக் கொள்ளலாம். இவை அப்படிப்பட்டவையல்ல. நமது பெரியோர்களெல்லாரும் இதைக் கொஞ்சம் பராமர்சித்து இதில் அசாஸ்த்ரீய அம்சம் இருக்கின்றது என்பதை அவர்கள் உணரும் பக்ஷத்தில் அந்த அசாஸ்த்ரீய ஆசாரம் நேராமல் இருக்கும்படி அந்தக் கைங்கர்யங்களைக் கொஞ்சம் சீர் படுத்த முயலவேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கின்றோம். வர்ண தர்மங்கள் அநாதரிக்கப்பட்டால் நமது வைதிகத்வமே போய்விடும்.

“ந சலதி நிஜவர்ணத⁴ர்மதோ ய:
ஸமமதிராத்மஸுஹ்ருத்³விபக்ஷபக்ஷே ।
ந ஹரதி ந ச ஹந்தி கிஞ்சிது³ச்சை:
ஸிதமநஸம் தமவேஹி விஷ்ணுப⁴க்தம் ॥”

(எவன் தனது வர்ணாச்ரம தர்மங்களிலிருந்து சலியாமலிருப்பவனாகவும் சத்ரு மித்ர உதாஸீநர்களெல்லாரிடத்திலும் ஸமமான புத்தியை உடையவனாகவும் பரஸ்வாபஹாரம் ஹிம்ஸை இவைகளிலிருந்து நிவ்ருத்தனாகவும் இருக்கிறானோ, அப்படிப்பட்ட அதிமாத்ர சுத்தமநஸ்கனாகிற பாக்யசாலியை உண்மையான விஷ்ணு பக்தனாக அறிந்துகொள்) என்று வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநமே விஷ்ணு பக்தனுக்கு முக்கியமான அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், அதைப் பரிபாலநம் செய்வதே வைதிகர்களான வைஷ்ணவர்களுக்கு ப்ரதாநதமமான தர்மமாகும்.

இந்தத் தர்மாநுஷ்டாநத்துடன் ஆத்ம குணபூர்த்தியும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அவச்யம் வேண்டுமென்று நமது சாஸ்த்ரங்கள் வற்புறுத்துகின்றன.

“விமலமதிரமத்ஸர: ப்ரஶாந்த:
ஶுசிசரிதோऽகி²லஸத்த்வமித்ரபூ⁴த: ।
ப்ரியஹிதவசநோऽஸ்தமாநமாயோ
வஸதி ஸதா³ தஸ்ய ஹ்ருதி³ வாஸுதே³வ: ॥”



[எவன் சுத்தமான மநஸ்ஸை உடையவனாகவும், மாத்ஸர்யமற்று சமதமாதி ஸம்பத்துக்களால் நிறைந்தவனாகவும், நல்வழியில் நடப்பவனாகவும், ஸகல ஜந்துக்களிடமும் மைத்ரியைக் கொண்டவனாகவும் எல்லாருக்கும் ப்ரியமாயும் ஹிதமாயுமுள்ள வாங்மநோவ்ருத்திகளைச் செய்பவனாகவும், மதம் மாநம் கபடம் இவை முதலிய தோஷங்களால் தொடப்படாதவனாகவும் இருக்கிறானோ, அவனுடைய ஹ்ருதயத்தில் எப்பொழுதும் பகவான் வஸிக்கிறான்) என்று மஹர்ஷிகள் சொல்லி இருக்கிறார்கள்.

ஸ்ரீ பாஷ்யகாரரும் பகவத் ப்ராப்திக்கு ஸாதநமாகிற பக்தியைப் பற்றி ப்ரஸ்தாவித்து வருமிடத்தில், பக்தி என்பது த்ருவையான அநுஸ்ம்ருதி என்றும் அந்த அநுஸ்ம்ருதிக்கு விவேகம் முதலிய ஏழு ஸாதநங்கள் அபேக்ஷிதங்களென்றும் அநுக்ரஹித்திருக்கிறார். அந்த ஸாதநங்களுள் ‘கல்யாணம்’ என்று ஒரு ஸாதநத்திற்குப் பெயர். ‘ஸத்யார்ஜவத³யாதா³நாஹிம்ஸாநபி⁴த்⁴யா: கல்யாணாநி’ என்பதால் அந்தப் பெயரின் அர்த்தமும் விவரிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது பூத ஹிதமாகிற ஸத்யமும் மநோ வாக் காயங்களின் ஐகரூப்யமாகிற ஆர்ஜவமும் ஸ்வார்த்த நிரபேக்ஷமாக பர துக்கங்களை ஸஹியாமல் இருப்பதாகிற தயையும் லோப ராஹித்யமாகிற தாநமும் பிறர்களுக்குப் பீடையைச் செய்யாமலிருப்பதாகிற அஹிம்ஸையும் பிறருடைய சொத்தைத் தனது என்று நினைப்பதாகிற அபித்யையற்றிருப்பதும், இவைகளே கல்யாணங்கள் என்று சொல்லப்படும் என்பது இந்த வாக்யத்தின் பொருள். இவைகளுள் ஒன்று குறைந்தாலும் கல்யாணம் என்னும் ஸாமக்ரி பூர்ணமாகாதானதால், பக்தி என்பது நிறைவேறமாட்டாது என்பது ஸித்தம். ஆகையால் பக்தி நிறைவேறுவதற்கு ஸத்யம் தயை முதலிய ஆத்ம குண பூர்த்தி அவச்யம் அபேக்ஷிதம் என்று சொல்லப்பட்டதாகின்றது.

நமது ஆப்ததமர்களான மஹர்ஷிகளுள் ஒருவராகிய கௌதமரென்பவர், ‘யஸ்யைதே சத்வாரிம்ஶத் ஸம்ஸ்காரா ந சாஷ்டாவாத்மகு³ணா, ந ஸ ப்³ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச க³ச்ச²தி’ [எவனுக்கு தயை க்ஷமை அநஸூயை முதலிய எட்டு ஆத்ம குணங்கள் இல்லையோ, அவன் நாற்பது விதங்களான ஸம்ஸ்காரங்களைப் பெற்றிருந்தபோதிலும் பகவத் ப்ராப்திக்கு யோக்யனாக மாட்டான்] என்று சொல்லி இருக்கிறார்.

பகவத் விஷயத்தில் ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்களால் ஸ்ரீ வைஷ்ணவர்களின் லக்ஷணம் பின் வருமாறு கூறப்பட்டிருப்பதும் இவ்விடத்தில் அநுஸந்திக்கத்தக்கது. “அநர்த்தம் கண்டால் ஐயோ என்றிருந்தானாகில் நமக்கு விஷ்ணு ஸம்பந்தமுண்டு என்றிருக்க அடுக்கும்; இத்தனையும் பட்டிடுவான் என்று இருந்தானாகில் நமக்கு விஷ்ணு ஸம்பந்தமில்லை என்றிருக்க

அடுக்கும்". அதாவது 'தயை என்னும் ஆத்ம குணம் எவனிடம் இல்லையோ, அவன் வைஷ்ணவனுகமாட்டான்' என்று சொன்னதாயிற்று. இவ்விடத்தில் தயை என்பது; மற்றை ஆத்ம குணங்களுக்கும் உபலக்ஷணம். இவையெல்லாவற்றையும் ஆலோசித்துப் பார்த்தால், ஸ்ரீ வைஷ்ணவனுக்கு, வர்ணதர்மங்களின் அநுஷ்டாநம் போல ஆத்மகுண பூர்த்தியும் அவச்யம் அபேக்ஷிதமென்று தெரிகின்றது.

'ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே பரதேவதை; மற்றை ஒரு தேவதையும் பரதேவதையாகமாட்டாது' என்று உறுதி கொண்டு அந்த உறுதிக்கு அநுகுணமாக நடப்பதும் வைஷ்ணவ தர்மங்களுள் முக்கியமானது. வைஷ்ணவர்களுள் மோக்ஷ புருஷார்த்தத்தையே விரும்பி ஏகாந்திகளாயிருப்பவருமுண்டு; தர்மார்த்த காமங்களாகிற இதர புருஷார்த்தங்களை விரும்பும் ஸாமாந்ய ஜநங்களுமுண்டு. இவ்விருவர்களும் தம் தம்மால் அபேக்ஷிக்கப்படும் புருஷார்த்தத்தை ஸ்ரீமந் நாராயணனிடமே அர்த்திக்க வேண்டுமே தவிர்த்து வேறு தேவதையை அர்த்திக்கக்கூடாது. பதிவ்ரதைகளான ஸ்த்ரீகள் எவ்விதம் அந்ய புருஷர்களைப் பதிபாவத்தால் பாராட்டமாட்டார்களோ, அம்மாதிரியே ஸ்ரீமந் நாராயணனுக்குப் பத்நிகள் போல பாரதந்த்ர்யத்தையே ஸ்வரூபமாக வஹிக்கும் வைஷ்ணவர்களும் வேறு தேவதைகளைப் பரதேவதையாகக் கொண்டாட மாட்டார்கள். அப்படிக் கொண்டாடுவது அவர்களுடைய ஸ்வரூப விருத்தமாகும். இதனால் மற்றை தேவதைகளை அவர்கள் த்வேஷித்தல் வேண்டும் என்பது சொல்லப்பட்டதாகமாட்டாது. ஸ்த்ரீகளுக்குப் பாதிவ்ரத்யத்தைச் சாஸ்த்ரம் விதித்தால், அந்தச் சாஸ்த்ரம், பதியைத் தவிர்த்த மற்றைப் புமாங்களை அந்தப் பதிவ்ரதை த்வேஷித்தல் வேண்டும் என்று விதிக்கின்றதாகச் சொல்வது உசிதமாகுமோ? இதுதான் பரதேவதா விஷயகமான ஸ்ரீ வைஷ்ணவர்களின் கொள்கை. 'சாஸ்த்ர விஹிதங்களான நித்ய நைமித்திக கர்மங்களை அநுஷ்டிக்கும் பொழுது வேறு தேவதைகளை உத்தேசித்து ஆஹுதி முதலியவைகளை அர்ப்பணம் செய்யும்படி நேர்கின்றதே! இது இந்தக் கொள்கைக்கு விருத்தமன்றோ?' என்று கேட்கலாம். பரதேவதையாகப் பாவித்துச் செய்யாதபடியால் விருத்தமன்று. நிற்க, இந்த ப்ரபஞ்சத்தில் தென்படும் வஸ்துக்களெல்லாம் ஸ்ரீமந் நாராயணனுடைய சரீரமென்று அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்களன்றோ? அந்தந்தத் தேவதைகளைப் பூஜிக்கும் காலத்தில் அந்தத் தேவதைகளுக்கு அந்தர்யாமியாக இருக்கும் ஸ்ரீமந்நாராயணனைப் பூஜிப்பதாகவே அவர்கள் அநுஸந்தாநம் செய்வார்கள். இது ச்ருதி ஸ்ம்ருதிகளுக்கு ஸம்மதமென்பது பின் வரும் வாக்யங்களிலிருந்து விளங்கும்.

"𑌯𑍇𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑍇𑌽𑌪𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌯𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ॥"



(இந்த்ராதி தேவதா பக்தர்களும் இந்த்ரனை ஆராதிக்கும் வழியாக என்னையே ஆராதிக்கிறார்கள்) என்றும்,

"𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚"

[எல்லா ஆராதநங்களாலும் நானே ஆராதிக்கப்படுகிறேன். அவைகளின் பலத்தைக்கொடுப்பவனும் நானே] என்றும் ஸ்ரீகீதாசார்யனே அநுக்ரஹித்திருக்கிறான். இந்த விஷயங்களெல்லாவற்றையும் கசடறப் பரிசோதித்த ஆசார்யர்களும், இந்த அர்த்தத்தையே சாஸ்த்ரங்களின் ஹ்ருதயமென்று பஹுப்ரகாரமாக நிர்ணயித்திருக்கிறார்கள்.

"[illegible] 𑌶𑍍𑌰𑍀𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌨𑌃 [illegible] ॥"

[சிலர் ப்ரஹ்மமொன்றே தத்வமென்றும், சிலர் ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரன் இந்த்ரன் இவர்கள் முதலான தேவதைகளெல்லாருக்கும் சரீர பேதமே ஒழிய ஸ்வரூபத்தில் பேதமில்லை யென்றும், சிலர் ப்ரஹ்மாதிகளான த்ரிமூர்த்திகள் ஸ்வரூபத்தில் பிந்நர்களானாலும் அவர்கள் ஜ்ஞாநம் முதலிய அம்சங்களில் ஸமர்களே என்றும், சிலர் அந்த த்ரிமூர்த்திகளுக்கு ஆத்மஸ்வரூபத்தில் பேதமே இல்லை யென்றும், சிலர் இந்த மும்மூர்த்திகளைக் காட்டிலும் உத்தீர்ணனான ஒரு பரதேவதை உண்டென்றும் இம்மாதிரி பரதேவதையைப்பற்றி பலர் பல விதமாகக் கொள்கைகளைக் கொண்டிருக்கிறார்கள். இவையொன்றையும் ஸாராஸார விவேகஜ்ஞர்கள் ஆதரியார்கள். வேதாந்தங்களும் அவைகளை அநுஸரித்து நிற்கும் மஹர்ஷி ஸ்ம்ருதிகளும், 'ஸாக்ஷாத் லக்ஷ்மீபதியாயும் நம் எல்லாருக்கும் அந்தராத்மாவாகவும் இருக்கும் நாராயணனே நம் எல்லாருக்கும் சேஷி. அவனே மோக்ஷத்தைக் கொடுப்பவன். அவன் ஒருவனே மோக்ஷம் அடைந்தவர்களெல்லாராலும் அநுபவிக்கப்படுகிறவன்' என்று நிர்ணயித்திருக்கிறார்கள்) என்று ஸ்ரீ தேசிகன் அநுக்ரஹித்திருக்கிறார்.

இவ்விடத்தில் வேறு ஒரு சங்கை உதிக்கக்கூடும். அது என்னவென்றால், 'ஜீவாத்மா முதலியவைகளைக் காட்டிலும் வ்யாவ்ருத்தமான ஒரு சேதந விசேஷமே பரதேவதை என்று அறிவது போதாதா? அந்த தேவதை இப்படிப்பட்ட புருஷோத்தமன் இன்னபெயருடையவன் என்று விசேஷித்து

அறிய வேண்டுவதும் அவசியமோ?' என்பது தான். அப்படி அறிவது அவசியமென்றே நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். "பொதுவிலே ப்ரக்ருதி புருஷ ஈச்வர விவேகம் பண்ணினாலும், பரதேவதா விசேஷ நிச்சயமில்லாத போது பரமைகாந்தித்வம் கூடாமையாலும், பரமைகாந்திக்கல்லது வ்யவதான ரஹிதமான மோக்ஷம் கிடையாமையாலும் ஈச்வரன் இன்ன தேவதாவிசேஷமென்று நிஷ்கர்ஷிக்கவேணும்" என்பது ஸ்வாமி தேசிகனுடைய நிர்ணயம்.

இம்மாதிரி நமது ஆசார்யர்கள் செய்திருக்கும் நிர்ணயத்தைச் சிலர் பரதேவதையின் பெயர் விஷயமாக இவ்விதம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றதென்று எண்ணி, நமது பரதேவதையின் பெயர் நாராயணனே என்றும் வேறு பெயர்கள் அவனுக்குப் பெயராக மாட்டாவென்றும் வைஷ்ணவர்கள் சொல்லுகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு வீணில் அவர்களைத் தூஷிக்கிறார்கள். இந்தத் தூஷணம் ந்யாய்யமன்று. வைஷ்ணவாசார்யர்களாற் செய்யப்பட்டுள்ள நிர்ணயமெல்லாம் வாச்யமாகிற வஸ்துவைப் பற்றியே தவிர வாசகமாகிற பெயர்களைப் பற்றியதன்று. அஸத்யமாயும் அஜ்ஞானமாயும் ஆச்சர்யத்தை உடையதுமான ஒரு வஸ்துவை ஒருவன் பரதேவதையென்று சொன்னால் அதை வைஷ்ணவர்கள் ஆதரியார். ஜகத்திற்கு நிமித்த காரணமாக இருப்பதுதான் பரதேவதையென்றும் அதற்கு உபாதான காரணம் வேறு ஒன்று என்றும் ஒருவன் வாதிக்கும் பக்ஷத்தில் அதை வைஷ்ணவர்கள் சாஸ்த்ர விருத்தமென்று நிராகரிப்பார்கள். 'எந்தத் தர்மங்கள் பரதேவதைக்கு உண்டு என்று சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றனவோ அந்தத் தர்மங்களெல்லாம் கூடிக்கொண்டிருக்கும் தேவதையே எங்களுக்குப் பரதேவதை' என்று சொல்லுகிறவர்களுடன் வைஷ்ணவர்களுக்கு விவாதமே இல்லை. 'பரதேவதை ஸர்வ சப்தங்களாலும் வாச்யன்' என்பதன்றோ அவர்களின் ஸித்தாந்தம்?

'ஶ்ரவஞ்ஸ்ரவஞ்ஸ்விஶ்வஶாந:'

இத்யாதியாகக் கணக்கற்ற பெயர்களைச் சொல்லி பகவானை ஸ்துதிக்கும் வைஷ்ணவர்களைப் பெயருக்காக சச்சரவு செய்கிறவர்கள் என்று சொல்வது ந்யாயவிருத்தமே ஆகும். ஆனால், நாராயணன் என்னும் பெயரை என்ன காரணத்தால் அவர்கள் விசேஷமாக ஆதரித்து வருகிறார்கள் என்றால், அந்தப் பெயர் பரதேவதையின் தர்மங்களெல்லாவற்றையும் சுருங்க ப்ரதிபாதித்து அது வழியாக அந்தத் தேவதையை அது குறிக்கின்றது என்பதே அதற்குக் காரணம் என்பதே அதற்கு ஸமாதானம். நாராயண சப்தத்திற்கு வைஷ்ணவர்களாற் சொல்லப்படும் அர்த்தம் இதை நன்கு விளக்கும்.

ஸ்ரீ:

# குருபக்தி

(ஸ்ரீ. உ.பா. V. S. வெங்கடேச பட்டாச்சாரியர்)

இதுவரையிலும் "குரு என்றால் யார்" என்பதையும், அவரிடத்திலிருக்கவேண்டிய முறைகளையும் சொல்லி வந்தோம். இனிமேல் தற்காலம் பாடசாலைகளில் வித்யார்த்திகளுக்கு இருக்கும் ஸௌகர்யங்களைச் சொல்லிவருவோம். அதாவது தற்காலம் நமது குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து வாசிக்க ஏற்பாடுசெய்கிறார்கள். பள்ளிக்கூடம் என்பது எதற்காக ஏற்பட்டது? என்றால்-முன்காலத்தில் தம்குழந்தைகளுக்கு 8 வயது ஆனதும் உபநயனம் செய்து ஸத்குருவைத் தேடிக்கொண்டுவிட்டு வித்யையை சாஸ்த்ரோக்தமாக அப்யஸிக்கும்படி செய்துவைத்து பிறகு அவர் உத்தரவைப்பெற்று ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை பூர்த்திசெய்து விவாஹாதி கார்யங்களைச் செய்துவைக்கிறார்கள் பெரியோர்கள். அப்பொழுது சுமார் 25வயது ஆகும். அந்தமாதிரி இப்போது நடக்கவேண்டிய ஸௌகர்யங்கள் கிடையா? ஏனென்றால் அவரவர்கள் தமது குழந்தைகளை மிகவும் செல்வமாக வளர்த்து அந்தக் குழந்தைகளை விட்டுப் பிரியப்படுகிறார்களில்லை. முன்போல் அந்தமாதிரி புத்ரனுக்கும் பதின்மடங்காக சிஷ்யனை வைத்துக்கொண்டு வித்யாப்யாஸம் செய்துவைக்கும் குருவும் தற்காலம் அகப்படுவது துர்லபமாக இருக்கிறது. அதனால்தான் ஒவ்வொரு நகரங்களிலும் ஸரியான பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி அதில் நல்ல உபாத்யாயர்களையும் போதகாசார்யராக நியமித்து பையன்களுக்கு வித்யாப்யாஸத்தையும், நன்னடவடிக்கைகளையும் சரீரபுஷ்டிக்குத் தகுந்த அப்யாஸங்களையும், ஸதஸ்ஸில் நன்றாக உபந்யஸிக்கத் தகுந்த திறமையையும், புகட்டி வருகிறார்கள். இதில் அநேக ஸௌகர்யங்களும் இருக்கின்றன. "இந்த மாதிரி அவச்யம் ஏற்படுத்தவேண்டும்" என்பதற்கு அநேககாரணங்களும் உள. அவையாவன:- அநேக பண்டிதர்களுக்கு ஜீவநங்களும், மேன்மேலும் ஜ்ஞாநாபிவ்ருத்தியும், உண்டாகின்றன. தவிர தேசபாஷைகளில் தேற்சியிருந்தால் தான் உத்யோகமும் கிடைக்கும். முன்காலத்திலோ ராஜாக்கள் படித்தவர்களுக்கு நிறைய தநத்தைக் கொடுத்து அவர்களை ஜீவநத்துக்கு ச்ரமப் படாமலிருக்கும்படி நடப்பித்து வந்தார்கள். அவர்களும் ராஜ்ய க்ஷேமத்தை ப்ரதிதிநம் கோரிக்கொண்டும், ஔபாஸநாக்நி ஹோத்ராதி யஜ்ஞங்களை விடாமல் அநுஷ்டித்துக்கொண்டும், தர்மங்களை ஜநங்களுக்கு உபதேசித்துக்கொண்டும், நிரதிசயமான பகவத் பக்தியைக் கைக்கொண்டும் பஞ்சகால பாராயணர்களாயிருந்துகொண்டும் ஸுகமாக காலங்

களைக் கடத்தி வந்தார்கள். தேசங்களும் ஓர் ஈதிபாதைகளன்றி மாஸம் மும்மாரி பெய்து தழைந்து வந்திருந்தன. தற்காலமோ அப்படி இல்லை. ப்ராஹ்மணர்களெல்லோருக்கும் ஜீவநம்செய்வதே கஷ்டமாகிவிடுகின்றது. தாமே கஷ்டப்பட்டு ஸம்பாதித்து ஸம்ஸாரங்களை நடத்திவரவேண்டியிருக்கின்றது. ஆதலால் தநார்ஜநமே ப்ரதாநமாகிவிட்டது. அநுஷ்டாநங்கள் பறந்துவிட்டன. அதற்குத் தகுந்தபடி கோபம், தாபம், பொறாமை, அஸூயை எல்லாவைகளும் ஸர்வத்ர, களைத்து விட்டன. அவரவர்கள் தன் தன் ப்ரயோஜநத்தையே வேண்டினவர்களாய் தனக்கு ஸமாநமான மற்றமனிதர்களிடத்தில் குற்றம், குறைகளைச் சொல்லிக்கொண்டிருப்பவர்களே ஜாஸ்தியாய் விட்டார்கள். நாம் எல்லோரும் யஜமாநர்களை அடைந்து அவர்களால் நியமிக்கப்பட்ட வேலைகளைத்தானே செய்து வருகிறோம். நாமும் ஜீவிக்கவேணும். இதரர்களும் ஜீவிக்கவேணும். அப்படியிருக்கவேண்டியிருக்க, நாம் ஸமதர்சித்வத்தை ஏன் கைவிடவேண்டும். தவிரவும் தற்காலம் யஜமாநத்ரோகமும் அதிகமாய்விட்டது. இவைகளுக்கெல்லாம் காரணம் தநக்கஷ்டம் ஒன்றுதான். இப்படி இருக்கும் பொழுதும் கூட ஜந்மாந்த்ர பாக்ய விசேஷத்தாலோ, அல்லது,

"யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத।
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்॥"

"பகவானே தர்மத்துக்குக் குறைவு ஏற்பட்டு அதர்மமும் தலைதூக்கி நிற்க தானே அந்த தர்ம ரக்ஷணத்திற்காக அவதாரம் செய்கிறேன்" என்று உரைத்தபடி இங்கு அவதரிக்கவேண்டுமென்ற எண்ணத்தாலேயோ யாராவது ஒருமஹாநாக வந்து ஜீவிக்கைக்கு ஹேதுவான, உத்யோக சாலைகளை ஏற்படுத்தியும், நன்மைகளைப் புகட்டியும், தர்மங்களுக்கு வழிகளை ஏற்படுத்தியும் சில இடங்களில் உள்ளார். அப்படி ஏற்படுத்தியிருக்கும் உத்யோகசாலைக்குள் அநேக ஸம்ஸ்க்ருத பாடசாலைகளும், தேசபாஷாவர்த்தகமான பாடசாலைகளும் விளங்கிவருகின்றன. அவைகளிலும் மிகவும் ஏழைகளான பையன்களுக்கு வித்யாப்யாஸம் செய்யவேண்டிய வஸதிகளுமிருக்கின்றன. சில உத்யோகஸ்தர்களுக்குத் தங்கள் உத்யோகத்துக்கு நிலையான இடங்களில்லாமல் அதனால் தங்கள் பையன்களுக்கு போஜநஸௌகர்யங்களுடன் வித்யாப்யாஸம் செய்துவைக்கிற இடங்களில்லையே என்ற வருத்தம் உண்டாகாமலிருக்கவேண்டி போஜநசாலைகளையும் ஏற்படுத்தி அவைகளில் 'க்ருஹங்களிலிருந்தால் என்னென்ன ஸௌகர்யங்களுண்டோ' அதைவிட பதின்மடங்கான ஸௌகர்யங்களையும் ஏற்படுத்தி கூட பகவத் பக்தியும் உண்டாக்கத்தக்க கார்யங்களையும் செய்துவைக்கிறார்கள்.



ஆதலால் நமக்கு இப்பேர்ப்பட்ட ஸௌகர்யங்களை ஏற்படுத்தின மஹாநங்களையும் நமது ஆசார்யர்களாகவே கருதவேண்டுமென்பது எனது எண்ணம். ஏனென்றால் அவர்கள், தம் போஜநசாலைகளில் வரும் பையன்களைத் தமது குழந்தைகளைப்போல் பாதுகாத்து அவர்களுடைய ஸுகதுக்கங்களைத் தமதாக எண்ணியும், வித்யையைக் கற்பித்தும் கடைசியில் உத்யோகத்துக்குவேண்டிய உபகாரங்களையும் செய்துவைக்கிறார்கள். அவரை நாம் என்னவென்று எண்ணவேண்டும்! குருவாக எண்ணவா? பகவானாகவே எண்ணலாமா? அதற்குமேற்படி கிடையாதல்லவே! ஆதலால் வித்யை உபதேசிக்கிறவர்களே! அதற்குவேண்டிய உபகாரங்களைச்செய்கிறவர்களோ! அவர்களை நாம் "ஆசார்யதேவோ பவ" என்று உபநிஷத்தில் உபதேசிக்கிறபடி பகவானாகவே கொண்டு பொய் பித்தலாட்டமில்லாமல் அவர்கள் நியமங்களைத் தட்டாமல் அவர்களை ப்ரதிக்ஷணம் மனமார வாழ்த்திக்கொண்டும், வந்தநம் பண்ணிக்கொண்டும் வரவேண்டும். குருவினிடம் பொய்சொல்லி வித்யாப்யாஸம் செய்தவன் பலத்தை இங்கு ஓர் சின்ன கதையைக்கொண்டு விளக்குவோம்:—

பஞ்சபாண்டவர்களுக்கு மூத்தவன் (6-வதான) கர்ணன் என்று ஒருவன் இருந்தான். என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும். அவன், தான் தநுர்வேதத்தை நன்றாகக் கற்கவேண்டி தநுர்வேதத்தில் பாரங்கதராயும் க்ஷத்ரியர்களுக்கு அந்தகராகவுமிருந்த பரசுராமரையடைந்து அவரை தனக்கு தநுர்வேதத்தைக் கற்றுக்கொடுக்கும்படி வேண்டினான். அவரும் 'நீ யார் எந்த வர்ணத்தினன் என்று வினவினார். அவன் தான்க்ஷத்ரியன் என்று சொல்ல அஞ்சி ப்ராஹ்மணன் என்று பொய் புகன்றான். அவரும் நம்பி வித்யையை ஸாங்கமாகக் கற்பித்தார். ஒருநாள் வித்யாப்யாஸம் செய்துவைக்கும் ஸமயம், தேவேந்திரன், தன் குமாரனை அர்ஜுநனுக்கு நடக்கப்போகும் பாரத யுத்தத்தில் ஏதுவாவது தீங்கு இழைப்பனோ! என்றும் சங்கையினால் இந்தபடிப்புக்கு விக்நத்தை ஏற்படுத்தவேண்டி தான் வண்டுரூபம் எடுத்து அவன் துடையில் துளையிட்டான். அவனும் வித்யாப்யாஸத்தில் கவனம் செலுத்தினபடியினால் இதை லக்ஷ்யம் செய்யாமலிருந்தான் (க்ஷத்ரியர்களுக்கு யுத்தத்தில் ப்ரஹாரங்களை ஸஹிக்க ஸ்வபாவம் உண்டு. ஆதலால் இதையும் இங்கு ஸஹித்தான்) அப்போது இதன் ஸூக்ஷ்மத்தை யறிந்த பரசுராமர் இவனைப்பார்த்து ரே, நீ க்ஷத்ரியனா ப்ராஹ்மணனா? நிஜத்தைச்

சொல் என்று கேட்க, அவன் முழித்தான். இவரும் நிஜத்தையறிந்து கொண்டு கோபம் கொண்டவராய், ஸ்வபாவமாகவே க்ஷத்ரியனைக்கண்டால் கோபம் கொள்ளுகிற வழக்கமுடையவராகையால் அவனுக்கு சாபம் கொடுத்தார். தனக்கு சிஷ்யனாக இத்தனை நாளாயிருந்துவிட்டபடியால் கொல்லமனமில்லாதவராய் சாபத்தைக் கொடுத்தார் அதாவது:— ‘நான் இதுவரையிலும் சொல்லிக்கொடுத்த வித்யை யாவும் ஸமயத்தில் உபயோகப்படாமல் வேண்டியது’ என்று.

அவனுக்கு அதேமாதிரி அர்ஜுனனோடு யுத்தம் புரியுமளவில் எல்லாம் மறந்து போயின’

ஆதலால் குருவினிடம் பொய் புகலவேகூடாது. இந்த காலத்தில் ஒரு குருவைக் கண்டு அவருடைய குணங்களைக் கண்டு அவர்களுக்குத் தகுந்தபடி நடப்பது கொஞ்சம் ச்ரமமாகவே இருக்கும். இதில் நடுவில் அஸூயையும் ஜனங்கள் எவ்வளவோ இடையூறுகளையும் உண்டு பண்ணுவார்கள். நாம் எதற்கும் ஓரேமாதிரி குணத்தோடு குருவை வழிப்பட்டு வந்தோமானல் ஒரு ஸமயம் குருவிற்கு மனது கலங்கினாலும், மறு ஸமயம் க்ருபை உண்டாகிவிடும். அது நாமிருக்க வேண்டியதில்தானிருக்கிறது;

“ஹிரண்ய மௌஞ்ஜீ ஶ்ரவணவதாம் வஹுவஸ்யாஸ்த ந ஸமாஶ்யேத் ।”

என்ற நியமத்தை அநுஸரிக்கவேண்டும். நமக்கு நல்ல விஷயங்கள்தெரிய வேண்டுமானல் ச்ரமப்பட்டுத்தான் அவைகளை அடையவேண்டும். ஆகலால் நமக்கு ஓர் அக்ஷரத்தையாவது ஸத்விஷயங்களையாவது உபதேசிக்கிறவர்களை பகவானாகவே எண்ணி வழிபட்டுவரவேண்டும், இன்னம் எழுத எழுத க்ரந்தம் விரியும். படிக்கிறவர்களுக்கும் ஆலஸ்யம் தோன்றுமென்று எண்ணி இதோடு நிறுத்திக்கொள்கிறேன். இதில் அநேகம் ந்யூநதைகளிருக்கும். பெரியோர்கள் பொருத்துக்கொள்ளவேணுமாய் ப்ரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

---

ஸ்ரீ:

# ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மாஹோதசிக சரிதம்,

(ஸ்ரீ. உ. ப. வித்வான் ஐயா க்ருஷ்ணதாதாசார்யஸ்வாமி)

ஸ்ரீ பேரருளாளன் பெருந்தேவித் தாயார்
திருவடிகளே சரணம்.
ஆழ்வார் எம்பெருமானார் தூப்புல்பிள்ளை
பொன்னடிகளே சரணம்.
திகழக்கடந்தான் பிள்ளை திருவடிகளே சரணம்.
பேரேத்துப்பிள்ளை பொன்னடிகளே சரணம்.

ஸ்ரீஶைல மௌனிவம்ஶ தாதார்ய மஹாதேஶிகாய நம:
ஶஷ்டி தாத்பர்ய மஹாஸம்ப்ரதாய பரம்பராப்ராப்தஜ்ஞாய நம: ।
ஸ்ரீஶைல க்ருஷ்ண தாதாய ஸ்ரீவத்ஸாங்காய நமோ நம: ॥

**ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த ஸ்ரீ தூப்புல் ஸ்ரீமத் வேங்கடநாத தேசிகரென்கிற ஸ்ரீமத் வேதாந்த தேசிகராலே அநேக க்ரந்தங்களால் ப்ரதிபக்ஷ நிரஸநம்பண்ணி ஸ்ரீ ஸாக்ஷாத் ஸ்வாமி திருக்குடந்தை தேசிகனளவாகவுள்ள ஸதாசார்யர்களாலே சநகோபசாகமாக வளர்ந்து வாரா நிற்க; கலி ஸாம்ராஜ்யத்தாலே ஆந்தர க்ஷேபங்களுண்டாய் பரஸ்பரமனுப்ரவிஷ்டனாய் அஸம்ப்ரதாயமாக அஸதர்த்தங்களை ஸதர்த்தங்களாகச் சொல்லிக்கொண்டு, பரமதஸ்தர்கள் பரிஹஸிக்கும்படி சுத்தாந்த ஸித்தாந்த மென்கிற இந்த பகவத் பாஷ்யகார ஸித்தாந்தத்தைக் கலக்க, இந்த ஸித்தாந்தத்தை முதலடியிலேதானே திருக்கச்சி நம்பிகள் மூலமாக ஸ்ரீ பகவத் ராமாநுஜனைக் கொண்டு, ப்ரவர்த்திப்பித்த நம் வாரணவெற்பில் மழை முகில்போல் நின்ற பேருளாளன் ஸ்ரீ தூப்புல் தேசிகனைக் கடாக்ஷித்து, “நீ தூப்புல் தேசிகனாய் அவதரித்ததற்கு முந்தின ஜந்மத்தில் க்ருஷ்ணன் என்கிற திருநாமத்தோடே விப்ரகுலத்திலே அவதரித்து நமக்கு க்ரீடாசைலமாயிருந்த திருவேங்கடமாமலையிலே நம்மை ஆராதிக்க, மறு ஜந்மத்திலே நம்முடைய திருமணியாழ்வாரும், நாமும் நமக்குச் சங்கழியளித்த இளையாழ்வாருமாக உம்மளவிலே ஆவேசித்து இந்த ராமாநுஜ ஸித்தாந்தத்தை வளர்த்து வைக்க இப்போது அதற்கு ஆந்தரிக கலஹங்களாலே க்ஷேபமுண்டாயிருக்கிறதே! அதை நீர் போய் நமக்கு அத்யந்தம் அபிமதமாயிருக்கும் சொட்டைக்குலத்திலே அவதரித்து நிவர்த்தியும்” என்று நியமிக்க அவரும் ஸகல கலாநிலயை ப்ரஸாரமாயிருந்த திருக்கச்சி நகரிலே ஸ்ரீ பேருளாளன் திருவடி வாரத்திலே ஸ்ரீமத் தாதயாமுந ஸ்ரீ சைல பூர்ண, குருகேச்வர, ஸ்ரீ சைல ஸ்ரீநிவாஸாசார்ய, ஸ்ரீமத் பஞ்சமதபஞ்சந தாதகேஸரி லக்ஷ்மீகுமார தாததேசிகப்ரமுக வேதாந்தஸ்தாபக பரமாசார்யாவதாரத்தாலே அழியாதாய், அத ஏவ நிகில ஸத்வம்சாமுதமமாயிருந்த ஸ்ரீ சைலவம்சத்திலே ஸகல ஸாதுஜந ஸௌபாக்ய பரிபாக ஸம்பாதிதமான**

த்விபாத்ரிகாத க்ருபாவிபாகத்தாலே கலி - நாலாயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்
தைந்தாவதான (1823) 'ஸ்வபாநு' வருஷம் ஐப்பசிமாதம் ஆச்லேஷா நக்ஷத்திரம்
தநுர் லக்நத்தில், வேரிம்படி திருமலை லக்ஷ்மீ குமார கோடி கந்யகாதாநம் குமாரதாத
தேசிகனின் த்ருதீய குமாரரான ஸ்ரீநிவாஸதாத தேசிகனுடைய ஸந்நிதியிலே ஐந்
தாவது தலைமுறையில் தேசிக தாதாசார்யரென்று ப்ரஸித்தரான, வேங்கடதாத
தேசிகனுக்கு விமர்த குமாரராக திருவவதாரம் செய்து, தம் தகப்பனாராலே தத்தத்
காலங்களிலே ஜாதகர்ம, நாமகரண, அந்நப்ராசந, சௌளோபநயந ஸம்ஸ்காரங்களா
லும் பெரிய தகப்பனார் கோபாலதாதாசார்ய ஸ்வாமியால் தாபாதி பஞ்ச ஸம்ஸ்காரங்க
ளாலேயும் ஸம்ஸ்க்ருதராய் பிதாவினிடத்திலேதானே ஸநியம வ்ரதவிசேஷங்களோடு
கூட வேதாத்யயநம் பண்ணி பனிரெண்டு திருநக்ஷத்திரத்திலே தானே க்ரமாந்த அத்
யயநம் பூர்ணமாய், நாடகாந்தமாக காவ்யங்களையும் வாசித்து, ஸாஹித்யத்திலும் கவநத்
திலும் அதிநிபுணராய், பதின்மூன்றாவது திருநக்ஷத்ரத்திலே சாஸ்த்ர பரிச்ரமத்திலே
முயன்று, காசியிலே நவத்வீப பட்டாசாரியரிடத்திலே தர்க்கசாஸ்த்ர மதிகரித்து மஹா
வாவதூகராய் பெருமாள் கோயிலிலேதானே திருவெஃகாவென்றும் ப்ரஸித்தமான
சொன்ன வண்ணம் செய்த பிரானிடையாட்டகத்திலே பஹு வித்வான்களுக்கு தர்க்க
சாஸ்த்ர ப்ரவசநம் செய்யும், பகல் தீவிட்டி வெங்கடாசார்யர் ஸ்வாமி ஸந்நிதியிலே
தர்க்கசாஸ்த்ராப்யாஸம் ஐந்துவர்ஷ காலம் பண்ணி அப்போதே தானே அதிவாக்மி
யாய் ஸப்ரஹ்மசாரிகளான பஹு பேருக்கு சிந்தையும் ஸ்வாதந்த்ர்யேண அத்ய
ஆசார்ய நியமநத்தாலே பாட ப்ரவசநமும் செய்து வந்தார். பிறகு உசித குலத்திலே
கந்யா பாணிக்ரஹணம் செய்து க்ரஹஸ்தாச்ரம தர்மாநுஷ்டாநத்தோடே எழுந்தருளி
யிருந்தார்.

திருக்குடந்தை தேசிகனென்று ப்ரஸித்தராயிருந்த ஸ்ரீ கோபாலதேசிகன் ஸம்
ப்ரதாய ஸந்ததியில் நாலாவதாய் திருவவதரித்து விரக்தாக்ரேஸரராய் மோக்ஷாச்ரமம்
பரிக்ரஹித்து பகல் தீவிட்டி ஸ்வாமி, வெத்தல் ஸ்வாமி, ஆண்டவனென்றும் உபநாமங்
களாலே ப்ரஸித்தராயிருக்கும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் திருவடி வாரத்திலே
மூன்று ஸம்வத்ஸரம் சாஸ்த்ரம் சொன்ன மட்டுக்களிலே அந்தரங்க பரிசர்யைகளைச்
செய்து அவருடைய பூர்ண க்ருபாபாத்ரராய் அநந்தரம் ஸ்ரீ பாஷ்யாதியாக ஸம்ப்ர
தாய க்ரந்தங்களை யதோக்த நியமங்களோடே ஸேவித்து அவராநுக்ரஹத்தாலே அபி
வ்ருத்த ப்ரஜ்ஞராய், தாம் ஸ்ரீ பாஷ்யாதிகளிலும், ரஹஸ்யங்களிலும் சில விசேஷங்
கள் அருளிச்செய்யும்போது இவருக்குண்டாகும் முகவிகாஸத்தையும், விஷயாநுவாத
பரிஷ்கரண ஸாமர்த்தியத்தையும் உகந்து குளிர கடாக்ஷித்து "வித்வந்மணி" என்று
இவருக்கு ஒரு திருநாமம் சாத்தினார். அத்யாத்ம சாஸ்த்ரம் பரிசயம் பண்ணும்போதே
ராத்ரிகாலங்களில் திருமலை நல்லாஞ் சக்ரவர்த்தி சிரோமணி என்கிற ஓர் ஸ்வாமி ஸந்
நிதியில் பூர்வ மீமாம்ஸா சாஸ்த்ரம் அதிகரித்தருளினார். இளங்காடு ரகுநாதாசார்யர்
என்னுமொரு வியாகரண வித்வான், ஸந்தி விஷயத்தில் கௌமுதியில் சில அநுபபத்தி
கள் தன் வித்யார்த்திகளுக்குச் சொல்லுமளவிலே, அவை இவர் காதில் படவே, இந்த
அநுபபத்தி சங்காவகாசமே இவ்விடத்திலில்லையென்று பூர்வோத்தரங்களைக் கொண்டு
ஸயுக்திகமாக இவர் உபபாதிக்க. அந்த ரகுநாதாசார்யரும் இதற்கு ப்ரத்யுத்தரம் சொல்
லாதே கொஞ்சம் அஸூயாவிஷ்டராய், 'அஸம்ப்ரதாயமாக ஏடு பார்த்துச்சொல்
லும் வார்த்தையாக இருக்கிறது' என்று சொல்ல, இது வ்யாஜமாக ஸ்ரீ ஸ்வாமி



யும், ஜடபிலியூர் ராஜஸம்ஸ்தாநத்தில் வ்யாகரண வித்வானாயிருந்து பெருமாள் கோயில்
பேரருளாளன் ஸந்நிதி வடக்குத் திருவீதியிலே வர்த்திக்கும், கந்தாடை - ஸ்ரீ ரங்காச்
சார்யர் என்பவரிடத்திலே மஹா பாஷ்யாந்தமாக வ்யாகரண சாஸ்த்ரம் வாசித்து
அதிலும் அதிநிபுணராய் வர்த்திக்கிற நாளிலே ஓத்தியென்கிற அக்ரஹாரத்திலிருந்து
வரதாசார்யரென்று ஓர் தமிழ் வித்வான் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதிக்கு எழுந்தருளி "இன்று
நான் பேரருளாளனை ஸேவிக்கும்போது ஸ்ரீ தேசிக ப்ரபந்தத்திலே நம் பேரருளா
ளன் விஷயமான பாட்டுக்களை அநுஸந்தித்தேன். அப்போது தமிழ் நன்னூல்
துறைகளைந்தும் இவைகளிலே பொருந்தியிருக்கு மழகு என் மனதை உருக்க, நானும்
சிறிதுபோது குணாநுபவம் பண்ணி இதை அறிவாரில்லையே! என்று மனம் நொந்
திருக்க, ஆகஸ்மிகமாக நம் பேரருளாளன் எனக்கொரு புத்தி ப்ரதாநம் பண்ணினான்.
அதாவது:—"தேவரீர் ஸர்வ சாஸ்த்ரங்களிலும் வல்லவரா யிருக்கிறது, நம் ஸம்ப்ர
தாயத்திலோ ஸம்ஸ்க்ருதத்திலோ, பாதி தமிழும் ப்ரதாநமாயிருக்கும் விஷயம் திருவுள்
ளத்திலே பட்டதே. கிடாம்பி - அப்புள்ளார், ஸ்ரீபாதத்திலே தானே ஸ்ரீ தேசிகனும்
தமிழை அதிகரித்தாரென்பதும் கிடாம்பி - அப்புள்ளார் "தம் தேமலர் சேவடி
சேர்ந்து பணிந்து அவர்தம் மருளால் நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெத்த
நம்பி" என்று பிள்ளையந்தாதியிலே அருளிச்செய் திருப்பதையு மிங்கு அதிகரித்து
இருக்கலாமே! தேவரீர் ஸர்வஜ்ஞராக இருந்தாலும் அடியேனுக்குத் தமிழ் நூல்களை
தேவரீருக்குச் சொல்லவேண்டுமென்று ஸ்ரீ பேரருளாளன் புத்திப்ரதாநம் பண்ணி
னான். ஆனபின்பு தேவரீருக்கு அடியேன் தமிழிலிருக்கும் லக்ஷ்ய லக்ஷண க்ரந்தங்
களை தேவரீர் திருமாளிகைக்கே வந்து சொல்லுகிறேன். பரிக்ரஹிக்கத் திருவுள்ளம்
ஆகவேணுமென்று சொல்ல, இவரும் "தந்யோஸ்மி, அநுக்ருஹீதோஸ்மி, இதொரு
பாக்ய விசேஷ மிருந்தபடி! ஸ்ரீ பேரருளாளன், ஆழ்வார் எம்பெருமானார், ஸ்ரீ தூப்
புல் பிள்ளை இம்மூவருடைய விசேஷ கடாக்ஷ மிப்போது பெத்தேனாகிறேன். ஸ்வாமி
அடியேன் குடிசைக் கெழுந்தருளி அடியேனைத் திருப்பணிக்கொள்வது அடியேன்
ஸ்வரூபத்துக்குப் பொருந்தாது. ஆனபின்பு ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் யானைக்
கட்டி வீதியில் திருமாளிகைக்கே அடியேன் புஸ்தகத்தோடு வருகிறேன். திருவுள்ள
முகந்து ப்ரஸாதிக்கவேணு" மென்று விண்ணப்பித்து ஒரு ஸம்வத்ஸரத்துக்குக்
கொஞ்சம் குறைய ப்ரௌடமாயிருக்கும் சில லக்ஷ்ய லக்ஷண க்ரந்தங்களை அதிகரித்து
அநிசதுரராய் இவரும் ஒரு 'தமிழ்மாமுனிவர்' என்று தமிழர் கொண்டாடும்படியாக
இருந்தார். இப்படி யோக சாஸ்த்ரம், பரத சாஸ்த்ரம், ஜ்யௌதிஷம் முதலானவை
களை தத்ததிகாரிகளிடங்களிலே தானே அதிகரித்தருளினார். அப்படியே சாங்க்ய
யோக சாஸ்த்ரங்களையும் அதிகரித்தார். இப்படி இருபது திருநக்ஷத்திரத்துக்குள்ளே
ஸர்வத்தையும் அதிகரித்து ஸர்வதோமுகமான ப்ரஜ்ஞாப்ரகர்ஷத்தாலே திகந்த விச்
ராந்த கீர்த்தியுள்ளவராய், வாதமுகத்தாலும், க்ரந்தநிர்மாணங்களாலும் பூர்வாசார்ய
ஸ்ரீ ஸூக்தி ப்ரவசநங்களாலும் பரமத நிராகரணமும் சுத்தாந்த ஸித்தாந்த ஸ்தாபந
மும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிக ஸம்ப்ரதாய ப்ரவசநமும் செய்து நமக்கு குலக்ரமாகத
மான ஸ்ரீ பேரருளாளன் கார்யநிர்வாஹமும் செய்துகொண்டு ஸ்ரீ தேசிகன் திருவவ
தாரஸ்தலமான, தூப்புல்-களிலே வன்னியமரத்து திருப்ரதிஷ்டை, திருவாராதந
மஹோத்ஸவங்கள், ஸ்ரீ தேசிகனுக்கும் விளக்கொளி எம்பெருமான், தாயாராண்டாள்
முதலானோருக்கும் செய்து வைத்து அறுபது திருநக்ஷத்ரங்களுக்கு மேலே இந்த ஸாம்

கார்யங்களை, அவருக்கு ப்ராப்தரானார் கையிலே ஒப்பி வைத்து தாம் பரமவிரக்தராய் அப்போது பத்நீவியோகம் நேரிட்டிருக்கச் செய்தேயும் திருமேனியில் அசக்தியையும் காலவைஷம்யத்தையும் திருவுள்ளத்திலே கொண்டு மோக்ஷாச்ரமம் தம்மால் நிர்வஹித்துத் தலைக்கட்ட முடியாதென்கிற திருவுள்ளத்தாலே ஆச்ரமாந்தர பரிக்ரஹம் பண்ணாதேயிருக்கச் செய்தேயும் திருமாளிகையிலே புத்ராதிகளோடே வர்த்திக்கத் திருவுள்ளமில்லாதே ஸ்ரீ பேரருளாளன் ஸந்நிதி தென்புரத்திலே ஸமீபத்திலே தானே ஸ்ரீமாந். உ. வே. ஸோமாசி-ரங்காசார்ய ஸ்வாமியால் ப்ரதிஷ்டிதமாயிருக்கும் ஸ்ரீ ரங்கராஜ அக்ரஹாரத்தினெதிர்புரத்திலே ஆச்ரம கல்பமாக ஒரு திருமாளிகை செய்வித்து அதிலேதானே பகவதாராதந ஸம்ப்ரதாய ப்ரவசநங்கள் செய்துகொண்டு அறுபத்தைந்து திருநக்ஷத்ரங்களுக்கு மேலே பத்துமாஸங்களிந்த லீலாவிபூதியிலே எழுந்தருளியிருந்து, விரோதி வருஷம் புரட்டாசிமாத சுக்ல ஷஷ்டியில் ஸ்ரீ பேரருளாளன் திருபவித்ரோத்ஸவ தீர்த்த வாஸரத்தன்று ஸாயங்காலம் தன்னடிச்சோதி யலங்கரித்தருளினார்.

कृष्णाय विप्रवेदान्तदेशिकत्वप्रदायिने ॥

என்று ஸ்ரீ வேங்கடேசாஷ்டோத்தர நாம ஸ்தோத்ரத்திலே தொண்ணூற்றிரண்டாவதான திருநாமம் அநுஸந்திக்கப்படுகையாலே 'க்ருஷ்ணன்' என்று திருநாமமுடைய விப்ரரொருவருக்கு வேதாந்த தேசிகனென்றும் திருநாமம் திருவேங்கடமுடையான் ப்ரஸாதிப்பதாக அவச்ய மங்கீகார்யமாக இருக்கையாலும் வேறொருவருக்கும் திருநாமம் திருவேங்கடமுடையான் ப்ரஸாதித்ததாக ஒரு க்ரந்தத்திலுமாவது தனியே ஒரு ஐதிஹ்யத்திலுமாவது காணாமையாலும், ஸ்ரீ தயாசதகத்திலே ஸ்ரீ தூப்பில் பிள்ளை:—

"वेदान्तदेशिकपदे विनिवेश्य बालं
देवो दयाशतकमेतदवादयन्माम् ॥"

என்று தம்மளவிலே இந்த வேதாந்த தேசிக பத ப்ரதாநத்தை அருளிச்செய்திருக்கையாலும் இவரே தான் பூர்வ ஜன்மத்திலே க்ருஷ்ணனென்கிற திருநாமத்தோடேயிருந்து திருவேங்கடமுடையானை ஆராதித்து மறு ஜன்மத்திலே தூப்புல் குலத்திலே ஸ்ரீ வேங்கடநாத தேசிகராக அவதரித்து வேதாந்த தேசிக பதத்தாலே அபிஷிக்தரானாரெனக் குறையில்லை. ஆகையாலேயாயித்து. இவ்வவதாரச் சுவட்டிற்றிருப்பாரொருத்தர்:—

साष्टांशान्तप्रवेशाद्भुतकृतमतयः कृष्णनाम्नो द्विजेन्द्राः ।
साहाय्यान्नः समस्तान्निरवधिकगुणान् वीक्षणीयान् ततः सन्विदेव ।
औदार्यं श्रीयशश्चेत् प्रकटयितुमनो नाथवंशे वदान्या ।
तत्त्वं वेदान्तविद्यापरिचयदमयोऽज्ञाय वेदान्तिनोऽवत् ॥

என்று தொடங்கி இவர் பெருமையைப் பணித்தார். இவர் ஜ்ஞாநத்தின் பெருமையை,



"श्रीवेदान्तगुरोर्निदानहयग्रीवार्चनं यस्य वै हयास्यो विभुः
यद्दृष्ट्या सहवासं समर्थ्य भगवते ब्रह्मविद्ये जगाद ।
तं कारुण्यसमुद्रं तामसमीपे ब्रह्मतत्त्वादिशिक्षादृष्टतं
हयाननं प्रतिपदं ब्रह्मविदां श्रीकृष्णतातं भजे ॥

இத்யாதிகளிலே அநுஸந்தித்தார்கள்.

இவருடைய திவ்ய சரிதங்களை.—

संप्रक्षेत्तां जगति सहसा सद्गुणं च वाणी काञ्चीपुरे
विंशत्यब्दे शुभ श्रीसवेदो निविष्टो मासे शुभे ।
प्रज्ञा बाह्यान्तराणां विमुखानां प्रज्ञा च विजयं
दिव्यास्थानं शरणं हरिपदं श्रीमान् विरोधिन्यब्दे ॥

यस्मिन्प्रासादकोणे निरवधिमहिमा पद्मनाभस्तु तस्मिन्
सर्वाङ्गेषु प्रदायां निजमिव निजवत् वासु देवः ।
देवः च वृत्तान्तादिश्रवणभावे त्वन्तरात्मा वयस्य
पूर्णेऽवशेषे शाश्वते सर्वांशे शुभदान्तरात्मा पक्षे
[देवदेवः ॥

नित्यं संप्रेक्षते च जगति पुण्ये हयग्रीवं प्रणिधाय ।
शिष्टे संप्रदायविशेषाणां प्रजहये प्राचीनाचार्यदेशिकैः ।
ध्यायन्ते तद्वंशमणिः प्रणतजनवत्सलः
प्रोक्तवान् जगदस्तु तथा भगवान् विष्णुः प्रसीदतु ॥

என்று இவர் வம்சராய் இவர் திருவடியிலும் இவர் திருக்குமாரர் திருவடியிலுமாக ஸகல சாஸ்த்ராப்யாஸம் பண்ணி வித்வதக்ரகண்யராய் 'பட்டப்பா' என்று ப்ரஸித்தராயிருந்த ஸ்ரீநிவாஸ தாதாசார்யர் ஸங்க்ரஹித்தருளிச்செய்தார்.

(தொடரும்)

ஸ்ரீ:

# மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்]

[தொடர்ச்சி ஸம்-23 ஸஞ் 8, பக்கம் 569 தொடர்ச்சி]

(103) ஸாம மந்த்ரத்தை உச்சத்வநியோடு சொல்லவேண்டியதென்று 101-வது பாராவில் சொல்லப்பட்டது. இதற்கு அபவாதம் (விலக்கு)—ஆதாநம் (அக்னிகளை உண்டுபண்ணும் வியாபாரம்) செய்யும்போது வாமதேவ்யம் முதலான சில ஸாமங்களைக் காநம் செய்யவேண்டியது. ஆகையால் அவைகளுடைய காநம் ஆதாநத்துக்கு அங்கம். ஆதாநம் அங்கி, ஆகையால் முக்யமானது. ஸாமங்களின் காநம் அங்கமானதால் குணம். முக்யத்தை ஒத்து குணத்தைச் செய்யவேண்டியது. எப்படி யஜுர்வேத மந்த்ரங்களை உபாம்சுவாகச் சொல்லுகிறதோ, அப்படியே உபாம்சுவாக ஸாமங்களையும் காநம் செய்யவேண்டியது. (அதி--2)

(104) இதின்மேலே விசாரம். இரண்டு வேதங்களில் ஒரு யாகத்தைப்பற்றி இரண்டு விதிகள் சொல்லப்படுகின்றன. அவைகளில் எது முக்கியம், எது குணம். உதாரணம் – ஸ்வர்க்கம் வேணுமென்று ஆசைப்படுகிறவன் ஜ்யோதிஷ்டோமயாகத்தைச் செய்யவேண்டியது என்று இரண்டு வேதங்களிலும் விதி வாக்யங்கள் இருக்கின்றன. அவைகளில் எது விதி? எது குணத்தை விதிப்பதற்கு அநுவாதம்? என்றால்:—

பூர்வபக்ஷம்:—இதைத் தீர்மானம் செய்யக் காரணம் இல்லாமையால் தீர்மானம் பண்ண முடியாது.

ஸித்தாந்தம்:—யஜுர் வேதத்தில் ஸோமம் என்கிற திரவியமும் இந்த்ர வாயு முதலான தேவதைகளும் சொல்லியிருக்கின்றன. அதில்தான் அதிக அங்கங்கள் விதிக்கப்படுகின்றன. ஆகையால் அந்த வேதத்தின் வாக்யம் தான் விதி. அந்த யாகத்தின் மந்திரங்களை உபாம்சுவாகச் சொல்லவேண்டியது. (அதி-3)

(105) ப்ரகரணம்:—ச்ருதி, லிங்கம், வாக்யம் என்று மூன்று ப்ரமாணங்கள் மேலே சொல்லப்பட்டன. ப்ரகரணம் என்று ஒரு ப்ரமாணம் உண்டா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம் : —இல்லை. பதங்களும் அவைகளின் ஸாமர்த்தியமும் அவைகளுக்கு ஒன்றோடு ஒன்று ஸம்பந்தமும் சேராதவேதபாகத்தை



ஒருவனும் பார்க்கவில்லை. ஒரு மஹாவாக்யமான பல வாக்யங்களின் சேர்க்கை ப்ரகரணம் என்று சொல்லுகிறாயோ? அது கூடாது. அவைகள் வாக்யமாய்ஆன பிறகு எப்படி ஒரு வாக்யமாக ஆகும்.

ஸித்தாந்தம்:—தர்ச-பூர்ணமாஸ ப்ரகரணத்தில் ஸுவர்க்கத்தை ஆசைப்பட்டவன் தர்சபூர்ணமாஸ யாகங்களைச் செய்யவேண்டியது என்றும், 'ஸமிதோயஜதி' (ஸமித்யாகத்தைச் செய்கிறான்) என்றும் இரண்டு வாக்யங்கள் இருக்கின்றன. ஒன்றைப் பார்ப்பதற்குக் கண் காரணம். அது தன் வேலையைச் செய்ய விளக்கின் உதவியைத் தேடுகிறது. அப்படியே தர்சமும் பூர்ணமாஸமும் ஸுவர்க்கம் என்னும் பலனை கொடுப்பதற்குச் சிலவற்றின் உதவியைத் தேடுகின்றன. இப்படி உதவி செய்வதை உபகாரணம் என்று சொல்லுகிறது. ஸமித்யாகத்தைச் செய்கிறவன் ஒரு பலனைத் தேடுகிறான். அது வேலையாயிருப்பதால் அதினால் ஒரு பலன் கிடைப்பது, இல்லாவிட்டால், அதை ஒருவனும் செய்யமாட்டான். ஆகையால், தர்சமும் பூர்ணமாஸமும் உபகாரணத்தையும் ஸமித்யாகம் பலனையும் தேடுகின்றன. ஆகையால் இரண்டு வாக்யங்களும் சேர்ந்து ஒரு மஹாவாக்யம் ஆகின்றன. அதைத்தான் ப்ரகரணம் என்று சொல்லுகிறது. தர்சமும் பூர்ணமாஸமும் தேடும் உபகரணம் ஸமித்யாகம். அது தேடும் பலன் அவைகளுக்கு உதவி செய்வது. ஆகையால் ஸமித்யாகம் தர்சபூர்ண மாஸங்களுக்கு அங்கம். (அதி - 4)

ஸமித்யாகத்துக்கு வேறு பலன் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளுவதைக் காட்டிலும், இரண்டு வாக்யங்களும் ஒரு மஹாவாக்யம் என்று ஒப்புக்கொள்ளுவதில் லாகவம் இருக்கிறது. அப்படி ஒப்புக்கொண்டால், இரண்டு வாக்யங்களுக்கும் அவைகள் தேடுவது அகப்படுகிறது. ஸமித்யாகத்துக்கு வேறு பலனை ஒப்புக்கொண்டால், தர்சபூர்ணமாஸங்கள் தேடும் உபகரணம் கிடைக்காது. தர்சபூர்ணமாஸ வாக்யத்தின் பொருள் – எப்படி இவைகளைச் செய்தால் ஸுவர்க்கம் கிடைக்குமோ, அப்படி வேலை செய் என்று. எப்படி அவைகளைச் செய்கிறது என்று தெரியவில்லை. அதைத்தான் இதிகர்த்தவ்யதை என்றும், அதின் தேட்டத்தை இதிகர்த்தவ்யதாகாங்க்ஷை என்றும் சொல்லுகிறது. (சா-236-237)

(106) தர்சபூர்ணமாஸங்களில் யஜமாநன் சொல்லவேண்டிய மந்த்ரங்களை வேதம் படிக்கும் இடத்தில் ஒரு மந்த்ரம் இருக்கிறது—[illegible]" என்று. இதின் பொருள் - நீ கொல்லுகிற ஆயுதமாயிருக்கிறாய், ஒருவனாலும் கொல்லப்படாமல் நான் இருக்கவேண்டும், இவனை (குறிக்கப்பட்டதை) நான் கொல்லவேணும் - என்று

இந்த மந்திரத்தை உபாம்சுயாஜத்தைச் செய்யும்போது யஜமானன் சொல்லுகிறான். இதற்கு என்ன ப்ரமாணம் என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஒரு பிரமாணமும் இல்லை. ச்ருதியும் இல்லை, வாக்யமுமில்லை. பிராம்மணமானது இந்த மந்திரம் இன்ன யாகத்துக்கு அங்கமென்று சொல்லாமல் அதற்கு அர்த்தத்தைமாத்திரம் சொல்லுகிறது. லிங்கமும் ப்ரயோஜனப்படவில்லை. யஜமானனுக்கு விரோதம் செய்வதைப்போக்குகிறது என்பது மந்திரத்தால் காட்டப்படுகிறது. இது உபாம்சுயாகத்துக்கு முன்னாலே செய்யப்படும் அக்னி தேவதையின் யாகத்துக்கும் பின்னாலே செய்யப்படும் அக்னீஷோம தேவதையின் யாகத்துக்கும் உண்டு. ப்ரகரணமும் மூன்றுக்கும் ஒன்றே. இப்படி ஒரு பிரமாணமும் இல்லாமையால், இந்த மந்த்ரம் உபாம்சு யாகத்துக்கு அங்கம் அன்று.

ஸித்தாந்தம்:—அத்வர்யு செய்யும் வேலைகளை விதிக்கும் இடத்தில் அக்நிதேவதையின் யாகமும் உபாம்சு யாஜமும், அக்நி ஷோம தேவதையின் யாகமும் வரிசையாய் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படி யஜமானன் சொல்லவேண்டிய மூன்று மந்திரங்களையும் வரிசையாய் சொல்லியிருக்கிறது. எப்படி இரண்டு வாக்யங்களைச் சேர்த்துப் பார்ப்பதால் ப்ரகரணம் என்று ஒரு ப்ரமாணம் ஏற்படுகிறதோ, அப்படியே இரண்டு ப்ரகரணங்களையும் சேர்த்துப் பார்க்கும் போது கிரமம் என்று ஒரு ப்ரமாணம் ஏற்படுகிறது. இதைப் ப்ரகரணத்தின் ஒரு பேதம் என்று சொல்லக்கூடாது. இரண்டு வாக்யங்கள் ஒரு வாக்யமாவது போல இரண்டு ப்ரகரணங்கள் ஒரு வாக்யமாக முடியாது. ஆகையால் க்ரமம் என்கிற ப்ரமாணத்தாலே நடுவில் இருக்கும் யாகத்துக்கு நடுவில் இருக்கும் மந்திரம் என்று ஆகிறது. ஆகையால் அந்த மந்திரம் உபாம் சுயாஜத்துக்கு அங்கம் (அதி—5).

(107) [illegible] என்பதற்கு ஸ்வரூபம். அது இரண்டு விதம்—வேதத்தில் படித்திருப்பதால் ஏற்படுவது என்றும், அர்த்தத்தாலே ஏற்படுவது என்றும். முதலாவதும் இரண்டு விதம்—யதாஸங்க்யம் என்றும் ஸந்நிதி என்றும். யதாஸங்க்யத்துக்கு உதாஹரணம் மேற்பாராவில் விசாரித்தது. இரண்டாவதுக்கு உதாரணம்—யஜுர்வேதம் 1-வது காண்டம், 1—வது ப்ரச்நம், 3-வது அநுவாகத்தில் முதல் மந்திரம்-தேவர்களுடைய கர்மத்துக்காக நீங்கள் சுத்தமாகுங்கள் என்று இருக்கிறது. அடுத்த மேலே பாலைக்காய்ச்சும் சட்டி முதலான பாத்ரங்களைப்பற்றி மந்திரங்கள் படிக்கப்படுகின்றன. ஆகையால் ஸந்நிதி என்கிற க்ரமத்தாலே அந்த மந்த்ரம் அந்தப் பாத்ரங்களை ப்ரோக்ஷப்பதற்கு மந்த்ரம் என்று ஏற்படுகிறது. மூன்றுவது விதத்துக்கு உதாரணம் மேலே காட்டப்படும்.



(108) ஹௌத்ர-யாஜ்யா-புரோநுவாக்யா முதலான சொல்லவேண்டிய மந்த்ரங்களை ருக்வேதத்தில் படித்திருக்கிறது. யஜுர்வேதத்தில் மாடு கறப்பது, நிர்வாபம் பண்ணுவது முதலான வியாபாரங்களுக்கு மந்த்ரங்கள்; கானம் செய்யவேண்டிய ஸாமங்களை ஸாமவேதத்தில், "இன்ன ருத்துவிக்குக்கு இன்ன மந்த்ரங்கள்" என்று ஒரு நியமமில்லை; எதை வேணுமோ எவனும் சொல்லலாமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—சொல்லலாம்.

ஸித்தாந்தம்:—முதல் சொன்ன மந்த்ரங்களுக்கு ஹௌத்ரம் (ஹோதாவின்மந்திரம்) என்றும், இரண்டாவது சொன்னவைகளுக்கு ஆத்வர்யவம் (அத்வர்யுவின்மந்த்ரங்கள்) என்றும், மூன்றுவது சொன்ன மந்த்ரங்களுக்கு ஔத்காத்ரம் (உத்காதாவின் மந்த்ரங்கள்) என்றும் ஸமாக்யா (பெயர்கள்) ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் அந்தந்த ருத்துவிக்கு அவனவனுடைய மந்திரங்களைச் சொல்ல வேண்டியது என்று தெரிகிறது. இப்படித் தீர்மானம் பண்ணுவதற்கு ஒரு விரோதமும் காணப்படவில்லை. இப்படித் தெரியாமலிருந்தாலும் விரோதம் இருந்தாலும் அன்றோ ப்ரமாணமில்லை யென்று சொல்லலாம். ஆகையால் மற்ற ப்ரமாணங்களைப் போலவே ஸமாக்யையும் ப்ரமாணம் (அதி—6).

(109) இப்படி ஒன்றை மற்றொன்றுக்கு அங்கம் என்று காட்டுவதற்கு ஆறு பிரமாணங்கள் இருக்கின்றன. ச்ருதி, லிங்கம், வாக்யம், பிரகரணம், கிரமம், ஸமாக்கியை என்று. இவைகளில் இரண்டு பிரமாணங்களாலே இன்னது அங்கம், இன்னது அங்கி என்று சொல்லக்கூடிய இடங்களில் எந்த பிரமாணத்தை வைத்துக்கொள்ளுகிறது என்று மேலே விசாரிக்கப்படுகிறது.

(110) ச்ருதியும் லிங்கமும்:—95-வது பாராவில் விசாரித்த வாக்கியமே இங்கேயும் உதாரணம். 'இந்த்ர விஷயமான மந்த்ரத்தால் கார்ஹபத்திய அக்நியை ஸ்தோத்ரம் பண்ணுவது' என்று இந்த மந்த்ரம் இந்த்ரனைக் காட்டுவதால், இந்த விஷயமான வியாபாரத்தை அதைக்கொண்டு செய்ய வேண்டியது என்று ஏற்படுகிறது. இப்படி இல்லாவிட்டால், இந்த மந்த்ரம் இந்த்ரனைக் காட்டுவதற்கு பிரயோஜநம் இல்லாமல் போகும். ஆகையால் இந்த்ர விஷயமான வியாபாரத்தைக் காட்டிலும் இந்த்ரன் முக்யமானவன். இவ்விதமான யுக்தியை லிங்கமுண்டுபண்ணுகிறது. இந்த வியாபாரம் எது என்று விசாரிக்கையில் "ஐந்த்ர்யா கார்ஹபத்யமுபதிஷ்டதே" என்கிற இரண்டு சொற்களும் வாக்யம் என்கிற பிரமாணமாயிருந்துகொண்டு, அது உபஸ்தாநம் (ஸ்தோத்ரம் பண்ணுவது) என்று முடிவு

செய்கிறது. “கார்ஹபத்யம்” என்கிற சொல்லில் விபக்தி (வேற்றுமை) இரண்டாவது விபக்தி. அது ச்ருதி என்கிற பிரமாணம். அதனால் கார்ஹபத்ய அக்னி முக்யமானது என்று காட்டப்படுகிறது. அதற்கு குணமான ஏதோ ஒன்றை காரணமாக உடைய ஒரு வியாபாரம் வேண்டியது. அவ்வித மான வியாபாரத்தைக் காட்டிலும் கார்ஹபத்யம் முக்யமானது. இந்த விரோதம் உண்டாயிருக்கையில், எந்த வியாபாரத்தைச் செய்கிறது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—மூன்றுவிதமாய் பூர்வபக்ஷங்கள், (1) ‘ஐந்த்ர்யா உபதிஷ்டதே’ என்கிற இரண்டு சொற்களால், செய்யவேண்டிய வியாபாரம் உபஸ்தானம் என்றும், அதற்கு மந்த்ரம் இந்த்ர விஷயமானது என்றும் ஏற்படுகிறது. ச்ருதியும் லிங்கமும் பிரமாணமானபடியால், இந்த்ரனையாவது கார்ஹபத்ய அக்னியையாவது உபஸ்தானம் செய்கிறது.

(2) இந்திரனும், கார்ஹபத்ய அக்னியும் இரண்டும் முக்கியமானதாலும், உபஸ்தானம் என்கிற வியாபாரம் குணமானதாலும், “ஒவ்வொரு முக்யமானதுக்கு குணத்தைச் செய்யவேண்டியது” என்கிற (ப்ரதி ப்ரதானம் குணாவ்ருத்தி:) என்கிற நியாயப்படி இரண்டு பேர்களுக்கும் உபஸ்தானத்தைச் செய்கிறது.

(3) ஒரு வஸ்துவின் ஸாமர்த்தியத்தைக் கவனித்தே ச்ருதி என்கிற பிரமாணம் ஒன்றை அங்கம் என்று விதிக்கவேண்டியது. இப்படி இல்லாவிட்டால் “நெருப்பாலே நனை” என்றும் “ஜலத்தாலேகொளுத்து” என்றும் விதிக்கலாம். வஸ்துவின் ஸாமர்த்தியத்தை லிங்கம் காட்டுவதாலும், அதைக் கவனித்து ச்ருதி வேலை செய்யவேண்டியதாகையாலும் லிங்கம் பிரபலம். ஆகையால் இந்திரனுக்கே உபஸ்தானம் செய்கிறது.

ஸித்தாந்தம்:—இந்த்ரமந்த்ரத்தில் முக்கியமான அர்த்தத்தைவிட்டு, கௌணமாக அர்த்தம்பண்ணலாம் என்று 95-வது பாராவில் காட்டப்பட்டது. ஆகையால் ஸாமர்த்தியம் இல்லை என்கிற குற்றம் போய்விட்டது. ச்ருதி என்கிற ப்ரமாணம் உடனே மந்த்ரத்தை கார்ஹபத்திய அக்னியின் உபஸ்தானத்துக்கு அங்கம் என்று விதிக்கிறது. லிங்க விஷயத்தில் கொஞ்சம் தாமதமிருக்கிறது. முதலில் மந்த்ரத்தில் இருக்கும் சொற்கள் தங்களுடைய பொருள்களைத் தெரிவிக்கின்றன. பிறகு மந்த்ரத்துக்கு இன்னது ஸாமர்த்தியம் என்று அறியவேண்டும். அதின் பிறகு ஸாமர்த்தியத்தைக் கொண்டு இன்னது முக்கியமானது என்றும், அதை உபஸ்தானம் செய்ய இன்னது மந்த்ரம் என்றும் காட்டும் ச்ருதி இருக்கிறது என்று



ஒப்புக்கொள்ளவேணும். அதாவது மந்திரத்தாலே இந்திரனுக்கு உபஸ்தானம் செய் என்று ஒரு ச்ருதியை ஒப்பிக்கொள்ளவேணும். ப்ரத்யக்ஷமாய் இருக்கும் ச்ருதியில் ஸாமர்த்தியத்தைக் கண்டுபிடிக்கவேண்டியதில்லை. ச்ருதி இருக்கவேணும் என்று ஒப்புக்கொள்ளவேண்டியதுமில்லை. ஆகையால் ச்ருதி பலமுள்ளது; லிங்கம் பலமில்லாதது. அது ச்ருதியால் அடிக்கப்படுகிறது. கார்ஹபத்திய அக்னிக்குத்தான் உபஸ்தானம் செய்யவேண்டியது.

(2) ச்ருதியைக்கொண்டு முடிவுசெய்யும் காலத்தில் லிங்கமில்லையே அதை ச்ருதி எப்படி அடிக்கக்கூடும் என்றால், பதில்—ச்ருதி வேலை செய்த பிறகு; லிங்கம் ஏற்பட்டு, மந்த்ரத்தைக் கொண்டு இந்திரனுடைய உபஸ்தானத்தைச் செய்கிறது என்று சொல்லலாம். அதைத் தடுப்பது தான் லிங்கத்தை அடிப்பது என்பது. (அதி-7)

(111) லிங்கமும், வாக்கியமும்:—தர்சபூர்ணமாஸப் பிரகரணத்தில், “ஸ்யோனம் தே ஸதனம் க்ருணோமி க்ருதஸ்ய தாரயா ஸுசேவம் கல்பயாமி தஸ்மின் ஸீதாம்ருதே ப்ரதிதிஷ்ட, வ்ரீஹீணாம் மேத ஸுமனஸ்யமான:” என்று ஒரு வாக்கியமிருக்கிறது. ஏ புரோடாசமே! உனக்கு நல்லதான இடத்தைச் செய்கிறேன்- நெல்லின்ஸாரமானதே! மனது ஸமாதானத்துடன் அந்த நல்லஇடத்தில் உட்காரு, அதில் ஸ்திரமாய் இரு” என்று. இது ஒரு மந்த்ரமா? அல்லது இரண்டு மந்த்ரங்களா! என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—“தஸ்மின்” (அதில்) என்கிறசொல் முன்னால் பிரஸ்தாபமானதைக் காட்டுகிறது. அதினால் வாக்யத்தின் இரண்டு பாதியும் ஒரே வாக்கியம் என்று ஏற்படுகிறது. இரண்டு மந்த்ரங்கள் இல்லாமையால், முழுவதும் இடம் பண்ணுவதற்கு அங்கமாகும். இதை விதிக்கும் ச்ருதியானது ‘இந்த முழுமந்திரத்தாலே இடத்தைச்செய்’ என்று இருக்கவேண்டியது. அப்படியே முழு மந்த்ரத்தாலே புரோடாசத்தை அதில் வை என்று ஒரு ச்ருதி இருக்கவேண்டியது. இடம் பண்ணுவதற்கும் எப்படிமந்த்ரம் அங்கமோ, அப்படியே புரோடாசத்தைவைப்பதற்கும் மந்திரம் அங்கமாகலாமே. வாக்கியம் அதையும் சொல்லுகிறதே. ஆகையால் இந்த மந்திரத்தைக் கொண்டு இடம் பண்ணலாம். புரோடாசத்தை அந்த இடத்தில் வைக்கலாம். அல்லது இரண்டு வியாபாரத்தையும் செய்யலாம்.

ஸித்தாந்தம்:—இரண்டு பாதிக்கும் அந்வயம் (ஸம்பந்தம்) இருப்பதால், ஒரு வாக்யமாகலாம். மேல் பாதிக்கு இடம் பண்ணுவதில் ஸாமர்த்தியம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டும், முழுமந்த்ரமும் அந்த வியாபாரத்

துக்கு அங்கம் என்று சொல்லவேணும். அப்படியே கீழ்பாதிக்குப் புரோடாசத்தை வைப்பதில் ஸாமர்த்யம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டு முழுமந்த்ரமும் அதற்கு அங்கம் என்று சொல்லவேண்டும். சொன்னபடி வைத்துக் கொள்ளாவிட்டால், முழுமந்த்ரமும் ஒரு வியாபாரத்துக்கும் அங்கமாகத்தகுந்தது அன்று. ஆகையால் வாக்யத்துக்கும் ச்ருதிக்கும் நடுவில் ஸாமர்த்தியம் இருப்பதாக வைத்துக் கொள்வது வருகிறது. கீழ்பாதிக்கு இடம் பண்ணுவதிலும், மேல்பாதிக்கு அந்த இடத்தில் வைப்பதிலும் ஸாமர்த்தியம் பிரத்தியக்ஷமாய் இருக்கிறது. அது ச்ருதிக்குகிட்டஇருக்கிறது. ஆகையால் லிங்கத்தாலே வாக்கியம் பாதிக்கப்படுகிறது. கீழ்பாதி ஒருமந்திரம், அது இடம்பண்ணுவதற்கு அங்கம். மேல்பாதி வேறுமந்திரம்; அது புரோடாசத்தை அந்த இடத்தில் வைப்பதற்கு அங்கம் (அதி-8).

(112) வாக்யமும் பிரகரணமும்:—ஸூக்தவாகம் என்கிற மந்திரத்தில் இரண்டு வாக்கியங்கள் இருக்கின்றன: "அக்நீஷோமௌ இதம் ஹவிரஜுஷேதாம் அவீவ்ருதேதாம் மஹோஜ்யாயோக்ராதாம் - இந்த்ராக்நீ இதம் ஹவிரஜுஷேதாம் அவீவ்ருதேதாம் மஹோஜ்யாயோக்ராதாம் ॥ என்று. இதின் பொருள்—அக்நீஷோமர்கள் இந்த ஹவிஸ்ஸைச்சாப்பிட்டார்கள்; விருத்தியை அடைந்தார்கள். யஜமாநனுக்கு மிகுந்த தேஜஸ்ஸைக் கொடுத்தார்கள்; இந்த்ராக்நீ இந்த ஹவிஸ்ஸைச் சாப்பிட்டார்கள்; விருத்தியை அடைந்தார்கள்; யஜமாநனுக்கு மிகுந்த தேஜஸ்ஸைக் கொடுத்தார்கள்', என்று. பூர்ணமாஸ இஷ்டியில் முதல்வாக்யத்தையும், தர்ச இஷ்டியில் இரண்டாவது வாக்கியத்தையும் மந்திரத்தில் சொல்லவேண்டியது. இப்படிச் சொல்லுகையில் "அக்நீஷோமௌ" என்கிற சொல்லை மாத்திரம் எடுத்து விட்டு இதம் ஹவி:" என்பது முதலான முதல் வாக்கியத்தின் மிகுதியைத் தர்ச இஷ்டியில் சொல்லவேண்டியதா? அப்படியே "இந்த்ராக்நீ" என்கிற சொல்லை மாத்திரம் எடுத்து விட்டு, இரண்டாவது வாக்கியத்தின் மிகுதியைப் பூர்ணமாஸ இஷ்டியில் மந்திரத்தில் சொல்லுகிறதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—சொன்ன மந்திரத்தைச் சொல்லவேண்டும். இந்த வாக்யங்களின் மிகுதிகள் ப்ரகரணத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன; ஆகையால் எல்லாவற்றிற்கும் அங்கம்.

ஸித்தாந்தம்—அக்நீஷோம மந்திரத்தின் மிகுதிக்கும் இந்த்ராக்நீ என்கிற சொல்லுக்கும் ஸம்பந்தம் மந்திரத்தின் பாடத்தால் ஏற்படவில்லை. முதலில் ப்ரகரணத்தாலே ஸம்பந்தம் இருப்பதாக வைத்துக்கொண்டு, அவைகள் ஒரு வாக்யம் என்று கொள்ளவேணும். பிறகு இந்த வாக்யத்தாலே அந்த வாக்யத்துக்கு இந்த்ராக்நீ தேவதையைக் காட்டுகிறது என்று ஒரு ஸாமர்த்தியத்தை ஒப்புக்கொள்ளவேணும். இது லிங்கம். இந்த லிங்கத்தைக்கொண்டு இந்த மந்த்ரத்தாலே இந்த்ராக்நீ விஷயமான வியாபாரத்தைச் செய்" என்று ச்ருதி ஏற்படுத்தவேண்டும். ஆகையால் ப்ரகரணத்துக்கும் விநியோகத்துக்கும் நடுவில் மூன்று விஷயங்கள் வரவேண்டியது. முதல் வாக்யத்தில் "அக்நீஷோமௌ" என்கிற சொல்லுக்கும் அந்த வாக்யத்தின் மிகுதிக்கும் ஸம்பந்தம் வாக்யத்தாலேயே ஏற்படுகிறது. அது இருப்பதாகப் புதிதாய் ஒப்புக்கொள்ளவேண்டாம். லிங்கத்தையும் ச்ருதியையும் மாத்திரம் ஏற்படுத்தவேண்டியது. ஆகையால் வாக்யத்துக்கும் விநியோகத்துக்கும் நடுவில் இரண்டு விஷயங்கள்தான் ஏற்படும். ஆகையால் ப்ரகரணத்தைக் காட்டிலும் வாக்யம் விநியோகத்துக்குக் கிட்ட இருப்பதால், வாக்யம் ப்ரபலம்; ப்ரகரணம் துர்பலம். வாக்யம் ப்ரகரணத்தைப் பாதித்து விடுகிறது. அக்நீஷோம மந்திரத்தின் மிகுதி அதற்குத்தான், சேஷமானது. அத்துடன்தான் சேரவேண்டியது. (அதி-9).

(113) ப்ரகரணமும், க்ரமமும்:—ராஜஸூயம் என்பதைச் சொல்லும் இடத்தில் அபிஷேசநீயம் என்னும் ஸோமயாகத்தைச் சொல்லுகையில், "சொக்கட்டான்களைக் கொண்டு விளையாடுகிறான், ராஜாவை ஜயிக்கிறான், சுநச்சேபன் விருத்தாந்தத்தைச் சொல்லும்படி செய்கிறான்" என்று பொருள் உள்ள வாக்யங்கள் இருக்கின்றன. இந்த வியாபாரங்கள் அபிஷேசநீயத்துக்கு மாத்திரம் அங்கமா? அல்லது ராஜஸூயம் முழுவதுக்கும் அங்கமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—அபிஷேசநீயத்துக்கு மாத்திரம் அங்கம் ஸந்நிதி என்கிற க்ரமமாகிய பிரமாணத்தாலே.

ஸித்தாந்தம்—ராஜஸூயத்தை எப்படிச் செய்கிறது என்கிற ஆகாங்க்ஷை தீரவில்லை. விதிக்கப்பட்ட சொக்கட்டான் விளையாட்டு முதலான வியாபாரங்கள் ப்ரகரணம் என்னும் ப்ரமாணத்தாலே ராஜஸூயத்துக்கு அங்கம். ராஜஸூயம் என்பது அநேக யாகங்களின் சேர்க்கை. ஆகையால் அவைகள் எல்லாவற்றிற்கும் அந்த வியாபாரங்கள் அங்கங்கள். அபிஷேசநீயம் என்பது அக்நிஷ்டோமத்தின் விக்ருதி. அதினுடைய அங்கங்களைக் கொண்டே அபிஷேசநீயத்தையும் செய்யவேண்டியது. ஆகையால் அதை எப்படிச் செய்கிறது என்கிற ஆகாங்க்ஷை தீர்ந்து விடுகிறது. அதின் ஸந்நிதியில் (கிட்ட) இந்த வியாபாரங்களை விதித்திருப்பதால், ஒரு ஆகாங்க்ஷையை உண்டுபண்ண வேண்டும் என்று சொல்லுகிறீரோ,? அப்போது ஆகாங்க்ஷை என்கிற அவாந்தர ப்ரகரணம் (பாரா-93) இருப்பதாக முத

யில் ஒப்புக்கொள்ளவேணும். அதின் வழியாக வாக்யம், லிங்கம், ச்ருதி இவைகளை ஏற்படுத்தவேணும். ஆகையால் ஸந்நிதிக்கும் விநியோகத்துக்கும் நடுவில் நாலு விஷயங்கள் ஏற்படுத்தவேணும். ராஜஸூயத்தின் ஆகாங்க்ஷையாகிய மஹாப்ரகரணம் ஏற்கனவே இருக்கிறது. அதற்கும் விநியோகத்துக்கும் நடுவில் மூன்று விஷயங்கள்தான் வேண்டும். ஸந்நிதி தூரத்தில் இருக்கிறது. ப்ரகரணம் கிட்ட இருக்கிறது. ப்ரகரணம் ப்ரபலம். ஸந்நிதி துர்பலம். ஆகையால் ஸந்நிதியைப் பார்த்து, ப்ரகரணமானது சொன்ன வியாபாரங்களை ராஜஸூயத்துக்கு அங்கமாகச் செய்கிறது. (அதி – 10).

(114) கிரமமும், ஸமாக்யையும்:—107-வது பாராவில் சொன்ன மந்திரமே இங்கேயும் விசாரிக்கப்படுகிறது. அங்கே பால் கறக்கிற பாத்திரங்களைமட்டும் அதைக்கொண்டு சுத்தி செய்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது. இங்கே புரோடாசம் செய்வதற்கு வேண்டிய உரல், உலக்கை முதலான பாத்திரங்களையும் அந்த மந்திரத்தைக்கொண்டு சுத்தி செய்கிறதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—அவைகளையும் அந்த மந்திரத்தைக் கொண்டு சுத்தி செய்யவேண்டியது. 'பௌரோடாசிகம்' என்று சொல்லப்பட்ட வேதத்தின் பாகத்தில் அந்த மந்திரம் படித்திருக்கிறது. அதிலேயே உரல் முதலான பாத்திரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸமாக்கியை என்னும் பிரமாணத்தாலே அவைகளையும் அதைக்கொண்டு சுத்திசெய்யவேண்டியது.

ஸித்தாந்தம்:—பௌரோடாசிகம் என்கிற சொல்லில், ப்ரகிருதி (முதல் பாகம்) புரோடாசத்தையும், இரண்டாவது பாகம் (ப்ரத்யயம்) காண்டம் என்கிற வேதபாகத்தையும் சொல்லுகின்றன. இதனாலேயே மந்த்ரம் எல்லா புரோடாச பாத்திரங்கள் ஸந்நிதியில் (கிட்ட) படிக்கப்பட்டிருக்கின்றன என்று கொள்ளக்கூடாது. அர்த்தாபத்தி என்னும் பிரமாணத்தால் அதை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். எப்படியென்றால் சொன்னபடி ஸந்நிதி இல்லாவிட்டால், விசாரிக்கும் மந்திரம் இருக்கும் வேதபாகத்துக்கு பௌரோடாசிகம் என்று பெயர் இருக்கக்கூடாது. உதாரணம்–ஆக்நேயம் என்று வேதத்தில் ஒரு பாகம் இருக்கிறது. அதில் "இஷே த்வா" என்கிற மந்த்ரம் படிக்கப்படவில்லை. அதற்கு ஆக்நேயம் என்று பெயர் இல்லை. "யஜ்ஞா ஜ: [illegible]" என்கிற மந்த்ரம் அதில் படிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அந்தப் பெயர் உண்டு. இவ்விதமாக மந்த்ரத்துக்கும் பாத்ரங்களுக்கும் ஸந்நிதியை ஏற்படுத்திக்கொண்டு அவைகளுக்கு ஒன்றுக்கொன்று



ஆகாங்க்ஷையில்லாவிட்டால், ஸந்நிதி உண்டாகாது என்று சொல்லி ஒரு ப்ரகரணத்தை ஏற்பாடு செய்யவேண்டும். அதின் வழியாய் வாக்யத்தையும், லிங்கத்தையும் சுருதியையும், ஏற்படுத்திக்கொண்டு அந்த ச்ருதியாலே விநியோகம் செய்யவேண்டியது. அதாவது மந்த்ரமானது புரோடாச பாத்திரங்களைச் சுத்தி செய்வதற்கு அங்கம் என்று முடிவு செய்யவேண்டியது. இப்படி ஸமாக்கியைக்கும் விநியோகத்துக்கும் நடுவில் ஐந்து விஷயங்களை ஏற்படுத்திக்கொள்ளவேணும். பால் பாத்திரங்களுக்கோ, மந்திரத்தின் ஸந்நிதி பிரத்தியக்ஷமாயிருக்கிறது. எப்படி என்றால் – இத்மத்தையும் பர்ஹிஸ்ஸையும் கொண்டுவருவதற்கும் நிர்வாபம் செய்வதற்கும் நடுவில் பால் பாத்திரங்களை ப்ரோக்ஷிக்கவேண்டியது. மந்திரமும் இத்மா - பர்ஹிஸ்ஸைக் கொண்டு வருகிற மந்த்ரங்களுக்கும் நடுவில் படிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸந்நிதி ஏற்கனவே இருக்கிறது. ஆகையால் அதைக்கொண்டு பிரகரணம் முதலான நாலு விஷயங்களைத்தான் ஏற்படுத்திக் கொள்ளவேணும். ஸமாக்கியைக் காட்டிலும் ஸந்நிதி விநியோகத்துக்குக் கிட்ட இருக்கிறது. ஆகையால் ஸந்நிதி என்கிற க்ரமத்தாலே ஸமாக்கியை பாதிக்கப்படுகிறது. பால் பாத்திரங்களை ப்ரோக்ஷிப்பதற்குத்தான் அந்த மந்திரம் அங்கம் (அதி - 11).

(115) கீழ்பாராக்களில் ஒருபிரமாணம் இன்னொரு பிரமாணத்தைப் பாதிக்கிறது என்று சொல்லப்பட்டது. இது ஸரியா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்;—ஸரியன்று; பிரமாணம் ப்ராப்தமா! அல்லது அப்ராப்தமா? என்று கேட்கிறேன். ப்ராப்தமானால் அதின் வேலையை விநியோகத்தை அது செய்யும். அதை எப்படித்தடுப்பது? அப்ராப்தம் என்றால் அதை எப்படித்தடுக்க முடியும்.

ஸித்தாந்தம்:—பிரமாணம் முழுவதும் அப்ராப்தம் அன்று; அதின் விஷயமாய் ஓர் அறிவு உண்டாகிறபடியால். முழுவதும் ப்ராப்தமும் அன்று. அது தன் வேலையைச் செய்யாதபடியால். ஆகையால் பாதம் என்கிற சொல்லுக்கு புத்தியில் தோன்றின பிரமாணத்தைக்கொண்டு விநியோகம் செய்வதைத் தடுப்பது தான். இதை அப்ராப்த பாதம் என்று சொல்லுகிறது, பத்தாவது அத்யாயத்தில் ப்ராப்த பா(வா)தம் என்பது சொல்லப்படுகிறது. (அதி-12)

(116) 110-வது பாரா முதல் இது வரையில் ச்ருதி முதலான பிரமாணங்களுக்குள்ளே ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் விரோதம் இருந்தால் எதை வைத்துக்கொள்ளுகிறது; எதைத் தள்ளிவிடுகிறது என்று விசாரிக்

கப்பட்டது. இப்போது எந்த இடத்தில் விரோதம் இருக்கிறது, எங்கே இல்லை என்று விசாரிக்கப் படுகிறது.

(117) ஜ்யோதிஷ்டோம ப்ரகாணத்தில்— "திஸ்ர ஏவ ஸாஹ்நஸ்ய உபஸத: த்வாதஶாஹீநஸ்ய" (கா-11-ப்ர-2 அநு-5-பஞ்-18) என்கிற வாக்யங்கள் இருக்கின்றன. ஒரே நாளில் ஸோமயாகங்கள் முடிவதால், ஸாஹ்ந என்கிற சொல் ஜ்யோதிஷ்டோமத்தைச் சொல்லுகிறது. முதல் வாக்யத்தில் அதுக்கு மூன்று உபஸதுக்கள் என்று ஏற்படுகிறது. இரண்டாவது வாக்யத்தில் சொல்லப்பட்ட பன்னிரண்டு உபஸத்துக்களும் அதற்கு உண்டா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—உண்டு. இது ப்ரகரணத்தாலேயே ஏற்படுகிறது. அஹீநம் என்கிற சொல்லுக்குக் குறைவில்லாதது என்று பொருள். ஜ்யோதிஷ்டோமத்துக்குத்தான் எல்லா அங்கங்களும் குறைவில்லாமல் சொல்லப்படுகின்றன. விக்ருதியான ஸோமயாகங்களில் அவைகளையெல்லாம் சொல்லாமையால் குறைவு இருக்கிறது. ஆகையால் "அஹீநம்" என்பது ஜ்யோதிஷ்டோமம் தான். உபஸத்துக்கள் மூன்று என்றும், பன்னிரண்டு என்றும் சொல்லப்படுவதால், எதை வேண்டுமோ, அதைச் செய்யலாம்.

ஸித்தாந்தம்:—எதில் ஸோமயாகங்களை முதல் நாளில் போல், அடுத்த நாள்களிலும் செய்கிறார்களோ, அந்த ஸோமயாகத்துக்கு அஹீநம் என்று பெயர். இந்தச் சொல்லைக் கேட்டவுடனே இதின் நினைவுவருகிறது. குறைவில்லாதது என்று பொருள் கொள்ளவேண்டுமானால், அஹீந என்கிற சொல்லை ந ஹீந என்று பிரித்து, ஒவ்வொன்றின் பொருளை அறிந்து, அவைகளைச் சேர்த்து, முழுச் சொல்லின் பொருளை அறியவேணும். யோகத்தைக்காட்டிலும் ரூடி ப்ரபலம். (பாரா-45 ii) மேலும், ந என்கிற சொல்லும் ஹீந என்கிற சொல்லும் சேர்ந்து அஹீநம் என்கிற சொல் உண்டாயிருந்தால், ஆதி உதாத்தஸ்வரமாயிருக்கும். அப்படியில்லை. நடு எழுத்தை உதாத்தமாக வேதம் படிக்கிறது-ஆகையால், அஹீநம் என்பது ஜ்யோதிஷ்டோமத்தைக் காட்டிலும் வேறானது. ஷஷ்டீ ச்ருதியால் பனிரண்டு என்பது அஹீநத்தின் உபஸத்தில் வந்துசேருகிறது. ச்ருதிக்கும், ப்ரகரணத்துக்கும் விரோதம் இருப்பதால், ப்ரகரணத்தை விட்டு இதை எடுத்துவிடவேண்டியது. இப்படிச் செய்வதற்கு உத்கர்ஷம் என்றுபெயர் (அதி-13).

மூன்றாவது பாதம் முற்றிற்று.

ஸ்ரீ:

# கிருஹஸ்தன் ஆவது எப்படி?

[ஸ்ரீ. உப. வே. பண்டித அநந்தாசார்யர், பச்சையப்பன் காலேஜ்]

ஸகலஜநங்களுக்கும் வேதாந்த விஷயங்களைத் தெரிந்து கொள்ள விருப்பமுண்டு. இதைப் பண்டிதர் முதல் பாமரர்வரை காணலாம். ஆனால் கேட்டுத் தெரிந்துகொண்ட விஷயங்களை அநுஷ்டானத்துக் கொண்டுவந்தவர் சிலரே. ஞானம் உள்ளவர் அனைவரும் அநுஷ்டாதாக்களாக இருந்தால் இவ்வுலகம் எவ்வளவோ மேன்மையை அடைந்திருக்கும். அறிந்தவர் கூட அநுஷ்டாநத்தில் இழியாததற்குக் காரணம் ஒன்றே. அது என்னவெனில் ஆலஸ்யம். ஆலஸ்யம் என்பது வடமொழிச்சொல் அதற்குத் தமிழ்பாஷையில் சோம்பல் என்று பொருள் கூறலாம். இவ்வாலஸ்யத்தை பெரும் பகையாளியாகக் கூறப்பட்டிருக்கிறது. "ஆலஸ்யம் ஹி மநுஷ்யாணாம் சரீரஸ்தோ மஹாரிபு:" என்று. மனிதர்களுக்கும் மரணம் உண்டாவதற்கு நான்கு காரணங்களை மநு கூறுகிறார். (1) வேதங்களை ஓதாதது. (2) நல்ல ஆசாரங்களை விட்டொழித்தல், (3) ஆலஸ்யம், (4) அன்னத்தின் தோஷம்.

இந்நான்கில் ஆலஸ்யம் ஒன்றே மற்ற மூன்றுக்கும் காரணம் என்று சொல்வது உசிதமாகும். இக்காலத்து ஜனங்களின் மனப்போக்கைப் பார்க்கும் போது, ப்ரதிதினம் மூன்று வேளையிலும் ஸந்த்யோபாஸநத்தை விதிக்காமல், ஒருவருஷத்திற்கு ஒருமுறை செய்யுமாறு நமது ரிஷிகள் விதித்திருந்தால் அப்போதாவது சோம்பலை விட்டு அநுஷ்டிப்பார்களோ என்று எண்ணலாம் போல் இருக்கிறது. முன் காலத்தில் ரிஷிகள் ஸந்த்யோபாஸநத்தை விஸ்தாரமாய் செய்து வந்தார்கள். ஆதலால் அவர்களுக்கு நீண்ட ஆயுள் இருந்தது என்பது மநுவின் அபிப்ராயம். ஆகையால் ஜனங்கள் துன்பப்படுவதற்கு முக்கியகாரணம் ஆலஸ்யமே என்று சொல்லுவதில் ஒருவருக்கும் ஆக்ஷேபனை இருக்காது என்று நம்புகிறேன். இப்போதும் இந்தக்கொடும் பகையான ஆலஸ்யத்தை விட்டொழித்தவர் நல்ல உயர்ந்தஸ்திதியில் இருப்பதை நாம் ப்ரத்யக்ஷமாய்க் காணலாம். ஸ்ரீபகவத்கீதையில் நான்காவது அத்யாயம் முப்பத்தொன்பதாவது, நாற்பதாவது ச்லோகங்களில் ச்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம், என்றும், அஜ்ஞச்சா ச்ரத்ததாநச்ச என்றும், இவ்வாலஸ்யமே நன்மைபெற இடையூறாக நிற்கிறது என்று மிகத்தெளிவாய் காட்டப்பட்டது. ச்ரத்தா என்னும் சொல்லுக்கு த்வரா, அதாவது சுருசுருப்பு, சோம்பல் இன்மை என்று ஸ்ரீபாஷ்யகாரர்,

ஸ்ரீதேசிகன் வ்யாக்யானம் செய்திருப்பதை கவனிக்கவும். இவ்வாலஸ்யம் என்ற துர்குணத்தாலேயே இக்காலத்திய வர்ணங்கள் பிறப்பையே ஆதாரமாகக்கொண்டு நிற்கின்றன. ஜாதியின் கதியே இவ்விதம் இருக்கும்போது ஆச்ரமத்தின் நிலைமையைப்பற்றிக் கேழ்க்கவேண்டியதே இல்லை. எல்லா நன்மைகளுக்கும் மூலாதாரம், ப்ராஹ்மணர்களுடைய ப்ரஹ்மசர்யாச்ரமம். அது இப்போது வேறு அறுந்து கிடைக்கிறது. இப்படி அறுக்கப்பட்ட வேறுக்கு இனி உயிர் உண்டாக்குவது அஸாத்யம் என்றே சொல்லலாம். ஆகையால் ப்ரஹ்மசர்யாச்ரமத்தைப் பற்றி இப்போது பேசுவது காலநிலைமைக்கு ஒவ்வாததாகும் என்றும், காலத்திற்கு ஏற்காத விஷயத்தைப்பற்றிப் பேசுபவன் பித்தம் பிடித்தவனாக பாவிக்கப்படுவான் என்றும்; கருதி அதைப்பற்றி மௌனமே மர்யாதை, என்று எண்ணி நிறுத்தி விடுகிறேன். ஆனால் இப்போது காணப்படுகிற க்ருஹஸ்தாச்ரமத்தைப்பற்றி மாத்திரம் சிறிது விசாரிப்போம். இதை வேறு இல்லாமல் முளைத்தமரம் என்றே சொல்லவேணும். இது இந்த்ரஜால வித்தைக்காரன் காட்டும், செடி மரம் கொடி, இவைகளுக்கு ஒப்பானதாகும். ஆனாலும், நமது கண்முன் தோன்றும் தோற்றத்திற்கு ஏற்ப, உண்மையான வஸ்துவாகவே எண்ணிப்பேசுவோம். இந்த க்ருஹஸ்தாச்ரமத்தில் இருப்பவரை அந்தரங்கமாய் சில கேள்விகளைக் கேழ்க்க விரும்புகிறேன். அதிகப் ப்ரஸங்கி என்று என்பேரில் கோபம் கொள்ளாமல் இருக்க வேண்டுகிறேன். நான் வேதங்களையும் மற்ற சாஸ்த்ரங்களையும் ப்ரமாணமாகக் கொண்டு உங்களுடன் வாதிக்க வரவில்லை. சிற்றின்பங்கள் பயனற்றவை என்றும், பேரின்பமே சிறந்தது என்றும் வாதிக்கவரவில்லை. எதற்காக க்ருஹஸ்தாச்ரமத்தை ஸ்வீகரித்தீர்கள்! ஸ்ரீபகவத் கீதையில் சொன்ன கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், இவைகளால் பெறக்கூடிய மோக்ஷம் இவைகளைக் கட்டி தூரத்தில் வைத்து விட்டுப் பேசுவோம். மோக்ஷானந்தம் என்பது எப்படிப்பட்டதோ. அது கிடைக்கக் கூடியதோ அல்லவோ? இவ்வுலக வாழ்க்கையிலாவது இன்பத்தைக் கருதல் வேண்டாமா? இன்பம் என்பது ஏது என்று விசாரித்தால் மநுசொன்ன தீர்மானத்தை மறக்கமுடியாது. அதாவது 'ஸர்வம் பரவசம் துக்கம், ஸர்வமாத்மவசம் ஸுகம்:. என்பது இந்த வசனத்தின் முக்யதாத்பர்யம் என்னவென்றால், தன்னுடைய தேஹயாத்ரையிலும், ஆத்மயாத்திரையிலும் பராதீனமாக இராமல் கூடியவரை ஸ்வாதீனமாக இருத்தலே இன்பம்- என்று இவ்விஷயத்தை நம்மவர் சிறிதேனும் கவனிப்பதில்லை. லௌகிகர்களும் வைதிகர்களும் இவ்விஷயத்தில் நன்கு கவனம் செலுத்தவேணும். நம்முடைய தேகயாத்திரையை இதரரை அபேக்ஷிக்காமல் ஸ்வாதீனமாய் நடத்துவதற்கு என்ன என்ன யோக்யதை வேண்டுவது! வைத்யம் ஜ்யோதிஷம், தர்மசாஸ்த்ரம், நீதி சாஸ்த்ரம்



சில்பசாஸ்த்ரம், முதலியவை தர்க்க வ்யாகரணங்களைக் காட்டிலும் மேற்சென்னவை மிகவும் முக்கியமானவை என்பதைப் நம்முடைய பண்டிதர்களுக்குப் பலமுறை எச்சரிக்கை செய்யவேண்டியதாயிருக்கிறது. நமது பண்டிதர்கள் மகாமேதாவிகள். அவர்களின் புத்திக்கு எட்டாத விஷயம் ஒன்றும் இல்லை. ஊக்கமும் பிடிவாதமும் உள்ளவர்கள். அவர்களின் புத்திக் கூர்மை உலக விஷயங்களில் சென்றால் மிகவும் உபயோகமாயிருக்கும். ஆஸ்திகர் அனைவரும் அடியிற்கண்ட விஷயத்தை முக்கியமாய் கவனிப்பது உசிதமாகும். குடும்பத்தை பரிக்கவேண்டிய ஒவ்வொருவனுக்கும் அதற்கு அவச்யமான படிப்பைப் புகட்டவேணும். சரீர ஸௌக்கியத்தை நன்றாக கவனிக்கும் பொருட்டு வைத்ய சாஸ்த்ரத்தின் சில பொது விதிகளை கற்பித்தல் மிகவும் அவச்யமாகும். சிகித்ஸாமுறைகளில் ஆழ்ந்த அறிவு இல்லாவிட்டாலும் பொது விதிகளை அவச்யம் கற்பிக்கவேண்டும். காலம் செய்வது கோலம் செய்யாது. என்று பழமொழி உண்டு. எல்லா கார்யங்களுக்கும் காலம் முக்கியமான கருவியாகும். ஒவ்வொரு கார்யத்திற்கு ஏற்றபடி காலத்தை நிர்ணயித்து கார்யம் செய்யவேணும். அதற்கு ஜ்யோதிச் சாஸ்த்ரத்தின் அறிவு இன்றியமையாதது. இக்காலத்துப் பிள்ளைகளுக்கு இங்கிலீஷ் தேதியும் வாரமும் தவிர வேறு ஒன்றும் தெரியாது. திதி நக்ஷத்திரங்களைக் கூட தாங்களே பார்த்துக் தெரிந்து கொள்ள சக்தியற்றவர்களாய் ஜோஸ்யரைத் தேடவேண்டியிருக்கிறது. இக்கஷ்டத்தை நிவ்ருத்தி செய்ய ஜோதிட சாஸ்திரத்திலும் சிறிதளவு அறிவு வேண்டும். மேலும் தர்மசாஸ்த்ரத்திலும் சிறிதளவு அறிவு வேண்டும். மேலும் தர்ம சாஸ்த்ரத்தில் முழுமூடர்களான சிறுவர்கள் குடும்பத்தை நடத்தும் ரீதியைப்பார்க்கும் போது மிகவும் வியஸனம் உண்டாகிறது. ஆகையால் தர்ம சாஸ்திரங்களிலும் சிற்சில விஷயங்களை எடுத்துப் பொருக்கி அவர்களுக்குக்கட்டாயப் படிப்பில் சேர்க்கவேணும். அவரவருடைய மதவிஷயமானபடிப்பு மிக அவச்யமானது என்பதைப் பற்றி கிளர்ச்சி ஏற்கனவே இருந்து வருகிறது.

ஆகையால் மேற்சொன்ன விஷயங்களில் கொஞ்சம் அறிவு இருக்குமானால் நமது சிறுவர் எவ்வளவு இன்பமுற குடும்பம் செய்வார்கள் என்பதை பெற்றோர்கள் அனைவரும் கவனிக்குமாறு வேண்டுகிறேன். அப்படி ஆண்குழந்தைகளுக்கு மேற்சொன்ன வித்யைகளைக்கற்றுக்கொடுக்க முடியாவிட்டால் பெண்பிள்ளைகளுக்காவது வற்புறுத்திக் கற்பிப்பது மிகவும் அவச்யம்.

ஸ்ரீ:

# க்ரந்த விமர்சம்.

(1) திருவாய் மொழி - இரண்டாம் பத்து:—திவான் பகதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யருடைய தமிழ் உரையுடன் கூடியது. இதன் முதற் பத்து ஏற்கெனவே வெளிவந்திருக்கிறது. முதற் பத்திற் போலவே இதிலும் ஒவ்வொரு பாசுரத்திற்கும் அவதாரிகை பதவுரை கருத்து குறிப்பு இலக்கணம் என்னும் தலைப்புக்களின் கீழ் எளிய தமிழில் வ்யாக்யானம் எழுதப்பட்டிருக்கின்றது. இது நீங்கலாக இந்த ஸஞ்சிகையில் இரண்டு அநுபந்தங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன—(1) ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்திருக்கும் த்ரமிடோபநிஷத் ஸாரம் (தமிழ் அர்த்தத்துடன்), (2) தமிழ் இலக்கணம். இதன் விலை அணா 12. இது கிடைக்குமிடம், ஸ்ரீ. உப. என். ராஜகோபாலாசார்யர், அட்வொகேட், கங்காதரபுரம், ஸ்வாமிமலை போஸ்ட், கும்பகோணம்.

(2) கதா மஞ்சரி:—இது, மதிராஸ் பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்க்ருத லெக்சரர் பண்டித ஸ்ரீ. உப. வி. அநந்தாசார்யரால் பால சிக்ஷையை உத்தேசித்து ஸம்ஸ்க்ருதத்தில் எழுதப்பட்ட ஒரு சிறிய புஸ்தகம். கதாஸரித் ஸாகரத்திலிருந்து வாருசியின் கதையும், பாத்ம புராணத்திலிருந்து ஏகு காவ்யமும் எடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் இருக்கும் வாசகங்கள் சிறுவர்களுக்கு எளிதில் விளங்குமாறு தமிழில் மொழிபெயர்த்து பொருள் கூறுவதற்குத் தகுந்தவையாக இருக்கின்றனவென்பது இதன் ஏற்றம். இதன் விலை அணா 4. இது கிடைக்குமிடம், மதிராஸ் ஸம்ஸ்க்ருத புக் டெபோ, குமரப்பமுதலி தெரு, நுங்கம்பாக்கம், மதிராஸ்.

(3) திருப்பாப்புலியூர் பண்டித, ஸ்ரீ. உப. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ ராமாநுஜாசார்யரால் எழுதப்பட்டுள்ள "ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷணம்" என்னும் ஒரு புஸ்தகம் நாம் வரப் பெற்றோம்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## ஸ்ரீமத் ஜகத்குரு அநந்தாசார்ய ஸ்வாமிகள் 61-வது ஆண்டு விழா பம்பாயில் நடந்த வைபவம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

எண்ணரும் சீர் கச்சிப்பதியில் சென்ற ஆண்டில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி உற்சவம் வெகு சிறப்புடன் நடந்ததை நேரில் கண்டு களிக்கப் பெற்றவர்கள் மறக்கற்பாலதன்று. ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தில் அதிலும் ஓராண்வழியாய் தொன்றுதொட்டு வரும் இவ் வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு திலகமாய், ப்ரதிவாதி



பயங்கர வம்சத்திற்கு ஓர் நிதியாய், மற்றுள்ளாரனைவருக்கும் ஆனந்தமூர்த்தியாய், விளங்கும் ஸ்ரீ ஸ்வாமிகளின் 61-வது ஆண்டு விழா இன்று மிக்க சிறப்புடன் நடைபெறுவது ஸர்வேச்வரன் திருவருளாகும். "கலியும் கெடும் கண்டு கொள்மின்" என்று காரிமாறப்பிரான் கழறும் களிக்க சொற்கள் இன்றளவில் பயனடைந்ததில் பூரிக்காதவர் யாவர்? முன்னோர்கள் ஆசரித்து வந்த எம்பெருமானார் தரிசனத்தில் வீற்றிருந்த ஆசார்யர்களான, எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பிள்ளை லோகாசார்யர், ஸ்ரீமந் மணவாளமாமுனிகள் வரையில் சென்ற 500 ஆண்டுகளாக யாதொரு ப்ரவர்த்தகரையும் காணாமல் கலியில் மூழ்கிக் கிடந்தது. அநேகருக்கு இஃது இவ்வாறு ஆவதற்குக் காரணம் வினவிய வண்ணம் யாதொரு மாற்றமும் கண்டிலர். ஸார்வபௌமராய் வாழ்ந்து முக்குறும்பறுத்து மூவுலகும் முடிசாட்டி முக்கோல் தரித்த யதிராஜன் தரிசநத்தில் அணிஅணியாக 200, 300 வருஷங்கள் அடுத்து வந்து ஓர் பெரிய பிரவாஹ இன்பம் பயக்கம் பெற்றது. இப்பிரவாஹம் மணவாள மாமுனிகளோடு முடிந்துவிட்டது. இனி இத் தரிசநத்தைக் காப்பார் ஒருவருமின்றி காலம் கழித்ததை எவ்வண்ணம் சிந்திப்பாம். திருமகள் கோன் தரிசநத்தில் யாதொரு குலத்திலாயினும் ஓர் செந்தாமரை மலர்வதுபோல் ஓர் ஆசார்யர் தோன்றக் கூடும்! என்று ஏக்கமாய்விட்டது. அக் குறையை நீக்குமான் வேண்டி விண்ணோர் பெருமான் விளங்கி சுடராழிப் பிரானைப் பிணிபொழிந்து அம்மான் பெருவிசும்பருளும் பேரருளாளன் தன் பெருங்கருணையினால், பிரதிவாதி பயங்கர வம்சத்தில் ஸ்ரீ ஜகத்குரு அநந்தாசாரியர் ஸ்வாமிகளை அவதரிப்பித்தார்.

கருவிலே திருவுடையாராய் காணுந்தோறும் இனியராய் யாவர்க்கும் எளியராய் எப்பொழுதும் பீதகவாடை பிரானை தம்முளத்துள்ளே தேனூரித் தித்திக்கும் தவமுடையராய் எண்ணில் பல் குணங்களும் மலியப் பெற்றவராய், தமது குலம், கல்வி, ஜ்ஞாநம் ஆசார ஒழுக்கங்களாலும் சிறந்து விளங்கினர். பருவம் நிரம்ப ஜ்ஞாநம் நிறைந்தது தேன் கலந்த பலம் நிகள் தாமே தலை சாய்க்குமாப்போலே இவர் ஜ்ஞாநம் மண்ணுண்டு மல்லிகை மணம் கமழ்ந்து செங்கமலம் அந்தரம்சேர் வெண்கதிரோற்கு அலருமாப்போலே தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கு முணர்வுபெற்ற நம் ஸ்வாமிகளின் தோற்றத்தினால் எம்மையன் இராமாநுஜன் தரிசநமும் செருகலைபால் நாவையும் வருந்த மொழிந்தது. வேதங்களும் மந்த்ரங்களும் பிரபந்தங்களும் இவர் வாயளவாய் வீறு பெற்றன.

கற்கும் கலைகளெல்லாம் வாலறிவன் நற்றாள் தொழுவது என்பதுவே கருதி, தாதுசேர் தோள் கண்ணனை, முன்னோர் ஆதரித்த முறையால் நூற்றெட்டுத் திருப்பதிகளும் ஸேவித்து தென்னாடும் வடநாடும் கண்டு களிக்கும்படி திசைதோறும் கீர்த்தி பெயரொழுந்தது. ஸ்வாமிகள் கைங்கர்யத்தில் மிக்கப் பற்றுள்ளவர் என்பது அவர் தாம் திருவியுள்ள கோவில்களில் கண்டு தெளிவாம். பகவத் விஷயத்தில் பக்தி பாராட்டி வரும் வடதேசங்களில் எம்பெருமானுக்குத் தென்னாடுகளில் போல் கோயில்கள் இல்லாத குறையை நீக்கி வைத்தார்கள். புஷ்கரம், பம்பாய் முதலான இடங்களில் சமைத்திருக்கும் எழில் மாடங்கள், கோபுரங்கள், மண்டபங்கள், சாலைகள், மடங்கள் முதலானவைகளை நோக்குமில் ஒருவரால் ஒருகாலத்தில் இயற்றக் கூடியதென்பதே அஸாத்யமாகத் தோன்றும். இவையனைத்தும் ஸ்வாமிகள் சிருகாலத்தில் தம் நாவன்மையால் தமக்கென்றே அளிக்கப்பெற்ற திரவ்யத்தை யாம் படைத்த இன்

பத்தை இவ்வுலகத்தாரும் பெறவேண்டுமென்கிற பேராவலால் பல்லோருக்கும் பயன்படும்படி செய்தது எத்தனைச் சிறப்புடையதென்று எம்போல்வார் துணிந்து கூறற்பாலதன்று. செவிக்கினிய செஞ்சொல்லால் ஸ்வாமிகள் செய்துவரும் அரிய உபந்யாஸங்கள் எவ்வெவர் உள்ளத்தையும் தம்மையறியாமலே கவரும். அவர் தம் சொற்கள் எப்பொழுதும் பேதைகளும் பெண்களும் தெளிந்த நீர்போல் கண்டுகொள்ளுதல் கூடும்

இத்தகைய அதிமானுஷ்ய சீலரைப் படைத்தது எம்பெருமானுருடைய தரிசனம் இன்றே மிக்க வீறு பெற்றதாகும். பம்பாயில் ப்ரதிஷ்டைசெய்த ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதி இன்றைக்கு எட்டு ஆண்டுகள் கழியப்பெற்றன. இவ்வருஷம் ஸ்வாமிகள் இங்கு எழுந்தருளினபடியால் பெருமாளுடைய உற்ஸவம் வைகுந்தமாநகர் மற்றது கையதுவே என்பதுபோல வெகு வைபவமாக நடைபெற்றது. முன்னரே பத்திரிகைகள் மூலம் பிரசுரிக்கப்பட்டது. இவ்வருஷம் ஸ்வாமிகள் அவதார தின வைபவம் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. ஐந்து நாள்கள் திருவாய்மொழி ஸேவையுடன் வேத பாராயணம், ஸ்ரீமத் ராமாயணம், பகவத்கீதை முதலான கோஷ்டியுடன் மடத்தில் உற்சவம் கொண்டாடப்பட்டது. பின்னர், ஸ்வாமிகள் அவதார தினத் தன்று, காலையில் ஸேவைகள் முடிந்தவுடன் பெருமாள் ஸந்நிதியிலிருந்து மரியாதைகள் ஸகல வாத்யங்களுடன் கொண்டுவரப் பெற்று ஸ்வாமிகளுக்கு மரியாதை நடந்தது. சாத்துமுறை முடிந்தவுடன் ஸ்வாமிகள் ஸகலருக்கும் ஸ்ரீ பாததீர்த்தம் வழங்கினார்கள். பின்னர் கோஷ்டி மரியாதைகள் நடக்க, ஸகலருக்கும் ததீயாராதநமும் முறையே வெகு ஸம்ப்ரமமாக நடந்தது. இராத்ரி ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளுக்கும் அலர்மேல் மங்கைத் தாயாருக்கும் வெகு சிறப்புடன் மிக்க செலவில் தவன உற்ஸவம் நடைபெற்றது. அன்று ஸ்வாமிகள் பெருமாளை வீதிவலமாக எழுந்தருளப்பண்ணி ராத்ரி பஜனை கோஷ்டிகள், ஸங்கீதக் கச்சேரி முதலான வைபவங்களுடன் பூர்த்திசெய்யப்பெற்றது.

ஸ்வாமிகள் திருவவதார தினத்தை பம்பாய் நகரவாஸிகள் தங்களாலியன்ற வளவில் சிறப்புடன் செய்து வைத்ததை வியப்புறாதவர் எவர்! ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்திக் குறைவாக விருந்தபோதிலும் பெருமாளுடைய வைபவத்தாலும் ஸ்வாமிகளின் ஸேவையினாலும் அந்தக் குறை நீங்கப் பெற்றது. இத்தகையப் பேரின்பம், பெருகும்படி செய்யும் ஸ்வாமிகளின் மஹிமையால் இவ்வைஷ்ணவ சமயம் இன்று பொலிவு அடைந்தது. ஸ்வாமிகள் எழுந்தருளியிருக்கும் காலத்தில் அவாளுடைய ஜ்ஞானத்தையும் எல்லையில்லாத சீலத்தையும் கை கொள்வது இச்சமயத்தில் சேர்ந்தோரனைவருடைய பொறுப்பாகும். ‘இல்லையெனக்கெதிர், இல்லையெனக்கெதிர், இல்லையெனக்கெதிர்’ என்று எம்பார்தம் பேரமுதம் தோன்ற கூறிய மொழிகள், இன்று ஸ்வாமிகளின் பெருமை நம் வைஷ்ணவ உலகம் அனைத்துக்கும் உரியதாகும்.

பம்பாய்
25——35. } வி. பி. ராஜகோபாலாசார்யர்.

(2)

ஸ்ரீரங்கத்தில் ஸ்தாபித்திருக்கும் தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையின் அக்ராஸநாதிபதி ஸ்ரீமதுபய வே. எ. வி. கோபாலாசாரியர் ஸ்வாமி (M. A. B. L. அட்வொகேட்) கையெழுத்துடன் நிகழும் பவ௵ மாசி மாதத்திய வேதாந்த தீபிகையில் ஸபையின் ஸம்பந்தமாக “ஓர் விஜ்ஞாபனம்” வெளிவந்திருக்கின்றது.



தேசிகன் லோகோஜ்ஜீவனார்த்தமாகப் பல திவ்ய ஸூக்திகளை அருளியிருக்கிறாரென்பது உண்மை. அவற்றில் குற்றமிருப்பதாக நினைத்துச் சிலர் “தற்போது” சில புஸ்தகங்களை வெளியிட்டு வருவதாக கோபாலாசார்யர் எழுதியிருப்பது ஆராயத் தகுந்தது. “தற்போது” என்று இவர் எழுதியிருப்பதால் ஸமீபகாலத்தில் வெளிவந்த புஸ்தகங்கள்—என்று ஏற்படுகிறது. ஸர்வஜ்ஞசிகாமணியான தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் அநாவச்யமாக தோஷ நிரூபணம் செய்யப் புகுந்து க்ரந்தங்களியற்ற முன்வந்தவர் யாவர் என்றும், அவை என்ன பெயருடைய க்ரந்தங்கள் என்றும் ஆலோசித்து, ‘தற்போது’ என்ற சொல்லுக்கு அநேக வருஷங்களை அர்த்தமாகக் கொண்டு விமர்சித்துப் பார்த்தவிடத்திலும், அப்படிப்பட்ட புஸ்தகம் ஒன்றும் புலப்படவில்லை. ஆனால், கோபாலாசாரியர் வெளியிட்டிருக்கும் விஜ்ஞாபனத்தில்—

“அவைகளுக்குக் கண்டனமாக இச்சபையாரால் இதுவரையில் மூன்று க்ரந்தங்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன” என்று எழுதியிருப்பதைக் கொண்டு அந்தப் பூர்வபக்ஷ க்ரந்தங்களின் பெயரைத் தெரிந்துகொள்ளலாம்: திருமணிஸ்வாமி வெளியிட்ட ப்ரணவ விஷயமான இரண்டு க்ரந்தங்களும் அண்ணங்கராசாரியார் வெளியிட்ட நமஸ்கார தத்வமென்னும் ஒரு க்ரந்தமுமே கோபாலாசார்யரால் தேசிக தூஷண க்ரந்தங்களாகக் கருதப்பட்டனவென்பது ஸ்பஷ்டமாகிறது. இம்மூன்று க்ரந்தங்களையும் மத்யஸ்தர்களான விவேகிகள் ஸ்தூல த்ருஷ்டியாகவே வாசித்துப் பார்த்தாலும்,—இவை தேசிக ஸ்ரீஸூக்திகளை தூஷிக்க வந்தவையல்ல; தூஷண லவலேசமும் இவற்றில் கிடையாது—என்பதை எளிதில் உணர்வார்கள். இதர ஸம்பிரதாயஸ்தர்களால் வெளிவந்த தூஷணங்களைப் பரிஹரித்து ஸ்வஸம்ப்ரதாய ஸம்ரக்ஷணார்த்தமாக எழுதப்படும் க்ரந்தங்களை ஆசார்ய தூஷண க்ரந்தங்களென்று நிர்த்தேசிப்பது பொருந்துமா?

ஸப்ரணவோபதேச விஷயத்தில் உபய ஸம்ப்ரதாயத்திலும் தொன்று தொட்டே அநுஷ்டாந பேதமிருந்து வருவது ஜகத்ப்ரஸித்தம். அதில் தூஷண ப்ரஸஞ்ஜநம் யாருக்கும் உசிதமன்று அப்படியிருக்க, திருவஹீந்த்ரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரியார் ஸ்வாமி திடீரென்று “ப்ரணவோபதேச விசாரம்” என்றொரு சுவடியைக் கிளப்பி ஒரு ஸம்ப்ரதாயாநுஷ்டாநத்தை ஆதாரமற்றதாகப் பழிக்கப்புகுந்தார். அதற்கு மறுப்புரைக்க வேண்டிய முறைமையில் எதிர்கக்ஷியில் புஸ்தகம் வெளிவந்தால் அதனையா தூஷணக்ரந்தமென்று விவேகிகள் நிர்த்தேசிப்பது? உண்மையாகவே அதில் தூஷணங்கள் இருந்தாலும், முந்துற ஏற்பட்ட தூஷணங்களைப் பரிஹரிக்குமளவிலே வந்த தூஷணங்களாகையால் அவை பூஷணசேஷங்களேயென்று சாஸ்த்ரஜ்ஞர்கள் நிஷ்கர்ஷிக்க ப்ராப்தியுண்டு.

ப்ரணவத்தை வர்ஜித்து மந்த்ரோபதேசம் செய்துவருகிற ஸம்பிரதாயம் அஸங்கதம் என்று யாராவது முதலில் தூஷணமெழுதியதுண்டா? அப்படிப்பட்ட க்ரந்தம் யாதொன்றும் அச்சிட்டு வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. விஷயமிப்படியிருக்க, சேட்லூர் ஸ்வாமி ஏன் ஒரு ஸம்ப்ரதாயநுஷ்டானத்தை தூஷித்துச் சுவடிகிளப்ப வேண்டும்? கிளப்பின சுவடிக்கு மறுப்புரைத்தல் குணமா, தோஷமா?

இனி, நமஸ்கார விஷயத்தை யெடுத்துக்கொண்டாலு மிப்படியே. ஸமீப காலத்தில் அண்ணங்கராசாரியார் வெளியிட்ட நமஸ்கார தத்வ விஜயத்வஜ அவதாரணி

கையில் இவ்விஷயம் ஸுவிசதமாயிருப்பதால் இதைப்பற்றின விவரணம் இங்கு அவசியமில்லை. தேசிக ஸூக்தி தூஷண க்ரந்தங்களாகக் கருதப்படுகிற ஒவ்வொரு க்ரந்தமும், மூன்றுமுன்னம் பிறரால் வெளியிடப்பட்ட தூஷண க்ரந்தத்தின்மேல், உத்தர ப்ரதிபாத ரூபமாகப் பிறந்ததேயன்றி ஸ்வதந்திரமன்று—என்பது அநாயாஸமாக விளங்கும். அத்தகைய அஸத்யக்ரந்தங்களை தேசிகஸூக்தி தூஷணக்ரந்தங்களென்று பறைசாற்றி வருவது பண்டிதர்களுக்குப் பொருந்துமா? ஸாமான்யர்களுக்கு புத்திபேதத்தை விளைக்கக்கூடிய விஜ்ஞாபனங்களை மஹான்களும் வெளியிடத் தொடங்குதல் அழகா?

ஸ்ரீரங்கம்,<br>20-3-35. ஸாரதி.

## (3)

1935௵ மார்ச்சு௴ 16௳ போத்தனூரிலிருக்கும் கல்யாணபுரம் ஸ்ரீநிவாஸகோபாலாசாரியாருடைய க்ருஹத்தில், போத்தனூர் வாஸிகளான மஹாஜனங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீநிவாஸகோபாலாசாரியர் அக்ராஸநம் வஹித்தார். அடியில் கண்ட தீர்மானங்கள் அங்கு வந்திருந்த எல்லா ஜனங்களாலும் ஒரே மனதாய் தீர்மானிக்கப்பட்டன.

(1) சென்னை சட்டஸபையில் பொறுக்குக் கமிட்டியாருக்கு ஆலோசனைக்காக வந்திருக்கும் ஹிந்துமடங்களின் மசோதாவானது, ஹிந்துமடங்களைக் காப்பாற்றக் கூடியது, என்று மஹாஜனங்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

(2) தவிர இச்சட்டமானது நிறைவேறினால் மதஸம்பந்தமான மடங்களின் விஷயத்தில் ராஜாங்கத்தார் நேரில் தலையிடுவதாக ஆகும்.

(3) அப்படித் தலையிடுவதானது, ஹிந்துக்களாகிய எங்களுடைய மதஸ்வதந்த்ரத்தில் தலையிடுவதில்லை என்று விக்டோரியாமஹாராணியும் அவருக்குப் பின்பட்டத்துக்கு வந்த சக்ரவர்த்திகளும் கொடுத்த வாக்குறுதியை மாறுவதாக ஆகும்.

(4) மேல் கண்ட இவ்விதமான தீர்மானங்களைக் கொண்டு வரும்படி எங்கள் சட்டஸபை ப்ரதிநிதிகளைக் கேட்டுக் கொள்ளவில்லை. மதவிஷயமாய் சட்டம் செய்யும் விஷயத்தில் சட்டஸபை மெம்பர்கள் ஓட்டுக் கொடுக்கவும், அவர்களுக்கு அதிகாரமும் கிடையாது.

(5) ஆகையால் கவர்ண்மெண்டார் எவ்விதமான காரணத்தைக் கொண்டும், ஷை மசோதாவை நிறைவேற்றக்கூடாது, என்று மிகவும் வணக்கமாய்க்கேட்டுக்கொள்கிறோம்.

(6) மேலே கண்ட தீர்மானங்களைச் சென்னை கவர்ண்மெண்டாருக்கும், ராஜப்ரதிநிதி அவர்களுக்கும் அனுப்பவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

கோயம்பத்தூர்<br>19-3-35. ஸி. பி. ராமஸ்வாமி ஐயங்கார்.



## (4)

## (கோயமுத்தூர் ஸமீபம்)

1935-ம் வருஷம் மார்ச்சு மாதம் 17-ம் தேதி கோயமுத்தூர் ஸமீபம் மேட்டுப்பாளையத்தில் அந்த ஊர் வாஸி ஜனங்களுடைய மஹா ஸபை ஷையூர் ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில் கூடிற்று. அக்காலத்தில் ஷையூர் எம். எஸ். ரெங்கஸ்வாமி நாயுடு அவர்கள் சேர்மேன் அக்ராஸநம் வஹிக்கப்பெற்றார்.

அடியில் கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக தீர்மானிக்கப்பட்டு கனம். வைஸ்ராய், கனம் கவர்னர், சட்ட ஸபை செக்ரிடரி அவர்களுக்கும் தீர்மானங்கள் அனுப்பப்பட்டன.

ஸ்ரீ அகோபில மடம் முதலான ஹிந்து மடங்கள் எல்லாம் அந்தந்த மதங்களுடைய ஸ்தாபநத்துக்காகவே ஏற்படுத்தப்பட்டவை யாகையினால், மடவிஷயங்களில் இராஜாங்கத்தார் ப்ரவர்த்திப்பது மதாபிவ்ருத்திக்கு விரோதமானதோடுகூட இராஜாங்கத்தார் மதவிஷயங்களில் ப்ரவர்த்திக்கிறதில்லை என்கிற ப்ரதிக்ஞைக்கும் விருத்தமானது.

தற்காலத்தில் ஸ்ரீ அகோபில மடங்கள் போன்ற ப்ரஸித்த மடங்களின் சிஷ்யர்களாவது மடவிஷயங்களில் குறை இருப்பதாக தெரிவித்து இராஜாங்கத்தார் இவ்விஷயத்தில் ப்ரவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படவுமில்லை. இதில் இராஜாங்கத்தார் ப்ரவர்த்திப்பது வீண் கலகத்துக்குமிடமாக முடியும். ஆகையினால் இராஜாங்கத்தார் இவ்விஷயத்தில் ப்ரவர்த்திக்கக் கூடாதென்று இந்த ஸபை கேட்டுக் கொள்கிறது.

S. Aravamudhan.

## (5)

## ஸ்ரீரங்கம் தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணை

### ஸபையின் கிளை, சென்னை.

ஷை ஸபையின் ஆதரவில் கீழ்க்கண்ட இடங்களில் நடந்த காரியங்களின் விபரம்:—

1935-ம் வருஷம் பிப்ரவரி மாதம் (i) ஸைதாப்பேட்டையில் ரிடயர்ட் மாஜிஸ்டிரேட் ஸ்ரீ. உப. பகல்வத்தி. வேங்கடாசார்ய ஸ்வாமி அக்ராசனத்தில் ஸுமார் 50 ஸ்வாமிகளின் ஸந்நிதியில், ஸபை உப அக்கிராசனாதிபதி ஸ்ரீ உப. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யார் ஸ்வாமியாலும்,

(2) ஸ்ரீ சின்னகாஞ்சீபுரத்தில் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஏரேம்படி. திருமலை-லக்ஷ்மீ குமாரகோடி கன்னிகாதானம். ஸ்ரீ. உப. வே. அய்யா கிருஷ்ண ஸ்வாமி தாதாசார்யார் ஸ்வாமி அக்கிராஸனத்தில் கோஷ்டிபுரம் சதுச்சாஸ்திர வித்வான் உப. வே. ஸௌம்ய நாராயணாசார்யால் ஸுமார் 100 ஸ்வாமிகள் ஸந்நிதியிலும்,

## திருநின்றவூரில்.

(3) ஸந்நிதி வடக்குமாட வீதியில் ஸுமார் 50 ஸ்வாமிகள் முன்னிலையில் ஸபை உப அக்ராஸநாதிபதி ஸ்ரீ. உ. ப. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும்,

ஸ்ரீ நிகமாந்த தேசிகன் ஸ்ரீ ஸூக்திகளின் பெருமையும் அவைகளில் சிலர் எழுதும் குற்றங்கள் இல்லை என்பதும் இதர ஸம்ப்ரதாயத்திலுள்ள சிறந்த பண்டிதர்கள் அவைகளைப் புகழ்ந்திருப்பதும், ஷை ஸபையின் வழியும் மிகச் சிறந்ததென்பதும் உபந்யஸிக்கப்பட்டது.

ஸ்ரீநிவாஸன்.
காரியதரிசி.

(6)

## வேத பாஷ்யத்தில் சில ஸந்தேஹங்கள்.

தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதைக்கு ஸ்ரீமத் பட்டபாஸ்கர ஸ்வாமிகளும், ஸ்ரீவித்யாரண்ய ஸ்வாமிகளும் பாஷ்யமியற்றியுள்ளார்களென்பது ப்ரஸித்தமே. இவ்விரண்டு பாஷ்யகாரர்களும் ஸர்வதோமுகமான பாண்டித்யம் வாய்ந்தவர்களென்பதும், வேத பாஷ்யம் செய்வதற்குரிய ஸாமக்ரிகள் பலவும் நிரம்பப் பெற்றவர்களென்பதும் எல்லாரும் இசையக்கூடியதேயாகும். இப்படிப் பட்ட மஹான்கள் இயற்றியுள்ள பாஷ்யத்தில் அல்பஜ்ஞனை அடியேனுக்குச் சிலஸந்தேஹங்கள் ஜநித்து அவற்றை ஆவிஷ்கரித்தால் மேதாவிகளான அந்த பாஷ்யகாரர்கள் மீது குறைகூறுவதாக எவரும் அபிப்ராயப்படாமல் ஸந்தேஹ பரிஹாரத்தில் மாத்திரம் முயற்சி கொள்ளவேணுமென்று ப்ரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

பல ஸந்தேஹங்களையும் வெளியிட்டு விடாமல் இப்போது மூன்று இரண்டு ஸந்தேஹங்களை வெளியிடுகின்றேன். இவற்றுக்குப் பரிஹாரம் கிடைத்தபின் மற்ற ஸந்தேஹங்களையும் க்ரமேண விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறேன்.

ஸம்ஹிதைக்கு ஏற்பட்டிருக்கிற பதபாடத்தை அநுஸரித்தே வைதிக பதங்களுக்கு அர்த்தம் செய்யவேணுமென்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். அர்த்த வைசத்யத்திற்காகவே பத பாடம் அவதரித்திரிக்கின்றதென்பது ப்ராஜ்ஞர்களின் கொள்கை. அதில் அவக்ரஹம் ப்ரக்ரஹம் முதலான சில விசேஷங்கள் ஏற்பட்டிருப்பதானது அந்தந்தப் பதங்களின் ஸ்வரூபத்தை நன்கு உணர்த்தும் முகத்தால் அர்த்தத்திலும் ஒரு தேற்றத்தைப் பண்ணக்கூடியது. இதற்கு இரண்டொரு த்ருஷ்டாந்தமும் காட்டுவோம். 'சமூ' என்கிறபதம் திஙந்த பதமாகவும் ஸுபந்த பதமாகவும் இருக்கக்கூடியது. இந்தப் பதம் நமது யஜுர்வேதத்தில் இரண்டு விதத்திலும் வந்திருக்கிறது. ஸுபந்த பதமாக வந்தவிடத்தில் இது த்விவசநாந்தமாக வந்திருப்பதால் அங்கு "சமூ இதி சமூ" என்று ப்ரக்ரஹ பாடம் அதனை வ்யக்தமாக்குகின்றது. திஙந்த பதமாக வந்தவிடத்தில் இந்த ப்ரக்ரஹ பாடம் கிடையாது. முதல் காண்டம் இரண்டாவது ப்ரச்நத்தில்:—



"ப்ரயா தோ ஜாதித்ரம் ஸநியாத சமூ"

என்றவிடத்தில் 'சமூ' என்பது 'சகார' என்கிற அர்த்தமுள்ள க்ரியா பதமானதால் ப்ரக்ரஹம் ஓதவில்லை. ஆறாவது காண்டம் ஆறாவது ப்ரச்நத்தில்,

"ஜுதிமா ஹவ்யாஸ்வசமூ ப்ருஷாநி"

என்றவிடத்தில் 'சமூ' என்பது த்விவசநாந்த ஸுபந்த பதமென்பதைக் காட்டவே "சமூ இதி சமூ" என்கிற ப்ரக்ரஹ பாடம் அநாதி ஸம்ப்ரதாயமாய் நிகழ்ந்து வந்திருக்கின்றது.

மற்றொன்றும் காணலாம். "உதகே" என்கிற பதம் ஒரு விபக்தியில் ஏகவசநாந்தமாகவும் வேறு விபக்திகளில் த்வி வசநாந்தமாகவும் இருக்கக்கூடியது. நமது வேதத்தில் இவ்விரண்டு விதமாகவும இப்பதம் வந்திருக்கிறது. ஐந்தாவது காண்டத்தில்,

"ஸயஜா ஹ்ருண்ணாம் ச விகணீடும் தோ உதகே உபஹயாதி"

என்றவிடத்தில் இது த்விவசநம். ஏழாவது காண்டத்தில்,

"ஸம்வாஹ்யாதுதகே ஜாஸி"

என்றவிடத்தில் இது (ஸப்தமீ விபக்தியில்) ஏகவசநம், இந்த வாசி பத பாடத்தாலும் வ்யக்தம்.

இனி அடியேனுடைய ஸந்தேஹ ப்ரகாரணங்களை விவரிக்கின்றேன். நமது வேதத்தில் 'ஸதநே' என்கிற பதம் பலவிடங்களில் ஓதப்படுகின்றது. இப்பதம் ஸப்தமீ விபக்தியில் ஏகவசநமாகவும் ப்ரதமா த்விதீயா விபக்திகளில் த்வி வசநமாகவும் உரிமையுடையது.

"த்ருவாம் த்வா ஸதநே ஸாதயாமி"

என்பது முதலான பலவிடங்களில் இது ஸப்தமீ விபக்தியின் ஏகவசநமே. நாலாவது காண்டத்தில் முதல் ப்ரச்நத்தின் முடிவான பஞ்சாதியில்:—

"கீர்பி: க்ருணுத்வம் ஸதநே ருதஸ்யம்"

என்கிற ஓர் இடத்தில் மாத்திரமே இது த்வி வசநாந்தமென்பது ஸம்ஹிதாஸந்நிவேசத்திலும் பதபாடத்திலும் நன்கு விளங்குகின்றது. ஏனென்றால்; ஸம்ஹிதையில் ப்ரக்ருதிபாவத்தோடுகூட இந்த இடத்தில் மாத்திரம் "ஸதநே இதி ஸதநே" என்று ப்ரக்ரஹபாடம் ஸார்வத்ரிக அநாதிஸம்ப்ரதாய ஸித்தமாயிருப்பதால்.

ஆகவே, மேலே காட்டிய இடத்தில் 'ஸதநே' என்கிற பதத்திற்கு அர்த்தம் செய்யவேணுமானல் த்வி வசநாந்தமாகத்தான் அர்த்தம் செய்யவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். இங்கு வித்யாரண்ய பாஷ்யம் எங்ஙனே இருக்கிறதென்றால்:—

"ருதஸ்ய ஸதநே—யஜ்ஞஸ்ய ஸ்தாநே"

என்று உள்ளது. ஸப்தம்யேக வசநமாகக்கொண்டு அர்த்தம் செய்திருக்கின்றார் என்பது இதனால் ஸ்பஷ்டம். இது பதபாடவிருத்தமல்லவா? இதனை விவேகிகள் விமர்சித்து தெளிவு பொறுத்தியருளவேணும்.

"கீர்பி: க்ருணுத்வம் ஸதநே ருதஸ்ய"

என்கிற வாக்யம் ருக்வேதத்திலும் (7-53-2) உள்ளது. அவ்விடத்தில் ப்ரக்ரஹ பாடாநுகுணமாகவே பாஷ்ய முள்ளது. (யஜ்ஞங்களுக்கு ஸ்தாந பூதங்களான த்யாவா ப்ருதிவிகளை, என்று ஸ்பஷ்டமாக வுரைக்கப்பட்டிருக்கின்றது. அதனை அநுஸரித்து,

ப்ரக்ருத ஸ்தலத்தில் ஸ்தானே என்கிற பாஷ்ய பதத்தை ஸப்தமியாகக் கொள்ளாமல் த்விதீயா த்விவசனமாகக் கொள்வோமென்று பார்த்தால் அவ்விதமாக அந்வயத்தை பாஷ்யகாரர் விவக்ஷித்திருப்பதாகச் சிறிதும் புலப்படவில்லை. பாஷ்ய பங்க்தியின் போக்கு அத்தன்மையதாக இல்லாமையால்.

பாஷ்யசைலிகளை ஆராய்ந்து பார்க்குமிடத்தில் ரிக்வேத பாஷ்யம் எழுதினவரும் தைத்திரீய பாஷ்ய மெழுதினவரும் பிந்நவ்யக்திகளாக இருக்கலாமோ என்கிற ஸந்தேஹமும் ஜனிக்கிறது. இதைப் பற்றின நிரூபணங்களை ஸமயாந்தரத்தில் ப்ரஸ்தாவிப்போம்.

இரண்டாவது ஸந்தேஹம்:—

அந்த நாலாவது காண்டத்திலேயே இரண்டாவது ப்ரச்நத்தில்:—

"ஸஹஸ்ரியம் வாஜமத்யம் ந ஸப்திம் ஸஸவான் ஸந் ஸ்தூயஸே ஜாதவேத:"

என்கிற விடத்தில், 'ஸஸவாந்' என்கிற பதத்திற்கு வித்யாரண்ய ஸ்வாமிகள் "ஸஸவாந் தத்தவாந்" என்று அர்த்தம் எழுதியிருக்கிறார். இங்கு, பத பாடத்திலோ வென்னில்:—

"ஸஸவாந் இதி ஸஸவாந்"

என்று அவக்ரஹ பாடமுள்ளது. இதனை ஆராயுமிடத்து இதற்கு 'தத்தவாந்' என்கிற அர்த்தம் பொருத்தமுடையதாக இருக்குமென்று தோன்றவில்லை. இது அர்த்தமானால் அப்படிப்பட்ட அவக்ரஹ பாடத்திற்கு என்ன ப்ரஸக்தி? ப்ரஸக்தியுண்டானால் விவேகிகள் விளக்கியருளவேணும்.

அவக்ரஹத்திற்கும் அர்த்தத்திற்கும் ஒரு பொருத்தம் காட்டியே தீரவேண்டுமென்கிற நிர்பந்தமில்லையென்று சிலர் அபிப்ராயப் படலாம். அது விசார நிபுணர்களுக்கு சிறிதும் உடன்பாடன்றாதலால் அந்தப் பாடத்தை இங்கு கைகொள்ளவேண்டாமென்று ப்ரார்த்திக்கிறேன்.

இந்த "ஸஸவாந் ஸந் ஸ்தூயஸே ஜாதவேத:" என்கிறவாக்யமும் ரிக்வேதத்தில் (3-22-1) உள்ளது. ஆனால் அவ்விடத்து அவக்ரஹ பாடம் வேறுபட்டது; "ஸஸவாந் இதி ஸஸ-வாந்" என்று அவ்விடத்தில் வேஷ்டகம் ஓதப்படுகிறது. ஆகவே பத சரீரம் ஒன்றாக இருந்தாலும் விபாக க்ரமம் வாசியிருப்பதால் அவ்விடத்து பாஷ்யம் எனைமுள்ளதென்கிற ஆராய்ச்சி இவ்விடத்திற்கு அநுபயுக்தம். ஆனாலும் அவ்விடத்தில் "ஸஸவாந் ஸேஜிவாந்" என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கின்றது. 'இட்'பாவமும், 'ந' லோபமுமுள்ள க்வஸு ப்ரத்யயாந்தமென்று அங்கு ப்ரக்ரியையும் காட்டப்பட்டுள்ளது. அது நிற்க;

நாலாவது காண்டத்திற்கு மாத்திரம் பட்ட பாஸ்கர பாஷ்யம் உபலப்யமானமாக இல்லாததனால் மேற்குறித்த இரண்டிடங்களிலும் அவர் எவ்விதமாகப் பொருள் பணிக்கின்றாரென்பது அறியக்கூடாததாயிருக்கின்றது. இவ்விஷயத்தில் தடஸ்தர்களான விவேகிகள் விமர்ச சக்தியைச் செலுத்தி ஸந்தேஹ நிராஸம் செய்தருளவேணுமென்று ஸப்ரச்ரயம் ப்ரார்த்தயிதா.

காஞ்சி }
25—2—35. }

ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்,



(7)

## மாம்பலம் மஹாஜநங்களின் ஸங்கம்.

சென்ற மார்ச்சு 27உயில் புது மாம்பலத்தில் மஹாஜனங்களின் ஸங்கமொன்று சேர்ந்தது. அதில் ரிடயர்ட் ஸப் ஜட்ஜ் ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர் அக்ராஸநம் வஹித்தார். அப்பொழுது சற்றேறக்குறைய இருநூறு ஜனங்கள் சேர்ந்தார்கள். ப்ரக்ருத மடத்து மசோதாவைப் பற்றி ஸபாத்யக்ஷரும் ஸ்ரீ. உப. வே. சடகோபாசார்ய பாகவதரும் மற்றும் சிலரும் பஹு ப்ரகாரமாகக் கண்டித்துப் பேசினார்கள். முடிவில் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யருடைய ப்ரேரணையின் பேரில், சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதற்குப் பிறகு கூட்டம் கலைந்தது.

மாம்பலம், }
30-3-35. }

ஓர் ஸாக்ஷி.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

## ஸம்பாதரின் குறிப்புக்கள்

மடங்கள் ஸம்பந்தமான மசோதா.

நமது மடங்களின் ஸம்பந்தமாக இப்பொழுது சென்னைச் சட்ட ஸபையாரால் ஆலோசிக்கப்பட்டு வரும் மசோதாவைக் கண்டித்துப் பல விடங்களில் மஹா ஜநங்களால் தீர்மானங்கள் செய்யப் பட்டு வருகின்றன. இந்தத் தீர்மானங்களைச் சட்ட ஸபையார் எவ்விதம் ஆதரிப்பார் என்பதைப்பற்றி இப்பொழுது ஒருவராலும் ஒன்றும் சொல்ல முடியாது. லோக வித்விஷ்டமான கார்யங்களை ஆசரிக்கக் கூடாது என்னும் நல்ல புத்தி அவர்களுக்குத் தோன்றி, அந்த மசோதாவை அவர்கள் தள்ளி விட்டால், இன்னும் கொஞ்ச காலம் தர்ம ப்ரசாரம் இந்த லோகத்தில் நடையாடுமென்று சொல்லலாம். அப்படி நல்ல புத்தி தோன்றாமல் அவர்கள் அந்த மசோதாவைச் சட்டமாகச் செய்துவிட்டால், அதைத் தடுப்பதற்காக நாம் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. நாம் ஏற்கெனவே விண்ணப்பம், செய்துகொண்டிருக்கும் ப்ரகாரம், தைவமே துணையென்று மாத்ரம் நாம் நம்பிப் போகும்படி இருக்கின்றது.

ப்ரஜைகளைப் பரிபாலநம் செய்யவேண்டியது ராஜதர்மமே. ஆனால் அந்தப் பரிபாலநத்தை, அந்த அரசர்களோ, அல்லது அதற்காக நியமிக்கப் பட்டவர்களோ, தமக்குத் தோன்றும்படியெல்லாம் செய்வது யுக்தமாகி மாட்டாது. அந்தந்த ஜாதியர்களுடைய சாஸ்த்ரங்களை அந்தந்த வித்வாங்களைக் கொண்டு நன்றாக விசாரித்து, அவையவைகளிற் சொல்லியிருக்கும் ப்ரகாரம் அவரவர்களைப் பரிபாலித்து வருவதே சரியான பரிபாலநமாகும். நமது ஹிந்துமத ஸம்பந்தமாக, வேத சாஸ்த்ரத்தை விசாரித்து ஹிந்துக்களெல்லாரையும் அந்தச் சாஸ்த்ரத்தை அநுஸரித்து நடக்கும்படி நமது சட்ட ஸபையார் சட்டங்களை ஏற்படுத்தும் பக்ஷத்தில், அவர்களுடைய ப்ரவ்ருத்தியை நாம் ப்ரசம்ஸிப்போமே தவிர, அவர்கள் அந்யாயத்தைச் செய்கிறார்களென்று சொல்லத் துணியோம். இப்பொழுது அப்படி ஒருவித ப்ரவ்ருத்தியையும் செய்யாமலே, நமது சட்ட ஸபையார், தமக்கு தற்காலத்தில் தோன்றும் யுக்தியை மாத்ரம் ஆதாரமாகக் கொண்டு சிற்சில நியமங்களைச் செய்து அவைகளை நமது மீது நிர்பந்திக்க ப்ரயத்நப் படுகிறார்களென்றே நாம் மிக்க வருந்துகின்றோம்.

லோகத்தில் அக்ரமங்கள் இருவகைப்படும். திருட்டுப் புரட்டு போன்ற சில அக்ரமங்கள் ராஜாஜ்ஞையாலேயே நிஷேதிக்கப்படும்; மற்றும் சில அக்ரமங்கள் ராஜாஜ்ஞைக்கு எட்டாமலே தைவத்தின் கட்டளைக்கு மாத்ரம் கோசரமாகி அந்தத் தைவத்தால் மாத்ரம் நிக்ரஹிக்கப்படும். ந்யஸ்த தண்டர்களாயும் ஐஹிக போகங்களைப் பெரியவையாக நினையாமல் கேவலம் தைவத்தின் க்ருபையையே முக்யமாக எதிர்பார்த்திருப்பவர்களாயுமுள்ள ஸாதுக்களான வைதிகர்களை இம்மாதிரி பலவித அசாஸ்த்ரீய சட்டங்களைச் செய்து அந்தச் சட்டங்களுக்குக் கட்டுப்படும்படி அவர்களை நிர்பந்திப்பது கீழ்ச் சொல்லப்பட்டுள்ள அக்ரமங்களுள் இரண்டாவது கோஷ்டியைச் சேரும். ஆகையால், ப்ராக்ருத தூர்த்தசையில், நாம் புருஷகாரத்தின் தௌர்பல்யத்தை உணர்ந்து தைவத்தையே சரணமாகக் கைப்பற்றுகின்றோம். அந்தத் தைவத்திற்கு சக்தி இருந்தால் நம்மை ஸம்ரக்ஷிக்கட்டும்; சக்தி இராவிட்டால், நாம் நாசம் அடைவதே வரம்.

ஸாம ஹ...தவஹஜாயாவபஜாநா தவ்...வஷ்டி திः ।
ந ஶாஸிஷிஷாவிஜவஜதவஸம்வாவஸ வெவஶவஸ் ॥

---



ஸ்ரீதேஷ்டாக்ஷரப்ரஹ்மவித்யாயாம்:—

ஸஹஸம்வ்யாதாவு ஸமவ்யாதः ஸஹஸ்ரமண உவ்யதே ।
ஸம்வ்யாதாரேவி ஸாஹஸ் ஹேஸாயுர்த்வபுண்ட்ரதரோ ஜபः ॥

யாநி ச வசநாநி ஆபாததः ஊர்த்வபுண்ட்ர விரோதீவ த்ருஶ்யந்தே, தாநி ந தத்பராணி । ததாஹி—

பாராஶரே.—

ஊர்த்வபுண்ட்ரம் த்ரிஶூலம் ச வர்துலம் சதுரஶ்ரகம் ।
அர்த்தசந்த்ராதிகம் லிங்கம் வேதநிஷ்டோ ந தாரயேத் ।
அத்ர த்ரிஶூலமிதி ஶூலாக்ருதிஸம்ஸ்தானமூர்த்வபுண்ட்ரவிஶேஷணம் ॥

---

ஸ்ரீமதஷ்டாக்ஷர ப்ரஹ்ம வித்யையில்:—

எண்ணப்படாமல் செய்யப்படும் ஜபத்தைக் காட்டிலும் எண்ணிக்கையோடு செய்யப்படுகிற மந்திர ஜபமானது ஆயிரம் மடங்கு அதிகமாகச்செய்யப்பட்டதாக ஆகும். அப்படி எண்ணிக்கையோடு பண்ணப்பட்ட ஜபத்தைக் காட்டிலும் ஊர்த்வபுண்ட்ரத்தோடு கூடின சரீரத்தை உடையவனுடைய ஜபமானது ஆயிரம் மடங்கு அதிகமாகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மற்றும் எந்த வசனங்கள் நன்றாக கவனித்துப் பார்க்காமல் மேலாகப் பார்த்தால் ஊர்த்வ புண்ட்ரம் தரிப்பதற்கு விருத்தமாக இருப்பது போல காணப்படுகின்றனவோ, அவைகள் ஊர்த்வ புண்ட்ரம் தரிப்பதை நிஷேதிப்பதில் தாத்பர்ய முள்ளவைகளல்ல வென்பதை இங்கு காண்பிக்கிறோம்.

பாராசரத்தில், வேதத்தில், நிஷ்டையை உடைய புருஷன் த்ரிசூலம் போன்ற ஊர்த்வபுண்ட்ரத்தையும் வர்துளமான புண்ட்ரத்தையும் 4 மூலையுள்ள புண்ட்ரத்தையும் அர்த்த சந்த்ரன் போன்றது முதலிய அடையாளத்தையும் தரிக்கக் கூடாது.

இங்கு த்ரிசூலமென்கிற பதமானது சூலத்தின் ஆகாரத்தையுடைய புண்ட்ரத்தைச் சொல்லுகிறது. இது ஊர்த்வ புண்ட்ரத்துக்கு விசேஷணம்.

ஊர்த்வபுண்ட்ரே ததா ஶூலே வர்துலே சதுரஶ்ரகே |
ஸ்திதா வேதவிருத்தே ச சிஹ்னே ப்ராஹ்மணாதமா: ||

இத்யத்ராபி ஶூலபதம் பூர்வவத் புண்ட்ரவிஶேஷணம் | பூர்வ ஶ்லோகோக்த வேதபாஹ்யாகாரவிஶேஷ்யா ததேதி நிர்தேஶ: ||

பாராஶர புராணே.—

ஊர்த்வபுண்ட்ரம் த்ரிஶூலம் ச வர்துலம் சதுரஶ்ரகம் |
லலாடே தாரயிஷ்யந்தி மனுஷ்யா: பாபகர்மிண: ||

மானவே.—

ஊர்த்வபுண்ட்ரம் த்ரிஶூலம் ச வர்துலம் சார்த்தசந்த்ரகம் ||
தந்த்ரநிஷ்டைஸ்து தார்யம் ஸ்யாச்ச ந தார்யம் வைதிகைர்ஜனை: |
இத்யத்ராபி த்ரிஶூலபதம் ஊர்த்வபுண்ட்ரவிஶேஷணம் ||

---

அதமர்களான பிராமணர்கள் சூலம் போன்ற ஊர்த்வ புண்ட்ரத்திலும், வர்துளமாயும் 4 மூலையுள்ளதான புண்ட்ரத்திலும் மற்றும் வேத விருத்தமான அடையாளத்திலும் நிலையை உடையவர்களாக இருப்பார்கள்.

என்கிற ச்லோகத்திலும், சூலபதமானது முன்போல புண்ட்ரத்துக்கு விசேஷணம். இங்கு முன் ச்லோகத்தில் சொல்லப்பட்ட வேதவிருத்தமான தன்மையைக் குறித்து (ததா) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பராசர புராணத்தில், த்ரிசூலம் போன்ற ஊர்த்வ புண்ட்ரத்தையும், வர்துளம், 4 மூலையுள்ளதுமான புண்ட்ரத்தையும், பாபகர்மங்களையுடைய மனிதர்கள் நெற்றியில் தரித்துக் கொள்ளப் போகிறார்கள்.

மாநவத்தில், த்ரிசூலம் போன்ற ஊர்த்வ புண்ட்ரமும் வர்துளமான புண்ட்ரமும், பாதி சந்திரன் போன்ற புண்ட்ரமும், தந்த்ரத்தில் நிஷ்டையுடையவர்களினால் தரிக்கத்தகுந்தது. வைதிகர்களான ஜனங்களினால் தரிக்கக்கூடாது, என்கிற ச்லோகத்திலும் த்ரிசூல பதமானது ஊர்த்வ புண்ட்ரத்துக்கே விசேஷணம்.



ஸ்காந்தே.—

ஊர்த்வபுண்ட்ரம் த்விஜ: கஶ்சித் க்ரீடயாபி கதாசன |
ததாகாரேண ஶஸ்த்ரேண பீட்யதே யமகிங்கரை: ||

ஸாம்ப புராணே:—

அஶுத்தம் து ததா ப்ரோக்தம் வர்துலம் சோர்த்வபுண்ட்ரகம் |
அஶுத்தம் சார்த்தசந்த்ரம் ச கீர்த்திதம் டங்காஶாதிகம் ||

ஸூதஸம்ஹிதாயாம்:—

அஶ்ரௌத ஊர்த்வபுண்ட்ராதி லலாடே ஶ்ரத்தயா ஸஹ |
தாரயிஷ்யந்தி மோஹேன பாஷண்டோபஹதா ஜனா: ||

வாஸிஷ்டலிங்கே:—

அஶ்ரௌதமூர்த்வபுண்ட்ராதி லலாடே ஶ்ரத்தயா ஸஹ |
தாரயிஷ்யந்தி மோஹேன யுகாந்தே ஸமுபஸ்திதே ||

---

ஸ்காந்த புராணத்தில், பிராமணனவன் விளையாட்டினாலாவது, ஒரு காலத்தில் ஊர்த்வ புண்ட்ரத்தை தரித்தானாகில் யமனுடைய சேவகர்களினால் அதுபோன்ற ஆயுதத்தினால் பீடிக்கப்படுகிறான்,

ஸாம்ப புராணத்தில்:—

வர்துளமான ஊர்த்வ புண்ட்ரமானது அசுத்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே பாதி சந்திரன்போன்ற புண்ட்ரமும், மாவெட்டி போன்றது முதலான அடையாளமும் அசுத்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது,

ஸூத ஸம்ஹிதையில்:—

பாஷண்டர்களினால் கெடுக்கப்பட்ட ஜனங்கள் அக்ஞானத்தினால் ச்ருதிகளில் சொல்லப்படாத, ஊர்த்வ புண்ட்ராதிகளை நெற்றியில் ச்ரத்தையோடுகூட தரிக்கப் போகிறார்கள்.

வாஸிஷ்டலிங்கத்தில்:—

கலியுகம் வந்த காலத்தில் அக்ஞானத்தினால் நெற்றியில், வேதத்தில் சொல்லப்படாத ஊர்த்வ புண்ட்ரம் முதலானவைகளை ச்ரத்தையோடு தரிக்கப் போகிறார்கள்.

ஏவமாதீநி வசநாநி த்ரிசூலாகாரோர்த்வபுண்ட்ர விஷயாணி ஸந்தி । அதவா அசுத்த இதி த்யாஜ்யதாத் உத்ருʼதாஸீத்யாதி ச்ருதிமந்த்ரம் விநா ப்ராஹ்மணக்ஷத்ரியவைச்யாநாம் ஊர்த்வபுண்ட்ரதாரண நிஷேதபராணி வசநாநி ॥

மாஹாத்ம்யம் ச பாரதாதிஷு ப்ரஸித்தமேவ । பாரதம் தூபந்யஸ்யதே ।

ஸ்ரீவாராஹே அஷ்டஷஷ்டிதமே அத்யாயே—

பௌருஷம் ஸூக்தமாஸ்தாய யே யஜந்தி த்விஜாஸ்ஸதா ।
பாஞ்சராத்ர விதாநேந தே மாம் ப்ராப்ஸ்யந்தி ப்ராஹ்மணா: ॥
அஜ்ஞாநே வேதமந்த்ராணாம் பாஞ்சராத்ரோதிதேந வா ।
மாமேவ மாம் ப்ரபத்யந்தே தே மாம் ப்ராப்ஸ்யந்தி மாநவா: ॥

---

இவை போன்ற வசனங்கள் எல்லாம் த்ரிசூலம் போன்ற ஊர்த்வ புண்ட்ரத்தை தரித்துக் கொள்ளக்கூடாதென்று நிஷேதிக்கின்றனவென்று தீர்மானிக்கவேண்டும். இல்லாவிட்டால், இங்கு அசுத்தமென்று சொல்லி இருப்பதால் இந்த வசனங்கள் பிராமண க்ஷத்ரிய வைச்யர்கள் ஊர்த்வபுண்ட்ரங்களை தரிக்கும்பொழுது 'உத்ருதாஸி' என்பது முதலான வேதத்தில் சொல்லப்பட்ட மந்திரமில்லாமல் புண்ட்ரங்களை தரிக்கக்கூடாதென்று சொல்லுகின்றன.

பாஞ்சராத்ரசாஸ்த்ரமானது பாரதம் முதலிய க்ரந்தங்களில் ப்ரஸித்தமான மகிமையை உடையது. அப்படிப்பட்ட பாரத வசனங்கள் மேலே சொல்லப்படுகின்றன.

வாரகபுராணம்–68–வது அத்யாயத்தில் எந்த பிராமணர்கள் புருஷ ஸூக்தத்தைச் சொல்லி என்னை பூஜிக்கிறார்களோ, அந்த பிராமணர்கள் பாஞ்ராத்ரத்தில் சொல்லப்பட்ட ஜபத்தைச்செய்து என்னை அடைவார்கள்.

எந்த மனிதர்கள் வேதத்தில் சொல்லப்பட்ட மந்திரங்களை அறியாத காலத்தில் பாஞ்சராத்ரத்தில் சொல்லப்பட்ட மார்க்கத்தினால் என்னை ஆச்ரயிக்கிறார்களோ அந்த மனிதர்களும் என்னை அடைந்து விடுவார்கள்.



ப்ராஹ்மண க்ஷத்ரிய விசாம் பாஞ்சராத்ரம் விதீயதே ।
சூத்ராதீநாம் ந ச்ரோத்ரபதவீம் யாதுமர்ஹதி ॥

ஏவம் மயோக்தம் விப்ரேந்த்ர பூர்வகல்பே புராதநம் ।
பாஞ்சராத்ரம் ஸஹஸ்ராணாம் யதி கச்சித் க்ரஹீஷ்யதி ॥

கர்மக்ஷயே ச மாம் கச்சித் யதி பக்தோ பவிஷ்யதி ।
தஸ்ய வேதா: பாஞ்சராத்ரம் நித்யம் ஹ்ருதி வஸிஷ்யதி ॥

அந்யச்ச தே வரம் தத்மி ச்ருணு நாரத ஸாம்ப்ரதம் ।
யதிதம் பாஞ்சராத்ரம் மே சாஸ்த்ரம் பரமதுர்லபம் ॥

தத்பவாந் வேத்ஸ்யதே ஸர்வம் மத்ப்ரஸாதாந் ந ஸம்சய: ।
வேதேந பாஞ்சராத்ரேண பக்த்யா யஜ்ஞேந ச த்விஜ ॥
ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்யோ வர்ஷகோடிசதைரபி ।

---

பஞ்சராத்ர சாஸ்த்ரமானது பிராமண க்ஷத்ரிய வைச்ய ஜாதிகளினால் மாத்திரம் கேட்கப்படலாம். சூத்ரர் முதலிய ஜாதிகளினால் கேட்கப்படக்கூடாது.

ஓ பிராமண ச்ரேஷ்டனே. இப்படி என்னால் உபதேசிக்கப்பட்டதாயும் முற்காலத்திலேயே இருந்ததாயும் முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமான இந்த பஞ்சராத்ர சாஸ்த்ரத்தை ஆயிரம் மனிதர்களுக்குள் எவனோ ஒருவன் தெரிந்து கொள்ளுவன்.

எந்த மனிதனானவன் தன்னுடைய பாபகர்மங்கள் நசித்த காலத்தில் என்னைக் குறித்து பக்தியுள்ளவனாக ஆகப் போகிறானோ, அவனுடைய மனதில்தான் வேதங்களும் பஞ்சராத்ர சாஸ்திரமும் நித்யமாக வஸிக்கப்போகிறது. ஓ நாரத ரிஷியே, உமக்கு இப்பொழுது மற்றொரு வார்த்தைத் தருகிறேன். என்னால் உபதேசிக்கப்பட்டதும் மிகவும் துர்லபமுமான இந்த பஞ்சராத்ர சாஸ்த்ரமிருக்கிறதோ, தர்மங்களை தெரிவிக்கிறதான அந்த பஞ்சராத்ரசாஸ்திரத்தை என்னுடைய அனுக்ரஹத்தினால் நீ அறிந்து கொள்வாய். இந்த விஷயத்தில் ஸந்தேகமில்லை.

ஓ பிராமணனே, வேதத்தினாலும் பஞ்சராத்ரத்தினாலும் சொல்லப்படுகிற யக்ஞத்தோடுகூடிய பக்தியினால் நான் அடையக் கூடியவன். ஓ பிராமணனே ஷை பக்தியைத்தவிர லக்ஷம் வருஷமானாலும் என்னை அடைய முடியாது.

தேஸகாலாதிவைஷம்யேண உபதேஷ்ட்ரபாவேந வைதிக மந்த்ராணாமஜ்ஞாநே பாஞ்சராத்ரோக்தமந்த்ரைரநுஷ்டிதேऽபி தேநைவ வைதிகமந்த்ராநுஷ்டாநபலமாப்நோதீதி தாத்பர்யம் ||

உத்தரராமாயணே —

ஸர்வபாபஹரோ நித்யம் ஹரிர்நாராயண: ப்ரபு: |
யஸ்ய நாப்யம்புஜே ப்ரஹ்மா விஸ்வஸ்ய ஜகத: ப்ரபு: ||
பாஞ்சராத்ரேண வேதைஸ்ச வேதோக்தை: பாஞ்சராத்ரோக்தைஸ்சைவ ச |
த்யாயந்தி யோகிநோ நித்யம் க்ரதுபிஸ்ச யஜந்தி தம் || இதி ||

---

தேசம், காலம் இவைகளுடைய வைஷம்யத்தினால் வைதிகமந்திரங்களை உபதேசிப்பவர்களில்லாததினால் வைதிக மந்திரங்களை அறியாத காலத்தில் பஞ்சராத்ரத்தில் சொல்லப்பட்ட மந்திரத்தினால் தர்மங்களை அநுஷ்டித்தாலும் அதினாலேயே வைதிக மந்திரங்களோடு அநுஷ்டித்தால் என்ன பலம் கிடைக்குமோ அதே பலத்தை அடைகிறான் என்று அபிப்பிராயம்.

உத்தரராமாயணத்தில்:—

ஆச்ரயித்தவர்களுக்கு அநிஷ்டங்களான ஸர்வ பாபங்களையும் ஸம்ஹரிப்பவனும், இஷ்டங்களான ஸர்வ பலன்களையும் கொடுப்பவனுமான எந்த நாராயணனானவன் தேவதைகளினாலும் அஸுரர்களினாலும் எக்காலத்திலும் நமஸ்கரிக்கப் படுகிறானோ.

இந்த வுலகத்திற்கு எஜமானனான ப்ரம்மாவானவன் எவனுடைய நாபியில் பிறந்திருக்கிறானோ; அந்த நாராயணனை யோகிகளானவர்கள், வேதங்களினாலும், பஞ்சராத்ர சாஸ்த்ரங்களினாலும், புராணங்களினாலும் சொல்லப்படுகிற பக்தி யோகத்தினால் தினந்தோறும் த்யானம் பண்ணுகிறார்கள். ஷை யாகங்களினாலும் எப்பொழுதும் பூஜிக்கிறார்கள்.



பாகவதே ஏகாதஸஸ்கந்தே த்ருதீயாத்யாயே —

ய ஆஸு ஹ்ருதயக்ரந்திம் நிர்ஜிஹீர்ஷு: பராத்மந: |
விதிநோபசரேத் தேவம் தந்த்ரோக்தேந ச கேஸவம் ||

தந்த்ரம் பாஞ்சராத்ரம் ||

தத்ரைவ பஞ்சமாத்யாயே —

தம் ததா புருஷம் மர்த்யா மஹாராஜோபலக்ஷணம் |
யஜந்தி வேததந்த்ராப்யாம் பரம் ஜிஜ்ஞாஸவோ ந்ருப || இதி ||

ப்ரதமஸ்கந்தே —

த்ருதீயம் ருஷிஸர்கம் வை தேவர்ஷித்வமுபேத்ய ஸ: |
தந்த்ரம் ஸாத்வதமாசஷ்ட நைஷ்கர்ம்யம் கர்மணாம் யத: || இதி

---

பாகவதம்—ஸ்கந்தம்11—அத்-3—ல்:—

எந்த மனிதன் தன்னுடைய மனதினால் உண்டான கர்ம பந்தங்களை சீக்கிரமாக போக்கி விடவேண்டுமென்று நினைக்கிறானோ, அவன் வேதத்திலும் தந்த்ரத்திலும் சொல்லப்பட்ட காரியத்தினால் கேசவனை ஆராதிக்க வேண்டியது.

தந்த்ரமென்று பஞ்சராத்ரத்திற்குப் பெயர்.

ஷை 5-வது அத்யாயத்தில் ,ஓ அரசனே ஸர்வ வேதங்களினாலும் சொல்லப்படுகிறவனான ஹரியை அறிந்து அனுபவிக்க ஆசைப்படுகிற மனிதர்கள் அப்படி மனிதனாய் அவதரித்திருக்கிறபகவானை வேதத்திலும் பஞ்சராத்ரத்திலும் சொல்லப்படுகிற காரியங்களினால் ஆராதிக்கிறார்கள்.

முதல் ஸ்கந்தத்தில், அந்த பகவானானவன், மூன்றாவதான ரிஷிகளுடைய ஸ்ருஷ்டி ரூபமான ஸநகாதி தேவர்ஷித்வத்தை யடைந்து, எதன் மூலமாக ஸர்வகர்மங்களுக்கும் நாசம் ஏற்படுமோ, அந்த ஸாத்வத தந்த்ரமென்கிற பாஞ்சராத்ரத்தை உபதேசித்தான்.

ஸூஹாண்ணே ச—

ஜீமாஷ்ர ஊாரதம் செசவ வம்சாரா த்ரஉயாவிருழ்ு।
உ ஸ்ருாாஉாயணம் செசவ வ-ராணம் செவதஷா தகழ்॥

யெ வ ா-ரா-யா யி ந ஷெஷாம் ஸவெ-ூ செஉ வ ஸஷாஉமாஃ।
உ-ராஉ உாலஉெந்ஞ யெ செதநஃ ஜெஞயொ ஜநாஉ-ஃநஃ ॥ இதி॥

களெஉ-ஃ வணகாஉமாஸ்ாயெ—

வெஜெந வம்சாரா தெரண ஸக்தா யஜெஞந வ ஷிஜ।
ஜாவெஷ்ாஉஸம் நாநயா ஜாவெஷ்ா வஷ-ூருக்ஷமசெதா வஷி।

வம்சாராத்ரம் ஸஹஸ்ரணாம் யஜி கஶ்சித்ஹவிஷ்யதி।
கஉ-ூக்ஷயெ வ உஷ்ஷ்கஃ யஜி கஶ்சிஉவிஷ்யதி॥

தஸ்ய வெஷாஃ வம்சாராத்ரம் நித்யம் ஹ்ருதி வஸிஷ்யதி ॥ இதி॥

---

ப்ரம்மாண்ட புராணத்தில்,

ருக்வேதம் முதலான வேதங்களும் பாரதமும் எல்லா பஞ்சராத்ர ஸம்ஹிதைகளும், மூல ராமாயணமும், புராணங்களும் மற்றும் இவைகளை அனுஸரித்திருக்கிற ஸர்வ ஷட்சாஸ்த்ரங்களும் எல்லாம் இந்த புராண ரூபமாக இருக்கின்றன.

இவைகளைத் தவிர மற்றை கெட்ட சாஸ்த்ரங்கள் எவைகளோ அவைகளினல் ஜநார்த்தனனை அறிய முடியாது.

கூர்மபுராணம் 11-வது அத்யாயத்தில்:—

ஓ பிருமணனே, "வேதத்திலும், பஞ்சராத்ரத்திலும் சொல்லப்படுகிற யக்ஞங்களோடு கூடிய பக்தியினல் என்னை அடையலாம். அதில்லாவிட்டால் லக்ஷம் வர்ஷங்களிலும் என்னை அடையமுடியாது. ஆயிரம் மனிதர்களுக்குள் ஒருவன்தான் பஞ்சராத்ரத்தை அறிந்துகொள்ளுவன், அவன் ஒருவனே பாபகர்மங்கள் நசித்த காலத்தில், என்னிடத்தில் பக்தியுள்ளவனுக ஆகுவன். அவனுடைய மனதில் தான் வேதங்களும் பஞ்சராத்ரங்களும் நித்யமாகவஸிக்கும்" என்றிருக்கிறது.



விரகின்மீது வெம்மைகாலும் விதுகரங் குளிர்ந்ததென்
றுரைதருவ துவனுதித்த வென்னையிங் குழன்றிட
விரைகடுங்கண் வாரிவண்ண னீரமற்ற சிந்தையைக்
கிருபைதங்கு நிதியதென்று கிளக்குந்தன்மை யொக்குமே. 37

மாணியாய ரங்கனன்று மாவலிக்க ணேந்துதன்
பாணியார்ந்த கங்கணத்தை யப்ரபூத மென்றுணர்ந்
தேணியன்ற வெங்கரத்தி னிலங்குகங் கணத்தினை
நாணிகந்தொ ழிந்துமெல்ல வவ்வுதற்கு நாடிமோல். 38

அன்றயோத்தி மன்னகன்ற வம்புராசி மீதணை
சென்றிழைத்த ரக்கரைச் செகுத்தெழிற் செனகிபை
யொன்றுசெய்தி கண்டரங்க னொருமுயற்சி யுமுறு
தின்றெனைப்பு ணர்ந்துமீன்ப மெய்தவென்கு மட்டலோ. 39

முந்திரும் பிரளயக் கடற்கணூடு மூழ்கிய
விந்தமே தினிப்பெணுய்ய வேனமா யெடுத்தவ
னெந்துசோக சாகரத்து ளுடங்குமென் கரம்பிடித்
தந்தமா யெடுத்தளிக் கிலாததென்ன பாவமே. 40

முன்னுருக்கு மிணிகவர்ந்து முன்னலா லளித்தவன்
றன்னெழிற் குருகுமாதர் கட்கருளுந் தானென்ப
துன்னிலுண்மை யேனுமிங் குணர்ந்துரைகயு மொழிவிலா
தென்னையாங் கெழுந்தளிக்க கில்லதென்ற னெளிமையே. 41

நந்திகோத மன்மனைவி தசகளத்தன் தம்பியோ
டைந்துவீரர் பன்னியின்ன வடியவர்க் கருளுமே
விந்துவூரும் பிரணவத்து ளிலகரங்க ளினையுமென்
சிந்தைகோ யிறிந்தளித்த லின்றிதென்ன செய்தியோ. 42

அவளுருறு தி யான்பிழைக்கே னென்னுமுன் னுரைதரும்
கவளமா கரிக்குலத்த கதிரவன் குலத்திறை
பவனவா யரங்கனின்ற றைமறந்த பான்மையுந்
தவளகஞ்ச ராவினென்றுந் தங்கிநூறுந் தன்மையோ. 43

என்னவின்ன பலசெறிந்த திருமொழி யியம்புரு
வுன்னையெந்த வண்ணமேனு மொன்றவொன்று நசையினு
லன்னமன்ன வவளெழும்பு மாருயிர்த் தகைத்தெழின்
மன்னுகண்ட மன்னரிற்கு மென்றுசேடி செப்பினுள். 44

வேறு.

செப்பக் கேட்ட சிரீதரனச் செவ்வாய் மயிலி னசைநோயை
வெப்புச் சிறிது விண்டனளு மெனினு மவளார் வேதனையின்
கப்பக் கவலுங் களிப்புமணங் கமழுங் குழல்சேர் சிலதிமுகத்
தற்பிற் கடைக்கண் பாய்தரவீங் கறைத லானு னருணிதியான். 45

பின்னே யென்னை மதன்பகழி யிளிருங் கோதை யிதயத்தும்
பின்னே யிங்கும் பீழைமிகப் பிளக்கு மிந்தப் பெருங்கொடுமை
தன்னு னன்றோ நின்சகியின் றனிமை நேயி னிருமடங்காய்
மன்னே யானிங் குழன்றலைவேன் மலைவி லுண்மை யறியீரே. 46

ஓவா துன்றன் றோழியினை யுள்ளத் திருத்தி யவளுருவ
மேவா நின்றே யனிகிட விதியி னானே மேதினியிற்
பாவாய் நின்றே னிதுவாய்மை யன்றே லந்தப் பைங்கிளியின்
பூவா முடல நீவாமே யென்றே வுயிரிற் பொருந்துவதே. 47

ஓரோர் பொதுவ ரொண்டொடியா ளன்றென் றோர்வந் தனிலுழந்தே
நேரா தன்றே யுயிர்நீத்தா ணிலவும் பூணு யதன்பயனிங்
சாரா தல்லும் பகலுமுன தழகார் சேடி மணவின்ப
மோரா னைந்து மனமுருகி யுடல மின்னுங் கரிகறுத்தேன். 48

மானே யென்று மரகதமா மணியே மானு மென்னுடலந்
தேனே யுன்றன் றிருமொழியா டிறமா யொன்று நசைப்பிணியிற்
றானே யிங்கு வெளுத்ததுகாண் டண்ணங் கதிரி னிலவுறலு
நீறு றியல்பி னெகுவான நிலவும் வண்ண நீள்குழலாய். 49

அவுணா ரஞ்சு மடலாரென் னையா யுதமு மைங்கணையான்
றுவளும் பூவா ளியைவெல்லூந் துப்பின் றென்னே துவளுறுமால்
குவளை நாறும் நீள்சகியார் குழைசேர் விழியின் கடைகணிப்பிற்
றிவளுஞ் சிறிய பங்கடலைச் செறிந்த செருக்கின் றிறமதுவே. 50

அழலைச் சொரியு மம்புலியா திகளா லலமந் தென்னிதயங்
க[illegible]ற் கரிய வுயிரினையிங் காலக் கருதி யதுமற்றம்
மழலைச்சொல்லி விழைவானே வாளா விருந்த தெனிலுயிரி
னெழிலிற் குறையு ளாமலவே யெற்கிங் கரிய திருவன்றோ. 51

தென்றற் குழவி யென்விரகத் தீயை வளர்க்கு மதுவெளிறு
மன்றற் குழலி மதரிகைசேர் நகிலந் தோய்ந்த மலர்த்தெரிய



லொன்றிப் புதிய மணங்கொண்டிங் குலவுந் திறத்தா ளதையுடலங்
கன்றிக் கருமை யெய்திடினுங் காதல் விஞ்சிக் கலந்துறுமே. 52

அல்லார் குழலி னன்புமிகச் செருகிக் கண்டிங் கவள்விடுத்த
மெல்லா ரரிய விம்மலரின் விரைசேர் பிணையன் மேனுளின்
மல்லால் வஞ்ச மல்லடர்த்த வென்றன் றோண்மே லம்மயிலின்
புல்லா நின்ற பைங்கழை நீர்ப் புயமே போலு மிதமருண்மே. 53

பீடார் கீசப் பெருமகனின் பிறங்கன் மீதிற் பிரிவழலால்
வாடா நிற்க வளரனுமன் வலியா ரரக்க ரூரிடைநின்
றேடார் குழலி யின்புறவன் றீயக் கொண்டங் கெற்களித்த
சூடா மணியைச் சூடுசுகந் தருமா லிங்கித் தொண்டையலரே. 54

கன்னன் மொழியா ளணிந்துகவுங் கமழுந் தொங்கல் கட்புலனுங்
குன்னுந் திங்க ளுயர்கலைபா முள்ளக் கிரசா யன மிதுவாம்
மன்னும் படிவ மணிந்திடுகான் மகிழுங் கடலின் னமிழ்தமுமா
மென்னின் னுயிரு மிதனுனே தளிரா நின்றிங் கிருந்திடுமால். 55

வேறு

முனியும் மாழ்குறு முகிழ்மென் முத்தணி முலையா யிப்புவிமேன்
மினுமென் னூன்றூடு மிடையென் மூர்த்திக ளெல்லாம் குருகையர்கோன்
புனையும் மின்றமி ழெனுமொப் பொன்றறு புதுமா கறவருந்தப்
பொனின்மா ளிகைபல சேரத் திருநகர் விரைவிற் போந்திடுவார்.

ஆங்குப் பொய்கையிருழ்வா ராதி யாங்கே யார்த்தரலுங்
கோங்கிற் பொலிதரு கொங்கைக் கோதையின் கூடப் பட்டர்பிரான்
பாங்கிற் படர்தரு மக்கா லென்னுயர் பத்த ரொன்றுபடா
வேங்குற் றூர்தரு மெங்கட் கேய்திரு மணநன் னிழைத்திடுவார். 57

என்றந் நாதனு மிசையா வின்றிரு நாமம் பொறித்தொளிரு
மின்றன் னாழியு மிலைந்தே யின்மண நாறும் பிணையலுமீந்
துன்றன் றோழியு முவந்தின் புறுவண முதவித் துயர்சிறிது
மின்றென் றும்வண மியம்புற் றூற்று கென்றிசை விட்டனனால். 58

கொண்டக் கொம்பனை யாளக் குறைவறு கோளா ரின்பொருளக்
கொண்டற் கினைய னரங்கன் றூடொழு தருளுங் கொண்டவனை
விண்டத் திகரன் வெயிலா னேமுது வேனிற் கண்வெம்மை
மண்டத் தியவ னிக்கம் பரமெழு மழையின் றுளியென. 59

வாடும் கோதை யிடத்தில் வாளியும் வந்தப் பொருளுதவக்
கோடுண் கொடியி னெழுந்தா ருள்ளமுங் கூரப் பெருமிதமே
நாடுங் கதிரவ னுதயங் கள்ளியி னவிலுந் திருவரங்கன்
கூடுஞ் சமயமுங் குறுகுந் தினமவள் குறியா விருந்தனளால். 60

10-வது சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 10-க்குச் செய்யுள் - 613.

ஸ்ரீ

## ஆண்டாள் வைபவம்

### 11-வது சருக்கம்

வேறு

மாமறை மொழியின் வண்ண மலிதரும் பொழில்க ளெல்லா
மாமள வறிந்து காக்கு மாதிமூ லத்திற் கூனந்
தீமையிற் றெரிக்கு மாந்த ரீன்றெடுத் தளித்தோர் தேத்து
நோமுரை பகரு மாக்க ணுகர்வதே நுகர்வ ரன்றே. 1

பட்டர்க ளிறையு மைந்து பகழியான் விழவுக் கேய்ந்த
கட்டழ குடைய கன்னிப் பருவமுங் கரிய மாலைத்
தொட்டணை தரவி ழைந்த வவளது தூய வாய
விட்டமு முணர்ந்து ஞானத் திறைந்திடற் கியைந்தா ராங்கே. 2

சடந்தனை முனிந்த யோகி சன்னிதிக் கடியா ரோடு
மிடைந்திடு மரங்க னென்று மினிர்தரு மனத்திற் கொள்ளாப்
படந்திக ழரவி னல்குற் பாவையிற் றமது பாத
மடைந்திடு மதுரை யாளு மரசனுந் தொடரப் போந்தார். 3

வேந்தருக் குரிய பல்ல விறுடன் குருகை கூடி
மாந்தளி ரனைய மேனி மாதரா ளிறைவ ரோடும்
வீழ்ந்தடி வணங்க நம்மாழ் வாரகம் விழைவிற் பொங்கிக்
காந்தளங் காத்தி னாளைக் கடைக்கணித் தருளி னாரால். 4

கோதையின் பெரிய தந்தை பின்னரங் குரையிற் கொள்ளா
வேதமாந் தமது பாடற் றமிழமிழ் தருந்த வேவி
யாதரம் பெருக முன்ன ரமருமா நூற்றெட் டாய
மேதரு குலத்து மாய னருச்சைகள் மிளிரக் கண்டார் 5



மற்றுமாம் பிலத்தி னீழன் மலிதரு மரங்க னுதிக்
கொற்றவெண் குடைக விக்கக் குலவுருச் சைகளைக் காண்பான்
கற்றிடுங் கலைம கட்குக் கணவனே முதலாந் தேவர்
பெற்றநற் குழாங்கொண் டண்டவெளியெங்கும் பொலியக் கண்டார்

பொய்கையார் தலையா யெங்கும் புகழ்மது ரகவி யீறு
யுய்யமா வுலகம் வந்த வுயர்வறு வாழ்வா ரெல்லா
மெய்தியாங் கொருவர் தம்மை யொருவர்க ளினறஞ்சத் தாமு
மெய்திக ழகத்தி னானே யளவளாய் மிகக்க ளித்தார். 7

அடியவர் முறையின் முந்தும் பராங்குச னடியிற் றந்த
முடியுறப் பணிந்தே யந்த முதலாழ் முதல யாரும்
வடுவறு மவரின் வேத வாய்மொழி புரிந்து கேட்டுப்
படியறுந் தமது பாவை யவர்கொளப் பணித்தார் மன்னோ. 8

குருகையர் கோமான் பின்னுங் கூடு மாழ்வார் களோடு
மொருகலை நுதலாள் செய்த வுவமையொன் றரிய பாடன்
மருவுறு பிரபந் தன்கண் மனமுறச் செவியுற் றின்பம்
பெருகுறு மவற்றின் சாரம் பெரிதென வுவந்து மற்றும். 9

அனங்கனின் றுணையா யந்த வாய்மையிற் பருவ மன்னுங்
மனங்கணன் மருமம் புல்ல மாழ்குவ திவற்றை யோராக்
கனங்குழைக் கருத்தின் வண்ணஞ் சுயம்வரங் கடிதின் முற்ற
நினைந்தனர் நிருப னோடு மதுரமா கவியை நோக்கா. 10

நித்தில நிரையைக் கைரா வத்தினு ணிரைத்தன் மானு
மொத்தவெண் ணகையா ளிந்த வுயர்திரு மணத்திற் கேய்ந்த
பத்திர மமையு மெல்லாப் பண்யினீ ரமைக்கு கென்ன
வத்திரு மொழியின் வண்ண மவர்விழைந் திழைக்க லானார். 11

பளிங்கினாற் சுவரா யோங்கிப் பருத்ததூண் வயிர தானும்
விளங்குவெண் பொற்றகட் டான் வேய்ந்ததா மீதின் முற்றுங்
களங்கமிற் றுகிரி னானே யுத்திரங் கலந்த தாங்கீழ்த்
தளங்கிளர் மரக தத்தின் பலகைகள் படுத்த தாமால். 12

பித்திகைத் தலங்க டோறும் பீதக வாடை மாயன்
வித்தக விபவ முற்று மோவியத் துறையிற் றீட்டி
யத்தகை யமர்ந்த வெண்பட் டாடை மீதலங் கவர்த்துக்
கத்திகைத் தாள மாலை கலந்தான் றிடுமோ மெங்கும். 13

மணிவிளக் கொழுங்கின் மின்னு மகரதோ ரணங்கண் மன்னு
மணிகிளர் வரயி ரேறு மரம்பையுங் கமுகுந் துன்னுங்
கணனருச் சைகளின் மூர்த்தி யிடையுறக் காணத் தானே
மணியிழைத் தமைத்த நாற்றெட் டாதன மன்னு மாமே. 14

இன்னுமம் மகத்திற் கெய்து மிருடிக ளிறைவ ரீட்ட
மன்னுற வவர்க்குத் தக்க மாழையந் தவிச னேகந்
துன்னுமா மதனுள் வெப்பந் தோன்றுரு திளங்கால் செய்யு
மின்னிருஞ் சிவிறி யேந்து மெந்திரப் பாவை பல்ல. 15

இடைவது வார்கள் சேறி யிருந்திடற் கியைந்த மேடை
யிடையினின் றெழும்பு நாளு விரத்தினத் தொளியின் சேர்க்கை
யிடையினி திருந்து வேட்கு மெம்பிரா னெவர்க்கு மெட்டா
திடையனுயப் பலவா யிங்கே யிலகுவ னென்ப போலும். 16

பகடினு முணர்ந்து ரைத்தற் ககப்படாப் பண்பிற் றுய்வெண்
பகடிவர் சுனுசி ரன்றனு லகமேற் படிய மின்னு
முகடின்மா மணியின் மண்ட பந்தனை முடித்தா ரெங்கு
முகடிருத் துவது மீதே யொளிர்தர நாட்டி னாரால். 17

மங்கள மதற்கு மும்மை யுலகினர் மணத்த லாலே
யங்கவர்க் கியையும் வண்ணம் பொருளெலாந் தொகுத்த தன்றிச்
செங்கணற் குள்ளா யிந்தச் செகத்த மரிதர தேவ
சங்கமுஞ் சாருமா று முடங்கலுந் தீட்டி விட்டார். 18

அவனியி னரச ரெல்லா மடைகவென் றறைந்து விட்டார்
தவமிறாஉந் தவசி யெல்லாந் தகைகவென் றியம்பி விட்டார்
குவிமுலைக் கணிகை யெல்லாங் கூடுகென் றுரைத்து விப்பா
ரவரெலா முடனே யந்தக் குருகையி லணுகி னாரால். 19

மூவகை யுலகி னுள்ள யாவரும் யாவு மோத
மேவரு மிந்த மண்ட பந்திரு மிளிரு மார்பன்
றூவரு முலக மெல்லாந் தாங்குமா றிடுக்க ணின்றி
யாவெனத் திறந்துட் கொண்ட வகட்டினை யடுக்கு மன்றே. 20

அம்மணி செறியு மண்ட பத்தொளி யலங்கு மாற்றூற்
செம்மலர்த் தடங்க ளாருந் திருநக ரியுமாங் கல்லும்
வெம்மைசேர் பகலும் வேறு யறிவுறு தமர ரோடு
மிம்மனி யிழிந்த தேவ நகரியை யியையு மாதோ. 21



சயம்வரி வமையத் திங்குத் துவைத்திடும் பணைக ளோடு
மியம்பின வியைந்து தேவ துந்துபி குலமு மிம்பர்
நயப்பட நடிக்கும் வார மாதரி னடனத் தோடுங்
குயங்குலுங் கமர மாதர் குனிப்பதுங் குலவித் தம்மா. 22

மதிமுகந் துளங்கா தங்கண் மானென மருண்டு நோக்கச்
சுதைநில வெறிந்து மின்னு முருந்துறழ் மூரல் தோன்ற
மதர்வுறு மயிலன் னாரிங் கிசைத்திடும் பாட லோடு
மிதுனகின் னரத்தின் கீத மிடைதரு மென்ப மன்னோ. 23

எனைத்துல கினரு மாங்கே யளவளா விருந்தே யின்பஞ்
சினைத்தெழச் செறிந்த வந்தச் செழுமணிப் பவள மூதூர்
வினைத்திரள் விலக்கி நாளும் விரசையிற் படிந்து கூடு
மனத்தினு நினைத்தற் கெட்டா வைகுந்த மதனை மானும். 24

சடசித ரருளி லந்தச் சதுரர் களிரு வரும்பின்
மடலவிழ் துளவத் தாரா னருச்சைகண் மஞ்சந் தம்மி
லடைவுடன் பொலிய வாங்காங் கிருத்துபு வவர்கட் கேய்ந்த
படிபல பகடு மாற்றிப் பணித்தனர் பிறகு மார 25

புட்பவந் தருமா காயம் பொலிதர வணிவ தேபோ
லுட்பமா ரிடையா டன்னை நுவலரு மணிக ளார்ந்த
பற்பல பணிக ளானும் பன்மலர்த் தொடைய லானும்
வட்குமா ரிரதி தானும் வகையுற வணிந்தா ரன்னார். 26

வகுளபூ டணர்முன் னாய தந்தையின் வருக்க முன்னும்
மிகுபுகழ் விமலை முன்னா மன்னையின் வருக்கம் பின்னு
மிகுளையர் தொகுதி யன்பா ரெழிலனுக் கிரகை யாதி
மகிழ்வொரு மருங்கும் போத மணமக ளடைந்தாள் மன்னோ. 27

நடந்தவ ணவிலற் கெட்டா நகைமணி யொளியே சூழுந்
தடம்பெரு மணிமா மண்ட பத்தினைச் செறியத் தாவுஞ்
சடந்தனை முனிந்த வாழ்வார் தவிசினி லிலகும் வையங்
கடந்தவ னுருவ மெல்லாங் கைகுவித் திறைஞ்சி னாரால். 28

துடியிடை யவளு மற்றைத் தொண்டரும் வணங்கப் பின்னர்
தடவயற் குருகூ ரண்ண றனையை விளித்துப் பாராய்
முடலையி னொருமாற் றெண்மர் முனைமணித் தவிசி னுள்ளார்
மடவரா லினது மன்றற் கெழுந்த மாலவதா ரங்காண். 29

கண்முகப் புறையு மிந்த விருவருங் கலசாம் போதி
யொண்மையிற் பொலியும் வைகுந் தம்மிவை யொடுவிப் போந்த
பண்மரு வமர சூரி படலமு மருவச் சூழும்
பொன்மனை வயருஞ் சூழும் புராதன புருட ரம்மா. 30

நாற்பதின் மர்களாம் பொன்னி நாட்டினர் வழுதி நாட்டிற்
கேற்பவ ரொருபத் தொண்மர் கேரளர் பதின்மூன் றென்ப
தோற்பருந் தொண்டை ர்ததா ரிருவர் சேரிரு பதின்மர்
மேற்படு நடுநா டார்வோர் மிளிரு மோரிரு வராமால். 31

உத்தரத் துறைவோ ரேகா தசரிவ ணொளிரு நாற்றெட்
டுத்தம தலத்தோ ரென்ன வுரைத்தருள் புரிந்தன் னோர்கள்
வித்தக மனைத்து நன்குவி சதமாத் தெருட்டு கென்று
சித்திர வனுக்கிர கைக்குச் செப்பினர் மறித்து மாதோ. 32

வேறு

மணிவரமு மறுவுநான்கெனு மலரின் கரங்களுந்
துணையறு சங்காழியுந் துகளறு நீனிறமொடு
மணிபெற வேறறிவுரு தலங்கரியின் மூர்த்திகள்
பிணைவிழியாள் கண்ணுறுப் பெருவரங்கன் றெரிவுருள். 33

ஐயமுண்ட னெஞ்சினுட் கனுக்கிரகை யலரவர்
துய்யநாமம் விருதுக டொடக்கமாய யாவையுஞ்
செய்யவாய் திறந்தனள் செங்கையிற் குறித்துரை
செய்யுமுன் னிகழ்ந்தவோர் செய்தியுண்டு செப்புவாம். 34

அந்தவிண்டு மூர்த்திக ளவள்வனப்பை நோக்குறு
விந்தையெய்தி யிவண்மதன் வெல்விலோ தனங்கொலோ
செந்திருவின் பதித்துவ மிவடழுவுஞ் சீரினுக்
கெந்தமூலை யென்றக மெழுகுபோல வுருகிறு. 35

அங்கயட்டி பொற்கொடி யம்புயான னந்தனி
லெங்குமுத் தெழிற் சக் ணையரும்பு நீர்த்துளி
செங்கிடைக் கிணையிதழ் சிறிதுறக் குவிந்தன
டங்குவெம் மையிற்சிறுகா லுயிர்ப்ப டண்ணென. 36

வெண்மைமின்னு கன்னமும் வேனில்வே ளணிசெயுந்
தண்மையாய முகுரமே தடமாரீஇய வாளெனுங்
கண்மருண்டு மானெனக் காண்வனப்பி தொன்றுமே
விண்மணைக்கும் விலைகொளு மென்னில் வேறியம்பலேன். 37

# ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

**வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான**
**ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்ரிகை.**

**வருஷச் சந்தா: ரூ. 3**
**தனிப் பிரதி: அணா 5**

## குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, ராமஸ்வாமிதெரு, மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டும்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர்களுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத்திலும் இரண்டாவது மூன்றாவது தேதிகளுக்குள்ளாகவே ஸஞ்சிகைகளெல்லாம் தபாலில் சேர்ப்பிவிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 5 அல்லது 6 தேதிகளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேராவிட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதை உடனே மானேஜருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாமலிருக்கும் சந்தாதாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தியாகராயநகர் போஸ்ட்,
மதிராஸ்.

**Registered No. M. 916.**

## Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Iudian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has immediately taken on hand the publication of a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is about to be issued.

Shares in the Company of Rs. **50** each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Iyengar, B.A., B.L. | *President* |
| ,, | K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate. | *Genl Secy.* |
| ,, | R. Kesava Iyengar., M.A., B.L. | *Exec: Secy.* |
| ,, | T.D. Sreenivasachari, M.A., B.L. | ,, |
| ,, | S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate. | *Treasurer.* |
| ,, | N.T. Shamanna, Solicitor. | *Director* |
| ,, | M. Sudarsana Iyengar, Merchant. | ,, |
| ,, | C.V. Venktaramana Iyengar, B.A , B.L. Coimbatore. | ,, |
| ,, | T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore. | ,, |

It is requestd that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.

ஸம்புடம் 23] MAY 1935 [ஸஞ்சிகை 11

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

யுவஹு



சித்திரைமீ

**PUBLISHED BY**

Sri Vaishnava Siddhanta Prachara Sabha,

**MADRAS.**

ஸ்ரீ:

# விஷய ஸூசிகை.


1. ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்வரூபமும் தர்மமும்:—
வங்கீபுரம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால்
செய்யப்பட்ட உபந்யாஸம்]. ... 683
2. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர்
ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 693
3. ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்:—
ஸ்ரீ. உப. வித்வாந். ஐடா க்ருஷ்ணதாதாசார்யர்] ... 704
4. வரதராஜ பஞ்சாசத்:—[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசாரியர்,
M. A. B. L. அட்வோகேட், திருச்சி.] ... 709
5. ஸ்ரீ நம்மாழ்வார் ஸ்துதி:—
[திருக்குருகூர் அ. தே. ராமாநுஜய்யங்கார்.] ... 715
6. கடிதங்கள்:— ... 716
7. ஸம்பாதகீயம்:— ... 720
8. பரிகர விஜயம்:—[புத்தங்கோட்டகம் வித்வான்
ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்.] ... 131
9. திவ்ய ஸூரி சரிதம்:—
[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 129


---


ஸ்ரீ:

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும்
புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி—
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற
ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ர
ஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின்
வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ரூ 0 8 0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை
யின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம்
வித்வாந் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய
வ்யாக்யாநத்துடனும் கூடியது ... ... ரூ 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தியாகராயநகர் போஸ்ட்,
மதிராஸ்.


ஸ்ரீ:

ஸ்ரீ [illegible] நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

# வேதாந்த தீபிகை


ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 23] யுவஹூ சித்திரைமீ [ஸஞ்சிகை 11


ஸ்ரீ:

## ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்வரூபமும் தர்மமும்.

[மாம்பலம், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையில்
வங்கீபுரம் ஸ்ரீ. உப. வே. வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்]

(ஸஞ்சிகை 10, பக்கம் 648 தொடர்ச்சி)

ப்ரதிதிநமும் ஸந்த்யாவந்தநம் போல பகவதாராதநம் என்பதும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அவசியம் செய்யவேண்டிய கர்மங்களுள் ஒன்று. பகவதாராதநமாவது பகவத் பூஜையே. பூஜையாவது, "பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதி முதலியவைகளை அநுஸந்தித்து, அவனைச் சரணமடைந்து, அவனது அநுக்ரஹத்தால் மனப்பான்மையில் ஏற்றமடைந்து, ஸர்வேச்வரேச்வரனை அவனே மற்றை எல்லாருக்கும் தனக்கும் ஸ்வாமி என்பதை நினைத்து, மிக்க ப்ரீதியுடன் அவனை இடைவிடாமல் த்யாநம் செய்து, அவனை நேரில் காணும் நிலைமையை மனத்தினுல் அடைந்து, அப்படிப்பட்ட அநுபவத்தினுல் உண்டான ப்ரீதி உள்ளடங்காமல் ப்ரவஹித்து வெளிப்படையான பரிபூர்ண கைங்கர்யங்களில் துவக்குண்டாவதுதான்" என்று நமது பூர்வாசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள். ஸ்வரூப ஜ்ஞா

58956



[illegible] வதாராதநத்தை விச்சேதமின்றி அபேக்ஷியாமலிருப்பது அஸாத்யமாதலால், ஸ்வரூப ஜ்ஞாநம் பிறந்த ஸ்ரீவைஷ்ணவாக்ரேஸரனுக்கு இந்தப் பூஜை அவன் அபேக்ஷிக்கும் பரம ப்ரயோஜநமே ஆகும். ஆகையால்தான் சாஸ்த்ரங்களில் இந்த ஆராதநம் ஒரு யாகவிசேஷமாக வைஷ்ணவர்கள் எல்லாராலும் அநுஷ்டிக்கப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

பரமைகாந்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள திநசரியில் ஒவ்வொரு திநமும் ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதலில் உஷ:காலமென்று சொல்லப்படும் ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் நித்ரையை விட்டு எழுந்து, அநாதிகாலமாக கர்ம வாஸனையால் நாம் பகவதநுபவத்தை இழந்து நிற்பதை அநுஸந்தித்து, பகவானுடைய கல்யாணகுணங்களை ஸ்மரித்து அந்த ஸ்மரணத்தால் தேறுதலை அடைந்து, அவனை ஆராதிப்பதனாலேயே நாம் ச்ரேயஸ்ஸைப் பெறவேண்டுமென்பதை நிச்சயித்து, பிறகு வர்ணாச்ரமங்களுக்கு உரிய கர்மங்களை முடித்துக்கொண்டு, பகவத் ஸந்நிதியில் போய், அவனே அவன் அளித்த த்ரவ்யங்களைக்கொண்டு நம்மை நிமித்த மாத்ரமாக வைத்து செய்வித்துக்கொள்ளும் ஆராதநத்தைத் திருவுள்ளம் பற்றும்படி ப்ரார்த்தித்தல் வேண்டும். இதற்கு 'அபிகமநம்' என்று பெயர். இரண்டாவது காலத்தில் பகவதாராதநத்திற்கு அவச்யம் அபேக்ஷிதங்களான த்ரவ்யங்களை சாஸ்த்ரங்களில் விதித்திருக்கும் ப்ரகாரம் ஸம்பாதித்தல் வேண்டும். இதற்கு 'உபாதாநம்' என்று பெயர். மூன்றுவது காலத்தில், அதாவது மத்யாந்ஹ ஸமயம் வந்தபொழுது மாத்யாந்ஹிக ஸ்நாநம் முதலியவற்றைச் செய்து பரிசுத்தனாகச் சாஸ்த்ரோக்த க்ரமத்தில் பகவானைப் பூஜித்தல் வேண்டும். இதற்கு 'இஜ்யை' என்று பெயர். அதற்குப் பிறகு அபராஹ்நத்தில் புராணங்கள் முதலியவைகளை ஸேவித்தல் வேண்டும். இதை 'ஸ்வாத்யாயம்' என்று சொல்வார்கள். இரவில் நித்ரை செய்வதற்குமுன் பகவத் த்யாநாதிகளைச் செய்து கொண்டு யதோசிதம் யோகத்தை அப்யஸித்தல் வேண்டும். இதற்கு 'யோகம்' என்று பெயர். இம்மாதிரி திநம் முழுவதையும் விபஜித்து பகவத் ஸம்பந்தமாகக் காலத்தைப் போக்கி வருவதே வைஷ்ணவாக்ரேஸரர்களுடைய தர்மமாகும். ஆனால் இப்படி காலத்தை நயிப்பது பரமைகாந்திகளுக்கே ஸாத்யம். மற்றை ஜநங்களும் இவைகளைப் பரமோத்தேச்யமாக வைத்துக்கொண்டு தம் தம் சக்திக்குத் தகுந்தபடி ஸங்க்ரஹமாகவாவது அநுஷ்டித்து வருவது யுக்தமாகும். இந்த ஐந்துக்குள் 'இஜ்யை' என்று சொல்லப்படும் பகவத் பூஜை மிக ப்ரதாநமானதால், அது இவ்விடத்தில் தனியாக ஸங்க்ரஹித்துக் கூறப்படுகின்றது.



இவ்விதம் திநசரியை அநுஷ்டிப்பதில் வேத விருத்தமான அம்சமொன்றுமில்லை என்பது சாஸ்த்ரங்களை நிராக்ரஹமாகப் பார்க்கு மெல்லாருக்கும் விளங்கும். ஸ்ரீ சங்கராசார்யர், வைஷ்ணவர்களுடைய இந்த ஆசாரம் முழுவதையும் அங்கீகரித்து, தமது ஸூத்ர பாஷ்யத்தில் பின் வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார்.

"பாகவதா மந்யந்தே - பகவாநேவைகோ வாஸுதேவோ நிரஞ்ஜநஜ்ஞாநஸ்வரூப: பரமார்த்தத்த்வம் | ஸ சதுர்தாத்மாநம் ப்ரவிபஜ்ய ப்ரதிஷ்டிதோ வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்த வ்யூஹரூபேண | தமித்தம்பூதம் பகவந்தம் அபிகமநோபாதாநேஜ்யாஸ்வாத்யாயயோகை: வர்ஷசதமிஷ்ட்வா க்ஷீணக்லேசோ பகவந்தமேவ ப்ரதிபத்யத இதி | தத்ர யத்தாவதுச்யதே யோऽஸௌ நாராயண: பரோऽவ்யக்தாத் ப்ரஸித்த: பரமாத்மா ஸர்வாத்மா ஸ ஆத்மநாத்மாநமநேகதா வ்யூஹ்யாவஸ்தித இதி, தந்ந நிராக்ரியதே | 'ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி' இத்யாதிச்ருதிப்ய: பரமாத்மநோऽநேகதாபாவஸ்யாதிகதத்வாத் | யதபி தஸ்ய பகவத: அபிகமநாதிலக்ஷணமாராதநமஜஸ்ரமநந்யசித்ததயா அபிப்ரேயதே ததபி ந ப்ரதிஷித்யதே, ச்ருதிஸ்ம்ருத்யோரீச்வரப்ரணிதாநஸ்ய ப்ரஸித்தத்வாத்"

[பாகவதர்களென்று சொல்லப்படும் வைஷ்ணவர்களுடைய கொள்கை என்னவென்றால்—'சுத்த ஜ்ஞாந ஸ்வரூபனாயிருக்கும் பகவான் வாஸுதேவன் ஒருவனே பரமார்த்தமான தத்வம். அந்தப் பகவான், வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களென்னப்படும் நாலு வ்யூஹ ரூபமாகத் தன்னைச் செய்துகொண்டு நிற்கிறான். இப்படி நிற்கும் பரமேச்வரனாயிருக்கும் பகவானை அபிகமநம் உபாதாநம் இஜ்யை ஸ்வாத்யாயம் யோகம் என்று சொல்லப்படும் முறைகளில் யாவதாயுஷம் ஆராதித்து அதனால் நசிப்பிக்கப்பட்ட பாபங்களை உடையவர்கள் அந்தப் பகவானையே அடைகிறார்கள்'. இதில் பகவான் தன்னை வ்யூஹமாக அவதரிப்பிக்கிறான் என்று சொல்வது நம்மால் நிராகரிக்கப்படவில்லை; ஏனென்றால் பகவான் அவ்விதம் அவதரிக்கிறான் என்று ச்ருதியிற் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? அந்தப் பகவானை அபிகமநம் முதலிய முறைகளில் எப்பொழுதும் அநந்யசித்தர்களாய் ஆராதித்தல் வேண்டும் என்னும் அம்சமும், ச்ருதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்டிருப்பதால், நிராகரிக்கத்தகுந்ததன்று.] இப்

படி எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருப்பதால் பகவதாராதநம் என்னும் இந்தத் தர்மம் பக்தர்களெல்லாராலும் அநுஷ்டிக்கப்படவேண்டியதே. இதுவே பரமைகாந்திக்குப் பரம புருஷார்த்தமாகும்; ஸர்வாபேக்ஷித ஸாதநம்; ஸ்வரூபாநுகுணமான ப்ரவ்ருத்தி.

இந்த ஆராதநத்தை ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸாளக்ராமங்களிலும் அர்ச்சை என்று சொல்லப்படும் விக்ரஹங்களிலும் செய்வார்கள். ஸாளக்ராமங்களில் பகவான் எப்பொழுதும் ஸந்நிஹிதனாக இருக்கிறான் என்று சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அம்மாதிரியே அர்ச்சையிலும் பகவான் ஆவிர்ப்பவிக்கிறான் என்பது பகவச் சாஸ்த்ரங்களில் ப்ரஸித்தம். அர்ச்சையாவது—பக்தர்கள் உகந்து ப்ரார்த்திக்கிற படிகளில் மந்த்ரங்களினால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட பிம்பங்களைத்தான் உகந்து அவைகளில் ஸர்வேச்வரன் தனது கல்யாணகுணங்கள் அனைத்துடனும் ஆவிர்ப்பவிக்கிறான் என்பது சாஸ்த்ரஸித்தமாகையால், பகவத் விக்ரஹங்களாகிற அந்தப் பிம்பங்களே அர்ச்சாவதாரங்களென்று சொல்லப்படும். இதை வைஷ்ணவர்கள் விசேஷித்து ஆதரிப்பதன் ஹேதுவைப் பின்வரும் ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்தி நன்கு விளக்கும்.

"ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான ஸௌலப்யம் முதலிய குணங்கள், இருட்டறையில் விளக்குப்போல ப்ரகாசிப்பது இந்த அர்ச்சாவதாரத்திலேயே. தனது பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையும் குலைத்துக்கொண்டு தன்னை அநாதரிக்கிறவர்களைத் தான் ஆதரித்து நிற்கிற இடம் இந்த அர்ச்சையே. பூகத ஜலம் போலே அந்தர்யாமித்வம். ஆவரண ஜலம் போலே பரத்வம். பாற்கடல் போலே வ்யூஹம். பெருக்காறு போலே விபவங்கள். தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம். இது தான், சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே விஷயாந்தரங்களில் மண்டி விமுகராய்ப் போரும் சேதநர்க்கு வைமுக்யத்தை மாற்றி ருசியை விளைவிக்கக் கடவதாய், ருசி பிறந்தால் உபாயமாய், உபாய பரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாய் இருக்கும்."

ஆலோகநாதி ஸமயேஷு ஸமஸ்த ஜந்தோ:
ஸாதாரணோ பவதி ஸர்வஜனீநவ்ருத்தி: |
ஸம்ஸார ஸாகர நிமஜ்ஜந காரணாநாம்
ஸங்கல்ப ஸூக்திஷு ஸுதா ஸகலம் ததேவ ||"

இத்யாதி வாக்யங்கள் ப்ரமாணங்கள். சிலர், விக்ரஹாராதநம் பக்தர்களின் சித்தாலம்பந ஸௌகர்யத்திற்காக ஏற்பட்டதென்றும் ஜ்ஞாநவானுக்கு அது அபேக்ஷிதமில்லையென்றும் சொல்வார்கள்.



"ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம் ஸர்வத்ர ஸமதர்சிநாம்"

என்னும் வசநத்தை அவர்கள் அதற்கு ப்ரமாணமாகவும் கூறுவார்கள். இந்த வாக்யத்தில் ஸமதர்சிகளாகிற ஜ்ஞாநிகளுக்கு எங்கும் பகவான் இருக்கிறான் என்று சொல்லியிருக்கிறதே தவிர, ப்ரதிமை நீங்கலாக மற்றை இடங்களில் மாத்ரம் அந்த ஜ்ஞாநிகள் பகவானைக் காண்பார்கள் என்று சொல்லவில்லை. இதை அவர்கள் கவனிக்கவில்லைபோலும்.

"ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்"

[பகவான் ஸர்வருக்கும் ஸ்வாமி. ஜீவன்கள் எப்பொழுதும் அவனுடைய தாஸர்கள். இந்த ஸம்பந்தம் இயற்கையாகவே ஏற்பட்டது என்பதை இடைவிடாமல் நினைக்கக் கடவாய்] என்று விதித்திருக்கும் ஸேஷத்வாநுஸந்தாநத்திற்கு உறுப்பாக வைஷ்ணவர்கள் சில விசேஷித்த வேறு ஆசாரங்களையும் அநுஷ்டித்து வருவதுண்டு.

"உத்பந்நமேவ தவ நாத மயா ச ஸம்பந்தம் இஹ உபயதே ந ஒழியாது
வி...நீய: ஸ்வயமேவ நாராயண ஸர்வ ஜீவை: ||"

என்கிறபடி பகவானுக்கும் ஜீவனுக்குமுள்ள ஸம்பந்தம் ஒருவராலும் ஒழிக்கவொண்ணாதது. மோக்ஷதசையில் நித்ய ஸூரிகளோடொக்க ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்து ஆநந்தமடைவது போலவே, இச்சரீரத்துடன் இருக்கும் காலத்திலும் இக்கொள்கையை அநுஸந்திக்கும் போதெல்லாம் அத்தகைய பரம போக்யமான பகவத் தாஸ்யத்தை இஜ்ஜீவன் அபேக்ஷிப்பது மிகவும் உசிதம். ஆகையால், அவர்கள்,

"விஷ்ணோர் தாஸ்யம் வஹேத்விஷ்வாம்:"

என்கிறபடி தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பகவந் நாமங்களை வைத்தும், தமது தாஸ்யத்திற்கு அறிகுறியாக அவனுடைய ஆயுத சிஹ்நங்களைத் தங்கள் சரீரத்தில் தரித்தும், பகவானுக்குச் சேஷபூதம் என்பதற்கு அடையாளமாக ஊர்த்வபுண்ட்ரங்களை நெற்றி முதலிய சிலஸ்தல விசேஷங்களில் இட்டுக்கொண்டும் இன்னும் இம்மாதிரியான சில அஸாதாரண அநுஷ்டாநங்களைக் கைப்பற்றி வருகிறார்கள்.

"ஊர்த்வபுண்ட்ரம் ...ஸா ... ...வேத் ... |
... ... ...க்ஷணம் ||"

[மங்கள்ய ஸூத்ரம் வலயங்கள் இவை முதலிய ஆபரணங்கள் பதிவ்ரதைகளான ஸ்த்ரீகளின் பாதிவ்ரத்யத்திற்கு எப்படி ஸூசகமோ, அப்படி சேதநர்களுக்கு இந்தச் சக்ராதி தாரணம் பரம புருஷனுடைய ஸம்பந்தம் இருப்பதற்கு ஸூசகம்] என்பதே இவைகளைத் தரிக்கும் வைஷ்ணவர்களின் கருத்து.

"𑌯𑍇 𑌬𑌾𑌹𑍁𑌮𑍂𑌲𑌪𑌰𑌿𑌚𑌿𑌹𑍍𑌨𑌿𑌤𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌾𑌃
𑌯𑍇 𑌵𑌾 𑌲𑌲𑌾𑌟𑌫𑌲𑌕𑍇 𑌲𑌸𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌾𑌃 ।
𑌯𑍇 𑌕𑌣𑍍𑌠𑌲𑌗𑍍𑌨𑌤𑍁𑌲𑌸𑍀𑌨𑌲𑌿𑌨𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌃
𑌤𑍇 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌃 ॥"

[இரு புஜங்களிலும் ஏந்தின திருவிலச்சினை உள்ளவர்களாய், நெற்றியில் ப்ரகாசிக்கும் ஊர்த்வபுண்ட்ரமுள்ளவர்களாய் கண்டத்தில் துளஸிதாமரை மணி மாலைகளை உடையவர்களாய் எவர் இருக்கிறார்களோ அவர்களே வைஷ்ணவர்கள்] என்று அவர்களுடைய பாஹ்ய சிஹ்நங்கள் சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. பகவத் பக்தர்கள் இம்மாதிரி பாஹ்ய சிஹ்நங்களைத் தரிப்பது நமது நாட்டில் அநாதியாக உள்ளதே.

வைஷ்ணவர்களுடைய ஆசாரங்களில் இன்னும் ஒரு விசேஷித்த அம்சம் உண்டு. அதாவது, பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தைப் பெறுவதற்கு 'பக்தி' என்னும் உபாயத்தைத் தவிர்த்து 'ப்ரபத்தி' என்று வ்யவஹரிக்கப்படும் வேறு ஒரு உபாயமும் உண்டு என்று அவர்கள் நம்பி, அதைச் சிற்சில நியமங்களுடன் அநுஷ்டித்து வருகிறார்கள் என்பதுதான். பக்தி ப்ரபத்தி இரண்டையும் சாஸ்த்ரங்கள் மோக்ஷ ஸாதநங்களாகப் போதிக்கின்றனவென்பதும், ஆனால் நாம்எல்லாரும் பக்தியைச் சரிவர அநுஷ்டிப்பதற்கு அபேக்ஷிதமான ஜ்ஞாநத்தையும் சக்தியையும் கால வைகுண்யத்தால் இழந்து நிற்கிறபடியால், ப்ரபத்தி ஒன்றே நம் எல்லோருக்கும் ஒரே மார்க்கமாக இருக்கின்றதென்பதும் அவர்களுடைய கொள்கை.

ப்ரபத்தியாவது—ஸ்ரீமந் நாராயணனென்கிற பரமாத்மாவை ஒழிய இவ்வாத்மாவுக்கு வேறு ஒருவரும் தானும் ரக்ஷகராகமாட்டார் என்றும், அந்தப் பரமாத்மாவின் க்ருபையைப் பெறுவதற்கு ஒரு ஸதாசார்ய ப்ராப்தி அவச்யம் அபேக்ஷிதமென்றும் அறிந்து, அந்த ஆசார்யனிடமிருந்து தத்வ ஹித புருஷார்த்தங்களைத் தெளிய ஓதி, அதனால் வைராக்யம் பெற்று அந்த ஆசார்யனுடைய க்ருபை ப்ராப்தமாகுமவஸரத்தில் அவனால் ப்ரஸாதிக்கப்படும் த்வயாதி மந்த்ரங்களைக்கொண்டு ஸ்ரீமானான நாராயணனுடைய திருவடிகளைச் சரணம் பற்றி, தன்னையும் தன்னைச் சேர்ந்தவைகளையும் அவை யடியாக வரும் பாரம் முழுவதையும் அந்தப் பகவானிடம் ஹார்த்தமாக ஸமர்ப்பிப்பதே. இந்த ப்ரபத்தி விஷயமாகச் சொல்லவேண்டிய விஷயங்கள் பலவுண்டு. அவைகளையெல்லாம் விசாரிப்பதற்கு இப்பொழுது அவகாசமில்லையாதலால், இது ஒரு சாஸ்த்ரீயமான தர்மமே என்று மாத்ரம் விஜ்ஞாபித்துக்கொண்டு அதனுடன் உபரதனாகிறேன்.



இது வரை சொன்னதிலிருந்து ஏற்படுவதென்னவென்றால்:—வைஷ்ணவன் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளுமவனுடைய ஸ்வரூபமும் லக்ஷணமும் பின்வருமாறு இருக்கின்றனவென்பதே.

(1) தேஹேந்த்ரியாதி வ்யதிரிக்தனாய் நித்யனாயிருப்பான் ஆத்மா என்று ஒரு வஸ்து உண்டு என்றும், தேஹேந்த்ரியங்கள் முதலிய அசேதந வஸ்துக்கள் சேதநர்களாயிருக்கும் ஜீவாத்மாக்கள் இவை இரண்டுக்கும் அத்யந்த விலக்ஷணனாயும், இவையெல்லாவற்றுக்கும் அந்தர்யாமியாயும் ஸர்வசேஷியாயும் இருப்பானொரு பரமாத்மா உண்டென்றும், அந்தப் பரமாத்மா ஸ்ரீமந் நாராயணனென்று சொல்லப்படும் புருஷோத்தமனே என்றும், அந்தப் பரமாத்மா எல்லாருக்கும் ஸ்வாமி, ஜீவாத்மாக்களெல்லாரும் அவனுக்கு தாஸர்கள் என்று இவ்விருவருக்கும் "நான் உன்னை இன்றி இலேன் கண்டாய் நாரணனே நீ என்னை இன்றி இலை" என்கிறபடி ஒருநாளும் ஒருவராலும் பிரிக்கக்கூடாத ஒரு ஸம்பந்தம் இயற்கையாகவே இருக்கின்றது என்றும் ஒரு ஜ்ஞாந விசேஷத்தைப் பெற்று இருப்பது வைஷ்ணவனுடைய ஸ்வரூபம்.

(2) வேதம் அதன் உபப்ரும்ஹணங்களாகிற ஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்களெல்லாம் பகவதாஜ்ஞை என்று நம்பி, அவைகளிற் சொல்லப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மங்களை தேஹாத்ம விவேகத்துடனும் ஜீவ பரமாத்ம ஸம்பந்த ஜ்ஞாநத்துடனும் யதாசக்தி அநுஷ்டித்து வருவதுடன், அந்தத் தர்மங்களின் அநுஷ்டாநமெல்லாம் கேவலம் பகவதாராதநமென்று அவைகளில் ஸ்வகீயத்வ புத்தியைச் செய்யாமல் எல்லாம் அவனுடைய முகோல்லாஸார்த்தமே என்று த்ருடமாய் விச்வஸித்து அவன் திருவடிகளில் பரஸமர்ப்பணத்தைச் செய்வதும், அப்படி பரஸமர்ப்பணம் செய்த பிறகு, 'ஸதாசார்ய கடாக்ஷமடியாக பகவான் நம்மால் ஸமர்ப்பிக்கப்பட்ட பாரத்தை ஸ்வீகரித்து விட்டான்; இனி ஒருபடிக்கும் நம்மைக்கைவிடான்' என்னும் தேற்றத்துடன் இங்கிருக்கும் காலமெல்லாம் அழுக்கற்ற அநுகூல வ்ருத்தியுடன், மோக்ஷம் அடைந்தபிறகு தாம் அநுபவிக்கப்போகும் கைங்கர்ய ஆநந்தத்தை இவ்விடத்திலேயே அநுபவிக்குமாறு மநோபாவ விசேஷத்தையும் நடவடிக்கைகளையும் பரிக்ரஹித்து, தமக்கு ஜந்ம ஸித்த

மான தர்மங்களொன்றையும் கைவிடாமல் அநுஷ்டித்து காலத்தைபோக்கிவருவதும் அவர்களுடைய முக்கிய தர்மங்கள்.

இந்த ஸந்தர்ப்பத்தில் அடியேன் இன்னும் ஒரு விஷயத்தை விஜ்ஞாபித்துக்கொள்ளத் துணிகின்றேன். அதாவது—கீழ் விவரித்திருக்கும் ப்ரகாரம் அத்யுதாரமாயும் அதிகம்பீரமாயும் அதிபரிசுத்தமாயும் இருக்கும் வைஷ்ணவத்வத்தின் ஸம்பந்தத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று நம்மைச் சொல்லிக்கொள்வதுடன் மாத்ரம் நமது கடமை முடிவு பெற்றுவிட்டதாக நாம் எண்ணியிருக்கக் கூடாது என்பதுதான். வைஷ்ணவத்வத்திற்கு வெளிப்படையான அடையாளங்களாகிற ஊர்த்வ புண்ட்ராதிகளின் தாரணம் மாத்ரம் நம்மைக் காப்பாற்றமாட்டாது. அதற்கு அவச்யம் அபேக்ஷிதமான பகவச் சேஷத்வ ஜ்ஞாநத்தை நாம் பெரியோர்களிடமிருந்து உள்ளபடி அறிந்துகொள்ள முயலவேண்டும்; அந்த வைஷ்ணவத்வத்திற்கு ஸம்ரக்ஷகமாயுள்ள வர்ணாச்ரம தர்மபரிபாலநத்தை ச்ரத்தையுடன் யதா சக்தி அநுஷ்டித்தலும் வேண்டும்; தயை சாந்தி ஸௌஹார்த்தம் முதலிய ஆத்மகுணங்களை ஸம்பாதித்துக் கொள்ளுதலும் வேண்டும். இம்மாதிரியான மநஸ்ஸின் சுத்தியும் அதற்குத் தகுந்த அநுஷ்டாநமும் இராவிட்டால், கேவலம் பாஹ்ய வேஷத்தை மாத்ரம் தரிப்பது மோசமே ஆகும். அது ஒருகாலும் நமது ச்ரேயஸ்ஸின் பொருட்டு ஆகமாட்டாது; ப்ரத்யுத பாதகமாகவே பர்யவஸிக்கும். வாக் மநஸ் கர்மம் இந்த மூன்று கரணங்களின் ஒற்றுமையன்றோ ஸௌக்யத்தின் ரஸாயநம்? அந்த ஒற்றுமை இராவிட்டால் நாம் பகவந் நிக்ரஹத்திற்குப் பாத்ரமாகி விடுவோமாதலால், அம்மாதிரி நிக்ரஹம் வராமலிருக்கும்பொருட்டு நாம் கேவலம் வேஷத்தால் மாத்ரம் த்ருப்தி யடைந்தவர்களாக இருப்பது கூடாதென்று அடியேன் விண்ணப்பம் செய்துகொள்ளத் துணிந்தேன். நான் வைஷ்ணவனென்று சொல்லிக்கொண்டு வேண்டிற்றுச் செய்து திரிய அடுக்குமென்று ஒருவரும் சொல்லத் துணியார். நாமெல்லோரும் பஞ்சகால பராயணர்களாக இருப்பது இக்காலத்தில் ஸாத்யமிராமற் போனாலும், ப்ரதிதிநமும் உதயத்திற்கு முன்னதாக எழுந்து யதாசக்தி ஸ்நாநம் முதலியவற்றைச் செய்து, சுசியான தேஹத்துடனும் சுசியான மநஸ்ஸுடனும் ஸந்த்யாவந்தநாதிகளை முடித்துக்கொண்டு ஸங்க்ரஹமாகவாவது பகவத் பூஜையைச் செய்து வருவது எல்லோராலும் ஸாத்யமே. வேதாந்தங்களையெல்லாம் அப்யஸித்து ஆழ்ந்த ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக்கொள்வது எல்லாருக்கும் ஸாத்யமிராமற்போனாலும், அத்யந்தம் உபயுக்தங்களான விஷயங்களில் வைசத்யத்தைப் பெரியோர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பெற்றுக் கொள்வது எல்லாருக்கும் ஸாத்யமே. ஜநகர் முதலான மஹான்களைப் போல அதிமாத்ரம் சாந்தமான மநஸ்ஸை



உடைத்தாயிருப்பது எல்லாருக்கும் ஸாத்யமிராமற் போனாலும், அதிகமாக க்ருதா கோபத்திற்கும் அஸூயைக்கும் பாத்ரமாகாமல் நம்மைக் காப்பாற்றிக்கொள்வது ஸாத்யமே. காலத்தின் கொடுமையால் அநேக கஷ்டங்கள் நமக்கு உண்டாயிருக்கின்றனவென்பது உண்மையே. வ்ருத்தி கார்ச்யத்தால் நமக்கு அத்யந்தம் அநநுரூபமான தொழில்களிலும் நாம் ப்ரவர்த்திக்கும்படி இருக்கின்றது. ஸந்த்யா வந்தநம் முதலிய தர்மாநுஷ்டாநங்களுக்கும் தேவ பூஜைக்கும் குறிப்பிட்ட காலங்களில் லௌகிக கார்யங்களில் ப்ரவர்த்திக்கும்படி அநேக வித கஷ்டங்களால் நிர்பந்திக்கப் படுகிறோம். இவையெல்லாம் தர்ம ப்ரம்சங்களே. ஆனால், இப்படி அசக்தியால் நேரும் தர்ம ப்ரம்சங்களுக்கு கருணாநிதியான ஈச்வரன் நம்மை அவ்வளவாக நிக்ரஹிக்கமாட்டான். எப்படிப்பட்ட நிர்பந்தங்கள் நேர்ந்த போதிலும் அவையெல்லாம் தேஹத்தை மாத்ரம் பரவசமாகச் செய்யுமே தவிர்த்து, நமது மநஸ்ஸை அவை நம்முடைய ஸ்வாதீநத்திலிருந்து அபஹரிக்கமாட்டா. அந்த மநஸ்ஸுக்கு எவ்வித அசுத்தியும் நேராமல் அதைச் சுத்தமாக வைத்துக் கொள்வது நமக்கு ஸாத்யமேயாகும். பகவானை மநஸ்ஸால் நினைக்கவொட்டாமலும் பிறர்களிடம் ஸௌஹார்த்தத்தைச் செய்யவொட்டாமலும் நம்மை நிர்பந்திப்பதற்கு எவர்கள் சக்தராவார்கள்? ஆகையால் அதிக்ரூரமான கஷ்டங்கள் நேருங்காலத்திலும் நமது மநஸ்ஸை ஒழுங்காக நடத்த சக்தி வஞ்சனையின்றி நாம் முயன்றால், அவ்வளவால் நமது பகவான் த்ருப்தி அடைந்து நம்மை அநுக்ரஹிப்பன் என்பதில் ஆக்ஷேபமில்லை. இப்பொழுது நம்மிடம் பரஸ்வாபஹார புத்தியும் பொய் சொல்லும் நோக்கமும் பிறரை ஹிம்ஸிக்கும் எண்ணமும் அதிகமாக இராவிடினும், த்வேஷம் என்னும் தோஷம் மாத்ரம் நம்மை பலமாக ஆக்ரமித்துக் கொண்டே நிற்கின்றது. ஜந்மத்தினாலும் ரூபத்தாலும் தநத்தாலும் வித்யையாலும் சரித்ரத்தாலும் இன்னும் வேறு காரணங்களாலும் நாம் உயர்ந்தவர்களென்றும் மற்றவர்களெல்லாரும் நமக்கு நிஹீநர்களென்றும் நினையாதவர் நமக்குள் எவ்வளவு பெயர்கள் உண்டு? அதிலும் தைவத்தைத் தொழும் விஷயத்தில் நம்முடைய மார்க்கத்தைக் காட்டிலும் வேறுபட்டதான மார்க்கத்தில் போகும் மற்றோர்களை நிஹீநர்களென்றே நாம் நினைக்கிறோம். அவர்களுடைய ஆசாரங்களை நாம் கொஞ்சமேனும் ஸஹிக்க மாட்டோமென்கிறோம். எல்லாம் அறிந்த பெரியோர்கள் இதைத் தோஷமென்று விலக்க வேண்டியது போக, அவர்களே இதில் தர்மபுத்தியுடன் ப்ரவர்த்தித்து லோகத்தாருக்கு இது விஷயமாக புத்தி பேதத்தை உண்டுபண்ணுகிறார்கள். தைவத்தின் விசித்ர சேஷ்டிதங்களுள் இதுவும் ஒன்றென்றே நினைக்க வேண்டியதாக இருக்கின்றது. மடம் முனித்ரயமென்றும் தென்கலை வட

கலையென்றும் அத்வைதி விஶிஷ்டாத்வைதி என்சிறும் சைவம் வைஷ்ணவ மென்றும் இவ்வாறு பல விதமாகப் பிரிந்து நிற்கும் நாம் பரஸ்பரம் த்வேஷிப்பதையும் பரஸ்பரம் தூஷித்துக் கொள்வதையும் பார்க்கும்பொழுது, நம்மிடம் மநஸ் சுத்தி என்பது ஸ்வல்பமேனும் இல்லையென்று சொல்லும் படியன்றோ இருக்கின்றது? ரஜஸ்ஸும் தமஸ்ஸும் தலையெடுத்து நிற்கும் இந்நாளில் இப்படி பரஸ்பரம் வைமநஸ்யத்தை ஜநிப்பிக்கும் வ்யாபாரங்களில் நாம் ப்ரவர்த்திப்பது உசிதமாகுமாவென்பதையும் விவேகிகளெல்லாரும் ஆலோசித்துப் பார்த்தல் வேண்டும். தம் தமக்கு பகவான் அநுக்ரஹித்துள்ள ஜ்ஞானத்திற்கு அநுகுணமாகவே தம் தம் பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்டும் உபதேசிக்கப்பட்டுமுள்ள ஆசாரங்களை அவரவர்கள் அநுஷ்டித்து வருவதே அவரவர்களுக்குத் தர்மமாகுமென்று எண்ணி ஒருவர் மற்றொருவரை நிந்தியாமல் எல்லாரும் ஸஹ்ருதயர்களாக வர்த்தித்து வருவதன்றோ நாம் பெற்றிருக்கும் விவேகத்திற்கு லக்ஷணமாகும்? ருக் வேதிகளென்றும் ஸாமவேதிகளென்றும் யஜுர்வேதிகளென்றும் நாம் பேதித்திருக்கையிலும், நாம் நமது அநுஷ்டாந பேதங்களை ஸஹித்துப் போகவில்லையா? அம்மாதிரியே நமது ஸித்தாந்த பேதத்தால் நமக்குள் ஏற்படும் ஆசார பேதங்களை நாம் ஏன் ஸஹித்துப் போகக் கூடாது? ஸ்வல்ப ப்ரயத்நத்தால் இந்த நிஷ்பத்தியை ஸாதித்துக்கொள்வது எல்லாராலும் ஸாத்யமே என்றும், இதற்கு விருத்தமான மநோபாவம் நம்மிடம் இருப்பது பகவத் ப்ரஸாதத்திற்கு பாதகமென்றும் அடியேனுக்குத் தோன்றுகிறபடியால் அடியேன் இதைப்பற்றி இவ்வளவு தூரம் விஜ்ஞாபித்துக்கொள்ளத் துணிந்தேன். இதில் அதிக்ரமம் ஏதாவது இருக்கும் பக்ஷத்தில் அதை க்ருபையுடன் எல்லாரும் க்ஷமித்தருளவேணும்.

இவ்விதம் நாம் நமது மநஸ்ஸிலிருந்து துஷ்ட பாவங்களையெல்லாம் விலக்கிக் கொண்டும், நமக்கு ப்ராப்தங்களாயிருக்கும் தர்மங்களை யதாசக்தி செய்துகொண்டும், "[illegible]" என்று நம்மைக் காப்பாற்றுவதில் தீக்ஷிதனாயிருக்கும் ஸ்ரீ சரண்யனுடைய நினைவை மறக்காமலும் நாம் நடக்க முயன்றால் க்ருபாநிதியான ஸ்ரீ சரண்யன் அந்த முயற்சியை நிறைவேற்றி வைப்பதுடன் மேற்பட்டு நடக்கவேண்டியதற்கு அபேக்ஷிதமான ஜ்ஞானத்தையும் சக்தியையும் கொடுத்து நம்மைக் கரையேற்றிக் கொள்வன் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆகையால், இன்றுமுதலாவது, நாம் தரித்துக்கொண்டிருக்கும் வேஷத்திற்கு அநுகுணமாக நமது மநோபாவங்களையும் கர்மங்களையும் நாம் சீர்ப்படுத்திக்கொள்ள ப்ரயத்நம் செய்வோம். இவ்வளவு காலம் வீணாகப் போய்விட்டதே என்று சோகிக்கவும் வேண்டாம்.



"ஸ்தித்வாऽஸ்யாமந்தகாலேऽபி ப்ரஹ்மநிர்வாணம்ருச்சதி"

[அந்திம வயஸ்ஸிலாவது இந்த மார்க்கத்தில் ப்ரவர்த்தித்தால் அந்த வ்யாஜத்தை அவலம்பித்து ஸ்ரீ சரண்யன் நமக்கு நிச்சயம் நல்ல கதியை அளிப்பான்] என்று கர்மயோக ஜ்ஞாநயோக விஷயமாகப் பகவான் அநுக்ரஹித்திருக்கும் வார்த்தை நல்வழி யெல்லாவற்றுக்கும் பொதுவானதே.

---

ஸ்ரீ:

# மீமாம்ஸா ஸங்க்ரஹம்.

[திவான் பஹதூர் ஸ்ரீ. உ.ப. வி. கே. ராமாநுஜாசார்யர்]

[ஸம்-23 ஸஞ் 10, பக்கம் 668 தொடர்ச்சி]

## நான்காவது பாதம்

(118) இந்தப் பாதத்தில் மூன்று விஷயங்கள் விசாரிக்கப்படுகின்றன. அவைகளில் முக்கியமானது-விதிக்கப்படுவது யஜ்ஞத்துக்காகவா? அல்லது அதைச் செய்கிறவனுடைய பிரயோஜனத்துக்காகவா? என்பது. முதல் ஏழு அதிகரணங்களில் ஒரு வாக்யம் சொல்வது விதியா? அல்லது அர்த்தவாதமா? அல்லது அநுவாதமா? என்று விசாரிக்கப்படுகிறது. அவைகளில் ஒன்று மாத்திரம் இங்கே எழுதப்படுகிறது.

(119) தர்ச பூர்ணமாஸ ப்ரகரணத்தில் "நிவீதம் மநுஷ்யாணாம் ப்ராசீநாவீதம் பித்ரூணாம், உபவீதம் தேவாநாம், உபவ்யயதே, தேவலக்ஷ்மமேவ தத்குருதே" என்று வாக்யங்கள் இருக்கின்றன. கடைசி வாக்யத்தின் பொருள் — உபவீதமாகப் போட்டுக் கொள்ளுகிறான், அதினாலே தேவர்களுடைய அடையாளத்தையே செய்கிறான் - என்று. இங்கே முதல் வாக்கியம் விதியா? அல்லது அர்த்தவாதமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—அது விதிதான், வேறு பிரமாணத்தாலே ஏற்படாததினால் அது விதிதான். இப்படி விதியாக வைத்துக்கொண்டு, நிவீதம் புருஷார்த்தம் என்றும், யாகத்தின் தர்மம் என்றும் இன்னும் பல பக்ஷங்கள் சொல்லுகிறார்கள்.

ஸித்தாந்தம்—இது அர்த்தவாதம், இந்த வாக்கியம் வஸ்திர விஷயம். த்ரிவ்ருத் ஸூத்ர (பூணூல்) விஷயம் அன்று. வஸ்த்ரத்தை நிவீதமாய்ப்

போட்டுக் கொள்ளுவதில் ஸௌகரியம் இருக்கிறது. ப்ராசீநாவீதமாயாவது, உபவீதமாயாவது அதைப் போட்டுக்கொண்டால், ஒரு பக்கத்தில் அது கீழே விழும். நிவீதம் தானே ஏற்படும். விதி வேண்டியதில்லை. யாகத்துக்கு அங்கமாக நிவீதம் விதிக்கப்படுகிறது என்றால், இரண்டு விஷயங்களை விதிப்பதால், வாக்ய பேதம் ஏற்படும். மேலும், மூன்றாவது வாக்யத்தில் விதியிருக்கிறது. கடைசி வாக்யம் அதை ஸ்தோத்ரம் பண்ணுவதால், அதை விதி என்றே சொல்லவேணும். அப்போது முதல் இரண்டு வாக்யங்களும் அர்த்தவாதமாயிருந்துகொண்டு அத்துடன் சேர்ந்து ஒரே வாக்யமாகின்றன. இப்படிச் சொல்லக்கூடியதாயிருக்கையில், முதல் வாக்யத்தை விதி வாக்யம் என்று சொல்லுவது நியாயமன்று. நிவீதம் மனிதர்கள் விஷயத்திலும், ப்ராசீநாவீதம் பித்ருக்கள் விஷயத்திலும் உபயோகப் படுத்துவதால், தேவர்கள் விஷயமான கர்மங்களில் அவைகள் தகுந்தவைகள் அன்று. உபவீதம் தான் தகுந்தது என்று நிவீதவாக்கியம் ஸ்தோத்திரம் பண்ணுகிறது. ஆகையால் அது அர்த்தவாதம். (அதி-1)

(120) பாதத்தின் முக்கியமான விஷயம்:—தர்சபூர்ணமாஸ ப்ரகரணத்தில் "நாந்ருதம் வதேத்" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. அதின் பொருள்—ஒருவன் பொய் சொல்லக்கூடாது—என்று. இந்த தர்மம் புருஷனுடைய தர்மமா? அல்லது யஜ்ஞத்தினுடைய தர்மமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—அது. புருஷனுடைய தர்மம். பொய் சொல்லுவது புருஷனுடைய தர்மம். அது இல்லாமையும் புருஷனுடைய தர்மமாகவே இருக்கவேண்டும். எப்படி என்றால், "வதேத்" என்கிற சொல்லில், ஆக்யாதமான ப்ரத்யயமானது கர்த்தாவைச் சொல்லுகிறது; ப்ரக்ருதியான வதநம் (சொல்லுவது) புருஷ தர்மமாகவே இருக்கவேண்டும். "ப்ரக்ருதியும் ப்ரத்யயமும் ப்ரத்யயத்தின் அர்த்தத்தைச் சேர்ந்துச் சொல்லுகின்றன; அவைகளில் ப்ரத்யயம் முக்கியமாய் காட்டுகிறது" என்று வியாகரண சாஸ்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள். 'பொய் சொல்லுவது புருஷனுடைய தர்மம்; அதில்லாமை புருஷனுடைய தர்மம் அன்று என்று சொல்லக் கூடாது. . விதிக்கும் நிஷேதத்துக்கும் விஷயம் ஒன்றாகவே இருக்கவேண்டும். ஆகையால் ப்ரகரணம் பாதிக்கப்படுகிறது. ஒரு கேள்வி—புருஷனுடைய தர்மமாக ஸ்ம்ருதி சொல்லுகிறதே, அதை ச்ருதி விதிப்பானேன்? பதில்—ச்ருதி வாக்யம் மூலம், அதை ஸ்ம்ருதி சொல்லுகிறது. இது ஒரு பூர்வபக்ஷம்,

(2) ச்ருதி வாக்யம் ஸ்ம்ருதிக்கு மூலம் அன்று. அதின் விஷயம் வேறு. உபநயநம் ஆனது முதல் இறந்துபோகும் வரையில் பொய் சொல்லுவதை ஸ்ம்ருதி கூடாது என்று சொல்லுகிறது. ஆக்யாதமாக ச்ருதிக்



கும் ப்ரகரணத்துக்கும் விரோதம் இல்லாமைக்காக யஜ்ஞம் செய்கிற புருஷனுடைய தர்மம் என்று ஒப்புக்கொள்ளவேணும். இது இரண்டாவது பூர்வபக்ஷம்.

(3) ஆக்யாதம் பாவனையைச் சொல்லுகிறது. கர்த்தா அதைவிட்டுப் பிரியாதிருப்பதால், தானே தோன்றுகிறது. ஆகையால் ச்ருதி என்கிற ப்ரமாணம் இல்லை. ப்ரகரணமாத்திரம் இருக்கிறது. அதினால் பிரயாஜங்களைப்போல் உபகாரம் செய்து யஜ்ஞத்துக்கு அங்கமாகிறது. அப்பவும் விதி இல்லை. ஸ்ம்ருதியாலே ஏற்பட்டது அநுவாதம் செய்யப்படுகிறது. கூடாது என்பது எப்போதும் உண்டானபடியால், யஜ்ஞம் செய்யும் காலத்திலும் உண்டு. இது மூன்றாவது பூர்வபக்ஷம்.

ஸித்தாந்தம்—ஸ்ம்ருதி 'உண்மையையே பேசு. பொய் சொல்லாதே' என்று சொல்லுவது புருஷனுடைய தர்மம். இதை மீறி நடந்தால், நடந்தவனுக்குக் குற்றம். அதற்கு ஸ்ம்ருதி சொல்லும் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டியது. இங்கே சொல்லுவது வேறு தர்மம். இதை மீறி நடந்தால், குறைவு யஜ்ஞத்துக்கு, அதற்கு வேண்டிய பிராயச் சித்தத்தை யஜ்ஞத்துக்காகச் செய்யவேண்டியது. இந்தப் புதிதான தர்மம் முன்னாலே ஏற்படாததால், விதிக்கப்படுகிறது. (அதி-8).

(121) அடுத்த நாலு அதிகரணங்களில் இதே விஷயமான விசாரம் செய்யப்படுகிறது:—

(1) கொட்டாவி விட்டால், ஒருமந்திரத்தைச் சொல்லவேண்டியது என்று ஒருவிதி. யஜ்ஞம் செய்கிறவனுக்கும் கொட்டாவி விடுவது நேரிடுமானதால், வாக்யத்துக்கும் ப்ரகரணத்துக்கும் விரோதமில்லை. யஜ்ஞத்தைச் செய்யும் புருஷனுக்கு மந்த்ரத்தைச் சொல்லுவது ஸம்ஸ்காரமாயிருப்பதால், அது யஜ்ஞத்தின் தர்மம் (அதி-9)

(2) "எவன் பிராமணனை அடிக்கக் கையை ஓங்குகிறானோ (சதமா-ரேத) அவனுக்கு நூறு வருஷம் அநுபவிக்கக்கூடிய யாதனையைச் செய்யவேண்டியது. ஆகையால் பிராமணனை அடிக்கக் கையை யோங்காதே" என்று ஒரு வாக்யம். இந்த நிஷேதத்தின் பலன் சொன்ன யாதனை வாரமல் பண்ணிக்கொள்ளுவது. ஆகையால் இது புருஷனுடைய தர்மம். (அதி-10)

(3) "பஹிஷ்டைக்காரியுடன் பேசாதே" என்கிற விதி புருஷனுடைய தர்மம். "தர்ச பூர்ணமாஸம் செய்கிற நாளில் பத்நீ திட்டுக்காரியானால் அவளை வெளியே போகச் சொல்லி, யாகத்தைச் செய்யவேண்டியது என்று

சொல்லி யிருப்பதால், அவனுடன் பேச இடமேயில்லை. ஆகையால் புருஷனுடைய தர்மம். இந்த இரண்டிடத்திலும் ப்ரகரணத்திலிருந்து உத்கர்ஷம் செய்யவேண்டியது. (அதி-11)

122 கீழ் விசாரித்த மூன்று வாக்யங்களும் தர்சபூர்ணமாஸ ப்ரகரணத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ப்ரகரணத்திலும் சேராமல் (അനാരഭ്യ) ஒரு வாக்யம் படிக்கப்படுகிறது. "തസ്മാത് സുവൎണം ഹിരണ്യം ഭാൎയം / സുവൎണ ഏവ ഭവതി / ദുൎവൎണോഽസ്യ ഭ്രാതൃവ്യോ ഭവതി" என்று. இது க்ரதுவின் தர்மமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஆம் இந்த வாக்யத்தால், யஜ்ஞத்தின் நினைவு உண்டாகிறது. ஆகையால் நல்ல வர்ணமுள்ள தங்கத்தைத் தரிப்பது க்ரதுவுக்கு அங்கம்.

ஸித்தாந்தம்:—இந்த வாக்யம் அநாரப்ய அதீதம். யஜ்ஞத்தின் நினைவு வருவதற்கு இடமில்லை. "യസ്യ പൎണമയീ ജുഹൂഃ" என்கிற வாக்யமும் அநாரப்ய அதீதம் தானே அதற்கு யஜ்ஞத்தின் நினைவு வருகிறதே என்றால், யஜ்ஞம் தவிர வேறு ஒன்றிலும் ஜுஹுவுக்கு உபயோகமில்லை. ஆகையால் ஜுஹு என்கிற சொல்லைக் கேட்டவுடன் யஜ்ஞத்தின் நினைவு வருகிறது. இங்கே அப்படியன்று. தங்கத்துக்கு யஜ்ஞத்திலேதான் உபயோகம் என்று சொல்ல முடியாது. யஜ்ஞத்தின் நினைவு வராது. ஆகையால் இங்கே புருஷ தர்மம் தான் விதிக்கப்படுகிறது.

(2) தங்கத்தைத் தரிப்பதால், அதற்கு ஸம்ஸ்காரம் உண்டாகிறது. இப்படி ஸம்ஸ்காரம் உண்டு பண்ணப்பட்ட தங்கத்துக்கு உலகத்துக் கர்மங்களில் உபயோகம் இல்லை. யஜ்ஞத்தில் அதற்கு உபயோகமில்லாவிட்டால், ஸம்ஸ்காரம் வீண்தானே. ஸம்ஸ்காரம் செய்யப்படுவதால்; யஜ்ஞத்தின் ஸம்பந்தம் அதற்கு உண்டு என்று கொள்ளவேணும் என்றால், யஜ்ஞத்திலும் அதற்கு உபயோகமில்லையே.

(3) யஜ்ஞத்தில் உபயோகம் இருப்பதாகக் கொள்ளுவோம் என்றால், இதுவும் கூடாது. யஜ்ஞத்தில் உபயோகத்தாலே ஸம்ஸ்காரத்தைப் பெறுவது, ஸம்ஸ்காரத்தைப் பெறுவதால் யஜ்ஞத்தில் உபயோகமுண்டு என்று அந்யோந்யாச்ரயம் என்னும் குற்றம் ஏற்படும்.

(4) "സുവൎണം ഹിരണ്യം ഭാൎയം" என்றால், நல்லவர்ணமுள்ள தங்கம் தரிக்கத்தகுந்தது என்று பொருள். தங்கம், தரிப்பது என்னும் வியாபாரத்தின் தர்மம். ஆகையால் ஸம்ஸ்காரத்தைப் பெறுகிறது. சொன்னகுற்றமில்லையே என்னில், கர்மம் என்பது அயலானிடம் இருக்கும் வியாபாரத்தின் பலனை அடைவது. அதனால் ஸம்ஸ்காரம் பெற்றது என்று ஏற்படாது.



(5) யஜ்ஞத்தில் தங்களுக்கு உபயோகம் இல்லாவிட்டால், அதைத் தரிப்பதற்குப்பலன் இல்லையே என்றால், பதில்-அதுக்குப்பலன் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளவேணும். அல்லது பாக்கி வாக்யத்தில் (வாக்யசேஷம்) "நல்லவர்ணமுள்ளவனாக ஆகிறான்" என்று சொல்லியிருப்பதுவே பலன். (அதி-12)

123 இந்த பாதத்தில் விசாரிக்கப்படும் மூன்றுவது விஷயம்—யஜுர் வேதத்தில் ஜயை என்று சில மந்த்ரங்கள் படிக்கப்படுகின்றன. (கா-3-ப்ர-6 அநு-4) அவைகளைப்பற்றி ஒருவாக்யம் "യേന കൎമണേൎത്സേത് തത്ര ജയാൻ ജുഹുയാത്" என்று. இதின் பொருள்—எந்த கர்மத்தாலே ஒருவன் க்ஷேமத்தை அடைய ஆசைப்படுகிறானோ, அதில் ஜயா என்கிற மந்த்ரங்களைக் கொண்டு ஹோமம் செய்ய வேண்டும்—என்று வேதத்தில் சொன்ன கர்மங்களில் போலே வயலை உழுவது முதலான உலகத்து வியாபாரங்களிலும் இந்த ஹோமங்களைச் செய்யவேண்டியதா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—உலகத்து வியாபாரத்தாலும் க்ஷேமத்தை அடைய ஆசைப்படலாம். இன்ன கர்மங்களில் தான் ஹோமங்களைச் செய்யவேண்டியது என்று சொல்லுவதற்குக் காரணமில்லை. ஆகையால் அவைகள் எல்லா கர்மங்களுக்கும் அங்கம். இந்த வாக்யம் அநாரப்ய அதீதம்.

ஸித்தாந்தம்:—'யദാഹവനീയേ ജുഹോതി' (பாரா 39) என்று ஹோமங்களுக்கு ஆஹவநீய அக்னி விதிக்கப்படுகிறது. உழவு முதலான வியாபாரங்களில் ஆஹவநீய அக்னி இல்லையே. ஆகையால் வைதிகமான கர்மங்களில் தான் அந்த ஹோமங்கள் (அதி-13)

ஆஹவநீய அக்னி வேண்டியதுதான், அதற்காக ஆஹவநீயத்தை ஏற்பாடு பண்ணிக்கொள்ளுவோம் என்றால், பதில் – உழுவது வயலில் அது முக்கியமான கர்மம். ஆஹவநீயத்தில் ஹோமம். இது அங்கம். முக்கியமான கர்மம் ஓரிடத்திலும், அதின் அங்கம் வேறு இடத்திலும் இருப்பதால் கர்மத்துக்குக் குறைவு உண்டாகும். ஆஹவநீயமுள்ள வைதிகமான கர்மங்களில் முக்கியமான கர்மமும் அங்கமும் சேர்ந்தே இருக்கின்றன. (ஸ-278)

நாலாவது பாதம் முற்றிற்று.

ஐந்தாவது பாதம்

124 இந்த பாதத்தில் சேஷகார்யம் உண்டா? இல்லையா? என்று விசாரிக்கப்படுகிறது. சேஷகார்யம் என்றால், ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸின் மீதியைச் செலவழிப்பது. அது இரண்டுவிதமாய் (1) ஸ்விஷ்ட கிருத்யாகத்தைச் செய்வது, (2) பக்ஷணம் செய்வது.

பூர்ணமாஸ இஷ்டியில் உபாம்சு யாஜம் என்கிற யாகம் செய்யப்படுகிறது, இதில் சேஷகாரியம் உண்டா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—உண்டு. த்ருவையிலிருந்து நெய்யை எடுத்துக்கொண்டு அதைச் செய்யவேண்டியது.

ஸித்தாந்தம்:—சேஷகாரியமில்லை. எந்த திரவியத்தினால் செய்ய வேண்டிய வேலை ஆய்விட்டதோ, அதுக்கன்றோ பிரதிபத்தி கர்மத்தைச் செய்யவேண்டியது. த்ருவையில் இருக்கும் நெய்க்கு உபஸ்தானம் முதலான செய்யவேண்டியவேலைகள் இருக்கின்றன. ஆகையால் அதைக் கொண்டு சேஷகாரியம் கூடாது. (அதி 1)

ஐந்தாவது பாதம் முற்றிற்று.

---

ஆறுவது பாதம்

(125) அநாரப்ய அதீதமான வாக்யங்களைப்பற்றி இந்த பாதத்தில் பெரும்பாலும் விசாரம் செய்யப்படுகிறது. "யஸ்ய பர்ணமயீ ஜுஹூர்பவதி ந ஸ பாபம் ச்லோகம் ச்ருணோதி" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. அதின் பொருள்—எந்த யஜமானனுக்கு ஜுஹூ புரசமரத்தால் செய்யப்பட்டதோ, அவன் கெட்ட வாக்யங்களைக் கேட்கிறதில்லை—என்று. ஜுஹூவானது எப்போதும் யாகத்துடன் சேர்ந்தது. அதுக்குப்புரசமரத்தால் செய்யப்படுவது என்னும் தர்மம் விதிக்கப்படுகிறது. "ஜுஹூ" என்பது புரசமரத்தால் செய்யப்பட்டது, என்று வாக்யம் சொல்லுகிறது. இந்த விதி வாக்யம் பிரகிருதியான யாகத்துக்கும் விக்ருதியான யாகங்களுக்கும், பொதுவானதா? அல்லது ப்ரகிருதி யாகத்தை மாத்திரம் சேர்ந்ததா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இரண்டிலும் ஒரேமாதிரியாய் வந்து சேருகிறது. இரண்டிலும் ஜுஹூ இருக்கிறதல்லவா;

ஸித்தாந்தம்:—இந்த வாக்யம் விக்ருதியாகங்களில் வந்து சேருவதானால், எப்போது வந்து சேருகிறது, இந்த விக்ருதி யாகத்தை இன்ன



தியாகத்தைப்போல் செய்கிறது என்று அநுமானம் பண்ணுவதற்கு முன்னாலேயா? பின்னாலேயா? முன்னாலேயென்றால், சொன்னதர்மத்துக்கு இடமான ஜுஹூவே அந்த விக்ருதியாகத்தில் இல்லையே. அநுமானத்தினால் தான் அதில் ஜுஹூவை வைத்துக்கொள்ளுகிறது என்று ஏற்படும். பின்னாலே என்றால், ஜுஹூ வரும்போதே தர்மத்தோடு வரும். மறுபடியும் விதி வேண்டியதில்லை. ஆகையால் இந்த விதி ப்ரக்ருதி யாகத்தில் மாத்திரம் வந்து சேருகிறது. (அதி - 1)

(126) 'ஸப்ததச ஸாமிதேனீரநுப்ரூயாத்' என்பது அநாரப்ய அதீதமான விதி வாக்யம். இது எதில் வந்து சேருகிறது- ப்ரக்ருதியிலா? அல்லது விக்ருதியிலா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—கீழ்ச் சொன்ன ந்யாயப்படி பதினேழு என்றும் ஸங்கியை ப்ரக்ருதியில் வந்து சேருகிறது. பிரகிருதியான தர்சபூர்ணமாஸ இஷ்டியில் ஸாமிதேனீ மந்திரங்கள் பதினைந்தாயிற்றே என்றால், ஸங்க்யை பதினைந்தாகவாவது இருக்கலாம். பதினேழாகவாவது இருக்கலாம்.

ஸித்தாந்தம்:—ப்ரக்ருதியில் ஸாமிதேனி மந்திரங்களுக்கு ஸங்க்யை பதினைந்து என்று ஏற்பட்டிருப்பதால் ஸங்க்யை விஷயமான தேட்டமில்லை. ஆகையால் விதியானது விக்ருதியில்தான் சேருகிறது. நீங்கள் மந்திரங்களின் ஸங்க்யை பதினைந்தாகவும் இருக்கலாம். பதினேழாகவும் இருக்கலாம், என்று சொன்னீர்கள், அப்படியாவதானால்; இந்த விதி வாக்யத்துக்கும் ப்ரக்ருதியில் பதினைந்து என்னும் ஸங்க்யையை விதிக்கும் வாக்யத்துக்கும் வலிமை ஸமமாயிருக்கவேண்டும். அது இல்லை. இரண்டாவது சொன்ன வாக்யத்துக்கு, ப்ரகரணத்தில் படித்திருப்பதால், அதின் வலிமையும்கூடச் சேருகிறது. கீழ் ந்யாயத்துக்கு இங்கே இடமில்லை. இன்ன ப்ரக்ருதியைப்போல் செய்கிறது என்கிற அநுமானத்தால் பதினேழு என்னும் ஸங்க்யை கிடைக்காது. ஆகையால் அதை விதிப்பது வீண் அன்று. (அதி-2)

(127) 'ஸப்ததசாநுப்ரூயாத் வைச்யஸ்ய" என்று ஸாமிதேனி விஷயமாய் இன்னொரு வாக்யம். இதற்கு இடம் ப்ரக்ருதியிலா? அல்லது விக்ருதியிலா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—அடுத்த கீழ் அதிகரணத்தின்படி விக்ருதியில் அதற்கு இடம்.

ஸித்தாந்தம்:—ஸாமிதேனீ மந்திரங்கள் பதினைந்து என்னும் விதி பொதுவானது; வைசியன் விஷயத்தில் பதினேழு என்பது விசேஷமானது. முதல்

நித்தியம். இரண்டாவது நைமித்திகம். முதல் விதிக்கு வைசியன் தவிர வேறு யஜமாநனுடைய இஷ்டிகளில் இடமுண்டு (ஸாவகாசம்). இரண்டாவது விதிக்கு இடமில்லை (நிரவகாசம்). இந்த காரணங்களாலே முதல் வாக்யம் பலமில்லாதது; இரண்டாவது விதி பலமுள்ளது. ஆகையால் இரண்டாவது விதி முதல் விதியைப் பாதித்து வைசியன் விஷயத்தில் பதினேழு என்னும் ஸங்க்யை பிரகிருதியில் சேருகிறது. அப்போது கீழ்ச் சொன்னபடி விதி விகிருதியில் சேராது. (அதி-3)

இந்த அதிகரணத்துக்கு பாஷ்யகாரர் வேறு உதாரணம் கொடுத்திருக்கிறார்.—"சமஸேநாப꞉ ப்ரணயேத், கோதோஹநேந பசுகாமஸ்ய" என்று. இதின் பொருள் —'ப்ரணீதா என்கிற ஜலத்தைச் சமஸத்தில் கொண்டுபோய் வைக்கவேண்டியது. பசு ஸம்ருத்தியை ஆசைப்படுகிறவனுக்கு மாடு கறக்கிற பாத்திரத்தில் என்று. இங்கே முதல் வாக்கியம் பொதுவானது; நித்தியம்; ஸாவகாசம். இரண்டாவது வாக்யம் விசேஷமானது; நைமித்திகம், நிரவகாசம். ஆகையால் முதல் வாக்யம் பாதிக்கப்படுகிறது. பசு காமன் விஷயத்தில் கோதோஹநம் ப்ரக்ருதியில் வந்து சேருகிறது.

(128) இதுவரையில் ப்ரகரணத்துக்கும், ச்ருதி, லிங்கம், வாக்யம் என்கிற ப்ரமாணங்களுக்கும் விரோதம் இருக்கிறதா? இல்லையா என்று விசாரிக்கப்பட்டது. இப்போது க்ரமம் என்கிற ப்ரமாணத்துக்கும் மற்றவைகளுக்கும் விரோதம் உண்டா இல்லையா என்று விசாரிக்கப்படுகிறது. இந்த பாதத்தின் முதல் அதிகரணத்தில் ஒரு விதியானது ப்ரக்ருதிக்கும் விக்ருதிக்கும் பொதுவா? இல்லையா என்று விசாரிக்கப்பட்டது: அது இங்கேயும் நடக்கிறது. (சா-303)

(129) அக்நிஷ்டோம ப்ரகரணத்தில் மூன்று பசு யாகங்கள் சொல்லப்படுகின்றன.—அக்நீஷோமீயம், ஸவநீயம், அநுபந்த்யம்-என்று. உபாகரணம் முதலான பசு ஸம்ஸ்காரங்களும் அப்படியே விதிக்கப்படுகின்றன. இவைகள் மூன்று பசு யாகங்களுக்கும் பொதுவாய் விதிக்கப்படுகின்றனவா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஆம். ஏன் என்றால், அக்நிஷ்டோம ப்ரகரணத்தில் படித்திருப்பது மூன்றுக்கும் பொதுவாயிருக்கிறது. இங்கே ஒரு கேள்வி – ப்ரகரணம் அக்நிஷ்டோம ப்ரகரணம்; அது ஸோமயாகம்; அதற்கு அன்றோ இந்த தர்மங்கள்; பசு யாகங்களுக்கு எப்படி வரும் என்று. பதில்—ஸோமத்துக்கு வேண்டியது அபிஷவம் முதலான தர்மங்கள். யூபம், நியோஜநம் இவைகள் அதற்கு வேண்டியதில்லை. அங்கிக்கு வேண்டாதது அங்கத்தில் வந்து சேரும் என்று 91-வது பாராவில் சொல்லப்பட்டது. ஆகையால்



இவைகள் பசு யாகங்களின் தர்மங்கள், ப்ரகரணத்தால் மூன்று யாகங்களிலும் சேருகின்றன.

ஸித்தாந்தம்:—இங்கே இந்த தர்மங்களை மூன்று யாகங்களுக்கும் பொது என்று சொல்லக்கூடாது. ஒரு விசேஷமிருக்கிறது. அதாவது அக்நீஷோமீய யாகத்தைச் செய்யவேண்டிய நாளில் இவைகளைச் செய்யவேண்டியது. இது அநுஷ்டாந ஸாதேச்யம் என்கிற க்ரமம் என்கிற ப்ரமாணம். அதினால் அவைகள் அந்த யாகத்துக்குத்தான் தர்மங்கள்; மற்ற இரண்டும் அதிலிருந்து அவைகளை எடுத்துக்கொள்ளவேண்டியது. அக்நீஷோமீய பசு யாகம் ப்ரகிருதி; மற்ற இரண்டும் அதின் விகிருதிகள். (அதி-7)

அக்நீஷோம பசு யாகம் ஸோம யாகத்தின் நாலாவது நாளில் செய்யப்படுகிறது, ஸவநீயபசு ஐந்தாவது நாளில் செய்யப்படுகிறது. ஸவநீயபசு ஐந்தாவது நாளில் ஆச்விநக்ரஹத்தைப்பிடித்தபிறகு. எந்த இடத்தில் அந்த யாகம் செய்வது விதிக்கப்படுகிறதோ, அது அதற்கு ப்ரகரணம். ஆகையால் ஸவநீயபசு யாகத்துக்கு இந்த ப்ரகரணமே இல்லை(சா—305).

130 மேல் மூன்று அதிகரணங்களாலே அநுஷ்டாந ஸாதேச்யம் மற்ற ப்ரமாணங்களால் பாதிக்கப்படுகிறது என்று காட்டப்படுகிறது.

1 தர்சத்துக்காக பலாசகிளையைக் கொண்டு வருவதும் கன்றுக்குட்டிகளை மாட்டைவிட்டுப் பிரித்து மேய்ச்சல் தரைக்கு அனுப்புவது முதலானவைகளும் தோஹ (பால்கறப்பதின்) தர்மங்கள். இரண்டு தோஹங்கள் இருக்கின்றன. அமாவாஸ்யையின் ராத்திரியில் தயிர் செய்வதற்காக ஒரு தோஹம், ப்ரதமை காலை வேளையில் இரண்டாவது. இந்த தர்மங்களை முதல் தோஹத்தைச் சொல்லும் இடத்தில் விதித்திருக்கிறது. இப்படி அநுஷ்டாநஸாதேச்யம் இருந்தாலும், தர்மங்கள் ப்ரகரணத்தாலே இரண்டு தோஹத்துக்கும் பொது. ப்ரகரணத்துக்குக் கீழ் அதிகரணத்தில் போல் பலக்குறைவு இல்லை. (அதி-8)

(II) அக்நிஷ்டோமத்தில் ஸோம ரஸ க்ரஹங்களுக்குச் சில தர்மங்கள் விதிக்கப்படுகின்றன—ரஸ பாத்திரங்களை அவைகளினிடங்களில் வைப்பது (ஸாதநம்) தசாபவித்ரத்தாலே அவைகளைத் துடைப்பது (ஸம்மார்கம்) முதலானவைகள். இவைகளை ப்ராதஸ்ஸவநத்தில் க்ரஹங்களைக் கிரஹிக்கும் இடத்தில் சொல்லியிருந்தபோதிலும், அவைகள் மூன்று ஸவநத்திற்கும் பொது. வாக்யம் என்கிற ப்ரமாணத்தாலே க்ரஹங்களின் தர்மங்கள்; ப்ரகரணத்தாலே அக்நிஷ்டோம தர்மங்கள். இந்த இரண்டு ப்ரமாணங்களால் அநுஷ்டாந ஸாதேச்யம் அடிபட்டுப்போகிறது. வாக்யங்களாவன –

“உபொபெ கஜெஹூூ ஸ்மா: ஸாதயெத, உஎா, வஷிதெண ம ஹமு ஸ ஶாஷி” என்று. (அதி-9)

(III) அக்னீஷோமீய பசுவைச் சொல்லுகிற இடத்தில் ரசனையின் தர்மங்கள் சொல்லப்படுகின்றன. அதை யூபத்தில் சுற்றுவது; தர்ப்பப் புல்லால் செய்யப்படுவது; முப்பிரியாயிருப்பது முதலானவைகள். இவைகள் எல்லாப் பசுக்களுக்கும் பொது. எப்படியென்றால், “த்ரிவ்ருதா யூபம் பரிவீய ஆக்னேயம் ஸவநீயம் । உபாகரோதி” என்று ஒரு வாக்யம் இருக்கிறது. அதில் முப்பிரி ஏற்றினதும், யூபத்தைச் சுற்றுவதும், இருப்பதாகச் சொல்லப்படுவது லிங்கம். மேலும், ‘த்ரிவ்ருதா’ என்பது த்ருதீயா ச்ருதி. அதினாலும் வாக்யத்தாலும் சுற்றுவது (பரிவ்யயணம்) யூபத்தின் தர்மம்; பசு தர்மம் அன்று. யூபம் மூன்று பசுவுக்கும் பொது. இது மேலே சொல்லப்போகிறது. இந்த ப்ரமாணங்களாலே அநுஷ்டாந ஸாபேக்ஷ்யம் பாதிக்கப்படுகிறது. (அதி-10)

(131) முக்கிய த்ரவ்யத்தின் தர்மங்கள் விதியாலேயே ப்ரதிநிதிக்கு வரலாமா என்று விசாரிக்கப்படுகிறது.

(II) (வ்ரீஹி) நெல் அகப்படாவிட்டால், நீவாரம் என்கிற தானியத்தை வைத்துக்கொள்ளலாம் என்று மேலே சொல்லப்போகிறது.

பூர்வபக்ஷம்:—கீழ் அதிகாணத்தில் சொன்ன நியாயத்தால் அவஹநநம் முதலான தர்மங்களைச் சொல்லும் விதிகள் வ்ரீஹியை அடைந்து, தேட்டம் போய், பின்னால் வரும் நீவாரத்துக்கு வருவதில்லை.

ஸித்தாந்தம்:—விதிகள் வரும் வ்ரீஹி என்கிற சொல் ஒருஜாதியையோ ஆகாரத்தையோ உடைய த்ரவ்யத்தைச் சொல்லுகிறது, நீவாரத்துக்கு வ்ரீஹியின் ஜாதி இல்லாமல் போனாலும், அதின் ஆகாரம் இருக்கிறது. ஆகையால் அதை வ்ரீஹி என்றே சொல்லலாம். ஆகையாலே தர்மங்கள் விதியாலேயே வரலாம். (அதி-14)

(II) ஸோமம் அகப்படாவிட்டால், பூதிகம் என்பதைப் ப்ரதிநிதியாகவைத்து கொள்ளலாம். அதற்கும் விதியாலேயே தர்மங்கள் வரலாம். (அதி-15)

ஆறுவது பாதம் முற்றிற்று

ஏழாவது பாதம்

(132) இதில் வாக்யத்துக்கும் ப்ரகரணத்துக்கும் விரோதம் இருக்கிறதா? இல்லையா என்று விசாரிக்கப்படுகிறது. (சாஸ்-316)



தர்ச பூர்ணமாஸ ப்ரகரணத்தில் ‘வேத்யாம் ஹவீம்ஷி ஆஸாதயதி’ என்று ஒரு வாக்யம் இருக்கிறது. அதின்பொருள் வேதியில் ஹவிஸ்ஸுக்களைக் கொண்டு வந்து வைக்கவேண்டியது என்று. வேதியானது ப்ரதானமான ஹவிஸ்ஸுக்களுக்கு மாத்திரம் அங்கமா; அல்லது ப்ரயாஜம் முதலான ஹவிஸ்ஸுக்களுக்கும் கூடவா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ப்ரகரணத்தாலே முக்கியமான ஹவிஸ்ஸுக்களுக்குத்தான் அங்கம். அவைகளைத்தான் அதில் வைக்கவேண்டியது. ஒரு கேள்வி—வாக்யத்தால் எல்லா ஹவிஸ்ஸுக்களுக்கும் அங்கம் அன்றோ, வாக்யம் ப்ரகரணத்தைக்காட்டிலும் ப்ரபலமாயிற்றே. பதில்—ப்ரகரணத்தைக் கவனிக்காமல் வாக்யம் அங்கத்தை விதிப்பதானால், ஸாதநம் மாத்திரம் ஏற்படும், யாகம் இல்லாமல் போகும், ஸாதநமும் போய்விடும். மேலும் ஸோமயாகத்தின் ஹவிஸ்ஸையும் தர்சபூர்ணமாஸ வேதியில் வைக்கும்படி வரும். ஆகையால் ப்ரகரணத்தையும் கவனித்து, முக்கியமான ஹவிஸ்ஸுக்களுக்கு மாத்திரம் அங்கம் என்று சொல்லவேணும்.

ஸித்தாந்தம்:—ப்ரகரணத்தையும் கவனிக்கவேண்டும் என்பது உண்மையே. ஆனால் அதைக்கொண்டு வாக்யத்தை முழுவதும் ஸங்கோசம் பண்ணுவது நியாயம் அன்று. யஜமாநன் ஆசைப்படும் பலனைக்கொடுப்பது ஒரு அபூர்வம். அதற்கு முக்கியமான ஹவிஸ்ஸு ஸாதநம்; ப்ரயாஜம் முதலான ஹவிஸ்ஸுக்களும் தங்கள் தங்கள் அபூர்வங்களை உண்டு பண்ணி அவைகளின் வழியாய் முக்யமான அபூர்வத்துக்கு உதவி செய்கின்றன. ஆகையால் அவைகளுக்கும் வேதி அங்கம், அவைகளையும் வேதியில் ஸ்தாநம் பண்ணலாம். (அதி-1)

வாக்யத்துக்கு அர்த்தம் என்ன என்றால், எந்த ஹவிஸ்ஸு தர்சபூர்ணமாஸத்துக்கு உதவி செய்கிறதோ, அதை வேதியில் வைக்கவேண்டியது. என்று. இப்படி உதவி செய்வது முக்யமான ஹவிஸ்ஸுகளும் ப்ரயாஜம் முதலான ஹவிஸ்ஸுகளும். இப்படி அர்த்தம் பண்ணாமல்போனால், பூர்வபக்ஷத்தில் சொன்ன இரண்டு தோஷங்களும் வரும். (சாஸ்-316)

(133) மேலே ஸமாக்யைக்கும், மற்றப் ப்ரமாணங்களுக்கும் விரோதம் இருக்கிறதா? இல்லையா என்று விசாரிப்பதற்காக, அதற்கு உபோத்காதமாக அக்நிஷ்டோமத்தில் பலபேர்கள் வ்யாபாரங்கள் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. (சா-321)

‘ஸ்வர்ககாமோ யஜேத’ என்கிற வாக்யம் இருக்கிறது. அதின் பொருள்—ஸ்வர்க்கத்தில் ஆசையுள்ளவன் யாகத்தைச் செய்யவேண்டியது என்று. இதை யஜமாநனே செய்யவேண்டியதா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—யஜமானனே செய்யவேண்டியது. இந்த வாக்யத்தால் ஸ்வர்க்கத்தை அநுபவிப்பவனும், யாகம் செய்கிறவனும் ஒன்று என்று ஏற்படுகிறது. வ்யாகரண சாஸ்திரகாரரும் வேலைசெய்கிறவனுக்கு வேலையின் பலன் வரவேண்டுமானால், ஆத்மநே பதம் என்கிற ப்ரத்யயத்தை உபயோகப்படுத்தவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இங்கே 'யஜேத' என்கிற சொல்லில் அந்த ப்ரத்யயம்தான் இருக்கின்றது.

ஸித்தாந்தம்:—யஜமான் எல்லா வேலையையும் செய்யாமல் போனாலும், ஒருவனைத் தனக்காக வேலை செய்யும்படி பண்ணுவதால் எல்லாவற்றையும் அவனே செய்ததாக ஆகும். எல்லா வ்யாபாரங்களையும் அவனே செய்வதானால், ருத்விக்குக்கு தக்ஷிணை கொடுத்து தனக்காக வேலை செய்யச் சொல்லுவது வீணாகும். ஆகையால் யஜமானன், யாகங்களைச் செய்யும் போது, த்ரவியங்களைத் தேவதைகளுக்குக் கொடுப்பதாகச் சொல்லவேண்டியது மாத்திரம். மற்றவைகளை ருத்விக்குகள் செய்யவேண்டியது. நேராகவோ, அல்லது மற்றவர்கள் வழியாகவோ, யஜமானன் எல்லா விஷயங்களையும் செய்வதால், அவன் பலனை அநுபவிப்பதில் விரோதமில்லை. (அதி-8)

ஏழாவது பாதம் முற்றிற்று.

---

# ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்,

(ஸ்ரீ உப. வித்வான் ஜயா க்ருஷ்ண தாதாசார்யர்.)

(ஸஞ்சிகை 10, 657-ம் பக்கம் தொடர்ச்சி)

இவரிடத்தில் ஸாமந்ய சாஸ்த்ரங்களை அதிகரித்து ப்ரஸித்த பண்டிதாளாக விருப்பார் பலருண்டு. அப்படியே விசிஷ்டாத்வைதிகளிலே தானே ஏகதேசிகளாக விருப்பார் பலருண்டு. ஸமான ஸம்ப்ரதாயஸ்தரிலும் பலருண்டு. த்வைதிகளில், எலத்தூர் மத்வாசாரியார், பெருமாள்கோவில் வேகவதித்தெரு ராமசந்த்ராசார்ய வித்யாசார்யர், ஸ்ரீரங்கம் பீமாசாரியார், கண்ணபிரானடி வெங்கட ரமணாசார்யர், சென்னை கிரிதராசார்யர் முதலானோர். இவர்கள் ந்யாம்ருதம் வாதமாலாமிச்ரியம், ஸுதை முதலான தங்கள் ஸித்தாந்த வாத க்ரந்தங்களையும் வாசித்தார்கள். இவர்களில் மத்வாசார்யர் திருப்பதியில் தர்க்க சாஸ்த்ர ப்ரவசநம் செய்து வந்தார். ராமசந்த்ராசார்யர் தேவாதி ராஜன் ஸந்நிதியில் தானே, சடகோப நிலயம் பாடசாலையில் தர்க்க பாட ப்ரவசநம் செய்து வந்தார். பீமாசார்யரும் ஸ்ரீரங்கத்தில் தர்க்க பாட ப்ரவசநம் செய்து வந்தார். வெங்கட ரமணாசார்யர், திருப்பதி பெருமாள் கோவில் முதலான பல விடங்களில் வ்யாகரண பாட ப்ரவசநம் செய்துவந்தார். கிரிதராசார்யர், திருவல்லிக்கேணியிலும், மைலாப்பூரிலும், திருப்பதியிலுமாக தர்க்க சாஸ்த்ர ப்ரவசநம் செய்து வந்தார். வித்யா



சார்யர் பெருமாள் கோவில் ஸந்நிதி வீதியில் வாநமாமலை மடத்தில், மண்டயத்தாரால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலையில் நாடகாலங்காரங்களையும், தர்க்க சாஸ்த்ரத்தையும் ப்ரவசநம் செய்துவந்தார். அத்வைதிகளில், தும்பவநம் தர்மவாத்யார், ஸுப்ரமண்ய சாஸ்த்ரிகள், வெங்கடராம சாஸ்த்ரிகள், கழுக்குன்றம் ஸோமயாஜி ராமா சாஸ்த்ரிகள் முதலானோர். இவர்கள் அத்வைதஸித்தி, ப்ரஹ்மாநந்தீயம், கண்டநம், முதலான அத்வைத க்ரந்தங்களும் வாசித்தார்கள். அந்தந்த க்ரந்தங்கள் சொல்லும்போது "தத்தத்க்ரந்தக்ருத த்வைத காஷ்டாமாதிஷ்டத............" என்று ச்ரோதாக்களாயிருந்த பண்டிதாள் ச்லாகிப்பார்கள். நம் ஸித்தாந்தைகதேசிகளிலும், பரவஸ்து வெங்கிடாசாரியர், கப்பாமூர் திருவேங்கடராமாநுஜாசார்யர், பெருமாள் கோவில் குண்டலம் நரஸிஹ்மாசார்யர், தேரூர் வரதாசார்யர், குடாலி ரங்காசார்யர், முதலானோர். இவர்களில், பரவஸ்து வெங்கிடாசார்யர், சடகோபநிலயம் பாடசாலையில் ப்ரதாந வாத்யாராக விருந்தார்.

ஸ்ரீ ஸ்வாமியின் இருபத்தி இரண்டாவது திருநக்ஷத்திரத்தில், ஸ்ரீ பேருளாளன் ஸந்நிதியில் ஸ்ரீ தார்ய நிர்வாஹகராயிருந்து, இவருக்கும் ஸவம்ச்யராயிருந்த, ராஜ துர்கம்-ஸுதர்சந தாதா சார்யரென்பவர், மைஸூர்-ராஜ வல்லபராயிருந்து, ராஜ ஸ்தானத்துக்குப் போயிருக்கையில், அங்கே நவத்வீபம் - அநுகமபட்டாசார் என்று பிருது பெற்ற ப்ரஸித்த வித்வானிடத்திலே ப்ராசீந ஸரணியை விட்டு நவீநஸரணியில் விலக்ஷண லக்ஷண பரிஷ்காரங்களுடனே ந்யாய சாஸ்த்ரத்தில் 'தீதிதி' என்கிற க்ரந்தத்துக்கு வ்யாக்யாநமாயிருக்கிற கதாதரீயமென்கிற க்ரந்தத்திலே ஹேத்வாபாஸ லக்ஷணங்களை வாசித்து அதிலே அதி நிபுணராய், தாமும் பரிஷ்கார ஸாமர்த்யம் பெற்று, அவ்விடத்திலே ஆஸ்தாந பண்டிதராய் தர்க்க சாஸ்த்ர ப்ரவசநம் செய்து வந்த ராம சாஸ்த்ரி என்கிறவர் நேர் பட்டு வார்த்தா ப்ரஸ்தாவத்திலே தற்காலம் காஞ்சீபுரத்திலே பண்டிதாளாராவது உண்டோ? அவர் நம்மோடு வாக்யார்த்தம் சொல்ல வல்லவரோ? என்று கேழ்க, அந்த ஸுதர்சந தாதாசார்யரும், எங்கள் குலத்திலே ஒருவருண்டு, என்று இவர் பெருமையை யெடுத்துச் சொல்லி, ஆகிலும் உங்கள் நவீந ஸரணியில் அவருக்கு ப்ரவேசம் எப்படியோ? என்று சொல்ல, ராமாசாஸ்த்ரிகளும், 'எனக்கும் கேழ்க்கை யுண்டு. ஆகையால் எப்போது அவரோடு வாக்யார்த்தம் சொல்ல வரலாமென்ன; ஸ்ரீ ஸுதர்சநாசார்யரும் ஸௌகர்யமுள்ள போது வரலாமென்று சொல்ல, அந்த சாஸ்த்ரிகளும் தம்மிடத்திலே தானே தர்க்க சாஸ்த்ரமதிகரித்து அதிநிபுணராய் பாட ப்ரவசநம் செய்து வந்த தம்மை யாசார்யர் பிள்ளைகளிருவரையும் பார்த்து "நான் உங்களுக்கு முன்னமே சொல்லிவைத்திருந்த 'சதகோடி' என்கிற தன்னுடைய க்ரந்தத்தை ஸம்யக் புத்திஸ்தமாக்கிக் கொண்டு காஞ்சீபுரம் போய் அந்த வித்வானை ஜயித்து வாருங்கோள்" என்று அனுப்ப, அவர்களும் உபாத்யார் சொன்னபடியே அந்த க்ரந்தத்தை வாசோவிதேய மாக்கிக்கொண்டு வந்தார்கள். சதகோடியாவது ஸத்ப்ரதிபக்ஷமென்கிற கதாதரீய க்ரந்தத்திலே கதாதரன் நிஷ்கர்ஷித்த லக்ஷணத்தின்மேலே அநுகம பரிஷ்காரத்தோடு நூறுகோடி ஸ்வபுத்தி பரிகல்பிதமாய் புத்திமத்ஸம்பாவ்யமான விசாரம்.

இந்த இரண்டு வித்வான்களும் பெருமாள் கோவிலில் வந்து, ஸ்ரீ ஸுதர்சந தாதார்யர் திருமாளிகையிலே தனே அவராலே ஸத்க்ருதராய் வர்த்தித்து அன்று ஸ்ரீ

ஸ்வாமியை வாக்யார்த்தத்துக்கு ப்ரதீக்ஷித்திருந்தார்கள். அப்போது ஸ்ரீ ஸ்வாமிக்கு
ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்த பரம்பராசார்யராகவிருந்த ஸ்ரீநிவாஸமஹா தேசிகன் வேகவதி
நதியின் கரையிலே ஆச்ரமத்திலே எழுந்தளியிருந்து, ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்த
காலம். ஸ்ரீ ஸ்வாமி, மஹா கர்மடராய் பரமைகாந்தி ஸார்வ பௌமராயிருந்து அபிக
மநாந்த க்ரியைகளை திருமாளிகையிலேதானே அநுஷ்டித்து அநந்தரம் ஆசார்ய பரதந்
த்ரராய் ஆச்ரமத்திலேயிருந்து தம்மாசார்யர் ஸந்நிதியிலே அத்யாத்ம க்ரந்த பரி
சீலநம் பண்ணும் போது இப்படி பண்டிதாள் வந்திருக்கும் வ்ருத்தாந்தத்தை ஸுதர்
சந தாதாசார்யர் ஸ்ரீஸ்வாமிக்கு அறிவிக்க, ஸ்ரீஸ்வாமியும் நித்யம் போலே தம்மாசார்
யன் ஸ்ரீபாததீர்த்தம் ப்ரஸாதித்த ஊற்றிலே மாத்யாஹ்நிகஸ்நாநம் செய்தருளி மாத்யா
ஹ்நிக ஸந்த்யாந்த கர்மங்களையும் அநுஷ்டித்து பகவதாராதநத்துக்குத் திருமாளிகைக்
கெழுந்தருளும்போது வேகவதீ வீதி மார்க்கமே யெழுந்தருளி ஸ்ரீஸுதர்சந தாதா
சார்யர் திருமாளிகை வாசலிலே எழுந்தருள அவரும் எதிரேவந்து மைஸூர் வித்வாங்
களைக்காட்டி "இவர்கள் தர்க்க வித்வாங்கள், உம்மோடு வாதம் செய்யவேண்டும் என்றே
வந்திருக்கிறார்கள்" என்று விஜ்ஞாபிக்க, ஸ்ரீஸ்வாமியும், "அதற்கென்ன; ஆகிறது,
பெருமாள் திருவாராதந ஸமாப்தி பண்ணி ஸ்வாத்யாயஜபமும் செய்து இவ்விடத்
துக்கு அடியேனே வருகிறேன்" என்று விண்ணப்பித்து விடைகொண்டு திருமாளி
கையிலே யதாவத்தாக ஸ்வாத்யாய ஜபாந்தம் செய்தருளி அஸ்தமநத்துக்கு யாமகாலம்
முன்னே தாமே அவ்விடத்துக்கு எழுந்தருள, மைஸூர் பண்டிதாளும் ஸ்வாமியுமாக
பட்ட பாட்ட விஷயமான யோக க்ஷேமங்கள் கொஞ்சகாலம் செய்து கொண்டிருந்து அந
ந்தரம் வாதோபக்ரமம் பண்ண உத்யோகித்து கோவிலுக்குள் நூற்றுக்கால் மண்டபத்
தில் எல்லாரும் போயிருந்து கதோபக்ரம ப்ரஸ்தாவத்திலே எங்களுக்கு இத்தேசத்திலே
அதிக பரிசயமில்லையாகையாலே ஸ்மார்த்தராக ஒரு மத்யஸ்தரை நீங்களே நியமிக்க
வேணுமென்று ஸுதர்சநதாதாசார்யரோடு அந்த வித்வாங்கள் சொல்ல இவரும் ஸ்ரீ
ஸ்வாமியை கடாக்ஷிக்க, "வாதி ப்ரதிவாதிகள் அப்ராமாணிகாளானாலன்றோ மத்யஸ்தா
பேக்ஷை; ப்ராமாணிகருக்கு வேண்டாம்; வேண்டுமென்று நிர்பந்தமுண்டாகில் இவர்
களிருவரிலொருவர் மத்யஸ்தராயும் மற்றொருவர் பூர்வபக்ஷியாகலாமே; இதுவே அடி
யேனுக்கு ஸம்மதமென் றருளிச்செய்ய, இதை எல்லாரும் ஏகமுகமாக அங்கீகரிக்க
வாதம் ப்ரவ்ருத்தமாய், ஸத்ப்ரதிபக்ஷ லக்ஷணத்தை கதாதரன் சொன்னபடியிலே
யதாச்ருதமாக உபபாதித்து அதிலே விஷயசோதநங்கள் நடந்த பின்பு அவர்களில் ச்ரேஷ்
டராக இருக்குமவர் அந்த லக்ஷணத்தை நவீநரீதியிலே அநுகம ப்ரக்ரியையாலே
ஜல்ப விதண்டாதிகளில்லாதே நிக்ரஹஸ்தாநங்களொன்றுக்கும் அவகாசம் கொடாதே
ரொம்ப அழகாக உபபாதிக்க ஸப்யாளாயிருந்த பண்டிதர்களெல்லாரும் "இதென்ன
பாஷாந்தரம் போலே இருக்கிறதே" யென்று திகைத்து நிற்க, ஸ்ரீ ஸ்வாமியும், கொஞ்
சம் மந்தஹாஸத்துடனே யிருந்து இதொரு விலக்ஷண ப்ரக்ரியையாய் மூலாரிமார்க்கமா
யிருந்தது; மணிகார ப்ரப்ருதிகளின் அநுகமரீதியைக் காட்டிலும், விலக்ஷணமாயிருக்
கிறது; என்று கொண்டு புத்திஸ்தமாம்படி புநச்ச உபந்யாஸம் பண்ணும்படி கேட்க,
அவருமப்படியே உபந்யஸிக்க, ஜ்யேஷ்டரும் புநச்ச மத்யஸ்தவத் அநுவாதம் பண்ண
ஸ்ரீஸ்வாமியும் அவருபந்யஸித்த சப்தாநுபூர்வியை ஹ்ருதயத்திலே தரித்துக்கொண்டு,
மேலே பூர்வபக்ஷம் பண்ணலாமென்ன, அவரும் அந்த சதகோடி க்ரந்தோக்தமாயிருக்க
ப்ரதம கக்ஷியை அநூநாதிரிக்தமாக உபந்யஸித்தார். ஜ்யேஷ்டரும் அநுவாதம்



செய்தார். அந்த சப்தாநுபூர்வியை சிலாக்ஷரம் போலவே ஹ்ருதயத்திலே தேக்கிக்
கொண்டார். அவ்வளவிலே ஸந்த்யாகாலம் ப்ராப்தமாயிற்று. நாளையதினம் ஸமாதாநம்
சொல்லுவதாக ஸ்ரீ ஸ்வாமி அருளிச்செய்ய, ஸதஸ்ஸும் கலைந்தது. ஸ்ரீ ஸ்வாமியும்
தன் திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

அப்போது ஸதஸ்ஸிலுள்ள வித்வான்களுள், பாக்கம்-அய்யாஸாமி அய்யங்கார்
மூசரம்பாக்கம் பாஷ்யமாசார் முதலானோர், ஸ்ரீ ஸ்வாமி திருமாளிகைக்கு எழுந்தருளி
'ஈதென்ன' வாசித்தத் தர்க்கமாக இல்லையே! இதென்ன சாஸ்த்ரம்; விஷயத்தைத்
திருவுள்ளத்தில் கொண்டதோ? அடியோங்களுக்கும் சொல்லவேணுமென்ன, "தத்
காலம் அடியேன் ஆநுபூர்வீக்ரஹணம் பண்ணியிருக்கிறேன், அடியேனறிந்த படியை
நாளை ஸதஸ்ஸில் தெரிவிக்கிறேன். க்ஷமிக்கவேணும், எழுந்தருளவேணு" மென்று
விடைகொடுத்து, அநுஷ்டானங்களை யோகஸங்கல்ப, ஸ்ரீ வைகுண்டகத்யாநுஸந்தாநாந்த
மாகவநுஷ்டித்து, பள்ளிகொள்ளும் க்ரமத்திலே, பள்ளிகொண்டு விஷயத்தை தந்தேக
சித்தராய், திருக்கண்வளராமலே நெடும்போது சிந்தை செய்து, அதின் ரஹஸ்யத்தை
யறிந்து, அந்த வழியாலேதானே அதற்கு ஸமாதாநத்தையும் நிர்ணயித்து, நவீநரீதி
யிலே பரிஷ்காரம் செய்து திருவுள்ளத்திலே தேக்கிக்கொண்டு மறுநாள் ப்ராப்த காலங்
களிலே தத்தத்கர்மாநுஷ்டாநங்களை நித்யம் போலேதானே ஸ்வாத்யாயஜபாந்தமாக
செய்தருளி நூற்றுக்கால் மண்டபத்தில் தானே ஸதஸ்ஸுக் கெழுந்தருளி, வித்வத்
ஸதஸ்ஸிலே பூர்வபக்ஷியின் முன்பே ததுபந்யஸ்தத்தை அநுவதிக்க, அதிலே தானே
பூர்வபக்ஷியானவர் பஹு சாதுர்யத்துடன் விஷய சோதநம் பண்ண, அதற்கெல்லாம்,
ஸமாதாநம் சொல்லி அவருமுபந்யஸித்த பூர்வபக்ஷத்தை ஸ்திரப்படுத்தி அதற்கு ஸமா
தாந கக்ஷியையும் அருளிச்செய்ய இந்த ஸமாதாநம் சதகோடியில் உக்தமாக விருக்கிறது
கொண்டு ஸ்ரீ ஸ்வாமியின் புத்தி சாதுர்யத்தைப் பேருகந்து அந்த ஸமாதாநத்திலும்
விஷயசோதநம் பண்ண அதற்கு ஸமாதாநம் அருளிச்செய்து ஸ்திரப்ரதிஷ்டிதமாக்க,
அவரும் அநுபதமேவ மேல் கக்ஷியை உபந்யஸிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் விஷயசோதந பூர்
வகமாக ஹ்ருத்கதமாக்கிக் கொண்டு ப்ரதி ஸமாதாநம் யோசிக்கும் போது ஸந்த்யா
காலம் ப்ராப்தமாக, மறுதிநம் ஸமாதாநம் சொல்லுவதாக அருளிச்செய்ய ஸதஸ்ஸும்
கலைந்தது.

ஸ்ரீ ஸ்வாமியும் முதல்நாள் போலவே யோக காலத்திலே திருப்பள்ளியிலே யோ
சித்து உபர்யுபரி த்வித்ரி-கக்ஷ்யா நிர்ணயம் செய்து அவ்வளவிலும் த்ருப்தி பிறவாதே
இவர்களால் அப்ரதிஹதமாம்படி கக்ஷ்யா நிர்ணயம் பண்ண வேணுமென்று திருவுள்ள
கொண்டு சிறிது போது யோஜித்து அபேத்யமாக ஒரு கக்ஷ்யா நிர்ணயம் பண்ணி ஹ்ருத்
கதமாக்கிக்கொண்டு மறுநாளிலும் நித்யம்போலே அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு
நூற்றுக்கால் மண்டபத்துக் கெழுந்தருள, அவ்வளவிலே வித்வாங்களெல்லாரும் வந்து
கதோபக்ரமம் பண்ண, பூர்வதிநம்போலே தானே விஷயாநுவாதம் செய்து ஸமாதாநம்
அருளிச்செய்ய அவர்களுமிதைக் கேட்டு சாஸ்த்ரிகள் தங்களுக்குச் சொல்லி வைத்த
விஷயமாயே யிருந்ததென்று கொண்டாடி மேல் கக்ஷியைச் சொல்ல, இப்படி வித்வதா
நந்த ஜநகமாய் கொஞ்சகாலம் வாதம் நடக்க, ஸ்ரீ ஸ்வாமியும் தாம் பூர்வராத்ரியில் நிர்
ணயித்து வைத்திருந்த கோடியை யருளிச்செய்ய, அவர்களு மிதைக்கேட்டுத் திகைத்து
இதுதென்ன ப்ரதிபாசாதுர்ய மிருந்தபடி? நாங்களின்னம் பஞ்ச சத்வாரிம்சத் கோடி

வைத்துக்கொண்டிருக்கிறோமே; இவைகளுக்கு அவகாசமில்லாமல் போயிற்றே! எங்க சாஸ்த்ரிகள் பஞ்சாசத் கக்ஷியாகவன்றோ இதை எங்களுக்குக் கல்பித்து வைத்தது. க்ரந்தத்திலெழுதியதும் அப்படியே, "இதென்ன ப்ரதிபை! எங்களிடத்திலேதானே வாசா உபந்யாஸ மாத்ரத்தாலே தானே க்ரந்தகார ஸரணியை நன்றாக வஹித்து எங்களை ஜயித்தது ரெம்ப ஆச்சர்யம்! நாங்கள் சுகவத் சாஸ்த்ரிகள் சொல்லி வைத்ததைச் சொல்லுமவர்கள். இவர் ப்ரத்யுத்பந்ந மதியாய் ஸ்வபுத்தி ஸாமர்த்யத்தாலே தானே சாஸ்த்ரஜ்ஞ ஹ்ருதயங்கமமாக ஸமாதாநம் சென்னதற்கு 'ஜிதம்' என்றே நமஸ்காரம் செய்கிறோம்" என்று இருவருமேகமுகமாக அந்த ஸதஸ்ஸிலே தானே ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ண உபக்ரமிக்க ஸ்ரீ ஸ்வாமியும் 'அது ஆகாது' என்று நிஷேதித்து "நீங்கள் நான் சொன்னதை ஜல்பித-விதண்டைகளாலே நிராகரிக்க உத்யோகிப்பதன்றிக்கே அங்கீகரித்ததே ப்ரத்யுபகாரம்" என்று அவர்களையும் ச்லாகித்தார். ஸதஸ்ஸும் முடிந்தது.

பிறகு அந்த மைஸூர் வித்வாங்கள் சதகோடி க்ரந்தத்தை ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் ஸமர்ப்பித்து தாங்கள் ஸ்வதேசம் போய் சாஸ்த்ரிகளோடே நடந்த வ்ருத்தாந்தங்களைச் சொல்ல, சாஸ்த்ரிகளும் பேரப்ரியப் பட்டு தாம் நேரிலேதானே ஸ்ரீ ஸ்வாமியோடு வாதம் பண்ண வேணுமென்று மநோரதித்து இருந்தார்.

அநுமாநத்திலே பக்ஷஸாத்யஹேதுக்களை தூஷிக்கும்போது தத்தத் ஸ்தாநங்களிலே விலக்ஷணீய விசேஷணங்களை ப்ரகாரவிதயா நிவேசம் பண்ணி தோஷவாரணம் பண்ணுவது ஒரு ப்ரகாரம். இது தான் ப்ராசீநபத்ததி. க்வசித் ஸம்ஸர்க விதயாவும் விசேஷண நிவேசம் பண்ணி வாரணம் பண்ணுவது முண்டு. விலக்ஷணீயங்களான ஸர்வ விசேஷணங்களையும் ஸம்ஸர்க விதயாகவேகொண்டு விசேஷ்யாம்சத்தை சுருக்கிக் காட்டுவது நவீநரீதி. இதைத்தான் அநுகமமென்கிறது. இந்த நவீநரீதியாலே தான் சதகோடிக்ரந்தம் சாஸ்த்ரிகள் செய்து வைத்தது. பாடப்ரவசநம் செய்து வந்ததும் ஸர்வக்ரந்தங்களிலும் அநுகமரீதியாகவே. இம்மாதிரி பாடப்ரவசநம் இத்தேசத்தில் இப்போதில்லை. ப்ராயச: ப்ரகாரவிதயாகவே விசேஷண நிவேசம் பண்ணுவர்கள் க்வசித். அதாகிறது. அப்ரஸித்த பக்ஷ ஸாத்யஹேதுகாநுமாநங்களில் விசேணங்களை ஸம்பந்த விதயா நிவேசித்து பரிஷ்காரம் பண்ணுவார்கள். இது இத்தேசத்தில் பூர்வ வ்ருத்தம். ப்ரகாரவிதயா நிவேசிப்பதைக்காட்டிலும், விசேஷணங்களை ஸம்ஸர்க விதயா நிவேசிப்பதற்குப் பலம், ப்ராயச: புத்தி ஸாமர்த்ய ப்ரகடநமேயொழிய வேறில்லை. ஸர்வத்ர அநநுகம தோஷம் அநுகமத்தாலே போமென்று கொண்டிருப்பார்கள்.

(தொடரும்).

ஸ்ரீ:

# வரதராஜ பஞ்சாசத்

(ஸ்ரீ. உப. A. V. கோபாலாசாரியர்., M. A. B. L. அட்வோகேட். திருச்சி)

𑌦𑍍𑌵𑌿𑌰𑌦𑌶𑌿𑌖𑌰𑌿𑌸𑍀𑌮𑍍𑌨𑌃 𑌸𑌦𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 𑌪𑌦𑍍𑌮𑌯𑍋𑌨𑍇𑌃
𑌤𑍁𑌰𑌗𑌸𑌵𑌨𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑍋 𑌹𑌵𑍍𑌯𑌵𑌾𑌹𑌃 ।
𑌕𑌲𑌶𑌜𑌲𑌧𑌿𑌕𑌨𑍍𑌯𑌾𑌵𑌲𑍍𑌲𑌰𑍀𑌕𑌲𑍍𑌪𑌶𑌾𑌖𑍀
𑌕𑌲𑌯𑌤𑍁 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌨𑌃 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑌾𑌶𑌿𑌃 ।

𑌦𑍍𑌵𑌿𑌰𑌦𑌶𑌿𑌖𑌰𑌿𑌸𑍀𑌮𑍍𑌨𑌃 𑌸𑌦𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 — ஈச்வரன் ஜகந்நிவாஸனென்றும், ஸர்வ ஜகந்நிவாஸனென்றும் வாஸுதேவனென்றும், ஒவ்வொரு வஸ்துவையும் தனக்கு வாஸஸ்தாநமாக வுடையவனென்றும், ப்ரஸித்தம். இருள்தரும் ப்ரக்ருதிக்குப் பரமும், ஜ்யோதிர்மயமும், ஜ்ஞாநாநந்தமயமுமான, த்ரிபாத் விபூதியும் அவனுடைய திவ்யஸ்தாநமென்பதும் ப்ரஸித்தம். விஸ்தீர்ணமான பாற்கடலும் அவனது வாஸக்ருஹமாகும். மூன்றாவது பாதத்தில் பாற்கடல் அவனுக்கு ச்வசுர க்ருஹமென்று ஸூசிக்கப்படுகிறது. இப்படி ஸர்வோத்தமமான வாஸ ஸ்தாநங்களிருந்தும், விச்வம் முழுவதும் அவன் வீடாயிருந்தும், அத்திகிரி உச்சிப்ராந்தம் என்று மிடமிருப்பதாலேயே தான் வீடுடையானாக அவன் நினைப்பு. மற்ற சிறந்த வீடுகளால் அவன் வீடுடையானாக நினைப்பதில்லை. தாந்யத்தால் தநவாந் என்பதுபோல் கரிசிகரத்தாலேயே தான் வீடுள்ளபவனாக அபிமாநம். மதுப்பினால் ப்ராசஸ்த்யத்தையும் நித்ய யோகத்தையும் கொள்ளலாம். பரமபதத்தை விட்டு ஒருக்காலகன்றாலும் இந்தக் கோயிலை விட்டு எக்காலும் அகலமாட்டான். இவரெழுந்தருளியிருப்பதால் ஸம்ஸாரமே பரமபதமாயிற்று. பரமபதமே இங்கே வந்துவிட்டது. ச்ருதப்ரகாசிகை இவர் க்ருபையாலவதரித்தது. அந்த க்ரந்தத்தின் மங்கள ச்லோகத்தை யநுஸரித்து இந்த முதல் ச்லோகமமைந்துளது.

"𑌵𑌰𑌦𑌂 𑌦𑍍𑌵𑌿𑌰𑌦𑌾𑌦𑍍𑌰𑍀𑌶𑌂 ஸ்ரீ𑌨𑌿𑌧𑌿𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑌿𑌮𑍍"

என்பதை இந்த ச்லோகம் ஒட்டியிருப்பது ஸ்பஷ்டம். ச்ருத ப்ரகாசிகை இவர் கடாக்ஷித்ததால் ப்ரவஹித்த தென்கிற விஷயம் ஸூசிக்கப்படுகிறது. அந்தப் பேருதவிக்காக க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் காட்டப்படுகிறது. அங்குள்ள 'த்விரத' சப்தத்தைக்கொண்டே இங்கேயும் உபக்ரமம். 'ஸ்ரீநிதிம்' என்பது மூன்றாம் பாதத்தில் அநுஸரிக்கப்பட்டது. 'கருணாநிதிம்' என்பதை யநுஸரித்து 'காருண்ய ராசி:' என்று கடைசியில் அமைக்கப்பட்டது. ஸர்வார்த்த ஸித்தியென்னும் க்ரந்தம் இவர் கடாக்ஷம் சுரந்ததென்றும் இங்கேயநுஸந்தாநம். தத்வமுக்தாகலாபத்தின் முதல் ச்லோகத்தை

யொத்து ரசனை செய்யப்பட்டது. இந்த ஸ்தோத்ரத்தின் கடைபாகத்தி லுள்ள—

“வ்யாதந்வாநா தருணதுலஸீதாமபிஃ”

என்கிற ச்லோகம் தத்வ முக்தா கலாபாரம்ப ச்லோகத்தின் கடைசி பாதத்தில் ‘கலயது’ என்கிறது போலிங்கேயும் கடைசி அடியில் வைக்கப்பட்டது. இந்த ஸ்தோத்ரத்தில் உபக்ரமத்திலு முபஸம்ஹாரத்திலும், அந்த ச்லோகத்தை யநுஸரிப்பதால், ஸர்வார்த்தஸித்தி வரதனால் லப்தமாயிற்றென்று ஸூசித்து, அதற்காக தம்முடைய க்ருதஜ்ஞதையைக் காட்டுகிறார். வரதனிடமிருந்து ஸர்வார்த்தஸித்தி கிடைப்பது ந்யாயந்தானென்று கருத்து. ஆழ்வாருக்குத் திருமாலிருஞ்சோலை மலையில் வ்யாமோஹம் போல் ஸ்ரீ தேசிகனுக்குக் கரிகிரியில் வ்யாமோஹம். கரிகிரியில் கௌரவ புத்தியால் ‘த்விரதசிகரி’ என்று தொடக்கத்திலும், “கரிகிரிவிடங்கஸ்தாயிநஃ” என்று முடிவிலும் அநுஸந்தாநம் செய்கிறார்.

“அத்திகிரி பத்தர்வினை தொத்தறவறுக்கும்” வநகிரிகளில் வஸித்தலால் அர்த்திகள் தன்னைத்தேடிச்செல்ல வேண்டிய ச்ரமத்தை நிவர்த்திக்கக் கோரி, கருணை காஷ்டையினால் பூமிக்கு பூஷணமான காஞ்சீ பட்டணத்தின் மத்தியில் ஓர் சிறு மலையின்மேல் வந்து நின்றான். வேண்டும் வரன்களை யளிக்கவும், ப்ரணதர்களினார்த்தியைப் பூரணம் செய்யவும், பட்டணத்திற்கு வரும் ஜநங்களெல்லாம் வரதனை தன்னை ஸேவித்துக்கொள்ளவும், தானும்

“யஸ்யாம் நித்யம் நிஹிதநயநோ ஹஸ்திசைலாயிவாஸீ”

என்கிறபடி இடைவிடாமல் பட்டணத்தையும் அங்குள்ளவரையும் கடாக்ஷிக்கவும், ஸௌகர்யமாக ஓர் சிறு மலைமேல் நின்றான். கஜேந்த்ராழ்வானிடம் மிக்க வ்யாமோஹமுடையவன். அவன் திருநாமத்தையுடைய கிரியில் நிரதிசயமான ப்ரீதிவைத்தான். இந்த மலையினெல்லையை தன்னுடைய அபரிமிதமான வீட்டினெல்லையாகக் கொண்டான். மலை குனிய நின்ற மலையென இவர் அத்திமலைமேல், பச்சமாமலையாவார். ஆனையின் மேலானையுமாவார். ஸத்ம சப்தத்தில் மாக காவ்யத்தின் முதல் ச்லோகத்தின் ஸ்மாரணம். ஜகந்நிவாஸன் வஸுதேவ ஸத்மத்தில் வஸித்தது போல். முதலடியிலானையையும், இரண்டாவது அடியில் குதிரையையும், சொல்லுவதால், “யானை பரிதேரின்மேலழகர் வரதர்” என்பது போல் தேவராஜனுடைய ராஜ விபூதிகளான கஜ துரகாதிகளை ஸூசிக்கிறது.

வஹ்நேர்யோ தேவஸாமவஹநவேத்யாம் ஹ்யாதேஷா ஹவ்யவாஹஃ ...
உத்க்ருஷ்டமான புருஷார்த்தங்களை யெல்லா மளிக்கவும் ஆர்த்தியைப்



போக்கவும் சத்ருக்களைக் கொல்லவும் இவரவதரித்தவரல்லர். அசேஷமான க்ஷிதிகலுஷத்தைப் போக்கவிவராவிர்பவித்தவர். ‘நிஜஸுதமகமத்யே’ என்கிற ச்லோகத்தில் ஸாதித்தபடி, தன் புத்ரனான ப்ரஹ்மா செய்த அச்வமேதத்திலவதரித்தவர். தன்னுடையச் சொந்த புத்ரன் செய்த யாகமென்பதைக் காட்ட பத்மத்தில் பிறந்தவரென்று ப்ரஹ்மாவை நிர்தேசித்தார். தன்னுடைய நாபீகமலத்தில் பிறந்தவருடைய அச்வமேதம். பிதாவாகிய தசரதருடைய அச்வமேதத்தில் பாயஸமாக ப்ரவர்த்தித்தவர் சக்ரவர்த்தித்திருமகன். இவர் புத்ரனுடைய யாகத்திலவரித்தவர். புத்ரனிடத்திலதிகமாக ப்ரீதியிருப்பது ஸஹஜம். யஜ்ஞவாடத்தில் ஸீதையவதரித்தது போலிவர் யாகவேதியிலவதரித்தவர். உத்பத்தி பரிபூதர். எப்படி கிரியை ஆதியிலும் முடிவிலும் நிர்தேசிக்கிறாரோ அப்படியே அவதாரத்திற்கு உபஜீவ்யமும் நிமித்தமுமான அச்வத்தை முதல் ச்லோகத்திலும் கடைசியில் ‘துரகவிஹகராஜ’ என்றும் நிர்தேசிக்கிறார். உபஜீவ்யமான அச்வத்திற்கு ப்ராபல்யத்தை உத்தேசித்து வரதனுக்கு கந்தவாஹநனென்றும் ஜகத் ப்ரஸித்தமான பெரியதிருவடிக்கும் முன்பு குதிரை நம்பிரானை அங்கே நிர்த்தேசித்தது போலும்.

யஜ்ஞமே விஷ்ணுவென்று வேதம் கூறுகிறது. வைதிகர்களான பரமைகாந்திகளால் அநந்ய ப்ரயோஜநமாக லோகோத்தரமான வேதகோஷ ச்ரவண பாக்யம் பெற்ற இந்த வைதிகப் பெருமாள் யஜ்ஞவேதியிலாவிர்பவித்தது ந்யாய்யம். நான்கு முகங்களால் நான்குவேதங்களையும் இடைவிடாமல் கோஷம் செய்யும் ப்ரஹ்மாவின் யாகவேதியிலிவர் உதித்தது உசிதம். இவரைக் குளிர்ச்சியின் மூர்த்தியாக இந்த ச்லோகத்தின் பின்பாதியில் நிரூபணம் செய்யப்படுகிறது. அப்படியே இந்த மூர்த்தி மழை பொழியும் முகில் வண்ணனான வரதனை சீதளராகக் காட்டவேண்டியிருக்க, ‘ஹவ்யவாஹஃ’ என்று நெருப்பாகக்காட்டுவது பொருந்துமோ வென்றால், உள்ளதையுள்ளபடி ஸ்துதியில் வஸ்து வ்ருத்தத்தை யநுஸரித்து, இவரை ஹவ்யவாஹராகவே சொல்லவேண்டியிருப்பதுமன்றி இவரை அப்படி நிரூபணம் செய்வது தான் உசிதமாகும். வரதனென்பவர் ஸர்வோத்க்ருஷ்டமான மோக்ஷத்தையல்லவோ அளிக்கவேணும். ‘வரம்’ என்பது எல்லாவற்றிலும் சிறந்ததைச் சொல்லும். மோக்ஷமே உத்க்ருஷ்ட புருஷார்த்தம். ஆத்மா என்னும் ஹவிஸ்ஸை நேராக இவர் வாங்கிக்கொண்டாலல்லவோ மோக்ஷமளிக்க வேணும். மற்ற ஹவிஸ்ஸுக்களைப்போல் பௌதிகமான அக்நிமூலமாக அந்த ஹவிஸ்ஸை வாங்கக்கூடாது. அந்த ஹவிஸ்ஸை வாங்குவதற்குத் தானே நேரில் வேதியில் ஹவ்யவாஹனாகவேணும். வஸுரண்ய மந்த்ரத்தைக் கொண்டு ஆத்ம ஹவிஸ்ஸை ஹோமம் செய்வதனால் அச்சுதன் அக்நியாவார் என்று வ்யாஸ ஸ்ம்ருதி. நீலமேகச்யாமளனும் வ்யாபகனுமான

விஷ்ணு அக்நியாகும்போது வ்யாபக தத்வத்தின் ச்யாமள வர்ணமும் மேகம்போன்ற சீதளகுணமு மக்நிதலக்நியையும் அதன் ஸ்வபாவத்தையும் வ்யாபித்து அக்நிதர்மங்களை மாற்றித் தன் தர்மங்களால் வ்யாபித்துவிட்டது. அக்நி குளிர்ச்சி உடையதென்று அநுமாநம் செய்தால் அநுமாநிக்கப்படுமென்பர் தார்க்கிகர். அக்நி ரோஹிதமான் (சிவந்த) ரூபமுடையவர்; இந்த ஹவ்யவாஹர், எல்லாத் தர்க்கத்திற்கும் அதீதமானவர். ஸ்ரீபாகவதத்தில் பகவானை ஸ்தோத்ரம் செய்யும்போது, 'ஸத்யவ்ரதம்' என்று ஆரம்பித்துத் துதிக்கிறார்கள். யாதவாப்யுதயத்தில் அந்த ப்ரகரணத்தில்:—

"த்ரிவேதீமத்யதீப்தாய த்ரயாத்ரே ஸம்ப்ரஹேதவே ।
ஸாக்ஷாய நந்தஸஹ்யம் ஸாஹஸ்ராம்சுஹவிர்புஜே ॥"

என்று தேவர்கள் ஸ்தோத்ரம் செய்வதாக வைக்கப்பட்டிருக்கிறது. 'தேவர்கள் துதிக்கும் பெருமாள் அங்கே வரதன்' என்று ஸ்வாமி அநுஸந்திக்கிறார். ஸ்ரீ பாகவதத்தில் 'ஸத்யவ்ரதம்' என்று தேவர்கள் துதிக்க ஆரம்பித்தது. ஸத்யவ்ரத க்ஷேத்ரப் பெருமாளாகிய வரதனை ஸ்வாமிக்கு ஜ்ஞாபகப்படுத்துகிறது போலும். பாஹ்யமான ஹவிஸ்ஸையும், ஆந்தரமான ஆத்மா என்னும் ஹவிஸ்ஸையும் புஜிக்கு மக்நியாக அங்கே ஸாதிக்கப்பட்டதை இங்கேயும் கொள்ளவேணும். வேதிமத்யத்திலுதித்து ஜ்வலிக்கும் இந்தப்பெருமாள் த்ரிவேதீ என்கிற மூன்று வேதங்களின் மத்தியிலும் ஜ்வலிக்கும் காரணப்பொருளென்றும் கருத்து. அப்படியே இங்கே மேலே நிரூபணம். ந்யாஸமென்றும் ஸத்ரயாகத்தில் அடைக்கலமாக ஸமர்ப்பிக்கப்படும் ஆத்மஹவிஸ்ஸுக்களை நேராக வாங்கிக்கொள்ளுவதற்கே யவதரித்த ஹவிர்புக் காவாரிவர்.

அடைக்கலப்பத்தும் ந்யாஸ தசகமும் இவர் விஷயம். 'ஹவ்யவாஹ' என்கிற சப்தத்தினால் இந்த ஆத்ம ஹவிஸ்ஸுக்களை வாங்கிக்கொண்டு தாமே பரமபதத்திற்கு ப்ராபணம் செய்ய அவதரித்தவரிவர் என்று த்வநி.

கல்பத்ருமஸ்த்வயிதயா வ்ருதயோர் ஸமாவீ — ஹவ்யவாஹரென்பதால் ஆத்மஹவிஸ்ஸுக்கள் இவரிடம் ஸமர்ப்பிக்கப்படுகின்றனவென்று ஸூசிக்கப்பட்டது. இந்த ஆத்ம ஹவிஸ்ஸமர்ப்பணத்திலுமுத்தேச்யத்வம், இவருக்கு மட்டுமோ என்று சங்கை உதிக்கவே, கற்பகவ்ருக்ஷமாகிய விவரை கற்பகக்கொடியால் அணைத்து ஆச்ரமத்திலிருக்கும் தேவியு மிவருமாகச் சேர்ந்த மிதுநமே உத்தேச்யம் என்று ஸூசிக்கிறார். ஸ்ரீ வடக்குத்திருவீதிப் பிள்ளையும், ஈட்டி லப்படியே யருளிச் செய்துளராதலால் இதுவிஷயத்தில் ஸம்ப்ரதாயபேதம் சொல்லக்கூடியதில்லையென்று சொல்லலாம். ஏகாயநரென்று மத்வமதஸ்தர்களை நிர்தேசித்திருப்பதால் நாமெல்லாரும் மிதுநாயநரென்ற



திருவுள்ளம் ஸ்பஷ்டமாகிறது. 'ஸ்யாமம் தைவதம் ஸமவது நஃ' என்று ஸ்ரீஸ்துதியில் மிதுநத்துக்கு உத்தேச்யத்வம் அறுதியிடப்பட்டது. 'ஸ்ரீவெஷ்ணீ தவ ஹ்ருதே' என்று சீத தடாகத்தில் அவகாஹிப்பது போல தாபத்ரயாதுரர்கள் இவருக்குள் அநுப்ரவேசித்து இவரநுபவத்தில் முழுகவேணும்: இவர் அக்நியாக ஆவிர்பவிப்பது அதற்கு விரோதமல்லவா? என்று சங்கை வர, இவர் பரிசுத்தியதிசயத்தைக் காட்டவும் ஆத்ம ஹவிஸ்ஸை ஸாக்ஷாத்தாய் வாங்கிக்கொள்ளவும் அக்நிவேஷத்தைப் பூண்டாரேயொழிய, இவர் சுடுகிற அக்நியல்ல. இவர் பச்சைமரமாகிய வாஸுதேவ வ்ருக்ஷம்; குளிர்ந்த நிழலைக்கொடுத்து ஸுகப்படுத்தும் ஹரிசந்தந வ்ருக்ஷம்; ஒரு பெண் கற்பகக்கொடி இந்த அக்நியை யணைந்து சுற்றிக்கொண்டு களித்தால் இவருக்குச் சூடுண்டோ வென்கிற சங்கை பறந்து போகுமென்று தாத்பர்யம்.

ஸம்ஸ்க்ருத பாஷையும் தேவவ்ருக்ஷத்தை ஹரிசந்தநமென்று பெயரிட்டது. தரையிலும் மலையிலும் உண்டானதல்ல. பாற்கடலிலுதித்து வளர்ந்த கொடி. அந்தக்கொடி ஆச்ரயித்து மகிழும் கல்பகவிருக்ஷம் சுடுமென்று நாம் ஏன் பயப்படவேணும்? அக்நியாக ஆவிர்பவித்தவர் சுடாமல் ச்யாமளமாக விருப்பது எப்படிக்கூடும்? 'ஸீதோ பவ ஹநூமதஃ' என்று தஹந சீலமான அக்நியையும் ஹிமம் போல சீதமாகப் பரிணமிக்கும்படி எந்தப்பிராட்டி செய்கிறாள்? என்று ஆகாங்க்ஷை உண்டாகவே பாற்கடலில் ஆவிர்பவித்த பெருந்தேவியை நிர்தேசிக்கிறார். முன் பாதத்தில் சொன்ன ச்யாமளத்வத்தை கல்பகவ்ருக்ஷம் என்பதால் உபபாதநம் செய்கிறார். இவர் தோன்றிய யஜ்ஞ வேதி மலைமேலிருப்பதால், இவர் மலையின் மேலுள்ள வ்ருக்ஷமாகவும் கற்பகக்கொடியாகவும் ரூபணம் செய்வது உசிதம். புதிதாய் மரத்தை ஆச்ரயிக்கும் நவ வதுவான கொடி. "வ்ருக்ஷேண ஸம்ச்ரிதவதீ நவமாலிகேயம்" என்பதையும், 'தருதலே ஜாதஸம்ஹதே' என்பதையும் நினைக்கவேணும். நித்யம் நவவதுவான கொடி. நவமாலிகை யென்கிற பெயரால் நவவதுவென்று கல்பகக்கொடி யணையும்போது சாகைகளான திருக்கைகளைத் தாமும் வ்யாபரித்து அணைவதை ஸூசிக்கிறது. 'க்ருதே ச ப்ரதிகர்த்தவ்யம்' என்கிற ந்யாயம் நாயக நாயகிகளுக்குள் அவச்யோபாதேயமென்று வாத்ஸ்யாயந ஸூத்ரங்களில் ப்ரஸித்தம். கற்பக வ்ருக்ஷமாக அநுபவம் உபக்ரமோபஸம்ஹாரங்களில் கூறப்பட்டிருப்பதால், ஸ்தோத்ரம் முழுவதும் அவிச்சின்னமாக அநுபவம் ஸூசிக்கப்படுகிறது. 'கொடி இரண்டொடு' என்று அருளப்பட்டது. 'கந்யா' என்பதால் நவவதுவென்பது ஸூசிக்கிறது.

கௌரவீ காருண்யாம்பிஃ—முதலில் அக்நியென்றார். பிறகு பாற்கடலிலுதித்த கற்பகக் கொடி யணைந்த கற்பகவ்ருக்ஷமென்றார். வ்ருக்ஷமென்றாலும் சில பாகங்களில் குளிர்ச்சியில்லாமல் உஷ்ணமாக விருக்கக்கூடும்.

காருண்யரஸத்தின் ஸாகரமென்கிறாரிங்கே. இங்கே 'கோபி' என்று புமானாக நிர்தேசித்தார். அதிலும் த்ருப்தியில்லாமல் முடிவில், "காஸி ஸாக்ஷாந் ஜநநீ தேவதா" என்று தாயாகவே ரூபணம் செய்கிறார். உஷ்ணிமையை அடியோடு அகற்றி கேவலம் கருணாரூபிணியான தாயாகவே இவராவிர்ப்பவித்தவர். 'த்வம் ஸ்த்ரீ, த்வம் புமாநஸி' என்று ச்ருதி சொல்லுகிறது. இங்கே முதலில் புமானென்றும் அருளாளரின் பேரருளை யநுஸரித்துப்பெண்ணென்றும் கூறினார். பாடக்ரமத்தைவிட அர்த்தக்ரமத்திற்கு பலமதிகம்.

கோऽஸி—மூன்று பாதங்களாலிவரை வர்ணிக்க முயன்றதே ஸாஹஸம். 'இவர் யாரோ' என்று இவரைச் சொல்வதுதான் உசிதம்.

கல்பத்ரு கல்பதாம் ந:—நாம் நம்முடைய குசலத்தை ஸ்வப்நத்திலும் எண்ணமலும் நமக்கு அஹிதத்தையுமே எண்ணுகிறோம், அஹிதத்தையே செய்கிறோம். பரமகல்யாண புத்தியையுடைய யிவர், நம்மீது அநுகம்பையால், தம் சுபமான மநஸ்ஸினால் நம்முடைய குசலத்தை ஸங்கல்பித்து நமக்கு க்ஷேமத்தைச் செய்யட்டும். ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்தில் பட்டர்—"தயையென்பது பிறர் வ்யஸநத்தை ஹரிப்பதாகும். ஸம்ஸார துக்கம் எனக்கு ஸுகமாக இருக்கிறது, என் ஸுகத்தைத் தொலைப்பது தயையாகாது. எனக்கு ஸுகமான ஸம்ஸாரத்தை நீங்கச்செய்யும்உம்முடைய தயையை நானபேக்ஷிக்கவில்லை. இப்படி நான் உம்முடைய தயவைத் தள்ளினாலும் நீர் என்னை உபேக்ஷிக்கக்கூடாது. துக்கத்தையே ஸுகமென ப்ரமிக்கும் அத்தனை மதிகேடனாயிவன் என்று என்னிடம் அநுகம்பை பட்டு நானபேக்ஷிக்காமலிருந்தாலும் வேண்டாமென்று தள்ளினாலும் நீராக வென்னிடம் தயவுசெய்ய வேணும்" என்றார். அதுபோலிங்கும் நாம் நமது அஹிதத்தைத் தேடினாலும் இவர் நம் க்ஷேமத்தை நினைக்கட்டும், செய்யட்டும், என்று கருத்து. க்லுபிவஸ் ஸாமர்த்யே' என்று வையாகரணர் சொல்லுவர். 'க்ருபாவீ கல்பத்ரு' என்று இங்கே சேர்த்துச் சொல்வதினால் அந்தவசநமும் இங்கே ஸ்மாரிதம். கோரின பொருள்களை எல்லாம் வழங்கும் காமதேநுவாகிய 'க்லுபி' தாதுவை இந்தக் கல்பக வ்ருக்ஷத்தின் விஷயத்தில் ஆரம்பித்தது மிகவும் அழகு. "கருணைக்கடலை எவ்வெண்ணம் பேசுவீரீதென்ன வாங்கே" என்று புலவர்களைப் பார்த்துச் சொல்லும் க்ரமத்தில் இங்கு பாடுகிறார். 'கோபி' என்பதற்கு எவ்வண்ணம் பேசுவது என்பது பொருள். தாமெனினும் தமக்குமென்பார் 'அன்பில்லாவருளாழி ப்பெருமானிவர், யாருமோர் நிலைமையென வறி வறிய வெம்பெருமான்'. 'காருண்ய ராசி:' என்றுக் கருணைக்கடலாக நிரூபணம் செய்ததால் பாற்கடலின் பெண்ணுக்கு இவ்வருள் கடலநுரூபமான வரனாகும். கோதையென்னும் தேவஜாதியான கற்பகக் கொடி ஸ்ரீரங்கராஜனென்னும் தேவ வ்ருக்ஷமாகிய ஹரிசந்தந வ்ருக்ஷத்தை [illegible]மணம் புரிந்தது போலும்.

ஸ்ரீ:

# ஸ்ரீ நம்மாழ்வார் ஸ்துதி.

(1) பாண்டவர்கட் காயன்று பாரதம் கைசெய்து
    பகலவனை மறைக்க விலையோ
பக்தனா மம்பரீ டிற்காக யாழியைப்
    பார்தனில் செலுத்த விலையோ
தாண்டவங்க ளாடிநீ வெண்ணெயுண் டாய்ச்சியர்
    தம்மைமகிழ் விக்க விலையோ
தாம்பா லசோதைமுன் கட்டநீ கட்டுண்டு
    தண்ணருளைக் காட்ட விலையோ
மாண்டவை திசுன்தனது பிள்ளைகளை உடலோடும்
    மனமகிழக் கொடுக்க விலையோ
மார்க்கண்டன் தனைஉயக் கொள்ளவே யானுக்கும்
    மற்றுமருள் செய்ய விலையோ
காண்டற் கருமைய ய் உனைத்தொழும் பக்தனைக்
    காக்கவடி யேனை யரிதோ
கார்மருவு சோலைசூழ் குருகைவரு ஞானமுத்திரைக்
    கைய னேமகிழ் மாறனே.

(2) முடையடர் சிரமேந்தித் திரிந்த அரன் ஹத்திசெல
    முன்குருதி பெய்ய விலையோ
முன்னாளில் பத்தியுடைக் கூனிதனக் கருள்செய்து
    முதுகதனை நிமிர்த்த விலையோ
அடையவரு மென்றடைந்த விபீஷணர்க் கருள்செய்து
    அன்றுமுடி சூட்ட விலையோ
அன்புடன் உனையடைந்த முனிதம் பொருட்டாக
    அசுரர்குழாம் துணிக்க விலையோ
சடையுடையான் முடிமீதுன் அடிதனிலே அர்ச்சித்த
    தன்பூவைக் காட்ட விலையோ
தத்துவநூல் போதித்தும் சாரத்தியம் செய்து மன்பன்
    தனஞ்சயனைக் காக்க விலையோ
கடைந்துகடல் தன்னையன்று வானவருக் கமுதளித்தாய்
    காத்தலடி யேனை யரிதோ
கார்மருவு சோலைசூழ் குருகைவரு ஞானமுத்திரைக்
    கைய னேமகிழ் மாறனே.

(3) மானமரு மென்னோக்கி நப்பின்னை தன்பொருட்டா
    வல்விடையே ழசர்க்க விலையோ
மாலேயென் றோலமிட மதகரிக்கு அருள்செய்து
    வன்முதலை துணிக்க விலையோ
தானமதை ஏற்றுமே மூவுலகை மாவலிபால்
    தானளந்து கொள்ள விலையோ
திரௌபதிக் காபத்தில் திருநாமத் தால்புடவை
    தான்சுரக்க வருள விலையோ

தேனமரும் பூம்பொழில் சூழ்ந்த தென்னிலங்கை ராவணனைத்
தேவர்க்காய்ச் சிதைக்க வில்லையோ
சடாயுவாம் பக்ஷிக்குத் தண்ணருள் செய்துநீ
தான்கிரியை செய்ய வில்லையோ
கானமுறத் தாளத்தி லிசைக்கமுனிக் கருள்செய்தாய்
காத்தலடி யேனை யரிதோ
கார்மருவு சோலைசூழ் குருகைவரு சங்குசக்ரக்
கைய னேமகிழ் மாறனே.

திருக்குருகூர் அ. தே. ராமாநுஜய்யங்கார்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

(1)

## ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை.

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையின் ஆதரவில் 1935-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில்:—

(1) திருவுள்ளூரில்:—ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ வீரராகவப்பெருமாள் ஸந்நிதி ஏஜெண்டு ஸ்ரீ-உ-வே-வீரராகவாசார்யர் ஸ்வாமி அக்ராஸநத்தின் கீழும்,

(2) வில்லிவாக்கத்தில் :—எஞ்சினீர். ஸ்ரீ. உ-வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமி அக்ராஸநத்தின்கீழும், ஸபையின் உப அக்ராஸநாதிபதி ஸ்ரீரங்கம்-ஸ்ரீ-உ-வே-பரவஸ்து-ஸ்ரீநிவாஸாசார்யார் ஸ்வாமியால் ஷை ஸபையினுடைய ஆவச்யகதையைப் பற்றின உபந்யாஸங்கள் செய்யப்பட்டன.

ஷை ஸபையின் நிர்வாஹகர்களின் விபரம்:—

| | | | |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ. உ-வே. | ஏ. வி. கோபாலாசார்யர், | அக்ராஸநாதிபதி. |
| 2 | ,, | திவான் பகதூர். S. ராகவய்யங்கார், | உப அக்ராஸநாதிபதி. |
| 3 | ,, | ராவ் ஸாஹிப். ஆர். நாராயணய்யங்கார், | ,, |
| 4 | ,, | மஹாமஹோபாத்யாய பண்டிதராஜ-ஆர். வி. க்ருஷ்ணமாசார்யர் | |
| 5 | ,, | வித்வான் பரவஸ்து. ஸ்ரீநிவாஸாசாரியார், (மதுராஸ் கிளை) | |
| 6 | ,, | கோபாலய்யங்கார், | ,, |
| 7 | ,, | வி. ரங்கஸ்வாமி ஐயங்கார் | ,, |
| 8 | ,, | ரங்கநாதாசார்யஸ்வாமி | ,, |
| 9 | ,, | வி. ராஜகோபால சர்மா | ,, |
| 10 | ,, | எஸ். க்ருஷ்ணமாசார்யார், | காரியதர்சி. |
| 11 | ,, | எஸ். டி. ஸ்ரீநிவாஸாசார்யார், | உப காரியதர்சி. |
| 12 | ,, | அம்பில் எஸ். ஸௌம்ய நாராயணய்யங்கார். | ,, |
| 13 | ,, | வி. ராஜகோபால சர்மா, | பொக்கிஷதார். |



| | | | |
|---|---|---|---|
| 14 | ,, | அஹோபில மட ஸ்ரீகார்யம். வெங்கடராமாசார்யர், | நிர்வாஹ கமிட்டி அங்கத்தினர் |
| 15 | ,, | மூரச்சாம்பட்டு சேஷாசார்யர், | ,, |
| 16 | ,, | ஸோளஸிங்க ஜோடிதார் திருமலை ஸ்ரீநிவாஸ தாதாசார்யர் | ,, |
| 17 | ,, | எம். எஸ். க்ருஷ்ணமாசார்யார், | ,, |
| 18 | ,, | நாதமுநி ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், | ,, |
| 19 | ,, | எஸ். ஸ்ரீநிவாஸ பட்டர், | ,, |
| 20 | ,, | அவதாரம் திருமலை தாதாசார்யார் | ,, |
| 21 | ,, | மஹாமஹோபாத்யாய பண்டிதராஜ ஆர். வி. க்ருஷ்ணமாசார்யர், | ஸபையின் க்ரந்த பரிசோதகர் |
| 22 | ,, | மஹாமஹோபாத்யாய ஸ்ரீநிவாஸாசார்யர் | ,, |
| 23 | ,, | புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர் | ,, |
| 24 | ,, | வித்வான் ராமதேசிகாசார்யார் | ,, |
| 25 | ,, | திருவரங்கம் திருமலை தாதாசார்யர் | ,, |

அம்பில் ஸௌம்ய நாராயணாசாரியார்,
உப காரியதர்சி.

(2)

## ஸ்ரீ ஸத்வித்யா பாடசாலை ஸைதாப்பேட்டை.

மேற்கூறிய பாடசாலையின் ஏழாவது வார்ஷிக மஹோத்ஸவம் சென்ற ஞாயிற்றுக் கிழமை (31-3-35) மாலை 4 மணிக்கு ஸைதாப்பேட்டை பிராமணத் தெரு ஸ்ரீ ஸௌந்தரேசுவர ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீமான் ராவ் டி. கே. ஹநுமந்த ராவ் அவர்கள் (B. A., L. T., M. E. S.) தலைமையின் கீழ் நடைபெற்றது. அச்சமயம் ஸ்ரீமான்கள் திவான் பகதூர் ராமஸ்வாமி சாஸ்திரிகள், ராவ் ஸாஹிப் என். செங்கல் ராவ், நாராயணஸ்வாமி அய்யர் முதலிய பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர்.

முதன் முதலில், அக்கிராஸனர் அவர்கள், பாடசாலாதிகாரிகளால் பூர்ண கும்பத்துடன் பாடசாலை மண்டபத்திற்கு வரவேற்கப்பட்டனர். பின்னர், பாடசாலை பிரின்ஸிபால் ஸ்ரீமான் ஆர். வரதாச்சாரியார் (B.A., L.T.,) அக்கிராஸனருக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஸ்வாகதம் (வரவேற்பு) கூறி அன்னாரை வரவேற்றார்.

பின்பு, அக்கிராஸனர், மாணவர்களின் கல்வி திறமையையும் சிரத்தையையும் நேரிற் கண்டு முடிவுவரையில் தமது அபிப்பிராயத்தைக் கூறுவதாகச் சொல்லித் தமது முன்னுரையை முடித்தார். பின்னர் டீச்சர்ஸ் காலேஜ், தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கே. ஸுந்தரராசாசார்யர், பாடசாலையின் நடவடிக்கைகளையும் சென்ற வருஷத்து அறிக்கையையும் படித்தார். அதன்பிறகு நிகழ்ச்சி முறையின்படி மாணவச் சிறுவர்களும் முதியோரும் உபநிஷத் முதலிய வேதபாகங்களையும் தமிழ்ப் பிரபந்தங்களையும் ஸ்தோத்ர பாடங்கள் முதலியவற்றையும் யாவர்க்கும் இனிமை பயக்கும்படி ஓதினர். தவிர மாணவச் சிறுவர்கள் ஸம்ஸ்க்ருதத்தில் "காளிதாசன் குரு" எனும் நாடகப் பகுதியையும், தமிழில் 'ஆஸ்திக சிகாமணிகளின் ஒற்றுமை' என்னும்

ஹாஸ்யரஸம் பொருந்திய நாடகத்தையும் வெகு அழகாக நடித்தார்கள். அவைகளைக் கண்டு அனைவரும் ஆனந்தித்தார்கள். பிறகு அக்ராஸனர், மாணவர் யாவர்க்கும் அன்புடன் பரிசுகள் வழங்கினர். அம்மாணவச் சிறுவர்களுள், நல்ல சப்த உச்சாரணத்துடனும், இனிய சங்கீதத்துடனும் அழகிய அபிநயங்களுடனும் மேற்படி நாடகங்களை நடித்த K. பார்த்தஸாரதி என்றவனுக்கு அக்ராஸனர் மனமுவந்து, இவான் பகதூர் கே. ராமஸ்வாமி சாஸ்திரிகளைக் கொண்டு ஒரு சிறப்புப் பரிசு வழங்கினர். அச் சமயம் ஸ்ரீமான் சாஸ்திரிகள், ஒருவனது குலம் ஸத் புத்ரனாலேயே விளங்கவேண்டுமென்றும், பிள்ளைகட்குப் பால்யத்திலே வைதிக சிரத்தை ஊட்டவேண்டுவது பெற்றோர் கடமையென்றும், அவ்வாறு வைதிக சிரத்தை ஊட்டப்பட்டு வளர்ந்த பிள்ளைகளால் குல விருத்தி உண்டாவதும் தவிர, தேச க்ஷேமமும் ஏற்படுமென்றும் இத்தகைய பிள்ளைகள் இல்லாமல் ஸ்வராஜ்யம் ஏற்பட்டாலும் அதனால் தேசத்துக்கு யாதொரு அநுகூலமும் உண்டாகமாட்டாதென்றும் கூறி, இவ் விஷயங்கள் மனத்திற் பதியும்படி தர்மராஜருடைய ஓர் உபாக்யானத்தையும் கூறி முடித்தார்.

பிறகு அக்ராஸனர் முடிவுரையாகப்பின் வருமாறு கூறினர். அதாவது—“நம்மவர்கள் எல்லோரும் மேல்நாட்டு நாகரீகங்களைக் கொண்டு நம் பெரியோர்களால் க்ரமாக வந்திருக்கும் நன்னடவடிக்கைகளை கைவிட்டு விடுகிறார்களென்றும், குருமுதலான பெரியோர்களிடத்தில் இருக்கவேண்டிய மரியாதைகளை எல்லாம் நழுவவிடுகிறார்களென்றும் மேல் நாட்டார் நம் வேதம், கீதை முதலானதுகளைக்கொண்டு அவைகளுக்குத் தாங்களே மொழிபெயர்த்து அச்சிட்டு அதன் சுவையை அநுபவிக்கிற அப்பேர்ப்பட்ட சுவையை நாம் அநுபவிக்காமல் விட்டு விடுகிறோம் என்றும், அப்படியன்றி இனிமேல் நன்றாக நம் வைதிக விஷயங்களை விளக்கக்கூடிய நம் சாஸ்த்ரங்களை படிக்கவேண்டி இந்த மாதிரி பாடசாலைகளை பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கிறது, இனிமேல் மேன்மேலும் நம் தேசக்ஷேமமும் தர்மாபிவ்ருத்தியும் உண்டாகும் என்பதை ஸூசிப்பிக்கிறது” என்று கருத்துக்கொண்ட சொற்பொழிவை அழகாக நடத்தினர்.

நிற்க, இந்த பாடசாலைக்கென்று தனிக் கட்டிடம் ஒன்று இல்லாமலிருப்பது ஒரு பெருங்குறைதான். தனிக்கட்டிடம் ஒன்று இருக்குமாகில் வாசகசாலை புத்தகசாலை இவைகளை விருத்தி செய்து, அவைகளின் மூலமாகப் பிள்ளைகட்கு அறிவுப் பெருக்கைச்செய்து கொள்வதற்கு அநுகூலம் உண்டாகும். ஆயினும் தன்முயற்சியுடையோர்க்குத் தெய்வம் துணை புரியும் என்றபடி இவ்வநுகூலங்களைத் தேடிக்கொள்ளும் விஷயத்தில் பாடசாலை அதிகாரிகள், மற்றவர்களின் பொருளுதவியை மாத்திரம் நின்றுவிடாமல் தாங்கள் ஈட்டிய பொருளிலும் இதர வரும்படியிலும் பத்தில் ஒரு பகுதியையேனும் கட்டிடநிதிக்காகப் பிரத்தியேகமாய்ச் சேர்த்துக்கொண்டு வருதல் நலம். பாடசாலைகளின் நடவடிக்கைகளைப்பற்றிப் பிரசாரம் செய்து கட்டிடத்துக்கு வேண்டிய பொருளுதவியைச் சம்பாதித்து தருவதில் நானும் என்னால் இயன்றவரையில் பாடுபடச்சித்தமாயிருக்கிறேன்” என்று கூறித் தமது உபந்யாஸத்தை முடித்தார்.

அக்ராஸனர். பின்னர், மாலை சூட்டப்பெற்றுச் சந்தன தாம்பூலங்களுடன் மாலை 7 மணிக்கு ஸபை கலைந்தது. அன்றிரவு 8 மணிக்குப் பாடசாலை மாணவர்க்கும் அன்கத்தினருக்கும் பிறர்க்கும் பலவித சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.



## (3)

## ஹிந்து மடங்களின் நிலைமை.

• தற்காலம் ஹிந்துக்களின் மடங்களின் சீர்திருத்த விஷயமாக சென்னை சட்டஸபையில் கொண்டுவரப்பட்டிருக்கும், மசோதாவை யாவரும் அறிந்திருக்கலாம். இது நிறைவேறிவிட்டால் ஹிந்து மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும் ஸம்பவிக்கக்கூடிய துர்தசை இவ்வளவுதான் என்று சொல்ல முடியாது. ஆனால் இந்த விஷயமானது கேவலம் மதஸம்பந்தமானதாகையால், இவ் விஷயத்தில் ராஜாங்கத்தார் தலையிடுவது ஏற்கனவே அவர்கள் செய்திருக்கும் ப்ரதிஜ்ஞைக்கு விருத்தமானதால் அவர்கள் இதில் ப்ரவர்த்திக்க மாட்டார்கள் என்று நமது ஹிந்து மடங்களும், மடத்தின் சிஷ்யர்களும் கவலையற்றுத் தூங்குகிறார்கள்போலும்!

• சாரதா விவாஹ சட்டம் முக்யமான மத விஷயமாக விருந்தும், மதங்களுக்கு விபரீதமாக தீர்மானிக்கப்பட்டு அமுலுக்கும் வந்துவிட்டதால் அதில் ஆஸ்திக ஜனங்கள் படும் கஷ்டங்களைப் பார்த்திருந்தும் நமது ஜனங்கள் ஸாவதானமாக மதுபவிப்பதைப் பார்த்து நாம் ஆச்சர்யப்படுகிறோம்.

இப்படிப் பெரும்பாலும் ஹிந்து ஜனங்கள் உறங்கும் ஸமயத்திலும் ஸ்ரீ அஹோபில மடத்தின் சிஷ்யர்களான புத்தங்கோட்டகம். ஸ்ரீ உப. வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி முதலிய சிலர்களுடைய ப்ரயத்னத்தினால் கொஞ்சம் நாளைக்குமுன் கோயமுத்தூர் டௌனிலும், போத்தனூர், மேட்டுப்பாளையம், சிங்கனல்லூர், முதலிய இடங்களிலும் பற்பல ப்ரபுக்கள் பல மீடிங்குகள் கூடி “இந்த மசோதா மதவிருத்தமானதாகையினால், சட்ட ஸபையில் நிறைவேற்றக் கூடாதென்று கனம். வைஸ்ராய், கனம். கவர்னர், முதலியவர்களுக்குத் தந்திகளும் லெட்டர்களும் அனுப்பியிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

இதுபோலவே மற்றை இந்த மடத்தின் சிஷ்யர்களும் இந்த ஸமயத்தில் விசேஷ ப்ரயத்னப்படவேண்டியது அவச்யமான கார்யமல்லவோ!

தி. ஸ்ரீ. நாராயணன்.

## (4)

## ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை சேலம்.

இவ்வூரில் 7-4-35 மாலை 6 மணிக்கு ஸ்ரீ வைஷ்ணவர்கள் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் “ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை” ஒன்று சேலத்தில் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. பப்ளிக் ப்ராஸிக்யூடர். மாடபூசி. விஜயராகவாசார்யர், அக்ராஸநாதிபதியாகவும், ஸ்ரீ. உப. கிடாம்பி. நரஸிம்ம ராகவஸ்வாமி வைஸ் ப்ரஸிடெண்டாகவும், வி. என். செல்லமய்யங்கார், சேட்லூர். க்ருஷ்ணமாசார்யர், இவர்கள் கார்யதர்சியாகவும், ஸ்ரீ. உப. கிடாம்பி. ராமாநுஜாசார்யர் ஸ்வாமி ஸபை பண்டிதராகவும் நியமிக்கப் பட்டார்கள். ஸபைக்கு மெம்பர்கள் சேர்ந்துகொண்டு வருகிறார்கள்.

C. D. கிருஷ்ணமாசாரியர்

ஸெக்ரெட்ரி.

[இந்த ஸபையோர்களின் ப்ரவ்ருத்திகளை ஆக்ஷேபித்தும் இச் சபை அதிகாரிகளால் அப்பொழுதக்கப்பொழுது வெளியிடப்பட்டு வரும் அறிக்கைகளை மறுத் பலர் நமக்குக் கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள். அவைகளை ப்ரசுரம் செய்வதா நமக்குள் வைமநஸ்யம் ஏற்படுமென்று நமக்குத் தோன்றுகிறபடியால், அவைகளை நா ப்ரசுரம் செய்யவில்லை. ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகர்.]

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: |

[illegible]

[illegible] |

[illegible]

[illegible] ||

# ஸம்பாதகரின் குறிப்புக்கள்.

**ஹிந்து மடங்கள் மசோதாவும் ஸ்ரீஅஹோபில மட ஸம்ப்ரதாயமும்.**

சென்ற மார்ச்சுமீ 26உ வெளிவந்த ‘ஸ்வதேசமித்ரன்’ பத்ரிகையில், ஸ்ரீ. உப. ஆர். கிருஷ்ணமாசார்யர் என்னும் ஒரு ஆஸ்திகர், ‘ஹிந்து மடங்கள் மசோதாவும் ஸ்ரீ அஹோபில மட ஸம்ப்ரதாயமும்’ என்னும் விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்து ஒரு லேகம் எழுதியிருந்ததை நமது ஸஹ்ருதயர்கள் பார்த்திருக்கலாம். அந்த லேகத்தையே தனியாகவும் அச்சுப் பதிப்பித்து, அப்படிப் பதிப்பிக்கப்பட்ட ஸஞ்சிகைகளை சென்ற ஏப்ரல் மாஸத்திய ஸ்ரீ வேதாந்த தீபிகையுடன் அவர் நமது சந்தாதாரர்களெல்லாருக்கும் அனுப்பியுமிருக்கிறார். அந்த லேகத்தில், அவர், இப்பொழுது நமது சட்ட நிர்மாண ஸபையாரால் ஆலோசிக்கப்பட்டு வரும் மடங்கள் மசோதாவைப் பற்றி கண்டித்து எழுதி இருப்பதைப் பார்க்க நமக்கு மிக்க ஸந்தோஷம் ஜனிக்கின்றது. ஆனால், அந்த லேகத்தின் முதல் பாகத்தில், சற்றேறக்குறைய இருபது வர்ஷங்களுக்கு முன் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யர்களுள் சிலரால் ஸம்ப்ரதாய ரக்ஷணம் சரிவர நடந்தேறி வர வேண்டுமென்னும் எண்ணத்துடன் செய்யப்பட்ட சில ப்ரவ்ருத்திகளைப் பற்றி ப்ரஸ்தாவித்து, அக்காலத்தில் அந்தச் சிஷ்யர்களால் உபந்யாஸ ரூபமாகவும் வேறு விதமாகவும் ஸ்ரீ அஹோபில மடத்தின் ப்ரபாவத்தையும் அந்த ப்ரபாவம் ஸம்ரக்ஷிக்கப்படவேண்டிய ப்ரகாரத்தையும் பற்றி வெளியிடப்பட்டுள்ள உக்திகளையும் உதாஹரித்து, அது விஷயமான தமது அபிப்ராயத்தையும் அவர் வெளியிட்டிருக்கிறார். அது இவ்விடத்தில் எவ்விதம் ஸங்கதம் ஆகின்றது என்பது அந்த லேகத்திலிருந்து நமக்கு வ்யக்தமாக ஏற்படவில்லை. ஒருகால், அந்தச் சிஷ்யர்கள் அக்காலத்தில் அம்மாதிரி மடத்தைச் சீர்திருத்த ப்ரயத்னப்பட்டதும் இப்பொழுது அந்தச் சிஷ்யர்களே ப்ரக்ருத மடத்து மசோதாவை ஆக்ஷேபிப்பதும் பரஸ்பரம் விருத்தங்களான கார்யங்களாக இருக்கின்றனவென்பதை வெளியிட



வேண்டும் என்பது அவருடைய அபிப்ராயமாக இருக்கலாமோவென்று நினைக்கிறோம். அப்படி அவை பரஸ்பரம் விருத்தங்களல்லவென்பது நாம் மேல் நிரூபிக்கப் போவதிலிருந்து நன்கு விளங்கும். அவ்விதம் அவை விருத்தங்களாக இருந்தாலும், நமது ஸம்ப்ரதாயத்திற்கே பெரிய கேட்டை விளைவிக்கக் கூடியப்ரயத்னங்களை நமது சத்ருக்கள் செய்துகொண்டிருக்கும் இத்தருணத்தில், நமக்குள் பூர்வகாலத்தில் இருந்த அபிப்ராய பேதங்களைப் பற்றிப் பேசி அவைகளுள் ஆபாதத: தோன்றும் பூர்வாபர விரோதங்களை உண்மையான விரோதங்கள் போல எடுத்துக் காட்டி, அந்தச் சத்ருக்களாகிற இந்த மசோதா ப்ரவர்த்தகர்களுக்கு ஒரு ஊன்றுகோலை இவர் கொடுக்கின்றாரே என்று மாத்ரம் நாம் வருந்துகின்றோம்.

ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யர் என்ன சொல்லுகிறார் என்பதைச் சற்று பராமர்சிப்போம். “ஸ்ரீ மடத்தினுடைய ப்ரபாவம் குன்றாமல் மேன்மேல் அபிவ்ருத்தமாகி வரும்பொருட்டு தகுந்த க்ருஷிகளைச் செய்ய வேண்டுமென்னும் எண்ணத்துடன் ‘ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை’ என்று ஸபை ஒன்றை அந்தச் சிஷ்யர்கள் ஏற்பாடு செய்தார்கள்” என்பது அவர் சொல்லும் முதல் வார்த்தை. அப்படி ஸபை ஏற்படுத்துவதில் என்ன தோஷம் என்பது நமக்குப் புலப்படவில்லை. ஒரு கெட்ட எண்ணத்துடன் ஜனங்கள் ஒன்று சேர்ந்தால், அது தோஷமாகுமே தவிர்த்து, ஜனங்கள் ஒன்றுசேர்வதே தோஷமாகுமோ? இரண்டாவது, “ஜ்ஞான வைராக்ய நிஷ்டை உடையவர்களான ஸ்வாமிகள் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளுவதுதான் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவுள்ளத்திற்கு உகப்பாயிருக்குமென்றும், அக்காலத்தில் எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுள் சிலரே அப்படிப்பட்ட ஜ்ஞான வைராக்ய நிஷ்டர்களாக இருந்தபடியால் அவர்களுள் ஒருவரை ஆஸ்தானத்திற்கு எழுந்தருளப் பண்ணுவதே உசிதமாக இருக்குமென்றும் அச் சபையோர் தீர்மானித்தார்கள்” என்றும் எழுதி இருக்கிறார். இதுவும் உண்மையே. இதிலும் வ்யதிக்ரமம் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. அந்தத் தீர்மானத்தை அப்பொழுது எழுந்தருளி இருந்த ஸ்ரீ அழகிய சிங்கரிடம் அந்தச் சபையோர் விண்ணப்பம் செய்துகொள்ள, ஸ்ரீ அழகிய சிங்கர், அதைக் கேட்டு, ‘இவர்களைத் தவிர்த்து வேறு ஒருவருக்கு ஆஸ்தானத்தைக் கொடுத்தாலோ?’ என்று நியமித்ததாகவும் அதற்கு அந்தச் சிஷ்யர்கள், ‘அப்படி வரிக்கப்படுமவர் ஆஸ்தானத்திற்கு அநர்ஹராயிருந்தால், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விபூதிக்குக் குறைவு ஏற்படும்’ என்று விஜ்ஞாபித்துக் கொண்டதாகவும் எழுதி இருக்கிறார். அப்படி விஜ்ஞாபனம் செய்துகொள்வதில் என்ன தவறுதல் உண்டு? அநர்ஹரான ஸ்வாமியை எழுந்தருளப்பண்ணினால், அது ந்ரு

ஸிம்ஹன் திருவுள்ளத்திற்கு உகக்குமோ? "மடத்தின் அக்காலத்து துர்தசையை நிவர்த்திப்பதற்காக, ஸ்ரீ ஸந்நிதி லௌகிக வ்யாபாரங்களை த்ருப்திகரமாகப் பார்த்துவரக் கூடிய திறமையையும் ஆர்ஜவத்தையுமுடைய மானேஜர் என்னும் ஒரு அதிகாரியையும், நல்ல ஜ்ஞாந ஸம்பத்தும் ஸாமர்த்யமுமுள்ள ஒரு ஸ்ரீ கார்யம் ஸ்வாமியையும் நியமிக்க வேண்டுமென்றும், திருப்பதி ஸ்ரீரங்கம் திருக்குடந்தை முதலிய இடங்களில் உபய வேதாந்த ப்ரவசநம் செய்து அதனால் ஏழை ஜநங்களுக்கு ஜ்ஞாந ஸம்பாதநத்திலுள்ள ஆஸ்தையைப் பூர்த்திசெய்து வைப்பதற்காக அந்தந்த இடத்தில் தகுந்த வித்வான்களையும் நியமிப்பதற்கு ஸ்ரீ அழகிய சிங்கர் க்ருபைசெய்ய வேண்டுமென்றும் ஸ்ரீ அழகிய சிங்கரிடம் பல ப்ரகாரமாக அந்த ஸபையார் விண்ணப்பம் செய்துகொண்டார்களாம். இதிலும் என்ன வ்யதிக்ரமம்? இவைகளுள் எதை தோஷ துஷ்டமென்று ஸ்ரீ க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி திருவுள்ளம் பற்றுகிறார் என்பது புலப்படவில்லை.

"இந்த க்ருஷிகளுள் ஒன்றாவது ஸபலமாகாமற் போகவே நிர்வேதத்தை அடைந்தார்கள் இந்நிபுணர்கள்" என்றும் ஸ்ரீ க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி பரிஹஸிக்கிறார். இது சரியான வார்த்தையன்று. அவர்கள் நிர்வேதத்தை அடையவில்லை. அவர்கள் அம்மாதிரி விண்ணப்பம்செய்து கொண்ட காலத்தில் அப்படி விண்ணப்பம் செய்து கொள்ளுவதற்குப்போதுமான ஹேதுக்கள் இருந்தன. பிறகு, பகவதநுக்ரஹ விசேஷத்தால் அவர்களுடைய மநோரதங்களெல்லாம் ஒரு விதமாக நிறைவேறவே, அந்த ஹேதுக்கள் மறைந்தன; அது காரணமாக அவர்களும் சாந்தரானார்களே தவிர்த்து அவர்கள் நிர்விண்ணர்களாகவில்லை. 40-வது பட்டத்திலும் அதற்குப் பிறகும் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி இருந்த ஸ்ரீ அழகிய சிங்கர்களுடைய ஆர்ஜவமும் ஆஸ்திக்யாதிக்யமும் ஸாமர்த்யாதிசயமும் இந்தச் சிஷ்யர்களுடைய ப்ரார்த்தனைகளெல்லாவற்றையும் நிறைவேற்றி விட்டபடியால் அவை அவர்களைச் சாந்தர்களாகச் செய்துவிட்டன. இது தான் உண்மை. லௌகிக வ்யாபாரங்களைப் பார்த்து வருவதற்கு, சிஷ்ய ஸபையார் கேட்டுக் கொண்டபடி லௌகிக வ்யாபாரங்களில் ஸமர்த்தரான மானேஜர் ஒருவர் அப்பொழுதே நியமிக்கப்பட்டார் என்பதும் இப்பொழுதும் அந்த ஸாமர்த்யத்துடன் நிர்த்துஷ்டமான ஆர்ஜவமும் பொருந்தியிருக்கும் ஒரு ஸாத்விகர் ஏஜண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதும் இதற்குப் போதுமான நிதர்சனங்கள்.

ஸ்ரீ காரைக்குறிச்சி ஸ்வாமியை உயில் மூலமாக ஸ்ரீ அழகியசிங்கர் ஆஸ்தாநத்திற்கு நியமிக்கவே, அந்தச் சிஷ்ய ஸபையார்களுள் சிலர் ஒன்று சேர்ந்து, ஸ்ரீ காரைக்குறிச்சி ஸ்வாமி ஸம்பந்தப்பட்டவரையில் அவர்கள



ளுக்கு ஆக்ஷேபிக்கக் கூடிய அம்சமொன்றும் இல்லாவிடினும், அந்த நியமந விஷயத்தில் அநுஷ்டிக்கப்பட்ட மார்க்கம் ந்யாய விருத்தமென்று ஆக்ஷேபித்து, ந்யாய ஸ்தலத்தில் க்ரம வ்யாஜ்ய மொன்றைச் செய்தார்கள் என்றும் அவர் எழுதி இருக்கிறார். இப்படி வ்யாஜ்யம் செய்வது அவ்வளவாகச் சரியான வழி யன்று என்று சிலர் நினைக்கக் கூடும். ஆனால், 'அப்படி வ்யாஜ்யம் செய்யத் துணிந்தவர்கள் இப்பொழுது மடத்து மசோதாவை எப்படி ஆக்ஷேபிக்கலாம்?' என்று கேட்பது சரியன்று. தர்ம விரோதம் ஸம்பவிக்கும் காலத்தில், அந்த விரோதத்தைப் பரிஹாரம் செய்துகொள்ள வேறு வழி அற்றவர்களாய், ந்யாய ஸ்தலாதிகாரிகளைக் கொண்டு பரிஹாரத்தைப் பெறுவதற்கு ப்ரயத்நப்படுவது, ப்ரக்ருத மசோதாவைப் போன்ற மசோதாவை ஆக்ஷேபிப்பதற்குச் கொஞ்சமேனும் விருத்தமாகமாட்டாது. இம்மாதிரி மசோதாக்கள் ஆஸ்தாநத்தின் பெருமையையே குறைத்துவிடும்; க்ரம வ்யாஜ்யங்கள், ஏதாவது ஒரு அம்சத்தில் அக்ரமம் ஸம்பவித்தால் அதை மாத்ரம் சீர்திருத்திக்கொடுக்கும். ப்ரக்யாதர்களான சட்ட நிபுணர்கள், இம்மாதிரியான விஷயங்களில் கோர்ட்டில் வ்யாஜ்யம் செய்வதை ஸாதுவென்று ஒத்துக்கொண்டே ப்ரக்ருத மசோதாவைப் போன்ற சட்டங்களைச் செய்வதை மாத்ரம் பலமாக ஆக்ஷேபிக்கிறார்கள் என்பதை ஸ்ரீ க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி கொஞ்சம் கவனித்தல் வேண்டும். கோர்ட்டில் வ்யாஜ்யம் செய்யலாமென்று நினைப்பதும் இம்மாதிரியான சட்டத்தை ஆக்ஷேபிப்பதும் பரஸ்பரம் விருத்தங்களாகமாட்டா. 'சிஷ்யர்கள் ஆசார்யர்களின்மீது ந்யாயஸ்தலத்தில் வ்யாஜ்யம் செய்வது அபசாரமாக மாட்டாதா?' என்று கேட்கலாம். அந்த விசாரம் இப்பொழுது அப்ராப்தமாகையால் அதைப்பற்றி நாம் விசாரிக்கவில்லை.

ப்ரக்ருத மசோதாவைக் கண்டிக்க ப்ரயத்நப்பட்ட ஸ்ரீ க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையார்களுடைய ப்ரவ்ருத்திகளைப் பற்றி ப்ரஸ்தாவியாமலே தமது உத்தேச்யத்தை எவ்வித குறைவுமற ஸாதித்துக் கொண்டிருக்கலாம். அநவஸரத்தில் அதை ப்ரஸ்தாவித்ததைப்பற்றி மாத்ரம் நாம் சோகிக்கிறோம்.

* * * *

ஸ்வல்ப காலமாகச் சில ஆஸ்தாந நிர்வாஹகர்களான ஸந்யாஸிகள், தாம் அவலம்பித்திருக்கும் மதத்தைக் காட்டிலும் பிந்நங்களான மதாந்

தாங்களைத் தூஷித்து வருகிறார்களென்று நாம் பத்ரிகைகளிலிருந்து அறி கின்றோம். இப்பொழுது, வடதேசத்தில் த்வைத மடங் களுள் ஒன்றுக்கு அதிபதியாக இருந்து வரும் ஒரு ஸ்வாமி, அத்வைத மதத்தைப் பலவாறாக தூஷித்து வரு வதாகவும், அந்த ஸ்தலத்தில் உள்ள சில அத்வைதிகள் அந்தத் தூஷணத்தை ஸஹியாதவர்களாய் அதை எதிர்ப்பதற்காக வேறு ஸ்தலத்திலிருந்து ஒரு அத்வைத வித்வத் ஸந்யாஸியை வரவழைத்திருப்ப தாகவும் அந்தப் பத்ரிகைகளில் வெளியிடப் பட்டிருக்கின்றன. இது மிக வும் சோகிக்கத் தகுந்த வ்யாபாரமே. நாம் எல்லாரும் பரஸ்பரம் ஸௌ ஹார்த்தத்துடன் ப்ராதாக்கள் போல வாழவேண்டியது போக, இம்மாதிரி ஒருவரை ஒருவர் தூஷித்துக்கொண்டு அது காரணமாக ஒருவரை ஒருவர் பலமாக த்வேஷிக்கும்படி செய்யக்கூடிய வ்யாபாரங்களில் ப்ரவர்த்திப்பது ந்யாய்யமாகுமோ? ஸித்தாந்த ஸ்தாபகர்களான ஆசார்யர்களெல்லாரும் மஹான்களே; பகவத் கடாக்ஷம் பெற்றவர்களே; ஜகத்தின் உஜ்ஜீவநார்த்தம் அவர்களெல்லாரும் தமது ஆயுள் நாள் முழுவதையும் செலுத்தி அதனு லேயே பரமமான த்ருப்தியை அடைந்தவர்கள். அவர்களால் ஸ்தாபிக்கப் பட்டுள்ள ஸித்தாந்தங்களில் கொஞ்சம் கொஞ்சம் அபிப்ராய பேதங்கள் மாத்ரம் இருக்கின்றனவே தவிர்த்து, ஒருவர் மற்றொருவரைத் தூஷிக்கும் படியான அம்சங்களொன்றும் அவைகளில் இல்லை. அந்தந்தக் காலத்தில் அந்தந்த ஜனங்களுக்கு புத்தியில் அவகாஹமாகும்படி தத்வமொன்றையே ப்ரகார பேதத்தை ஆச்ரயித்து அவர்கள் உபதேசித்திருக்கிறார்கள். அவர்க ளுடைய ஜ்ஞாநாதிசயத்தையும் உதாரங்களான மநோ பாவங்களையும், நம் முடைய ஜ்ஞானக் குறைவையும் காமக் ரோதாதிகளடியாக நமக்கு ஜநித்தி ருக்கும் புத்தி காலுஷ்யத்தையும் நாம் நன்கு உணர்ந்து, அந்த மஹான் களைத் தூஷிக்க ப்ரயத்நப் படாமல் மிக்க வணக்கத்துடன் நாம் செல்வ தன்றோ நமது தர்மமாகும்? ஒவ்வொருவரும் தம் தமக்கு ஜந்மாந்தர கர் மாது குணமாகக் கிடைத்துள்ள பிறப்புக்கும் ஜ்ஞாநத்திற்கும் ஏற்றபடி தம் தம் குல குருவின் உபதேசங்களையும் கொள்கைகளையும் அநுஷ்டித்து வரு வதுடன், மற்றவர்கள் ஒருவரையும் இகழாமல் எல்லாரிடமும் கௌரவத் துடன் அன்பு பாராட்டி வர்த்தித்து வந்தால், இந்த ஸம்ஸாரமே அப வர்க்கமாகி நாம் அளவற்ற ஸுகத்தை அடைவோம். இந்த லோகத்தில் ஸம்ஸ்தாபநம் செய்யப்படவேண்டிய தர்மங்களுள் இதுவே இக்காலத்திற்கு மிகப் பெரிய தான தர்மமாக இருக்கின்றது என்று நமக்குத் தோன்றுகின் றது. எவ்விதம் இது ஸம்ஸ்தாபிக்கப்படுமோ நமக்குத் தெரியவில்லை.

மதாந்தர தூஷணம்.

---



𑌯𑌥𑌾 𑌕𑍌𑌰𑍍𑌮𑍇:—

𑌅𑌂𑌶𑍋𑌸𑍍𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑍋 𑌨𑌾𑌮 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌵𑌾𑌨𑍍 ।
𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑌾𑌨𑌨𑌿𑌰𑌤𑍋 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌾𑌂 𑌵𑌰𑌃 ॥

𑌸 𑌨𑌾𑌰𑌦𑌸𑍍𑌯 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌰𑍍𑌚𑌨𑍇 𑌰𑌤𑌃 ।
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸 𑌕𑍁𑌣𑍍𑌡𑌗𑍋𑌲𑌾𑌦𑌿𑌭𑌿𑌶𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 ।

𑌤𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌤𑍁 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌂 𑌨𑌾𑌮 𑌶𑍋𑌭𑌨𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌮𑌹𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌕𑍁𑌣𑍍𑌡𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌹𑌿𑌤𑌾𑌵𑌹𑌮𑍍 ॥

𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌂 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑌾𑌗𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌰 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑍂𑌦𑍍𑌰𑌦𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥
𑌇𑌤𑌿 ।

---

இதற்கு விபரீதம்போல கூர்மபுராணத்தில் சில வசனங்கள் காணப்படு கின்றன:—

ஓர் க்ஷத்ரியனுடைய வம்சத்தைச் சொல்லுகையில், அம்சு என்கிற அரசனுக்கு ஸாத்வதன் என்று ப்ரஸித்தனான புத்ரனிருந்தான், அவன் விஷ்ணுவினிடத்தில் பக்தி யுள்ளவனாகவும், பராக்ரமமுள்ளவனாகவும், கொண்டாடக்கூடிய மனதை உடையவனாகவும், எப்பொழுதும் தானம் கொடுப்பவனாகவும், தநுர்வேத மறிந்தவர்களுள் சிறந்தவனாகவு மிருந்தான்.

வாஸுதேவனுடைய ஆராதனத்திலேயே ஆசையுள்ள அவன் நாரதரு டைய வார்த்தையினால் குண்டர் கோளர் இவர்கள் முதலானவர்களால் விரும்பப்பட்ட சாஸ்திரத்தை ப்ரவர்த்திப்பித்தான்.

அவனுடைய பெயரினால் ஸாத்வதம் என்கிற பெயரை யடைந்து பிர ஸித்திபெற்றதாயும் மங்களமாயும் குண்டர் முதலானவர்களுக்கு ஹிதத் தைச் செய்யக்கூடியதுமான மஹா சாஸ்த்ரமானது இவ்வுலகத்தில் பரவி இருக்கிறது.

அவனால் சொல்லப்பட்ட யாதொரு ஸாத்வதம் என்கிற தந்த்ரத்தை எவன் தெரிந்துகொள்ளுகிறானோ; அவன் மோக்ஷத்தை யடைவன்.

எந்த ஸாத்வத சாஸ்த்ரத்தில் ஸ்திரீகள், சூத்ரர்கள், தாஸர்கள் இவர் களுக்கு விஷ்ணுவினுடையதான ஸம்ஸ்காரமானது சொல்லப்பட்டிருக் கிறதோ என்று.

तच्च पाञ्चरात्रस्य अविशेषेण सकलजनहितार्थप्रवर्तकतया प्रवृत्तत्वज्ञापनाय, न तु केषाञ्चिदेवाधिकार इति प्रदर्शनाय, कथञ्चन हारीतादिवन्नापि युधिष्ठिर, वसु-निष्ठा, श्वेतद्वीपवृत्तान्तादीनि न सम्भवेयुः । युधिष्ठिरस्य पाञ्चरात्रीयनिष्ठा, ब्रह्मविद्याविजये प्रदर्शिता ॥ वसोरुपरिचरस्य निष्ठा च श्वेतद्वीपवृत्तान्तश्च प्रदर्शयिष्येते ॥

किञ्च तन्त्रेष्वेव ह्येतदधिकारापेक्षा, न तु तत्त्वविदि, अतस्तत्त्वांशे प्रामाण्यात् तद्विरोधिनः पाशु-

இந்தக் கூர்மபுராண வாக்யங்களினால் பஞ்சராத்ர சாஸ்த்திரத்தில் குண்டர்கள், கோளர்கள் இவர்களுக்குத்தான் அதிகாரமுண்டு, மற்றவர்களுக்கு அதிகாரமில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். (குண்டர் என்பது பர்த்தா ஜீவித்திருக்கும்பொழுதே அந்ய புருஷனுக்குப் பிறந்தவனுக்குப் பெயர். கோளன் என்றால் பர்த்தா இறந்துபோனபிறகு அந்ய புருஷனுக்குப் பிறந்தவனுக்குப் பெயர்.)

இங்கு குண்டாதிகளுக்கு ஹிதத்தை உண்டுபண்ணக்கூடியது என்கிற வாக்யத்திற்கு "குண்டாதிகளுக்குத்தான் ஹிதத்தைச் சொல்லக்கூடியது" என்பது அர்த்தமல்ல. மற்றென்னில்,

இந்தப் பஞ்சராத்ர சாஸ்த்ரமானது "சில மனிதர்களுக்கு மட்டும் ஹிதத்தைத் தெரிவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. ஸகல மனிதர்களுக்கும் ஹிதத்தைத் தெரிவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது" என்பதை தெரிவிப்பதற்காக குண்டர் கோளர்களுக்குங்கூட ஹிதத்தைத் தெரிவிக்கிறது என்றுதான் அர்த்தம் சொல்லவேண்டும்.

அப்படிச் சொல்லாவிட்டால் கீழே சொல்லப்பட்ட மஹாபாரத வசனங்களுக்கும் தர்மபுத்ரர் உபரிசரவஸு இவர்களுடைய பஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் நிஷ்டைக்கும் ச்வேதத்வீப வ்ருத்தாந்தம் முதலியவைகளுக்கும் விரோதமுண்டாகும்.

தர்மபுத்ரர் பஞ்சராத்ர சாஸ்த்ரார்த்தத்திலேயே நிஷ்டையுடையவனாக இருந்த விஷயமானது ப்ரஹ்மவித்யாவிஜயத்தில் நம்மால் சொல்லப்பட்டிருக்கிறது. உபரிசரவஸு பஞ்சராத்ர நிஷ்டனாக இருந்ததும் ச்வேதத்வீப வ்ருத்தாந்தமும் மேலே காட்டப்படப்போகின்றன.

தவிரவும், தர்மத்தை அநுஷ்டிக்கும் விஷயத்திலன்றோ இதை அனுஷ்டிக்க, இன்னாருக்குத்தான் அதிகாரமுண்டு, மற்றவருக்கில்லை என்

पतस्य प्रामाण्यस्य वर्जनीयत्वाच्च । नाप्यधिकारिविशेषोक्तेः पञ्चवर्णवैलक्षण्येन किञ्चित् प्रयोजनम् । न च शङ्खचक्रादिधारणस्य सर्वाधिकारित्वज्ञापनमेव प्रयोजनमिति वाच्यम् । श्रुत्यादिभिरेव सर्वाधिकारित्वस्य व्यवस्थापितत्वात् तस्याप्रयोजकत्वाच्च ॥

सिद्धं चेदं पाञ्चरात्रप्रामाण्यं वेदाचार्येण भगवता बादरायणेनैव । उत्पत्त्यसम्भवात्, न च कर्तुः करणम् । विज्ञानादिभावे वा तदप्रतिषेधः । विप्रतिषेधाच्च इति ।

பது. வஸ்துக்களினுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் அதிகாரத்தைப்பற்றி, விசாரிக்க ப்ரஸக்தி இல்லையே.

ஆகையினால் தத்வவிஷயத்தில் பஞ்சராத்ரம் ப்ரமாணமாகலாமாகையினால் இதற்கு விருத்தமான பாசுபத க்ரந்தத்திற்குத்தான் அப்ராமாண்யமானது நிச்சயமாக உண்டாகும். ஆகையினால், பஞ்சராத்ர சாஸ்த்திரத்திற்கு குண்டர் கோளர்களே அதிகாரிகள் என்கிற பூர்வபக்ஷியினுடைய வார்த்தைக்குக் கொஞ்சமேனும் ப்ரயோஜனம் ஸம்பவிக்காது.

ஆனால் பஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் குண்டர் கோளர்களுக்கே அதிகாரமுண்டு, மற்றவர்களுக்கில்லை என்கிற பூர்வபக்ஷிகளுக்கு பகவானுடைய சிஹ்னங்களான சங்க சக்ராதிகளுடைய தாரணத்தில் எல்லாருக்கும் அதிகாரமுண்டு, என்பதை நிரூபிப்பதுதான் ப்ரயோஜனம் என்று சிலர் நினைக்கலாம். அது ஸரியல்ல.

வேதம் முதலிய கீழே காட்டிய பல ப்ரமாணங்களால் தப்த சக்ராதி சிஹ்னங்களில் எல்லாருக்கும் அதிகாரமுண்டு என்கிற விஷயம் ஸித்தித்து விட்டபடியினால் அந்த ப்ரயோஜனம் ஆசாமோதகமாக முடிந்துவிட்டது.

இந்த பஞ்சராத்ர சாஸ்த்திரத்தினுடைய ப்ரமாண பாவமானதும், ஸர்வவேதங்களுக்கும் ஆசார்யனாப் பகவானான வேத வ்யாஸமஹர்ஷியினாலேயே விசாரித்து தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(ப்ரஹ்ம ஸூத்ரம்) உத்பத்த்யஸம்பவாத் ந ச கர்து: கரணம், விஜ்ஞாநாதிபாவே வா ததப்ரதிஷேத:- விப்ரதிஷேதாச்ச என்று.

அத்ர பூர்வாப்யாம் ஸூத்ராப்யாம் பூர்வபக்ஷ:, உத்தராப்யாம் ஸித்தாந்த: ||

யதா கபிலாதி தந்த்ர ஸாஸ்த்ராணாம் வேதவிருத்த தத்த்வ நி:ச்ரேயஸ ஸாதநபோதித்வாத் ப்ராமாண்யம் நிரஸ்தம் ததைவ பகவத் உபதிஷ்டஸ்யாபி பாஞ்சராத்ர தந்த்ரஸ்யாப்ராமாண்யம் நிராக்ரியதே || தத்ராயம் பூர்வபக்ஷ:—

"உத்பத்த்யஸம்பவாத் - பரமகாரணாத் பரப்ரஹ்மபூதாத் வாஸுதேவாத் ஸங்கர்ஷணோ நாம ஜீவோ ஜாயதே | ஸங்கர்ஷணாத் ப்ரத்யும்நஸம்ஜ்ஞம் மநோ ஜாயதே | தஸ்மாத் அநிருத்தஸம்ஜ்ஞோ(அ)ஹங்காரோ ஜாயதே" இதி ஹி பாகவதப்ரக்ரியா |

அத்ர ஜீவஸ்யோத்பத்தி: ச்ருதி விருத்தா ப்ரதீயதே | ச்ருதயோ ஹி ஜீவஸ்யாநாதித்வம் வதந்தி | "ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்" இத்யாத்யா: ||

---

இந்த நான்கு ஸூத்ரங்களுக்குள், முதலிரண்டு ஸூத்ரங்கள் பூர்வ பக்ஷத்தைச் சொல்லுகின்றன. மேலிரண்டு ஸூத்ரங்கள் ஸித்தாந்தத்தைச் சொல்லுகின்றன.

அந்த ப்ரகரணத்தில் கபிலர் முதலியவர்களால் சொல்லப்பட்ட ஸித்தாந்தங்கள் வேதவிருத்தங்களாகையினுல் எப்படி அப்ரமாணம் (ப்ரமாணமல்ல) என்று நிர்மானிக்கப்பட்டிருக்கிறதோ, அதுபோலவே பகவானுல் உபதேசிக்கப்பட்டதாயும் மோக்ஷத்திற்கு ஸாதனங்களை தெரிவிப்பதாயுமிருக்கிற பஞ்சராத்ர சாஸ்த்ரமும் வேதவிருத்தங்களான விஷயங்களைச் சொல்லுகிறபடியினுல் அப்ரமாணமாக ஆகலாம் என்று சங்கித்து அந்த சங்கையானது நிராகரிக்கப்படுகிறது.

அவ்விடத்தில் பூர்பக்ஷமானது இவ்வாருகச் செய்யப்பட்டிருக்கிறது.

உத்பத்யஸம்பவாத்:—

எல்லாவஸ்துக்களுக்கும் காரணமாயும் பரப்ரஹ்மமென்று சொல்லப்படுகிறவனுமான வாஸுதேவனிடத்தில் நின்றும் ஸங்கர்ஷணன் என்கிற ஜீவன் உண்டாகிறுன். ஸங்கர்ஷணனிடத்திலிருந்து ப்ரத்யும்னன் என்கிற மனஸ் உண்டாகிறது. அந்த மனஸ்ஸினிடத்திலிருந்து அநிருத்தன் என்னகிற அஹங்காரம் உண்டாகிறது என்று பஞ்சராத்ரத்திற்கு விருத்தமாக ஜீவனுடைய உத்பத்தியானது சொல்லப்படுகிறது. "ந ஜாயதே" என்பவை முதலான ச்ருதிகள் ஜீவனுக்கு உத்பத்தி இல்லை என்று சொல்லுகிறது.



ந ச கர்து: கரணம் | ஸங்கர்ஷணாத் ப்ரத்யும்நஸம்ஜ்ஞம் மநோ ஜாயதே இதி கர்து: ஜீவாத் கரணஸ்ய மநஸ உத்பத்திர் ந ஸம்பவதி |

ஏதஸ்மாத் ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரியாணி ச | இதி || பரஸ்மாதேவ ப்ரஹ்மண: மநஸோ(அ)த்பத்திச்ருதே: |

ஸித்தாந்தஸ்து:—

விஜ்ஞாநாதிபாவே வா ததப்ரதிஷேத:—'வா' ஶப்தஸ் பக்ஷம் வ்யாவர்தயதி | விஜ்ஞாநம் ச தத் | ஆதி சேதி பரம் ப்ரஹ்ம விஜ்ஞாநாதி | ஸங்கர்ஷண-ப்ரத்யும்ந-அநிருத்தாநாம் ஜீவமநோ(அ)ஹங்கார ஶப்தாபிதேயாநாம், பரம் ப்ரஹ்மபாவே ஸதி ததபிதாயிந: ஶாஸ்த்ரஸ்ய ப்ராமாண்யம் ந ப்ரதிஷித்யதே |

---

ந ச கர்து: கரணம் - ஸங்கர்ஷணனிடத்திலிருந்து ப்ரத்யும்னன் என்கிற மனது உண்டாகிறது என்று. கர்த்தாவான ஜீவனிடத்திலிருந்து மனது உண்டாகிறதென்று சொல்லுவதும் ஸரியல்ல.

ஏதஸ்மாத் ஜாயதே ப்ராண: – என்கிற ச்ருதியினுல் பரப்ரஹ்மத்தினிடத்திலிருந்தே மனது உண்டாகிறது என்று சொல்லப்படுகிறபடியினுல்.

ஸித்தாந்தமோவென்ருல்,

விஜ்ஞானுதி பாவே வா ததப்ரதிஷேத:—இங்கு 'வா' என்கிற பதத்தினுல் முன்பு சொல்லப்பட்ட பூர்வபக்ஷத்திற்கு இது விருத்தமானதென்று ஸூசிக்கப்படுகிறது.

விக்ஞான சப்தமானது – ஞானஸ்வரூபம் என்கிற அர்த்தத்தையும் ஆதி என்கிற பதமானது ஸர்வ ஜகத்தையும் ஸம்ஹரிக்குமவன் என்கிற அர்த்தத்தையும் சொல்லுகிறது.

'இமே ஜீவன், மனஸ், அஹங்காரம் என்கிற சப்தங்களினுல் சொல்லப்படுகிற ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களுக்கு ஞானஸ்வரூபியாய் ஸர்வ ஜகத் ஸம்ஹர்த்தாவுமான பரப்ரஹ்மபாவ மிருப்பதினுல்.

அந்த பரப்ரஹ்மத்தைச் சொல்லுகிற பஞ்சராத்ர சாஸ்த்திரத்தினுடைய ப்ராமாண்யம் நிஷேதிக்கப்படமாட்டாது என்று ஸூத்திரத்தின் அர்த்தம்.

ஶப்தேநாஹங்கார ஶப்தஸ்ய ச ப்ரஸித்தயோரபி தயோர்க்ரஹணமிதி த்யோதநாய விஜ்ஞாந பதப்ரயோக:।

ஜீவஶப்தேந விஜ்ஞாநஸ்வரூபஸ்யாபி ப்ரஸித்தஜீவஸ்ய ந க்ரஹணமிதி த்யோதநாய ஆதிஶப்த ப்ரயோக:।

அத: ஸங்கர்ஷணாதீநாமபி பரஸ்ய ப்ரஹ்மண: ஸ்வேச்சாவிக்ரஹரூபத்வாத் “அஜாயமாநோ பஹுதா விஜாயதே” இதி ஶ்ருதி ப்ரஸித்தஸ்யைவ ஆஶ்ரிதவாத்ஸல்யநிமித்த ஸ்வேச்சாவிக்ரஹரூப ஜந்மநோऽபிதாநாத் ॥ ததபிதாயி ஶாஸ்த்ரப்ராமாண்யஸ்யாப்ரதிஷேத இதி।

---

மந: என்கிற பதத்திற்கு மனது என்கிற இந்த்ரியத்தைச் சொல்வதிலும் அஹங்கார: என்கிற பதத்திற்கு மனதிலிருந்து உண்டான அஹங்கார தத்வத்தைச் சொல்வதிலும், ப்ரஸித்தி இருந்தாலும் இங்கு அவைகள் சொல்லப்படவில்லை என்பதைத் தெரிவிப்பதற்காக விக்ஞான பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது.

ஜீவன் ஞானரூபியாகவிருந்தாலும் இங்கிருக்கிற ஜீவ சப்தத்தினுல் ஜீவாத்மா சொல்லப்படவில்லை. ஜீவர்களுக்கு அதிஷ்டான தேவதையான பரமாத்மா சொல்லப்படுகிருன் என்பதைத் தெரிவிப்பதற்காக ஸம்ஹாரத்தைச் சொல்லுகிற ஆதி சப்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையினுல் ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்பவை எல்லாம் பரப்ரஹ்மத்தினுடைய இச்சையினுல் க்ரஹிக்கப்பட்ட தேஹமாகையினுல்.

‘ஆஜாயமாநோ பஹுதா விஜாயதே’ என்கிற ச்ருதி ப்ரஸித்தமாய் பகவான் தன்னை ஆச்ரயித்தவர்களிடத்தில் வாத்ஸல்யத்தினுல் தன்னிஷ்டப்படி பரிக்ரஹித்த ரூபங்களே இங்கு சொல்லப்படுகிறபடியினுல் அவ்வவதார விசேஷங்களைச் சொல்லுகிற பஞ்சராத்ர சாஸ்த்திரத்தின் ப்ராமாண்யத்திற்கு நிஷேதம் ஸம்பவிக்காது.



அதோ ஜீவமநோऽஹங்கார தத்வாதிஷ்டாதார:, ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்தா இதி தேஷாமேவ ஜீவாதி ஶப்தைரபிதாநம் ॥ யதாகாஶாதி ப்ராணாதிஶப்தை ப்ரஹ்மணோऽபிதாநம்।

விப்ரதிஷேதாச்ச — விப்ரதிஷித்தா ஹி ஜீவஸ்யோத்பத்தி:, தஸ்மிந்நேவ தந்த்ரே। யதோக்தம் பரமஸம்ஹிதாயாம் —

அசேதநா பரார்தா ச நித்யா ஸததவிக்ரியா।
த்ரிகுணா கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே ॥
வ்யாப்திரூபேண ஸம்பந்தஸ்தஸ்யாஶ்ச புருஷஸ்ய ச।
ஸ ஹ்யநாதிரநந்தஶ்ச பரமார்தேந நிஶ்சித: ॥ இதி ॥

---

வேதாந்தங்களில் ஆகாச ப்ராண முதலியசப்தங்களினுல் எப்படி பரப்ரஹ்மமானது சொல்லப்படுகிறதோ அதைப்போல ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்கள் ஜீவன் மநஸ் அஹங்காரம் என்கிற தத்வங்களுக்கு அதிஷ்டாதாக்கள். ஆகையினுல் அவர்களை ஜீவன் முதலிய சப்தங்களினுல் சொல்வது விருத்தமல்ல.

விப்ரதிஷேதாச்ச—அந்த பஞ்சராத்ர தந்த்ரத்தில் ஜீவாத்மாவினுடைய உத்பத்தியானது நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயமானது பரமஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

மூலப்ரக்ருதியினுடைய ஸ்வரூபமானது:—

அறிவில்லாததாகவும், பிறருடைய ப்ரயோஜநத்திற்காகவே இருப்பதாகவும், எக்காலத்திலுமிருப்பதாகவும் ஸர்வகாலங்களிலும் மாறுதலை அடைந்து கொண்டே இருப்பதாகவும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற மூன்று குணங்களை உடையதாகவும் புண்யம் பாவம் என்கிற கர்மங்களை உடைய ஜீவாத்மாக்களுக்கு வாஸஸ்தாநமாகவும் சொல்லப்படுகிறது.

இப்படி இருக்கிற ப்ரக்ருதிக்கும் புருஷன் என்று சொல்லப்படுகிற ஜீவனுக்கும் ஏற்பட்டிருக்கிற ஸம்பந்தமானது வ்யாப்திரூபமானது. அதாவது ஜீவனுல் ப்ரக்ருதியானது ப்ரவேசிக்கப்படுகிறது. ஜீவன் ப்ரக்ருதியான தேஹத்தினுள் ப்ரவேசிக்கிருன் என்பதே.

அந்த ஜீவனே என்னுல் உற்பத்தி இல்லாதவனுகவும் நாசமில்லாதவனுகவும் அறிவுள்ளவனுகையினுல் அறிவில்லாத ப்ரக்ருதியைக் காட்டிலும் மேற்பட்டவனுகவும் சாஸ்த்ரஜ்ஞர்களினுல் நிச்சயிக்கப்படுகிருன்.

ஏவம் ஸர்வாஸ்வபி ஸம்ஹிதாஸு ஜீவஸ்ய நித்யத்வாபிதாநாத் ஜீவஸ்யோத்பத்தி: பாஞ்சராத்ர தந்த்ரே விப்ரதிஷித்யதே இதி ந ஜீவோத்பத்திவாதி நிஶ்ரேயஸ ப்ராமாண்யவாத ஶங்காவகாஶ: ॥

ஏஷாம் ஸூத்ராணாமந்யதார்த்தம் வர்ணயதாம் ப்ரஹ்மவிதாசார்ய த்ரோஹ ஏவ பலம் । ததாஹி த ஏவமாஹு:—

அஸ்மிந்நதிகரணே பாஞ்சராத்ராப்ராமாண்யமேவ ஸமர்த்யதே । தத்ர ஸூத்ரத்வயஸ்ய பூர்வவதேவார்த்த: । விஜ்ஞாநாதிபாவே வா ததப்ரதிஷேத: । அஸ்யார்த்த:, ந சைதே ஸங்கர்ஷணாதய: ஜீவாதிபாவேந அபிப்ரேயந்தே । கிம் தர்ஹி ஈஶ்வரா ஏவைதே ஸர்வே ஜ்ஞாநைஶ்வர்ய ஶக்தி பல வீர்ய தேஜோபி:,

---

இப்படி எல்லா ஸம்ஹிதைகளிலும் ஜீவாத்மா நித்யன் என்று சொல்லி இருக்கையினால் ஜீவாத்மாவினுடைய உற்பத்தியானது பஞ்சராத்ரத்திலும் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் பஞ்சராத்ரத்தில் ஜீவனுடைய உற்பத்தி சொல்லப்பட்டிருப்பதால், பஞ்சராத்ரம் ப்ரமாணமல்லவென்று சங்கிப்பதற்கு இடமில்லை.

இந்த ப்ராஹ்மஸூத்ரங்களுக்கு வேறு விதமாக அர்த்தம் செய்கிறவர்களுக்கு ப்ரம்மவித்துக்களான ஆசார்யர்களுடைய த்ரோகந்தான் பலமாகும்.

அவர்கள் இவ்வாறு சொல்லுகிறார்கள். இந்த அதிகரணத்தில் பஞ்சராத்ரத்திற்கு அப்ராமாண்யந்தான். ஸமர்த்திக்கப்படுகிறது என்று.

அந்த பக்ஷத்திலும் முதல் இரண்டு ஸூத்ரங்களுக்கு முன்பு சொன்னது போலவே அர்த்தம் சொல்லுகிறார்கள்.

விக்ஞாநாதி பாவே வா (பூர்வபக்ஷம்) இந்த ஸங்கர்ஷணாதிகள் ஜீவன் முதலானவர்களாக நினைக்கப்படவில்லை. ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்கள் ஈசுவரர்கள்தான். இவர்கள் எல்லாரும் ஞானம், ஐச்வர்யம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ்கள் என்கிற ஈச்வர ஸ்வபாவத்தோடு கூடினவர்களாகவே, அங்கீகரிக்கப்படுகிறார்கள்.



உள்ளமொன்று மாசயம் விழியுரைக்கு மென்பராற்
கள்ளமின்ன தென்றுநாங் கண்டறிய கிற்கிலே
முள்ளமெம்மு ளெவரிட மோகுமோ கருத்தெனு
வுள்ளியைய மென்னுமா வுததியுட் கிடக்தனர். 38

கடியுரத்துண் மன்னுறுங் கௌத்துபத்துண் மின்னுறுந்
துடியிடைப் படிவமத் துலங்குநாற் றோளெண்மரும்
முடிகுனிந்து கண்டவணம் முளத்துண் மோகமாய்ப்
படியுமென்று மதர்வொடும் பயப்பயப் பகர்வரால். 39

ஒருவர்கோதைப் பைங்கமு குறழுகந் தரத்தனை
பரிவினோக்கி யொளிர்கரப் பாஞ்சசனிய நோக்குவா
ரொருவருந்தி மண்டலமுற்று நோக்கி யொண்கர
மருவிமின்னு திகிரியை மற்றுநோக்கி மகிழ்வரே. 40

சிலர்பிறழுஞ் சேலெனும் வேல்விழியை விழிப்புறு
நிலவுதன் கரத்திடை நெடியவாள நோக்குவார்
பலர்கரும் புருவமே பார்த்துவிம்மி தத்துடன்
குலவுசார்ங்கங் கண்டுளங் கூர்வரின் களிப்பரோ. 41

மார்பமன்னு மணியினை நோக்கிச் சாக்கினிற்சில
ரார்வமுந்த வவண்முக வம்புயத்தை நோக்குவார்
கூர்வலாறை நோயினிற் கூர்நகைப்பு முதலெலாஞ்
சேர்வரோடு பேசுகாற் செய்வபோற் சிலர்செய்வார். 42

இன்னவண்ண மன்னவ ரிலகுகாலை யின்னவண்
மன்னுபூம் பொதும்பருண் மலருசாதி தன்னையே
யுன்னிநேடு மளியெனவோ ரரங்க நாயகன்
தன்னைநாடி நகையெழத் தானிருக்கு மேல்வையில். 43

ஆனிமுன்ன ராழுவா ரருள்புரிந்த வண்ணமே
வாளியன்ன கண்ணினாள் வகைபெறத் தெருண்டிட
நீளயாவு மவர்செயல் வேறுவேறு நிகழ்த்துவான்
வேனிறுனை யன்னவள் விரல்பிடித்து முந்தினள். 44

வேறு.

பஞ்சூட்டும் பதமலரா யித்தவிசிற் பார்மகளு நீளை மாதும்
மஞ்சூட்டு மணிமாமைத் திருமேனி தனிவிறைபு மகலா தோன்றி
கஞ்சூட்டு மயிலனைய நயனங்கள் செலுத்தியுற றருமா மாயன்
செஞ்சூட்டுக் காதம்பஞ் செறிவயல் சூழுறையூ ரித்திலகு மென்றும்.

சோர்தரிலங் குதியடியைத் தொடுகுழலா
யித்திருமா றுயர்செய் தஞ்சைப்
பேர்தரித்த வவுணனுரம் பிளந்து
நரகரியா யப்பெய ராரூரில்
வார்தருசெங் குருதியினு லுடலெங்குஞ்
செவ்வான வனப்போ தோன்ற
வார்தருமா வருந்தஞ்சை மாமணிக்
கோயின் மிடையு நீலமேகன் 46

ஆலினிளந் தளிர கட்டா யிவ்வரியு
மணிமுத்த மெனுமா வாற்றின்
பாலனைய றளாசிதற விண்மணிகள்
படிந்தெனப் பொலியுங் கோட்டிற்
காலனெனுந் தண்டகனைக் கடிந்து
கடிதடஞ் திகழுவனை யுஞ்சங்கு
மேலுமணி மாடமலி திருமுட்டி
னத்திலகு மெழில்வ ராகன். 47

செய்யவிள வரம்பையுரா ணத்திரண்டு
திகழ்குறங்கு செறியும் பாவாய்
பொய்யகலும் பிருகுமுனி முன்னொருகால்
மும்மூர்த்தி களிலும் போதந்
துய்யபரம் பொருளெதுவோ வென்றயிர்த்துத்
துகளொழியத் துணிந்து தாளான்
மெய்யமருந் திருமாலை யிகைத்துதைக்க
வப்பெருமான் களிப்பின் மீறி. 48

அய்யாவென் கண்மணியே யுன்பாத
மளியுமென வலமர் தேதன்
செய்யாரின் கரத்தவன்ற னடிவருடச்
செழுந்தவத்தோன் சிந்தை தேரு
மெய்யாரு மித்தகைய சத்துவமே
மிடைதருமிப் பெருமா னன்றோ
பொய்யாத பரம்பொருளென் றுளம்பூரித்
தப்பவத்தைப் போக்கும் வண்ணம். 49

எம்பெருமா னிணையடியை யிதயமலர்க்
குள்ளிருத்தி யிகவா தென்றும்



வெம்பரிய தவமிழைக்கு மத்தவத்திற்
கிரும்பயனாய் விமலை யோடு
மும்பர்தொழ வுரகணையி லுறங்கிமோ
லிப்பரம னுறங்கு மந்தச்
செம்பதிக்குக் காரணப்பே ரன்பிலெனச்
செப்புவர்கள் சிறப்பின் மன்னே. 50

வயிரமணிக் குழையிலகும் வள்ளைதனைப்
பழித்த செவிவனையும் பூணாய்
செயிரறுமிப் பெருமானுஞ் செந்திருவாழ்
மலர்வயல்சூழ் கரம்ப னூரி
லயலமரு மயனரனு நாரணமுந்
திரிபதகை யரவ மும்பொற்
பெயர்நதியி னின்னிசையும் பூரித்துக்
கேட்டுறங் குத்தமனு ரன்றே. 51

சிந்தூரத் திலகமுறு தெழிற்பிறையுஞ்
சிவ்னொத நுதலாய் கேட்டி
யெந்தாயிந் திரையானைக் கெவ்வுலகுந்
தானுமியைந் திருக்க வண்ட
னந்தாத விப்பெருமான் கரிமறைப
வளர்சா லிப்பழன நண்ணுங்
கொந்தாரும் பொழிற்றிருவெள் ளறைகுலவும்
புண்டரிகக் கண்ணன் கோடி 52

திரிந்திடலிற் றீம்பாலு பொருவாத
தேமொழியாய் திகழு மிந்த
வரிந்தகெடுங் கோதண்டன் வானரத்தால்
வல்லரக்கர் பதியைச் சுட்டுப்
பெருந்தசகண் டன்முதலா மவர்குலத்தை
வேர்பறித்துப் பிணைந்த சீதை
யருந்திருவுஞ் சயத்திருவும் புள்ளம்பூ
தங்குடிவா யலங்கி ராமன் 53

சஞ்சலையுங் கண்டொளியு மொழிலாயிச்
சலசவிழிச் சங்கரர் கைய
னஞ்செறியும் பலாசவனஞ் சூழ்திருப்பே
ரெனுநகரு ளனந்தன் மீதே

செஞ்சுவைய பூபவிறை கும்பத்துந்
திருமாநின் குயகும் பத்துங்
கஞ்சமலர்க் கரமனங்க ளமைத்துமுறை
துயிலப் பக்குடத்தான் கண்டாய் 54

கண்டுவரா னீரொளிக்கத் திகழ்கணைக்கா
லார்ந்த கருங்கண்ணா யிந்த
வண்டர்பிரா னுலகனைத்துந் திருவருளா
லளந்தளிக்கு முரக சாயி
யண்டர்களும் விழையாத னாரதிப
னண்டளிக்கு மையன் வேண்டி
லண்டியிவ ளோடரவத் தேதுயில
வம்புயமென் கரத்தைப் பற்றாய். 55

நீராமைக் குருளைமுது குறழுமிளம்
புறவடியாய் நிலவு மிந்தச்
சீராருந் திருமார்பன் றேரூந்து
ரெழுந்தருளுங் கோப னந்தக்
காராருங் கட்டழகன் சிறுபுலியூர்
கலந்தடியைக் கருது வோர்க்கே
பேரானந் தம்விளைத்துப் பிறங்கருமா
கடலமுத மென்னும் பேரான். 56

அறிவரிய தகையானை யாரணம்போ
னிலவுகையி னகன்ற கண்ணாப்
விறலரிய புட்கொடியிவ் விண்டுதிருச்
சேறையமரும் விமலன் பேரு
நறியசிசு நாயகனா நாடியிவ
ளடிமலரை நெடுநாள் பொன்னி
யறையவருந் தவமிழைத்தே யடையவரும்
பேறடைந்தா னென்ப மாதோ. 57

மாகந்தத் தளிர்நிறத்தா யிம்மாமன்
மண்ணமரர் மகஞ்செய் தூமம்
மேகங்க ளெனநாளும் வெயின்மறைக்குந்
தலைச்சங்க மெனுமூ தூரா
னரும்பேர் நான்மதியென் றுறைதரனு
மவள்வதனங் காங்க ளென்னு



மோகங்கொண் மரைமலரை மறைக்கவிவண்
முறுவலித்து மொழியும் பின்னும். 58

நின்முறுவ னிகர்த்திடவோர் நித்திலநான்
றுறுதவஞ்செய் நிலவு நாசி
மின்மதியார் முகமாதே யிப்பெருமான்
மிகுநலஞ்சார் குடந்தை தன்னுள்
வின்மணியோ ராயிரமாஞ் சுடரேந்தும்
பணியுடல வமளி மீதே
மின்மருவு விமலையுடன் மேகமெனத்
துயிலாரா வமுதன் கண்டாய் 59

வேறு

பொற்றா மரையலரும் பொய்கையரு கிப்புனிதன்
முற்றா முலையின்பம் பருகமுயங் கெனவிவளா
எற்றா வெனவிரவி கண்டசகோ ரங்கடுப்ப
மற்றா னியுநகையா மகிழ்ந்தமைய லுற்றனளால். 60

மானேயிம் மாமாயன் கண்டிநகர் மணந்து
மேனாள ரன்சாபந் தீர்த்தருளு மேன்மையினே
யானாவ ரன்சாபந் தீர்த்தபெரு மாளென்று
வானாட ரும்புகழ வாழ்வருளி வைகுவனால். 61

பொன்னேயிப் புண்டரிகக் கண்ணன்முன் மாவலியின்
மன்னே கிளர்செருக்கை மூவடியின் மாற்றியவன்
பின்னேதன் றாளடையச் செய்தபெரும் பேருடையான்
றன்னே ரருதிருவிண் ணகரப்பன் றானென்பான். 62

தேனேயித் திருவுறையுந் திருமார்பன் றேன்சொரியுங்
கானாரி ரும்பொழில்சூழ் கண்ணபுரத்தே யடியார்
நானாவி தம்பெருக நண்ணுசவு ரிப்பெருமா
னீனாறி ருங்குழலா யொண்ணுமெனி னேர்குறியால். 63

கண்ணேயிக் கண்ணபிரான் காரணப்பேர் நண்ணியவன்
பெண்ணேவெண் பாற்கடலின் பெரியதவ மிழைக்க
வுண்ணேய மோடிவனே யுவந்து தழுவியதால்
வண்ணேர் வயலாலி மணவாள னென்றிலகும். 64

நாகநக ரழக னங்காயிங் காரணனே
சாகரனா னுமணிக டரையென்னுந் தன்கரத்தின்

மேகவண னிவற்கு மிக்கசிறப் பாயுதவு
மாகுமெனி லுள்ளமலை கவிவனம் புயமே. 65

கோதாயிக் குழைகழலன் றிருநரையூர் நம்பியிவன்
மேதாவி யெனுமுனியு மிக்கவெழி லம்புயையும்
பாதார விந்தனைந் தாற்றும் படிவக்கல்
காதார மாயெழுந்தே யானந்தந் தந்துறையும். 66

கண்டேயிக் கட்டழக னந்திபுர விண்ணகரன்
பண்டே திருநகிலம் படிந்திடுசெஞ் ஞாழலுர
முண்டே சிவந்தனனென் றுரைக்கவிவள் வேறிருக்கை
கண்டேகக் காதலியு முறுவலித்துக் கழறுவளால். 67

இந்தி வரவிழியா யிந்தமது சூதனன்காண்
செந்தீ வளர்ப்பவர்கள் செழிதரிந்த ஞராள்வோன்
மைந்தா ரழகனிவன் மருவினிய வமைந்தனென்பான்
சந்தா ரினமுலையா யுள்ளமெனிற் சார்குவையே. 68

மின்னே டுறங்கு கரிமேக மெனப்பொங்கி
மன்னே நடம்புரிய நீலகண்ட மாலுடனே
பொன்னே பொருந்தவொளிர் சித்திரகூ டப்பெருமாள்
கொன்னுருஞ் தில்லைவனங் கூடுமிந்த மாதவனே. 69

காழிச் சீராம விண்ணகரக் காவலனிவ்
வாழிப் பெருமானவ் வையாயுத விமலன்
றூழற் கருங்குழலாய் தடவயல்சூழ் கூடலூர்
வாழப் பிறழ்வையங் காத்தபெரு மாளென்ப. 70

இம்மா திருக்கண்ணங் குடியினெழுந் தருளும்
பெம்மா னுயர்பார்த்த சாரதியென பேருடையா
னம்மா திருக்கண்ண மங்கையமர்ந் தருள்வோ
னம்மா வடைப்பத்த ராவியெனு நாமமுளான். 71

தாயே கபித்தலத்தித் தாமோ தரனொளிரு
மேயே ரபிதானங் கரிகாத்தோ னென்பதுவே
வீயே றலங்கலவன் வெள்ளியங்குடி யினிலகுஞ்
சேயேயின் கோதண் டராமனெனச் செப்புவரால். 72

ஓவியருந் தீட்டரிய பாவாயிவ் வுத்தமன்றன்
பூவடியை யன்பினருக் கன்றிப் புறத்தொருவர்



மேவ வருளாத மேலோன் றிருநாங்கூர்க்
காவல் புரிந்தருளுங் கார்வண்ணன் காணுதியே. 73

வேறு

காளமுகி லிடைபோழ்ந்து கிளரும் வல்லிக்
கனருசிபோற் சீமந்த நடுவே காணு
நாளலரி னறுங்குழலாய் பார்த்தன் பள்ளி
நன்மணிமா டக்கோயி லலமே நாடுங்
கோளமருந் திருத்தெற்றி யம்பலம் வைகுந்த
விண்ணகரஞ் செம்பொன் செய்கோ விலலு
நீளமறு கரிமேய விண்ணகர் வண்புரு
டோத்தமம் வெள்ளைக் குளமு மின்றே. 74

திருத்தேவ னார்தொகையே மணிக்கூ டம்மே
திருக்கா வளம்பாடி யெனுமின் னுமங்
தரித்தோங்குந் திருப்பதிக ளுங்கூ ருடே
தயங்குமிவை யிவற்றுளிருந் தாளத் தானே
விரித்தாரும் வெண்குடைக்கீழ் விளங்கு மிந்த
விண்டுதிரு மூர்த்திகளீ விழைந்து காண்கென்
றுரைத்தாளவ் வுரையுணரா தகன்று டிங்கனொண்
கலைவா னுகேணத்தைக் கடக்கு மாறே. 75

புவியாரும் வைகுந்தமெனு மரங்கப் பொன்னகரான்
போக மொன்றே விரும்பும் பூவை
சவியாருங் கனக கமலங்கண் மன்னுமான
தத்தைத்தனி விழைந்து செல்லுஞ் செஞ்சூட்
டவியாத வரசவன மிடையே காணுநீர்
நிலையாதி னகத்தி னடையா தாங்குத்
திவியா தனங்களிடைத் திகழு மாயன்றிரு
மூர்த்திகளை நசையா தகன்று வீங்கே. 76

அனுக்கிரகை மற்றுமுரை தருமாலன் னப்பேடு
மகன்றொழியு நடைய மைந்த பாவாய்
மினுக்கிடு மிம்மேக வணகத்தை விட்டு
நூபுரகங் கையினால மிடைந்த பாங்க
ரனைத்துலகும் புகழ்திரு மாலிருஞ் சோலைப்பே
ரம்மலையி னழகனிவன் மதுரை மூதூர்
தனைப்புரந்த முன்மலைத் துவசன் செல்வத்
தாணுமி யடைபவர்க் கைதருவு மாமே. 77

சுந்தரவல் லிகைதனக்குச் சுரக்குமின்பச் சுந்தரனு
மிவனு ரத்தை முயங்கு கென்னக்
கந்தமுறுங் குடிலா ளகையு நாணத்திற்
கமுகுநிகர் கந்தரத்தைச் சிறிது கோட்டி
யந்தமுறு மயன்மஞ்ச முவந்து கண்டா
ளவளுமுவந் தம்மணியிவ் வனங்கன் றந்தை
பந்தமுறுங் கோட்டி புரத்துரக மெல்லணைய
னென்று பனுவலெலாம் பகரு மாதோ. 78

அரவமணி மேகலையா யந்தவம்மா னழகாருஞ்
சவுமிய மாபு ரத்தே யானுங்
காகமலத் திருமெய்யன் காண்டி யிந்தக்
கட்டழகன் புல்லாணி யெனுமாதே யத்திரை
திரை யேழி ருங்கடலைக் கடகத் தூய வெழிற்
குசையின் சயனத்தே கிடந்த வீரன்
மரைமலர்க்கைக் கோதண்டந் தரித்தோ னென்ப
மற்றந்த மணிவண்ணற் காணாய் மாதே. 79

அவனரிய திருத்தண் காலதிப னிந்த
வழகனுமோ கூரொளிருங் காள மேகன்
இவன்மதுரை யுறைகூட லழக னுன்னை
யீன்றவர்க்கிர் திரையோடு மெதிரின் மின்னு
வுவர்புரி மங்களா சாசனங்க ளென்னு
மலாருச்சை யருள்பொழிந்தே யுவந்தான் முன்னர்
திவளொளிசே ரித்திருமால் வில்லி புத்தூர்
திகழ்வீதி யாரவரு வானே யன்றோ. 80

நடமாடு ஞமலிமுன்னீ சூடித் தந்த
நறுந்தெரியல் புனைந்திவ னன்றுளம் பூரித்தான்
குடமாடி யிவன்குருகைக் குலவுமாயன் பொலிந்து
நின்ற பிரானுமஞ் சடகோ பன்செய்
யிடமாரந் தமிழ்மறை யின்னமிழ்தந் தேக்கி
யெழிலுருவ நாடோறுஞ் செழிக்க வாழ்வோன்
வடமாடுந் தாள வனக்கனக கும்ப
வாரேறு பயோதரத்தாய் வழங்கக் கேண்மோ. 81

# ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

**வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான**
**ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்ரிகை.**

**வருஷச் சந்தா: ரூ. 3**
**தனிப் பிரதி: அணா 5**

## குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, ராமஸ்வாமிதெரு, மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டும்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர்களுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத்திலும் இரண்டாவது மூன்றாவது தேதிகளுக்குள்ளாகவே ஸஞ்சிகைகளெல்லாம் தபாலில் சேர்ப்பிவிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 5 அல்லது 6 தேதிகளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேராவிட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதை உடனே மானேஜருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாமலிருக்கும் சந்தாதாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தியாகராயநகர் போஸ்ட்,
மதிராஸ்.

**Registered No. M. 916.**

# Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Iudian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has immediately taken on hand the publication of a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is about to be issued.

Shares in the Company of Rs. 50 each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Iyengar, B.A., B.L. | *President* |
| " | K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate. | *Genl Secy.* |
| " | R. Kesava Iyengar., M.A., B.L. | *Exec: Secy.* |
| " | T.D. Sreenivasachari, M.A., B.L. | " |
| " | S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate. | *Treasurer.* |
| " | N.T. Shamanna, Solicitor. | *Director* |
| " | M. Sudarsana Iyengar, Merchant. | " |
| " | C.V. Venktaramana Iyengar, B.A , B.L. Coimbatore. | " |
| " | T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore. | " |

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.

ஸம்புடம் 23] JUNE 1935 [ஸஞ்சிகை 12

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

யுவஷு



வைகாசிமீ

PUBLISHED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha,

MADRAS.

ஸ்ரீ:

# விஷய ஸூசிகை.


1. ஸ்ரீ ஸ்துதி வ்யாக்யாநம்:—ஸ்ரீ, உப. வே.
டி. இ. சடகோபாசார்யர், அட்வோகேட், திருப்பாப்புலியூர்.] 725
2. ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்:—
ஸ்ரீ. உப. வித்வாந். ஜடா க்ருஷ்ண தாதாசார்யர்] ... 733
3 . வரதராஜ பஞ்சாசத்:—[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசாரியர்,
M. A. B. L. அட்வோகேட், திருச்சி.] ... 738
4. க்ரந்த விமர்சம்:— ... 745
5. ஸ்ரீ நம்மாழ்வார் ஸ்துதி:—
[திருக்குருகூர் ஸ்ரீ. உப. அ. தே. ராமாநுஜய்யங்கார்.] ... 746
6. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர்
ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 749
7. கடிதங்கள்:— ... 757
8. ஸம்பாதகீயம்:— ... 759
9. பரிகர விஜயம்:—[புத்தங்கோட்டகம் வித்வான்
ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்.] ... 139
10. ஸ்ரீ பஞ்சஸ்தவம்:— [ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர்] ... 85
11. திவ்ய ஸூரி சரிதம்:—
[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 139


---


ஸ்ரீ:

## ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி—
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற
ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ர
ஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின்
வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ரூ 0 8 0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை
யின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம்
வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய
வ்யாக்யாநத்துடனும் கூடியது ... ... ரூ 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தியாகராயநகர் போஸ்ட்,
மதிராஸ்.

ஶ்ரியை நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

# வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு 23] யுவ வைகாசிமீ [ஸஞ்சிகை 12

ஸ்ரீ:

## ஸ்ரீ ஸ்துதி வ்யாக்யாநம்

[ஸ்ரீ. உப. வே. டி. இ. சடகோபாசார்யர், அட்வோகேட், திருப்பாப்புலியூர்.]

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த முக்யமான பகவத் ஸ்தோத்ரங்களில் ஒன்றாகிய ஸ்ரீ ஸ்துதி இப்போது புதிதாய் நாகர லிபியில் பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிட் ஸ்ரீ. உப. அநந்தாசாரியரால் மிக லளிதமாயும் விசதமாயும் எழுதப்பட்ட தமிழுரையுடனும் சென்னை மாஜி. ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உ. வ. வே. ஸ்ரீநிவாஸ. ஐயங்காரால் எழுதப்பட்ட உபோத்காதத்துடனும் வெகு விமர்சையாய் மதராஸ் ஸம்ஸ்க்ருத புஸ்தகசாலைத் தலைவரால் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதை நான் ஸமீப காலத்தில் பார்வையிட நேர்ந்தது. இவ்வித ப்ரசுரங்கள் இக்காலத்தில் மிக்க உபயோகமானவை என்பதைப்பற்றி இது விஷயமாய் உபகார ஸ்ம்ருதியைத் தெரிவிக்கவேண்டியது கடமை என்று நினைத்தும் அவ்வுபோத்காதத்தில் தென்படும் சில அபூர்வ குணங்களால் மனஸ் ஆகர்ஷிக்கப்பட்டது காரணமாகவும் இதை நான் எழுதலானேன்.

58956



உபோத்காதத்தில் முக்யமாய் ஸ்ரீ தேசிகனுடைய கவிதா சக்தி நிரம்பவும் சலாகிக்கப்பட்டிருக்கிறதென்பது பொதுவாய் எல்லோருக்கும் புலப்படும். ஆனால் உபோத்காத கர்த்தா ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயஸ்தரானபடியால் "[illegible]" என்கிற லோக ந்யாயத்தை அநுஸரித்து ஸ்வாசார்ய ப்ரசம்ஸை இவர் செய்வது ஸஹஜமென்றும் அதனால் இவருடைய குருபக்தி ப்ரகாசமாகிறதே தவிர வேறில்லை என்றும் ஆபாத த்ருஷ்டிகள் நினைக்கலாம். ஆனால்,

"𑌕𑌾𑌚𑍋 𑌮𑌣𑌿𑌰𑍍𑌮𑌣𑌿𑌃 𑌕𑌾𑌚𑍋 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑍇 𑌹𑌿 𑌦𑍇𑌹𑌿𑌨𑌃 ।
𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌸𑍁𑌧𑌿𑌯𑍋 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌕𑌾𑌚𑌃 𑌕𑌾𑌚𑍋 𑌮𑌣𑌿𑌰𑍍𑌮𑌣𑌿𑌃 ॥"

என்று பல்லட மஹாகவியால் கூறப்பட்டபடி வஸ்து ஸ்திதியை யதாவத்தாய் பராமர்சிக்கத் தகுந்த அஸூயுக்களான புத்திமான்களுக்கு இவ்வுபோத்காத கர்த்தாவின் தேசிக பக்தி "[illegible]" என்கிறபடி ஸ்ரீமதாசார்ய க்ரந்தங்களின் குணாதிசய ப்ரேரிதமே தவிர கேவலம் ஆபிமாநிக மல்லவென்பது ஸ்பஷ்டமாகும். அதைக் கூடியவரையில் ஸங்க்ஷிப்தமாய் இங்கு ப்ரதர்சநம் பண்ண ப்ராப்தமாகும்.

இவ்வுபோத்காதத்தில் ஸ்ரீ தேசிகனுடைய காவ்யங்களில் சப்தாலங்கார பூர்த்தியும் அர்த்த புஷ்டியும் கலந்திருப்பதால் மஹா கவி காளிதாஸனுடைய க்ரந்தங்களைக் காட்டிலும் இவை ச்லாக்யதரமென்று கூறியிருப்பது நிரம்பவும் தீரமான நிர்ணயம் என்று பலர் அபிப்ராயப்படலாம். ஆனால் ஸ்தாலீபுலாக ந்யாயமாய் ரகுவம்சத்தில் முதல் ஸர்க்கத்தையும் அதன் ஸ்தானத்தில் உத்தேசிக்கப்பட்ட ஸ்ரீ யாதவாப்யுதயத்தில் முதல் ஸர்க்கத்தையும் ஒத்திடப் பார்த்தால் தடஸ்த புத்திகளுக்கு ஷை நிர்ணயம் அயுக்தமென்று தோன்றாது. இதற்கு இங்கு இரண்டொரு உதாஹரணங்கள் கூறலாம். ரகுவம்சம் முதல் ஸர்க்கத்தில் திலீப மஹாராஜனின் சரீர ஸௌஷ்டவத்தையும் பராக்ரமத்தையும்,

"𑌵𑍍𑌯𑍂𑌢𑍋𑌰𑌸𑍍𑌕𑍋 𑌵𑍃𑌷𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌃 𑌶𑌾𑌲𑌪𑍍𑌰𑌾𑌂𑌶𑍁𑌰𑍍𑌮𑌹𑌾𑌭𑍁𑌜𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌕𑍍𑌷𑌮𑌂 𑌦𑍇𑌹𑌂 𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮 𑌇𑌵𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ॥
𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌸𑌾𑌰𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌤𑍇𑌜𑍋𑌽𑌭𑌿𑌭𑌾𑌵𑌿𑌨𑌾 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑍋𑌨𑍍𑌨𑌤𑍇𑌨𑍋𑌰𑍍𑌵𑍀𑌂 𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑍇𑌰𑍁𑌰𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥"

என்று இரண்டு ச்லோகங்களில் காளிதாஸ மஹாகவி வர்ணித்திருக்கிறார். இதற்கு ஸமாநமான ப்ரகரணத்தில் யயாதியின் தேஹ ப்ரகர்ஷத்தையும் ப்ரபாவத்தையும்,



"[illegible] ।
[illegible] ॥"

என்று ஸ்ரீ தேசிகன் ஒரே ச்லோகத்தில் பாவ கர்ப்பமாகவும் த்வநி ப்ரதாநமாகவும் ஸங்க்ரஹித்திருக்கிறார். தவிரவும்,

"𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌨 𑌸𑌾𑌧𑍁 𑌸𑌰𑍍𑌵𑌂
𑌨 𑌚𑌾𑌪𑌿 𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 𑌨𑌵𑌮𑌿𑌤𑍍𑌯𑌵𑌦𑍍𑌯𑌮𑍍 ।
𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌤𑌰𑌦𑍍𑌭𑌜𑌨𑍍𑌤𑍇
𑌮𑍂𑌢𑌃 𑌪𑌰𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌨𑍇𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 ॥"

என்று காளிதாஸ கவி மாளவிகாக்நிமித்ரத்தில் சொல்லியிருப்பதை யாதவாப்யுதயத்தில் ஸ்ரீ தேசிகன்,

"[illegible]
[illegible] ॥"

என்று அக்லிஷ்டமாகவும், சுருங்கவும், ஸாராம்சத்தை எடுத்துக் காண்பித்திருக்கிறார். இவ்வகையில் இரண்டு கவிகளுக்கு தாரதம்யபாவம் ஸஹ்ருதய ஸம்வேத்யமாகும். ஆனால் இதைக்கொண்டே ரஸபரிதமான காளிதாஸ க்ருதிகளில் ந்யூநதா கல்பநம் பண்ணுவதாக ஒருவரும் அபிப்ராயப்படக் கூடாது.

"𑌅𑌥𑌵𑌾 𑌕𑍃𑌤𑌵𑌾𑌗𑍍𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 𑌵𑌂𑌶𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌰𑌿𑌭𑌿𑌃 ।
𑌮𑌣𑍌 𑌵𑌜𑍍𑌰𑌸𑌮𑍁𑌤𑍍𑌕𑍀𑌰𑍍𑌣𑍇 𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑍇𑌵𑌾𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌗𑌤𑌿𑌃 ॥"

என்கிறபடி ஸ்ரீ வால்மீகி பகவானுடைய ஆதிகாவ்யத்தையே காளிதாஸ மஹா கவி மனதில் அநுஸந்தித்துக்கொண்டு ததநுஸாரேண சப்தாடம்பரமில்லாத வைதர்ப்ப ரீதியை அவலம்பித்து தமது ப்ரபந்தங்களை ஸ்வபாவோக்தி ப்ரதாநமாகவும் ரஸாத்மகமாகவும் நிர்மாணம் செய்திருக்கிறார் என்பது ப்ரேக்ஷாவத் வேத்யம். பிற்காலங்களில் கவிகள் சப்தாலங்க்ருதியிலும் வசந வைசித்ர்யத்திலும் அதிகமாக ஈடுபட்டு அதனால் அர்த்த புஷ்டிக்கும் ரஸ பௌஷ்கல்யத்திற்கும் குறைவு ஏற்பட்டதால் சப்தாலங்கார பூர்த்திக்கும் அர்த்த ஸம்ருத்திக்கும் பரஸ்பராநுகூல்ய மில்லையோவென்று சங்கிக்க இடமுண்டாயிற்று. இந்தச் சங்கைக்குக் கொஞ்சமும் அவகாசமில்லை என்று காண்பித்து சப்தாலங்காரங்கள் அர்த்தத்துக்குப் போஷகங்

தனே தவிர, பாதகங்களல்ல வென்பதை ப்ரதிஷ்டாபநம் பண்ணுவதற்காகவே ஸ்ரீ தேசிகனுடைய க்ரந்தங்கள் ப்ரவர்த்தித்தவை போலும்.

மேலும் “பின்னருசிர்ஹி லோக:” என்கிற ந்யாயப்படி காளிதாஸ கவிக்கு வைதர்ப்பரீதியிலும் ஸ்ரீ தேசிகனுக்கு கௌடரீதியிலும் அபிருசி ஏற்பட்டதால் அவரவருடைய வாக்ப்ரவ்ருத்திகள் வெவ்வேறாக அமைந்தனவென்றும் நிர்வஹிப்பது யுக்தமாகும். ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் “ஸ்வாது ப்ரவஹது வாசாம் ரீதிர்கௌடீ ரஸாவஹா”

என்று ஆசார்யன் தாமே கௌடரீதியை ப்ரதமம் நிர்த்தேசித்ததால் தமக்கு அதில் நோக்கம் அதிகம் என்று ஏற்படுகிறது. அவரவர்கள் காலங்களில் பஹுஜனங்களுக்கு ஸாதாரணமாய் ஏற்பட்டுள்ள ருசி பேதமும் இவ்வகையான வ்யத்யாஸங்களுக்கு நிபாமகமாகும். தவிரவும், ஸ்ரீ தேசிகனுக்குக் காளிதாஸ கவியினிடம் விசேஷ பஹுமானமிருந்தும், அவருடைய ப்ரபந்தங்களில் ச்ருங்கார ரஸமே ப்ரதானமாயிருப்பதாயும் பரதேவதா விஷயமாய் விப்ரபத்தியிருப்பதாலும் தத்வஹித புருஷார்த்தங்கள் ப்ரதிபாதிக்கப்படாமையாலும் “காவ்யாலாபாம்ஶ்ச வர்ஜயேத்” என்று தர்ம சாஸ்த்ரங்களில் வர்ஜநீயமாய்ச் சொல்லப்பட்ட கோடியில் சேர்ந்தவைகளாகவே சாஸ்த்ர பரவசர்களான தத்வவேதிகள் அவைகளை விலக்க நேரிடுமென்று நினைத்து, ஸாத்விகர்களான முமுக்ஷுக்களுக்கு உபஜீவ்யமாய் ஸர்வசாஸ்த்ரார்த்தங்களையும் லளிதமாயும் ப்ரியமாயும் ஸங்க்ரஹமாயும் தெரிவிக்கக் கூடிய காந்தா ஸம்மிதோபதேசமென்பதை ஸம்பூர்ணமாய் அர்த்தவத்தாக்கத்தகுந்த காவ்யங்களை நிர்மாணம் செய்து, தம் திருவடி ஸம்பந்தம் பெற்ற மஹா பாக்யசாலிகளான ஸத்ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு படந பாடநோபயோகங்களுக்காகவும் நித்யாநுஸந்தானத்துக்காகவும் தத்வஹித புருஷார்த்தங்கள் விஷயத்தில் எளிதில் நிச்சய ஜ்ஞானத்தைத் தரக்கூடியதாயும் பகவத் பக்தியைப் பெருக்குவதும் பரதேவதா ஸ்வரூப நிர்ணய முண்டாக்கக் கூடியதுமான காவ்ய நாடக ஸ்தோத்ராதிகளான திவ்ய ஸூக்திகளைத் தமது சாஸ்த்ர க்ரந்த மந்திரத்தின் ஸ்வர்ண விமானம்போல ஸ்ரீமதாசார்யன் பரம காருண்யத்துடன் அநுக்ரஹித்தானென்று தோன்றுகிறது. இவ்விதமான அபிப்ராயங்களை எல்லாம் வைத்துக்கொண்டே உபோத்காத கர்த்தா ஸ்ரீ தேசிகனுடைய கவிதா ப்ரக்ரியை அந்யாத்ருசமென்று கொண்டாடியிருக்கிறார்.

இப்படி நமக்கு தாரகமாயும் போஷகமாயும் போக்யமாயுமிருக்கிற ஆசார்ய திவ்ய ஸூக்திகளை எல்லோரும் ஆதராதிசயத்துடன் அத்யயநம் பண்ணவில்லையே யென்று உபோத்காத கர்த்தா சோகித்திருப்பது தத்வ



வித்துக்களுக்கு அத்யந்தம் ஹ்ருதயங்கமமாகும். அவர் சொல்லியிருப்பதுபோலவே இவ் வைபரீத்யத்துக்கு முக்ய காரணம் ஸ்ரீ ஸ்வாமி, அபீதிஸ்தவத்தில்,

“விமதிரபி ஸ்யாத் ஸ்வதேஶே சேதேக்ஷுபாக:”

என்று கூறியபடி ஆசார்ய க்ரந்தங்கள் எவ்வளவு ரஸவத்தாக இருந்தபோதிலும் பவௌஷதமென்கிற கணக்கிலே மருந்தைக்கொண்டு விரைந்தோடும் பாலரைப்போல் ஜாயமான கடாக்ஷம் பெறாத அஸாத்விக பாரிசர்களுக்கு அவைகளில் ஸ்வாபாவிகமாய் உத்வேகமோ அல்லது ஔதாஸீந்யமோ ஏற்படுவதுதான்.

இது தவிர, ஸ்ரீ தேசிகன் க்ரந்தங்களில் ஸாதாரணதிகாரிகளின் க்ரந்தங்களிற் போல் குண தாரதம்யத்தைக் கொண்டு ‘இது பூர்ண பரிபாகமில்லாத பால்யாவஸ்தையில் பண்ணப் பட்டது’‘இது ப்ரபுத்த தசையில் பண்ணப்பட்டது’ என்று கால நிர்ணயம் பண்ண இடமில்லை யென்று உபோத்காதத்தில் சொல்லப்பட்டிருப்பது ஓர் முக்கியமான விஷயம். “தேஜஸாம் ஹி ந வய: ஸமீக்ஷ்யதே” என்று ஸ்ரீ தாசரதி விஷயத்தில் கவி கூறினவாறு, ஸ்ரீ தேசிகன் “விஜ்ஞாநவாந:” என்று ஶ்ருதிகளால் கொண்டாடப் பெற்ற பகவானுடைய விலக்ஷணமான ஜ்ஞாநாவதாரமாகையால் அவரது க்ரந்தங்கள் ஒவ்வொன்றிலும் ஸம்பூர்ணமான மேதாவிலாஸம் அமைந்திருப்பது தத்வஜ்ஞர்களுக்கு அநுபவஸித்தமாகும்.

மேலும், ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்ரங்கள் மந்த்ர ரூபங்களென்றும் அவைகளில் கூறப்பட்டுள்ள பல ச்ருதிகள் கேவலம் ப்ரரோசநார்த்தமின்றிக்கே அநுபவவேத்யமேயென்றும், உபோத்காதத்தில் சொல்லியிருப்பது தத்வார்த்தமே தவிர அர்த்தவாதமல்லவென்றும் அநுபவசாலிகளுக்குப் புலப்படத்தக்கதே. உபோத்காத கர்த்தா இதைச் சொல்லியிருக்கும் ப்ரகாரத்தாலேயே இது ஸ்வாநுபவத்தைக் கொண்டு சொல்லப்பட்டதென்பதும் விளங்கும். வேதாத்மாவாகிய பெரியதிருவடியின் மந்த்ர விசேஷத்தை யதாக்ரமம் ஆசார்யமுகேன உபதேசிக்கப் பெற்று அதனை அவரது திவ்ய நதீதீரத்தில் ஸ்ரீ தேவநாதனுடைய திவ்ய க்ஷேத்ரத்தில் ஆவ்ருத்திசெய்து ஸித்திபெற்று தனுபதிஷ்டமான ஸ்ரீ ஹயக்ரீவமந்த்ர ஜபத்தால் தததநுக்ரஹமும் அநவரத ஸாந்நித்யமும் பெற்ற ஸ்ரீமதாசார்யன் திருமுகத்திலிருந்து வெளிப்பட்ட வசனமென்றும் “நமே வாகந்ருதா பூதா” என்பது போல் அஸத்யமாக மாட்டாதென்றும் நிச்சயத்துடன் ப்ரதிஜ்ஞை செய்யத்தகும். . ஸ்வ

ரூபமான வாக்யாநுபூர்விகளுக்கும் மந்த்ரசக்தியமையும் என்பதற்கு ஸ்ரீமத் ராமாயணாதிகளே நிதர்சநம்.

இவ்வாறு பஹுப்ரகாரமாய் பூதார்த்த வர்ணந க்ரமத்திலிருந்து, சிறிதும் வழுவாது ஸ்ரீமதாசார்யனுடைய கவிதாமஹிமையை ப்ரசம் ஸித்துப் பிறகு ப்ரக்ருதமான ஸ்ரீஸ்துதியைப்பற்றி உபோத்காதத்தில் சொல்லத்துடங்கி முதலில் இருபதினோர்துச்லோக ரூபமான மஹா ரத்நங்களால் அமைக்கப்பட்டு ஜகந்மாதாவுக்கு உபஹாரமாக ஸமர் ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த ஸ்தோத்ரமாலையில் மத்யம ச்லோகமாகிய லக்ஷ்மீ பட்டாபிஷேகத்தை வர்ணிக்கும் பதின்மூன்றுவது ச்லோகம் நடுநாயகம் போல் விளங்குகிறதென்றும் இது ஆசார்யனால் பஹுமானத் துடன் ஆக்கமைக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறியிருப்பது ஒரு சிறந்த தத்வம். ஸாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தமான திவ்ய ஸித்தாந்த ஸித்தாந்தத் தில் எம்பெருமானை ஸ்தோத்ரம் பண்ணியிருக்கும் ஆசார்யர்கள் எல்லோ ரும் பிராட்டியை முதலில் ஸ்தோத்ரம் செய்தே இருக்கிறார்கள். அந்த க்ரமத்தில் ஆளவந்தார் சதுச்லோகியும் கூரத்தாழ்வான் ஸ்ரீஸ்தவமும் ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீகுணரத்நகோசமும் அருளிச்செய்திருக்கிறார்கள். ஆ னால் இவையொன்றிலும் லக்ஷ்மீபட்டாபிஷேகம் விசிஷ்ய கூறப்படாததைக் கண்டு அக்குறை தீர்க்க ஸாரதம க்ரஹண சதுரராளவாசார்யன் அதனைத் தமது ப்ரபந்தத்தில் ப்ரதாநமாயமைத்து இந்த ஸ்தோத்ரத்துக்கு ஒரு வைலக்ஷண்யத்தை யுண்டாக்கியது போலும்.

“[illegible]” என்கிறபடி பெருமாள் சக்ரவர்த்தித்திருமக னாயவதரித்தபோது பிராட்டியும் நிலமகளான ஸீதாதேவியாயவதரித்து த்ரைலோக்ய கண்டகனாந ராவணனின் ஸம்ஹாரத்திற்குப் பிறகு தமது பர்த்தாவுடன் ஏகாஸநத்தில் வஸிஷ்டாதி மஹர்ஷிகளால் வாநர வீரர் கள் கொண்டு வந்த புண்யதீர்த்தங்களைக் கொண்டு அபிஷேகம் செய்யப் பட்டதை விட, ஸமுத்ர தநயையாய் ஆவிர்பவித்த இவ்வவஸரத்தில் பர்த்தாவின் கண்ணெதிரில் ஸ்வயம் ஸந்நிஹிதர்களான கங்காதி மஹா நதிகளின் ஜலங்களை திக்கஜங்கள் கநக கலசங்களில் எடுத்து அபிஷேகம் பண்ணப்பெற்றதும், ததநந்தரம் லோகத்ரயத்தையும் குளிரக்கடாக்ஷித்த வுடன் துர்வாஸஸ் சாபம் நிவ்ருத்தமாய் லோகங்கள் செழித்தோங்கியது விசேஷமுள்ளதென்று ப்ரதர்சநம் பண்ணியதுபோலும்.

இந்த ஸ்தோத்ரத்தில் ஒவ்வொரு ச்லோகத்திலும் குணங்கள் ஸ பூர்ணமாய் அமைந்திருப்பதுடன் இவை எல்லாவற்றின் ஸமுதாயசோபை ஒரு திவ்யரத்நமாலையின் காந்தியைப்போல விளங்குகிறதென்று உபோ



காதத்தில் கூறியிருப்பதும் அதை உபபாதிப்பதற்காக ச்லோகங்களின் அநுபூர்வமான அமைப்பு “ஸோஸொ ஸாவம் [illegible] விஷயாநு” என்று கவி சொன்னபடி ஒன்றோடொன்று ஸம்ச்லிஷ்டமாயிருக்கும் லெள பாக்ய விசேஷத்தை நன்றாக எடுத்துக்காட்டியிருப்பதும் ஸஹ்ருதயர் களுக்கு பஹுமாநபதமாகும்.

இந்த ஸந்தர்ப்பத்தில் முக்யமாய் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கதாகும்.

“[illegible]”

என்கிற மஹர்ஷி ஸம்ப்ரதாயத்தை யதாவத்தாய் ஒவ்வொரு க்ரந்தத்தி லும் ஸ்ரீ தேசிகன் அநுஸரிப்பது தத்க்ரந்த பரிசயமுள்ளவர்களனைவருக் கும் வேத்யமாகும். அப்படியிலே இந்த ஸ்தோத்ரத்திலும் முதல் ச்லோ கத்தில் ஸங்க்ரஹமாய் ஸூசிப்பிக்கப்பட்ட விஷயம் பின் வரும் ச்லோகங் களில் விஸ்தரிப்பது கண்டு கொள்ளத்தகும். “[illegible]” என்று ஸூசிப்பிக்கப்பட்ட அவாங்மநஸ கோசரமான பிராட்டி யின் பரத்வம், சதுச்லோகியின் ப்ரதமச்லோகத்தை அநுஸரிக்கும் “[illegible]” இத்யாதியான இதன் இரண்டாவது ச்லோகத் தில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. பிறகு, மூன்றாவது ச்லோகத்தில் “[illegible]” என்கிற விசேஷணத்தின் அர்த்தமாகிய ஸர்வச்ரே யஸ்கரத்வம் விவரிக்கப்பட்டிருக்கிறது. பிறகு நான்காவது ச்லோகத்தில் “[illegible]” என்கிற விசே ஷணத்தின் அர்த்தம் விசதீகரிக்கப்பட்டிருக்கிறது. பிறகு ஐந்து ச்லோ கங்களால் திவ்ய தம்பதிரூபமாய் நிற்கும் பர தத்வத்தின் ஸ்வரூபமும் அவர்களிருவருக்குமுள்ள ஸம்பந்த விசேஷமும் ஸாமரஸ்யமும் ப்ரதி பாதிக்கப்படுகின்றன. பிறகு, பத்தாவது ச்லோகத்தில் விபவாவதாரங்க ளில் லக்ஷ்மியின் ஆவிர்பாவத்தை வர்ணித்து பதினொன்றுவது ச்லோகத் தில் சதுச்லோகியின் நான்காவது ச்லோகத்தில் வர்ணிக்கப்பட்ட திவ்ய தம்பதிகளின் திவ்ய மங்கள விக்ரஹங்களின் ஆநுரூப்யமாகும் அவிநா பாவமும் ப்ரதிபாதிக்கப்படுகிறது. பன்னிரண்டாவது ச்லோகத்தில்,

“[illegible]
[illegible]”

என்று பராசர பகவான் அருளிச்செய்தபடி லோகத்தில் ஸ்திரீத்வாவச் சிந்நமான வ்யக்திகளெல்லாம் பிராட்டியின் விபூதிகளென்பது ஸூசிப் பிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ச்லோகத்தில் க்ஷீராப்தியிலிருந்து ஆவிர் பாவமும் பட்டாபிஷேகமும் வர்ணித்து பிறகு பிராட்டியின் அநுக்ர

ஹத்தால் அப்போது ஜகத்துக்கு ஏற்பட்ட க்ஷேமத்தை வர்ணித்துப் பிறகு, அவ்வித க்ஷேமம் அப்போது மாத்ரமல்ல இப்போதும் லக்ஷ்மீ கடாக்ஷம் ப்ரஸரிக்குமிடமெல்லாம் உண்டாகுமென்பது கூறப்படுகிறது.

இந்த ப்ரஸங்கத்தில் ஸ்ரீ பகவத் கீதையில் பகவத் பக்தர்களை "ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்தீ ஜ்ஞாநீ ச" என்று நான்கு வகையாய் பிரித்துக் கூறியது போல் பிராட்டியின் பக்தர்களையும் அவ்வாறே நான்கு வகையாகப் பிரித்து அவரவர் மநோரத ஸித்தியை அடையும் ப்ரகாரத்தை மேல் நாலு ச்லோகங்களில் ப்ரதிபாதநம் பண்ணி அம்முகமாய் இவ்ய தம்பதியின் ஸாமரஸ்யத்தையும் விபுத்வத்தையும் ப்ரகாராந்தரேண ஸ்தாபிக்கிறார். இதுவே "ஸ்வத்யக்ஷாந்தஸ் ஸகலவிபவோத்பத்திஸ்வாயிநீநாம் ஸ்வாஜாநாம் ச்ரேயஸா ஸமித்யம்"

என்கிற விசேஷணத்தின் விவரணமாகும். இந்நான்கு பக்தர்களுள்

"தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர் விசிஷ்யதே"

என்று சொன்னபடியை

"ஸ்ரேநேத்ய விஷ்ணோ ஸ்தவ ச க்ருதிந: ஸ்ரீமதோ ஸஜ்ஜநா:"

என்று அநுவாதம் பண்ணி அம்மாதிரி ஸ்வயம் ப்ரயோஜநமாகக் கைங்கர்யம் பண்ணுவதே தமக்கபிமதம் என்பதை பின்வரும் ச்லோகங்களில் நிகமநம் பண்ணுவதால் முதல் ச்லோகத்தில்

"ஸ்ரியஸ்சரணத்வாம் சரண்யாம் ப்ரபத்யே"

என்று ஸூசநம் பண்ணுவதை வ்யக்தமாக்குகிறார்.

இவ்விதமாக ஸ்ரீமதாசார்யன் ஜகந்மாதாவை ஸ்தோத்ரம் செய்திருக்கும் க்ரமத்தைப் பராமர்சித்தால் எல்லாருக்கும் மேலாக தமக்கு ஒரு விச்வாஸ தார்ட்யமும் வாத்ஸல்யமும் திவ்ய தம்பதிக்களிடமிருப்பதை ஆவிஷ்கரித்திருப்பது ஏற்படுகிறது. இதுவும் "நித்யா யஸ்ய தஸ்ய ஜநநீ தயா தேவி தேவ:" என்று ஸாதித்திருக்கிறபடி தாம் ஸதாசார்ய கடாக்ஷத்தை ஸம்பூர்ணமாய் பெற்று தந்முகமாய் திவ்ய தம்பதியின் திருவடியில் ப்ரபத்தி பண்ணதால் பரம பலமாகிற நிரபாய தத்பாதஸேவை தமக்கு ஹஸ்தகதமென்கிற ப்ரத்யய விசேஷத்தால் உண்டானது என்பது வ்யக்தமாகிறது. இப்படி ஸ்ரீமதாசார்ய க்ரந்தத்தின் ரஸத்தை யதாவத்தாய் ஆஸ்வாதம் பண்ணி தத்பரீவாஹமாக இவ்வுபோத்காதத்தை எழுதியிருக்குமவர் விஷயத்தில் அபிஜ்ஞர்கள் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் பண்ணத்தகும்.

ஸ்ரீ:

# ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்

(ஸ்ரீ. உ.ப. வித்வான். ஐயா. க்ருஷ்ண தாதாசார்யர்.)

[ஸஞ்சிகை-11, 708-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த ராமசாஸ்த்ரிகளிடத்திலே தானே தர்க்கசாஸ்த்ர மதிகரித்து வந்த அநந்தாழ்வான் என்கிற ஒரு வித்வான் அந்த சாஸ்த்ரிகளோடு விவாதப்பட்டு ஸ்வதந்த்ரராய் பாட ப்ரவசநம் செய்துகொண்டு சதகோடிக்ரந்தத்துக்கு ப்ரதிகோடிக்குக் கண்டநமாக 'சதகோடி கண்டநம்' என்று ஒரு க்ரந்தமெழுதி சாஸ்த்ரிகளுக்குமனுப்பி ஸ்ரீ ஸ்வாமிகளுக்குமனுப்பிவித்தார். அந்த கண்டநத்திலே சதகோடி நிஷ்க்ருஷ்ட கல்பத்தின் மேலே ஒரு தோஷமும் சொல்லவில்லை யாதலால் சாஸ்த்ரிகள் அந்த க்ரந்த கண்டநோத்யோகமொன்றும் செய்யவில்லை. ஸ்ரீ ஸ்வாமியும் சாஸ்த்ரிகளுடைய வாக்மித்வத்தை ஸம்யக்காக அறியவேணுமென்றும் திருவுள்ளத்தாலே,

சதகோட்யுக்ததோஷா யோஸ்வநா நிஷ்க்ருஷ்டோத்யோதபஹவிதா விபச்சித: | தத்ர ப்ராஸாதபோஷம் ஸ்ருமதே ஸ்ரீ க்ருஷ்ண தாதா சார்ய: ॥

என்று ப்ரதிஜ்ஞை செய்து நிஷ்க்ருஷ்ட கல்பத்தை அந்த க்ரந்த ரீதியிலேதானே கண்டநம் செய்து சாஸ்த்ரிகளுக்கும் அநந்தாழ்வானுக்குமாக இரண்டு கோசம் எழுதியனுப்பினார். அநந்தாழ்வானும் அதைப் பார்த்து ப்ரீயப்பட்டு ச்லாகித்து ப்ரசம்ஸாபத்ரமனுப்பினார். சாஸ்த்ரிகள் மாத்திரம் கொஞ்சம் அஸூயைகொண்டு நேரில் வாதம் செய்து பங்கப்படுத்தவேணுமென்று மநோரதித்திருந்தார்.

ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸ்ரீபாஷ்ய நிர்வாஹங்கள் ஸாக்ஷியானவுடனே ரஹஸ்ய க்ரந்தங்கள் ஆரம்பிப்பதாக உத்யோகிக்கும்போது தம்மாசார்யர் கோயிலிலே பெரிய பெருமாளைத் திருவடித் தொழவேணுமென்று திருவுள்ளம் கொண்டு புறப்பட ஸ்ரீ ஸ்வாமியும் ஆசார்ய பரதந்த்ரராய் அநுயாத்ரையாக எழுந்தருளி கோயிலிலேதானே சில காலம் எழுந்தருளியிருந்து ரஹஸ்ய க்ரந்தங்களை எல்லாம் ஸமக்ரமாக ஸேவித்து ஆசார்ய நியமநத்தின் மேலே திருச்சேரை டோதர் ஸ்வாமி ஸந்நிதியில் ஆழ்வார் அருளிச்செயல்களையும் பிள்ளையந்தாதியுள்பட ஸ்ரீ தேசிக ப்ரபந்தங்களையும் ஓதி, ஆசார்யர் ஸந்நிதியிலே திருப்பல்லாண்டு கண்ணிநுண் சிறுத்தாம்புகளுக்கு திருக்குருகைப் பிரான் பிள்ளான் பராசரஸ்வாமி இவர்களருளிச்செய்த வ்யாக்யாநங்களையும், பகவத்விஷயம் திருவாறாயிரப்படி முதலாக பதினெண்ணாயிரம் இருபத்திநாலாயிரம் ஒன்பதினாயிரம் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி ஸாரம் இவைகளையும், வண்ணமாடங்கள் சூழ் தொடக்கமாக மற்ற மூவாயிரங்களுக்கு அருளிச்செய்த ஸ்ரீ பரகால ஸ்வாமி வ்யாக்யாநத்தையும் யதாக்ரமமாக காலக்ஷேபம் செய்தருளினார்.

ஸ்ரீரங்கம் ஸ்வாமி தம் திருவடிகளை ஆச்ரயிக்கும் ஸாது பரமைகாந்திகளை, சாரீரக ஸூத்ரம் ஸ்ரீ பகவத்கீதை ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் பரமபத ஸோபானம் இவை முதலானவைகளை அவரவர் புத்த்யநுகுணமாக வாசோவித்யமாக்கிக் கொள்ளும்படி நியமிப்பது வழக்கம். அவர்களும் நியமனப்படி செய்வதுமுண்டு. ஒரு நாள் ஸாது பரமைகாந்தி ஸ்வாமிகளிவர் பகவத்கீதையை வாசோவித்யமாக்கிக் கொண்டு அநுஸந்தித்து வரும்போது பாடத்திலே பரஸ்பர ஸ்பர்தையோடே விவாதப்பட்டுக் கொண்டு, பகவத் விஷய காலக்ஷேபத்தில் 'ஆடி ஆடி' அவதாரிகையை அதிபோக்யமாக ஸ்ரீரங்கம் ஸ்வாமி அருளிச் செய்துகொண்டிருக்கும்போது, குறுநாவத்தி வீரபட்டு ஸ்வாமிமுதலானோர் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருக்க அவ்விருவரும் வந்து தண்டம் ஸமர்ப்பித்து "ரேகேவா, மேகேவா" என்று கேட்க, எல்லாரும் குறுநாவ பரதையாலே ப்ரத்யுத்தரம் பண்ணாமலிருக்க, புனச்ச அவர்களிருவரும் மூன்று தரம் கேட்க அந்த ஸ்வாமியும், இதென்ன? என்று குறுநாவ விச்சேத சங்கையால் கொஞ்சம் சிறியருள அவர்களுமதறியாதே புனச்ச கேட்க, ஸ்ரீ ஸ்வாமியும் இவர்கள் இதை நிவ்ருத்தித்துக்கொள்ளாமல் போகார்களென்று கொண்டு கொஞ்சம் மந்தஹாஸத்துடனே 'ரேகே தான் எழுந்தருளலா'மென்ன, அவர்களிலொருவர் தமக்கநுகூலமாயிருந்ததென்று மற்றொருவர் கையைப் பிடித்து அத்யுத்ஸாஹத்தோடே இழுத்துக்கொண்டு வந்தார்கள். அப்போது ஸ்ரீரங்கம் ஸ்வாமியும் "இவாள் கேட்டது என்ன? அதற்கு நீர் உத்தரம் சொன்னது என்ன? ஒருவர் உத்ஸாஹத்தோடே மற்றொருவரை பிடித்திழுத்துக் கொண்டுபோகிறீரே! உங்களுக்குத் தனியே ஒரு பாஷையிருக்கிறதோ?" என்று கேட்க, ஸ்ரீ ஸ்வாமியும்,

"வ்யவஸாயாத்மிகா புத்திரேகேஹ குருநந்தந"

என்கிற ச்லோகத்திலே இவர்களுக்கு விவாதமிருக்கலாம். 'புத்திரேகேஹ' என்று ஒருவர், 'புத்திமேகேஹ' என்று மற்றொருவர் கொண்டு இவ்விஷய விசாரம். குருநாவத்திற்கு ப்ரதிபந்தமாக இருக்குமென்று நினைத்து அடியேன் அவாளுக்குச் சொன்னேன் என்று அருளிச்செய்ய, இதெப்படி அறிந்து கொண்டது? என்று ஆச்சர்யப்பட்டு, இதை மூதலிப்பித்துக் கொள்ளவேணுமென்று திருவுள்ளமாய், அவ்விருவரையும் வரவழைத்து விவாத விஷயத்தைக் கேட்க, அவர்களும் ஸ்ரீ ஸ்வாமி அருளிச்செய்தபடியே 'வ்யவஸாயாத்மிகா' என்கிற ச்லோகத்திலே தங்களுக்குண்டான பாட விவாதத்தைச் சொல்ல "ரேகேஹ தான், போங்கள்" என்று அவ்விருவருக்கும் அருளிச்செய்து விடைகொடுத்தனுப்பித்து விட்டு ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரதிபையைப் போரக் கொண்டாடி, அதற்கொரு தீங்கில்லாமல் நம் பெருமாளன் வ்ருத்தி பண்ணிவைக்க வேண்டுமென்று மங்களாசாஸனம் செய்தருளினர். பின்பு கொஞ்ச காலம் ஸ்ரீ ஸ்வாமி தம்மாசார்ய ஸ்ரீ பாதத்திலேதானே வஸித்திருந்து பிறகு பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளினர்.

அப்போது ஸ்வாமிக்கு இருபத்தைந்து திருநக்ஷத்திரம். அனந்தரம் ஸ்ரீரங்கம் ஸ்வாமி திவ்யதேசயாத்ரையாக வெழுந்தருளி திருநாராயணபுரம் செல்வப்பிள்ளை யதுகிரி நாச்சியார் திருவேங்கடமுடையான் முதலானோரை மங்களாசாஸனம் செய்தருளி மறுபடி பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளி மூன்றாச்ரமத்திலேதானே இருந்து ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்திருக்கையில், மைஸூர் - ராமசாஸ்திரிகள் பெரிய காஞ்சீபுரம்



வந்து ஸ்ரீ ஸ்வாமியினுடைய பாட ப்ரவசன ரீதியையும் வாக்யார்த்தம் சொல்லும் ஸாமர்த்தியத்தையும் அங்கு தத்காலம் இருக்கும் வித்வான்களைக் கொண்டு விசாரித்து 'மஹாமேதாவி' என்று அறிந்து, அவராகவே வாதத்துக்கு வந்தால் ப்ரதி சொல்லுவோமென்று நினைத்து ஏகாம்பரேச்வரர் கோவிலுக்குள்ளிருக்கும் ஆயிரக்கால் மண்டபத்திலே அங்குள்ள அத்வைதிகளைச் சேர்த்துக் கொண்டு 'சிவ பாரம்யம்' ஸாதிப்பதாக உத்தேசித்து, நாராயண பத ப்ரதிபாத்யன் பரதேவதை என்று கொண்டு அந்த நாராயண பதம் சிவபரம் என்று நவீன ப்ரக்ரியையாலே சிலகோடி என்று க்ரந்தமொன்றெழுதி ப்ரஸங்கிக்க, அங்கே தத்காலம் போயிருந்த கொண்டங்கி திருமலை தாதாசார்யரென்பவர் ஸமாதானம் சொல்ல, ருஜு மார்க்கத்தாலே இவருக்கு ஸமாதானம் சொல்லாதே வாகாடம்பரம் பண்ண, வ்யாகரண வித்வானாயிருந்தவிவர் தூஷ்ணீம் பூதராயிருக்க, அங்கிருந்த மற்ற ஸ்ரீ வைஷ்ணவர்கள் இது ஸஹியாமல் ஸ்ரீரங்கம் ஸ்வாமி ஸந்நிதிக்கு வந்து சாஸ்த்ரிகள் வ்ருத்தாந்தத்தை விண்ணப்பித்து 'நம் ஸம்ப்ரதாயத்துக்கு ரொம்ப க்ஷேப மூண்டாயிற்று. இதை நிரஸிக்கத் திருவுள்ளமாக வேணும்' என்று ப்ரார்த்திக்க அந்த ஸ்வாமியும் ஸ்ரீ ஸ்வாமியைப் போய் அவனை நிரஸித்து பகவத் பாரம்யத்தை ஸ்தாபித்து வாரும் என்று நியமிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் சிவாலயத்திலெப்படிப் போய் நிரஸிக்கிறதென்று விஜ்ஞாபிக்க, அந்த ஸ்வாமியும் மந்தஹாஸத்தோடு பகவத் பாரம்யத்தை ஸ்தாபிப்பதற்காக ஸாக்ஷாத் ச்மசானமாயிருந்தாலும் போவது பகவத் கைங்கர்யமானபடியால் அவச்யம் போய் ஸ்தாபித்து வாரும் என்று நியமித்து, ஸ்ரீ ஸ்வாமியோடே தானே மத்துள்ள தம் ஸ்ரீ பாதத்து முதலிகளையும் மற்றுமவ்வூரிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவ பண்டிதர்களையும் போகும்படி நியமிக்க, அளஜூர் ராஜகோபாலாசாரியர் குன்னம் பாக்கம் ஐயாஸாமி அய்யங்கார் மூலசம் பாக்கம் பாஷ்யமாசாரியர் முதலான பண்டிதர்களெல்லாரும் ஸ்ரீ ஸ்வாமியை முன்னிட்டுக் கொண்டு அந்த ஆலயத்திலே சாஸ்த்ரிகளிருக்கும் மண்டபம் போய் வந்த வ்ருத்தாந்தத்தைச் சொல்ல, சாஸ்த்ரிகளும் விச்வத் ப்ருந்தத்தின் முன்னே ஸ்வாமி நின்னருளும் நிலையைக் கண்டு திகைத்திட்டு இவரோடு சைவ வைஷ்ணவத்திலே வாதம் செய்து ஜயம் பெற முடியாதென்று கொண்டு 'நேற்று தினத்திலேதானே சைவ வைஷ்ணவ வாதம் ஸமாபனம் செய்துவிட்டோம். வேண்டியிருந்தால் ந்யாய சாஸ்த்ரத்தில் வாதம் செய்யலாம்' என்ன, ஸ்ரீ ஸ்வாமியும், 'நேற்று நாராயண சப்தம் சிவபரமென்று ஏதோ சில கோடிகள் சொன்னதாக கர்ணாகர்ணிகையாகக் கேட்டு அவைகளை நிரஸிக்க வென்றே நானிவ்விடம் வந்திருக்கிறேன். அவைகளை உபந்யஸிக்கவேணும்' என்ன, சாஸ்த்ரிகளும் 'அது இப்போதில்லை. ஹேத்வாபாஸத்திலே ஏதாவது விசாரிக்கலாம்' என்ன, 'அதை உத்தேசித்து நான் இங்குவந்தேனன்று. உமக்கு அது சொல்லவேணுமென்றிருந்தால் நாங்களிருக்குமிடத்துக்கோ, அல்லது இந்த ஆலயத்தை விட்டு மத்தை எங்கேயாவது வந்தால் அவ்விஷய விசாரம் பண்ணுவோம். இங்கு சேத்திய ப்ரஸங்கத்தையே புனச்ச ப்ரஸங்கியும்' என்னருளிச்செய்ய, 'நாம் ப்ரஸங்கிப்பதில்லை. அவ்விஷயத்திலே க்ரந்தமெழுதியிருக்கிறோம்; வேணுமானால் அதைப் பார்த்துக்கொள்ளும்' என்ன, ஆகில் அதைக் கொடும் என்று கேட்டு வாங்கிக்கொண்டு ஸ்ரீ வைஷ்ணவ ப்ருந்தத்துடனே தம்மாசார்யாச்ரமமெழுந்தருளி நடந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பித்து அவன் க்ரந்தத்தையும் ஸமர்ப்பிவைத்து இந்நியமனப்படி செய்கிறேனென்னருளிச்செய்ய, அந்த ஸ்வாமியும் அந்தப் பண்டித கோஷ்டியிலேதானே அந்த க்ரந்தத்தையும் வாசிக்கும்படி

நியமிக்க வாசிக்கும் போது அந்த க்ரந்தம் கஷ்ட ரீதியில் அநுகம ப்ரகாரமாயிருக்கை யாலே ஸ்ரீ ஸ்வாமியே அதை விவரிக்க வேண்டியதாயிருந்தது. அநந்தரம் அந்த க்ரந்தத்துக்கு ஸ்ரீ ஸ்வாமிதானே கண்டநம் செய்யவேணுமென்று ஏகாபிப்ராயமாக ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் நியமிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் “பாமுக சபேடிகை, ணத்வ சந்த்ரிகை” என்று இரண்டு க்ரந்தங்கள் அருளிச்செய்தார். இவைகளில் பாமுக சபேடிகை என்கிறது சாஸ்த்ரிகள் க்ரந்தத்துக்கு கண்டநம். ணத்வ சந்த்ரிகை என்கிறது நாராயண சப்தம் கேவல யௌகிகம், அதாகிறது அவயவ சக்த்யா ஸ்வார்த்த போதகம், ரூடமன்று என்றால் வ்யாகரண சாஸ்த்ரப்படி ணகாரம் வாராது என்றும் ஸ்ரீய: பதியினிடத்திலே யோக ரூடமென்றும் ஸமர்த்திக்கிறது. இந்த இரண்டு க்ரந்தங்களையும் அந்த சாஸ்த்ரிகளுக்கு அனுப்பினார். சாஸ்த்ரிகளும் பிறகு ஜீவித்திருக்கும் வரையில் இவ்விரண்டு க்ரந்தங்களில் மேலே ஒன்று மெழுதவில்லை. ஸ்ரீ ரங்கம் ஸ்வாமியும் போர உகந்து ஸம்ப்ரதாய ப்ரவசநம் நீர் செய்துவாரும் என்று நியமித்து தம் ஸ்ரீபாதத்திலாச்ரயித்திருந்த தோரேர் கோவிந்தாசார்யரென்று ப்ரஸித்தமாயிருக்குமொரு வித்வானை ஸ்ரீ ஸ்வாமி விஷயமாக ஒரு தனியன் பண்ணும்படி நியமிக்க, அவரும்,

ஶ்ரீமத்வேதாந்ததேஶிகயதிக்ஷ்மாப்ருத்தநயார்த்தகம்
ஶ்ரீஶ்ரீவாஸயதீந்த்ர தேஶிகமணே: ப்ராப்தாஶ்ரமாஶ்ரயம்
தத்வ்யாக்யாநகடாக்ஷலேஶநிலயம் ஶ்ரீக்ருஷ்ண ஸத்தேஶிகம்
ஶ்ரீமத்தாதகுலாம்புராஶிஶஶிநம் ஸேவே ஸதா ஶ்ரேயஸே ||

என்றநுஸந்திக்க அந்தஸ்வாமியும் உம்முடைய வாக்குக்குப் பலிதுதான் என்று போர ப்ரீயப்பட்டு இதையே இவர் ஸ்ரீ பாதத்திலாச்ரயிப்பாரெல்லாரும் அநுஸந்திக்கும்படி நியமித்து இத்தேசத்திலே தம் ஸ்ரீ பாதத்திலே ஆச்ரயிக்க வந்தவர்களை இவர் ஸ்ரீ பாதத்திலே ஆச்ரயிக்கும் படிக்கும், அவனூர் திருவேங்கடாசாரியரென்று தம்மிடத்திலாச்ரயிக்க வந்த வொரு வித்வானை ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலே இருந்து அந்தரங்க பரிசர்யைகள் பண்ணி மிக்க காலத்திலே ஸம்ப்ரதாய க்ரந்தங்களை ஸேவித்து வாருமென்றும் நியமித்து புநச்ச திவ்யதேச யாத்ரையாக கோயிலுக்கெழுந்தருளினார்.

அநந்தரம் ஸ்ரீ ஸ்வாமியும் தம்மாசார்ய நியமப்படி ஸ்ரீ பாஷ்யாதி ப்ரவசநம் செய்து வந்தார். ஒருநாள் முன்பு சாஸ்த்ரிகள் ஹேத்வாபாஸத்திலே விசாரிப்போமென்று சொன்னதைத் திருவுள்ளத்திலேகொண்டு ஸாமாந்ய நிருக்தி என்கிற கதாதர ஹேத்வாபாஸ ஸாமாந்ய லக்ஷண க்ரந்தத்திலே,

“ அவச்சேதகத்வம் ஜ்ஞாந கரணீபூத வ்யாப்தித்வம் ”

என்று கதாதரன் நிஷ்கர்ஷித்ததற்கு விருத்தமாக,

“ ஸ்வரூபஸம்பந்தரூபம் அவச்சேதகத்வம் ”

என்று நிவேசிக்கலாமென்று நிஷ்கர்ஷித்து,



யாம் தோஷநிர்ணயநிரூபிதவ்ருத்தி ரேவா அவச்சேதகா தவோதித: /
ஸ்வரூபஸம்பந்தவிஶேஷ ஏவாம் தாத்ருஶ்யஸந்த்ருக் ப்ருதிவ்யாதய: ||

என்று லக்ஷ்யமாணார்த்த ஸங்க்ரஹம் பண்ணி ‘அவச்சேதகதா ஸாரம்’ என்று ஒரு க்ரந்தமெழுதி மைஸூர் சாஸ்த்ரிகளுக்கநுப்பி மற்றும் பல தேச வித்வாந்களுக்கும் அநுப்பினார். தம் வித்யார்த்திகளுக்கு மந்த க்ரந்தத்தை பாடப்ரவசநம் செய்து வைத்தார். இந்த க்ரந்தம் பஹு வித்வான்களால் ஆமோதிக்கப்பட்டும் ப்ரவசநம் செய்யப்பட்டும் வருகிறது. இதற்கு இன்றளவாக கண்டநமொருவரும் எழுதவில்லை. இப்படி ந்யாய சாஸ்த்ரத்தில் அநேக க்ரந்தங்களுண்டு மஹாதேவன் என்கிற ஒரு ந்யாய பண்டிதன் தான் பண்ணின திநகரீயமென்கிற ப்ரகரண க்ரந்தத்திலே,

‘ கார்யதாவச்சேதகஸம்பந்தாவச்சிந்நத்வம் ’

ப்ரதிபந்தகமாகாதென்று கொண்டு,

‘ காரணீபூதாபாவப்ரதியோகித்வம் ’

அது என்று நிஷ்கர்ஷித்தான். பட்டாபிராமனென்கிற மற்றொரு வித்வான் தான் பண்ணின ‘மஞ்ஜூஷை’ என்கிற க்ரந்தத்தில் மஹாதேவன் நிஷ்கர்ஷித்ததை தூஷித்தான். ஸ்ரீஸ்வாமி பட்டாபிராமன் சொன்னதை தூஷித்து மஹாதேவன் நிஷ்கர்ஷித்ததை ஸ்தாபித்தார். இது அந்த க்ரந்தத்தில் முதல் ச்லோகம்,

யத்ரூபம் கார்யதாவச்சேதகம் விவக்ஷிதம் ததாம் யத்தத்ரூபவிஶிஷ்டாய
த்ருஷ்டாந்தஸ்ய ப்ரவ்ருத்திஸ்வாம்யா ப்ரஹ்லாதோ யத்ஸாம்ப்ரதேவ ஶாஸ்த்ரே /
பாயஜ்ஞாநஸ்ய ந ஸ்யாதநதிப்ரஸக்தி ரேதத்ர த்ருஷ்டத்வம்
த்ருஷ்டேயேதத்தேஷாம் நிரஸநக்ருதே க்ருஷ்ணநாம்நா ஸமாதிம் ந்யூ: ||

இப்படியே ‘ப்ரமாத்வ சிந்தா குலஸ்யொல்லாஸம்’ ஸாமாந்ய நிருக்தி க்ரந்தத்திலே அத ஹேத்வாபாஸ இத்யாதி வாக்யார்த்த விசாரம், யத்ரூப விசாரம், ஸர்வாம்சே ப்ரமாத்வ விசாரம், வாதகல்பகம், விசிஷ்ட த்வயா கடிதத்வ விசாரம், அநுமித்ய வ்ருத்தித்வ விசாரம், கசத்ரய விசாரம், ஏதத்கேத்யாதி கல்ப த்வய விசாரம், விசேஷணத்ரய வையர்த்ய விசாரம், அத்ர வதந்தீத்யாதி நிஷ்க்ருஷ்ட கல்ப விசாரம், சதுர்தச லக்ஷணி என்கிற க்ரந்தத்தில் ஸ்வலக்ஷண த்வய விசாரம், ஸித்தாந்த லக்ஷணத்திலே உபாதி கட்ட விசாரம், பக்ஷதையில் ஸம்சய பக்ஷதா விசாரம். அவயவத்தில் பஞ்சம விஷயதா விசாரம், ஸாதாரண க்ரந்தத்திலே நிருபாதித்யதோஷ ஸாதாரண லக்ஷண விசாரம், வாவதூக கௌதூஹலம், ஸத்ப்ரதிபக்ஷ விசாரம், பாத விசாரம், வ்யுத்பத்தி வாதத்தில்—ராஜபுருஷவாத விசாரம், சக்தி வாதத்தில்– ஜாதி சக்தி விசாரம், ப்ராமாண்ய வாதத்தில் யத்ஸம்சய வ்யதிரேக நிச்சயா வித்யாத்யநுமாந விசாரம், அநுகமாவளீ, சதகோடி கண்டந மூண்டநம். இந்த மூண்டந க்ரந்தம் தர்க்க வாசஸ்பதியென்று பிருது பெற்ற குரிச்சி - ரங்காசார்ய ஸ்வாமி, சோகத்தூர் - விஜய

ராகவாசார்யர் ஸ்வாமி, இவரிவரும், தனித்தனியே எழுதிய சதகோடி ஸமர்த்தக க்ரந்தங்களுக்கு கண்டநமாயிருக்கும். இவர்களிருவரும் மைஸூர் ராமசாஸ்த்ரிகளிடம் தர்க்க சாஸ்த்ரம் வாசித்தவர்கள். ஆகையினாலே தங்கள் உபாத்யாயர் சொன்னதை ஸமர்த்திக்கவேண்டியிருந்தது. இவர்களில் சோகத்தூர் விஜய ராகவாசார்யர் என்பவர் ப்ரதமம் ஸ்ரீ ஸ்வாமியினிடத்திலே தானே தர்க்க ஸங்க்ரஹம் முதலாக கதாதரீயம் பஞ்சவாதங்களும் வாசித்து ஏதோ ஒரு ஹேது விசேஷத்தாலே ஸ்ரீ ஸ்வாமியினிடத்திலே அஸம்பாவிஷ்டராய் புநச்ச மைஸூர் ராமசாஸ்த்ரிகளிடத்திலே தர்க்க சாஸ்த்ரம் பரிசீலித்துக் கொண்டு அப்போதைக்கப்போது ஸ்ரீ ஸ்வாமியோடே தர்க்க விசாரம் பண்ணுவர். ஒரு நாள் 'ஸாதாரண க்ரந்தத்திலே பஞ்சப்ராணன் சாஸ்த்ரிகள் அபூர்வமாகக் கல்பித்து எனக்குச் சொல்லி வைத்திருக்கிறார்' என்று கர்வோத்தரமாய் சொல்ல, ஸ்ரீ ஸ்வாமியும் மந்தஹாஸத்துடனே அவைகளை உறித்து விடவேணுமென்றருளிச் செய்து, வாதம், தைமாஸத்திலே ஸ்ரீ பேரருளாளன் பெருந்தேவித்தாயார் தெப்போத்ஸவத்திலே பஹு வித்வாங்கள் முன்னே ப்ரஸ்துதமாக மூன்று நாளிலே அவர் வாதங்களைக் கண்டித்து நடந்த கோடிகளை பட்டோலைக் கொண்டு அதுக்கு 'பஞ்சப்ராணாஹுதி' என்று பெயரிட்டார்.

இன்னுமநேகமாக பாடப்ரவசந காலத்திலே தானே வித்யார்த்திகளுக்கு அபூர்வமாக சொல்லிவைத்ததும் எழுதிக்கொடுத்ததும் அநேகமுண்டு.

(தொடரும்)

ஸ்ரீ:

# ஸ்ரீ வரத ராஜ பஞ்சாசத்.

[ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர், அட்வோகேட், திருச்சி.]

யஸ்யாநுபாவமதிகந்துமசக்நுவந்தோ
முஹ்யந்த்யபங்குரதியோ முநிஸார்வபௌமா: ।
தஸ்யைவ தே ஸ்துதிஷு ஸாஹஸமச்நுவாந:
க்ஷந்தவ்யவாநஸ்மி பவதா கரிசைலநாத ॥

'நீர் புகழும் பெருமான் அர்ச்சைதானே. அர்ச்சைப் பெருமாள்களின் மஹிமையை ப்ரகாசப்படுத்துவதற்கென்றே அவர்களநுபவத்திலாழ்ந்து மகிழ்ந்து பாடுமாழ்வார்கள் இவர் விஷயமாகப் பாடினதாக நிர்விவாதமாகவும் நிஸ்ஸம்சயமாயும் ஏற்படவில்லையே. பஹுகாலமாகப் பல பெரியோர்கள் இவர் விஷயமாகப் பாடவில்லையென்று தானே நினைத்து வருகிறார்கள். இவரெழுந்தருளியிருக்கும் திவ்ய தேசத்திற் கருகாமையிலவர்களநுபவம் செல்லவில்லையென்று சொல்லமுடியாதே. இந்த ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திலெழுந்தருளியிருக்கும் மற்றப் பெருமாள்களை இவர்கள் பாடியிருக்கிறார்



கள். இவரைப் பாடாமலகன்றனரென்று சொல்லப்படுகிறதே. இவரை நீர் பாட வாரம்பிக்கலாமோ?' என்று சங்கை வர இந்த ச்லோகமவதரித்தது. இப்பொழுது இது விஷயமாய்ச் செய்யும் தகராரிலிறங்காமல், பாடவில்லையென்னும் பக்ஷத்தை ஒப்புக்கொண்டு பேசுவோம். இவரைக் கண்ணனாகவே இவருடைய பூர்ணாநுக்ரஹ பாத்ரமான மஹாசார்யர் சண்டமாருதத்திலநுபவித்தார். 'வேதண்டாசல ச்ருங்க ஸங்கியான திருமேனியுடைய க்ருஷ்ணனாகிய மேகம்' என்று ஸ்ரீ தொட்டயாசார்ய ஸ்வாமியநுபவம். இந்த ஸ்தோத்ரத்திலும் இவரைக் கண்ணனாகவே யநுபவிக்கிறார். இவரே கண்ணனென்றநுபவமானபடியால் அவதாரங்களைச் செய்ததாகத் துதிக்குமிடத்தில் க்ருஷ்ணாவதாரத்தைத் தனித்துக் கூறவில்லை. கண்ணன் விஷயமாக ஸ்ரீ சுகர் பாகவதம் பாடியதை யநுஸந்தாநம் செய்துகொண்டு, ஸ்வாமி இந்த ஸ்தோத்ரத்தைப் பாடுகிறார். "முஹ்யந்தி யத்ஸூரய:" என்று பாகவதமாரம்பித்ததுபோல "முஹ்யந்தி முநிஸார்வபௌமா:" என்று உபக்ரமிக்கிறார். தம்மையும் கிளிப்பிள்ளையென்று ஸ்தோத்ர பாகத்தை ஆரம்பிக்கு முன் பேசுகிறார். சுகர் வநசுகம், இவர் பட்டணத்துக் கிளிப்பிள்ளை — கூட்டிலுள்ள கிளிப்பிள்ளை — பேரருளாளன் வளர்த்த செல்வக் கிளிப்பிள்ளை. கிளிப்பிள்ளையென்னுமோர் பிள்ளையை தூப்பில் பிள்ளையென்று வழங்குவதாக இவர் நினைப்புப்போலும்.

யஸ்யாநுபாவமதிகந்துமசக்நுவந்த: — ஸூதர் பாகவதத்தையாரம்பிக்கும்பொழுது "ய: ஸ்வாநுபாவம்" என்று சுகர் விஷயமாக ச்லோகரசநம் செய்தார். இங்கேயுமந்த வார்த்தைகள் ஸ்ம்ருதிக்கு வரும்படி அதைக் கொஞ்சமநுஸரித்து சுகருக்குத் துல்ய சிலரான ஆழ்வார்களையும் பெருமாளையும் சேர்த்து இவாரம்பத்தில் பாடுகிறார்—'யவனவன்' என்று ஆழ்வார் தைத்திரீய லக்ஷண வாக்யத்தை யநுஸரித்து பகவானை, லக்ஷணமுகமாகப் பாடினார். இங்கே அதை அநுஸரித்து 'எவனுடைய மஹிமையை அளவிடமாளாமல் சோராத மாசற்ற மனத்துடைய முனிஸார்வபௌமர்கள் மோக்ஷத்தை யடைந்து ஸ்தப்தராய் மனமும் வாக்கும் சலிக்கமாட்டாது அடங்கி மூகராய் நின்றனரோ, அதே உம்முடைய ஸ்தோத்ரங்களில் இறங்குமென் ஸாஹஸத்தை க்ஷமித்தருளவேணும்' என்கிறார். 'யதிபரிவ்ருடர் எவருடைய பாடல்களுக்கு (கீதைக்கு) எல்லா வுபநிஷத்துகளுக்கும் மிக நெருங்கின மெய்ப்பொருளை (ஸ்ரீகீதாபாஷ்யரூபமாக) உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கினரோ, அந்த ஸநாதநதர்மமான க்ருஷ்ணனை' என்று தாத்பர்ய சந்த்ரிகை யாரம்பத்தில் கண்ணனை வர்ணித்தார். 'உடையவர் பாஷ்யம் செய்யும் பாக்யம்பெற்ற ஸ்ரீகீதாசார்யனை' என்று அங்கேயநுபவம். 'இங்கே ஆழ்வார்கள் பாசுரம்பாடாமல் மூர்ச்சித்து அநுபவ ஸாகர மக்நர

யிருந்த பெருமாள்’ என்றநுபவம் போலும். இப்படி ஸ்தோத்ரத்திலிருந்து நிவ்ருத்தியும் பாசுரம்பாடாத மூகத்வமும் குணாநுபவ மூர்ச்சையும் இந்தப் பெருமாள் மஹிமையைத் தெளிவாக வ்யாக்யாநம் செய்யும் பெரியதோர் பாஷ்ய ப்ரவசநமாகுமென்று திருவுள்ளம். பரக்கப் பேச்சிலும் அடியோடு பேசாமை வ்யாக்யாந முறையிற் சிறந்ததாகும். நிரதிசய ப்ருஹத்தாயும் நிர்வ்யாஜமாய் நம்மெல்லோரையும் ப்ரும்ஹணம் செய்வதற்கென்றே ஆவிர்பவித்திருக்குமிப் பேரருளாளப் ப்ரஹ்ம விஷயத்தில், “அவசநேநைவ ப்ரோவாச” என்றல்லவோ வேதபுருஷன் விரும்புமுபதேச முறை. பாத்வ ரென்னுமாசாரியர் பாஷ்கலி என்னும் சிஷ்யருக்கு அந்த முறையில் உபதேசம் செய்ததை வேதபுருஷன் ப்ருஹதாரண்யகத்தில் ரஸித்தார். ‘குருவின் மௌநமே வ்யாக்யாநம். சிஷ்யர்கள் ஸம்சயங்களெல்லாம் சின்னமாகும்’ என்று பணிப்பதுண்டே. அதை நினைத்து இங்கே மூங்கி சப்தம் ப்ரயோகிக்கப்பட்டது போலும். அருளின் கார்யம் தானே ப்ரும்ஹணமென்னும் ப்ரஹ்மகார்யம். அருளின் வடிவல்லவோ இவர்? அஸாதாரண்யத்தால் வ்யபதேசங்கள் (திருநாமங்கள்) ஏற்படுமென்றார் பதஞ்ஜலி பகவான். ‘பேரருளாளன்’ என்றல்லவோ இவருக்கு அஸாதாரணமான திருநாமம்? ஸஞ்ஜ்ஞாய கல்பதே’ என்றபடியாகச் செய்வதல்லவோ இந்தக் கரிமலைப்பெருமாள் ஸேவை ஸாதிக்கிறார்? “உயர்வற உயர்நல முடையவன்” என்று ஆநந்தவல்லியில் நூறு நூறு யாநந்தத்தைப் பெருக்கி, ப்ரஹ்மாநந்தத்தை யளவிடுவதில் அந்தப் பெருக்கல் கணக்கு வீணுகி, ‘எதனிடத்திலிருந்து வாக்குக்கள் தங்கள் முத்தண்ணனை மனத்துடன் கூட சோர்ந்து இது நமக்கு அஸாத்யமென்று கை வாங்கித் திரும்பினவோ’ என்று வேதபுருஷன் வர்ணித்த க்ரமத்தை யாழ்வாரநுஸரித்தார். ப்ரகல்பனைகளைச் செய்து கணக்கிட வாரம்பித்து அது பலிக்காமல், பிறகு ‘கணக்கிலடங்காது, வாக்குக்கும் மனதிற்கு மெட்டாது’ என்று சொல்லிவிட்டு வேதம் கைவாங்கிற்று. இந்தப் பெருமாள் விஷயத்திலாழ்வார்கள் வாக்குக்கு மெட்டாது என்று கூடச்சொல்ல நினைவில்லாமல் ஸ்தப்தராய் மோஹித்து நின்றனரென்கிறார். வர்ணனத்துக் கடங்காததென்று கூடப் பேச சக்தியில்லாத ஸ்திதியில் சேஷ்டையற்று மூகராய் நின்றார்கள். வாக் ப்ரவ்ருத்தியிலு மிறங்கக் கூடவில்லை. வாக்கின் நிவ்ருத்தியைக் கைக்கொள்ளுகிறோமென்று நினைக்கவும் பேசவும் தெரியவில்லை. இந்தப் பெருமாள் விஷயத்தில் ஆழ்வார்களுக்கு வேதபுருஷனைக் காட்டிலு மிவ்வாசி. அவன் அபௌருஷேயனான புருஷன்; அவன் அசரீரீ. இவர்கள் புருஷரூபியான வேதபுருஷர்கள். “மந: பூர்வோ வாகுத்தர:” மனத்தின் ப்ரவ்ருத்தி முன்னியது; வாக்கின் ப்ரவ்ருத்தி பிந்தியது. ப்ரவ்ருத்தியில் இப்படி முன்பின் க்ரமம் நியதமாயுள்ளது. நிவ்ருத்தியில் இந்த முன்பின் க்ரமத்திற்கிட



மில்லாமல் இரண்டுக்கும் ஸாஹித்யமே என்று வேதபுருஷன் “அப்ராப்ய மநஸா ஸஹ” என்று ‘ஸஹ’ சப்தத்தால் வேடிக்கையாகக் காட்டினர். இங்கே ஆழ்வார்களுக்கு ஆநந்த மாரப்ய மூர்ச்சை யாகையால் மனமும் வாக்கும் சேர்ந்தே ஒடுங்கும். ‘அம்மா தயையே! உன்னுடைய அநுபாவமென்னும் மஹா ஸமுத்ரத்தில் ப்ராசேதஸர் முதலியவரும் அனேகமாக தடஸ்தராகவே இறங்காமல் கரையிலேயே நின்றனர்’ என்று தயா சதகத்தின் முடிவில் 103-வது ச்லோகத்தில் அருளிச் செய்ததை இங்கே முதலிலேயே அருளிச் செய்தார். அங்கே ‘அருள்’ விஷயம்; இங்கே ‘பேரருளாளன்’ விஷயம். இரண்டு ச்லோகங்களிலும் அநுபாவ சப்தம் ப்ரயோகித்திருப்பதால் இரண்டு ச்லோகங்களிலும் ஸ்ரீதேசிகனுக்கு ஏக ரூபமான அநுபவமென்று நினைக்கலாம். அங்கே வால்மீகி பராசரர் முதலிய ருஷிகள் கைவாங்கினதைப் பற்றிப் பேச்சு; இங்கே கமலாகாந்த காருண்ய காந்திகளான ஆழ்வார்களைப்பற்றிப் பேச்சு. மற்ற திவ்ய தேசங்களிலே சக்தி யிருந்தது அந்தந்தப் பெருமாள்களின் அநுபவத்தை யநுபவிக்கவும் ‘அநுபவித்தவாறே பேசவும்’. இவர் விஷயத்தில் அசக்தியே ஆநந்த மூர்ச்சையாய் விளைந்தது.

முஹ்யந்தி — ப்ரவ்ருத்திப்பதா நிவ்ருத்திப்பதா என்று விவேசநம் செய்யக்கூட வழியில்லாமல், மயர்வற வருளப்பெற்ற மதிபெலா மூன்கலங்கி னைந்து மோஹாவ்ருதராய் ஆநந்த மூர்ச்சையை யடைகின்றனர். ‘ஒரு க்ஷணம்கூட ஒருவனும் ஒருக்காலும் ஒரு வ்யாபாரத்தையும் செய்யாமல் சும்மாயிருக்க வியலாது; எவனும் ஸ்வபாவஸித்தமான ப்ருக்ருதி குணங்களால் தான் சும்மாயிருக்கவேண்டுமென்று எவ்வளவு த்ருடமாக ஸங்கல்பித்தாலும் அவசனுய்க் கார்யம் செய்யும்படி செய்விக்கப்படுவான்’ என்று கண்ணன் கீதையில் அருளிச்செய்திருக்க, அதற்கு விரோதமாக இவர்கள் ப்ரவ்ருத்தி ப்ரயத்நமுமில்லாமல் நினைவோடு நிவ்ருத்தி ப்ரயத்நமுமில்லாமல் எப்படி நிர்வ்யாபாரராய் சேஷ்டையற்றிருக்கக்கூடும்? இவர்கள் தூக்கமென்னும் அவஸ்தையையு மடைந்திருக்கவில்லையே! இப்படி சங்கை வர, இவர்கள் மரணத்தில் பாதியென்று வேதாந்த ப்ரஸித்தமான ‘அர்த்த ஸம்பத்தி’ என்று சொல்லும் மூர்ச்சாவஸ்தையை யடைந்திருக்கின்றனர் என்று கூறுகிறார். “முக்தே” என்று சாரீரக ஸூத்ரத்தில் காட்டிய அவஸ்தையைக் காட்ட அந்தச் சப்த கடகமான தாதுவையே ப்ரயோகிக்கிறார் ‘முஹ்யந்தி’ என்று. மோஹமென்று சொல்லப்படும் மூர்ச்சை ‘மதில்மேல் பூனை’ என்றார் ஸூத்ரகாரர்; மரணத்தில் பாதி யென்றார். இப்படிப் பாய்ந்தாலும் பாயும், அப்படிப் பாய்ந்தாலும் பாயும். இவர்கள் தசை தூக்க தசையல்ல. ஏனெனில், மூச்சையும் காணும், ப்ராணவ்ருத்தியும் அடங்கி

யிருக்கிறது. கேவலம் ஈச்வரேச்சையாலும் உலகம் பண்ணிய புண்ணியத்தாலும் திருமேனியில் ஆத்மா நிற்கிறது. இந்த மோஹம்தான் ஆறு மாஸம் முதலிய அவதியில்லாமல் ஒருக்காலும் தெளியாமல் ஸர்வகாலாநுவ்ருத்தியான மீளா மோஹமாயிற்றென்று ஸூசிக்கிறார் நிகழ்கால (வர்த்தமான) ப்ரயோகத்தால். புநராவ்ருத்தி ரஹிதமான விஷயம் "ஸம்ஸார ஸாகர ஸமுத்தரணைக ஸேது" என்னும் அநுபவத்தை யுண்டாக்கும் விஷயம். "முஹ்யந்தி யத் ஸூரய:" என்கிற பாகவதம் முதல் ச்லோகத்தை நினைப்பு மூட்டுகிறார் அதே பதத்தை ப்ரயோகிப்பதால்.

அமேயமஹிமா:—மயர்வற மதிநல முடையார். அதற்கே இது ஸமீஸ்க்ருதச் சொல். அபரிச்சேத்யமான விஷயத்தில் வர்ணநம் தடைப்படுவதும் புத்தியின் அபங்குரத்வத்தையே ஸ்திரப்படுத்தும். வர்ணிக்கத் தொடங்குவது மதிகேடாகும். அதுவே மதிபங்கம: இந்த வர்ணநசக்தியே சிறந்த வர்ணந சக்தியாகும். நினைவின் நிவ்ருத்தியே சிறந்த நினைவாகும். "யஸ்யாமதம் தஸ்ய மதம்" என்று வேத புருஷனுடைய அபூர்வோபதேசம்.

முஹ்யந்தி ஸூரய: — ஸூரிகள் மோஹிக்கிறார்களென்றார் சுகர். ஸூரி ஸார்வபௌமர்கள் மோஹிக்கிறார்களிங்கே. ஸார்வபௌம சப்தம் யோகசாஸ்த்ர ப்ரஸித்தம். ஸர்வபூமிகளிலிருந்தும் சித்தவ்ருத்தி ப்ரத்யாஹ்ருதமாய் ஒடுங்கவேணும். "ஜிதேந்த்ரிய: ஸர்வ ப்ருதிவீ ஸார்வபௌம:" என்று ருஷி வர்ணித்தபடி ராமன் விஷயமான த்யாந தசையை "ஸார்வபௌமோ நிதாநம்" என்று ஹம்ஸ ஸந்தேசத்தில் வர்ணித்தார்.

தவ்ஸைவ தே-அதே உம்முடைய. ஆழ்வார்கள் கைவாங்கி மூகரான உம்முடைய. முனி சப்தம் மௌந த்யோதகமாயினும் பகவான் விஷயமான நினைவின் தாரையான ஆநந்தரூபமான மனன லேசத்தையும் காட்டும். பேச்சு மூச்சில்லாவிடினும் ஆநந்தாநுபவம் மேலிட்டேயிருக்கும். மூர்ச்சை கிடந்தாலும் முகவிகாரமிராது. ப்ரத்யுத ப்ரஹ்மத்தின் முகமாகையாலே அழகு எல்லையற்று வளரும். புருஷ ஸூக்தத்தில் பெருமாளை முழுவதும் அவன் அவனென்று 'தத்' என்று பரோக்ஷமாக வர்ணித்து, மேலநுவாகத்தில் பிராட்டிமாரான பத்நிகள் கண்ணுக்குப் படவே, 'தே' (உம்முடைய) என்று வேதம் அபரோக்ஷ நிர்த்தேசத்தையும் ஸாமீப்யத்தையும் காட்டியது. அதுவரையிலும் 'தே' என்று ஸம்போதநம் செய்ய நெருங்க முடியவில்லை. "கருணாமிவ ரூபிணீம்", "தேவ்யா காருண்ய ரூபயா" "உதாரம்" என்றும் வர்ணிக்கப்படும் அருள் மயமான தாய்மாரைக் கண்டதும்



துணிந்து நெருங்கியது. அங்கே ஆயிரம் தலையும் ஆயிரம் கண்களும் ஆயிரம் பாதமுமான ஓர் மஹா பூதத்தை நெருங்கவே பயமாயிருந்தது. 'உம்முடைய ஸர்வத: பாணிபாதமும் ஸர்வதோக்ஷி சிரோமுகமுமான விச்வரூபத்தை நான் பார்க்க ப்ரார்த்தித்தேன். எல்லாரும் பயந்து ஓடுகிறார்கள். 'ப்ரவ்யதாமி' – 'இந்த யுத்தத்தில் ப்ரதான மல்லரான நானும் அப்படியே நடுங்குகிறேன். இதை உபஸம்ஹாரம் செய்யுமென்னப்பனே. பழைய ருக்மிணீகாந்தபான க்ருஷ்ணரூபத்தையே ஸேவித்துக்கொள்ளுகிறேன்' என்றான் அர்ஜுநன். ஜாமாதாவாக தேவிமாரோடு கண்ணுக்குப் பட்டதும் நிர்ப்பயமாய்க் கிட்ட வணுகி, 'தே' என்று ஸம்போதநம் செய்தது. இங்கே பிதாவே பேரருளாளன். அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்திற்கு உபாதாந த்ரவ்யம் கருணையே. கருணாபரிணாமம் அந்தத் திருமேனி. நம் ஸித்தாந்தத்தில் கருணை ஜ்ஞாநம்; தர்மபூத ஜ்ஞாநமும் த்ரவ்யம்; ஆகையால் கருணை திருமேனிக்கு உபாதாந த்ரவ்யமாகத் தடையில்லை. பிதாவே இங்கே தாய்; அவரே என்னையும் உலகத்தையும் பயந்த தேவதை. தாயை நெருங்கப் புருஷகாரம் வேணுமோ? இங்கே 'தத்' என்னும் பரம்பொருளையே 'த்வம்' என்று கிட்ட நெருங்கலாம். புருஷகாரத்திற்குப் புருஷகாரம் தேவையென்றால் அநவஸ்தை வரும். அருள்தானே புருஷகார ஸ்வரூபம்.

ஸ்துதிஷு—இவர் விஷயத்தி லொரு ஸ்தோத்ரம் போதாது. ந்யாஸ தசகம் ந்யாஸவிம்ஸதி இந்த ஸ்தோத்ரம் ஆக மூன்று. இந்த வைதிகப் பெருமாள் விஷயத்தில் கபிஞ்ஜலாதிகரணத்தை யநுஸரித்து பஹுவசநத்திற்கு மூன்றில் தாத்பர்யம்.

ஸாஹஸம் ப்ரவர்த்தே:—ஸாஹஸத்தை நான் செய்கிறேனென்று பணிக்கவில்லை. ஸாஹஸத்தை யநுபவிக்கிறேனென்கிறார். நான் வேணுமென்று இறங்காவிட்டாலும் இந்த ஸாஹஸ க்ருத்யத்தில் பலாத்காரமாய் இறக்கிவிடப் படுகிறேன். ஜலத்தில் தள்ளப்பட்டவன் தண்ணீர் குடிப்பதுபோல இது நான் செய்யத்தகாத ஸாஹஸ க்ருத்யமானாலும், இது எனக்கு மிக்க போக்யமாகவுள்ளது. நானிதைப் பூர்ணமாய் ரஸிக்கிறேன்.

க்ஷந்தவ்ய ஸஹஸா க்ருதி ஸ்மாத்மது — ஆழ்வார்கள் மோஹித்து கை வாங்கினார்கள். நான் பல ஸ்துதிகளைச் செய்யப் பார்த்தேன்; செய்யவும் செய்கிறேன். வேண்டும் வரமெல்லா மளிக்கக் கோறி கரிகிரிமேல் ஸர்வஸ்வ தக்ஷிணை கொடுக்க யஜ்ஞ வேதியில் நிற்கும் வரந்தரும் மாமணி வண்ணனை நான் கேட்கும் அரிய பெரிய வரமிதுவே. இக்கொடிய ஸாஹஸத்தை நீர் க்ஷமித்தருளவேணும். இக்கொடிய குற்றத்தை க்ஷமிப்பதற்கு மேற்பட்ட வரமில்லை. 'ஸஹஸா' என்பதில் மிக்க ஸ்வாரஸ்யமுண்டு. ஆழ்

வார்கள் மூர்ச்சித்துத் தரையிற் கிடந்தார். நான் துணிந்து எதிரே நிற்கிறேன். இதனிலும் ஸாஹஸமுண்டோ ?

அப்பய்யதீக்ஷித ரிந்த ஸ்தோத்ரத்தை ஸம்பூர்ணமாக வநுபவித்தவர். தேவப்பெருமாளை அவர் மோக்ஷ ப்ரதாராக நிர்ணயித்து முகுந்த சப்தத்தால் நிர்தேசிக்கிறார். சாச்வதிகமான ச்ரேயஸ்ஸை இம் முகுந்தன் கொடுக்க வேணுமென்று அவருடைய வரதராஜஸ்தவாரம்பம். குவலயாநந்தத்தின் மங்கள ச்லோகமு மதுவே. மோக்ஷத்தைக் கொடுக்கும் முகுந்தனே வாதுவான் என்று அவர் கருத்து. அவர் ஸ்தவத்தினிரண்டாம் ச்லோகம் இந்த ச்லோகத்தை யொத்தது. ‘ ஏ பரமபுருஷனே! உம்முடைய மஹிமையி னெல்லையை இதுவரையிற் பிறந்தவனு மறியான், பிறக்கப்போகிறவனு மறியான். அந்த உம்முடைய ஸ்துதியில் அலை மோதி அலைக்கப்படும் ஸாஹஸிக்யத்தை அடையும் என்போன்றவர், ஏன் நகைப்புக் கிடமாக மாட்டார்?’’ என்று அந்த ச்லோகம். ‘‘ த்வத் ஸ்துதௌ தவ தாஸம் ப்ரதி ஸாஹஸிக்யம் ’’ என்று அங்கே பேரருளாளன் பேரருளால் மூன்றும் பாதம் அழகாய் அமைந்தது. ‘‘ த்வத் தே ’’ என்பதுபோல ‘‘ த்வத் தவ ’’ என்பது. ஆனாலொரு வாசியுண்டு. ‘‘ த்வத் தவ ’’ என்னும் இரண்டு ஸமாநாதிகரண பதங்களின் நடுவே ‘‘ ஸ்துதௌ ’’ என்று ஒரு வ்யதிகரணமான வேறு வேற்றுமையுடைய பதம் குறுக்கே வந்தது. இந்த ச்லோகத்தில் ஏவகாரம் குறுக்கே வந்தாலும் அது விவக்ஷிதமான ஏகார்த்த வ்ருத்தித்வத்தை த்ருடீகரணமே செய்கிறது. தீக்ஷிதர் தேசிகனிடமும் ரஸமுள்ளவர்; தேவப்பெருமாளிடமும் நிரதிசய ரஸமுள்ளவர். தேசிகன் ஐம்பது ச்லோகங்களுக்கு அவர் நூறு ச்லோகம் செய்தார். தம்முடைய ச்லோகங்களால் காட்டப்படும் நிரதிசயமான பக்தியைக் குறைத்துக் காட்டி வ்யாக்யானம் செய்வரோ வென்று சங்கித்துத் தாமே அதற்கு விஸ்தாரமாக வ்யாக்யானமும் செய்தார். அந்த ஸ்தவத்தின் பெருமையை அதன் பூமிகையில் விஸ்தாரமாகக் காட்டியிருக்கிறோம். கரி சப்தத்தால், ‘ ஆனையாழ்வாரும்மை ஒரு அத்யாயம் ஸ்தோத்ரம் பண்ணவில்லையா? எல்லா ஆழ்வார்களும் அகன்று நின்றுவிட்டனரா ? ’ என்று ஸூசிப்பதில் தாத்பர்யம் போதும். ஸாஹஸத்தி லிறக்கிவிடப்பட்ட விவன் க்ஷமிக்கப்பட யோக்யன் என்பது கர்மணி ப்ரயோகத்தின் கருத்து. நானாக இறங்கினாலல்லவோ இறங்கின குற்றத்தை க்ஷமிக்கக் கேட்பது? தயா சதகத்தின் 103-ம் ச்லோகத்தில் ‘ நான் பத்மாபதிக்கு ப்ரஹஸநோசிதன் ’ என்றதையும் சேர்த்து தீக்ஷிதர் இரண்டாம் ச்லோகத்தில் ‘ நகைப்புக் கிடமாவேன் ’ என்றார். நாம் வ்யாக்யானம் செய்வதுபோல் இந்த ஸ்தோத்ரம் இரண்டாம் ச்லோகத்தையும் தயாசதகம் 103-ம் ச்லோகத்தையும் தீக்ஷிதரும் சேர்த்தே யநுபவித்தார்.

---

ஸ்ரீ:

# க்ரந்த விமர்சம்.

திருவாய் மொழி.— திருக்குடந்தை திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கெ. ராமாநுஜாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்ட எளிய தமிழ் உரையுடன் கூடியது. முதல் மூன்று பத்து ஏற்கெனவே வெளி வந்திருக்கின்றன. இப்பொழுது நான்காம் பத்தும் வெளியாகி இருக்கின்றது. அச்சுப் பதிப்பிப்பதில் விளம்பம் கூடாதென்னும் எண்ணத்துடன், இந்த க்ரந்தம் இரண்டு அச்சுக்கூடங்களில் அச்சுப் பதிப்பிக்கப்பட்டு வருவதாக நாம் அறிகின்றோம். இதன் விலை அணா 8. இதை அபேக்ஷிப்பவர்கள், (1) திவான் பஹதூர் வி. கெ. ராமாநுஜாசார்யர், 54, பெரிய தெரு, கும்பகோணம் என்னும் விலாஸத்திற்காவது, அல்லது (2) டி. டி. கோபாலாசார்யர், 1/94 அய்யா முதலித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதிராஸ் என்னும் விலாஸத்திற்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ

# ஸ்ரீ நம்மாழ்வார் ஸ்துதி

(ஸ்ரீ. உப. திருக்குருகூர் அ தே. ராமாநுஜ அய்யங்கார்.)

(ஸஞ்சிகை 11, பக்கம் 716 தொடர்ச்சி)

(4) கல்லாயிருந்த தோர கலிகைதன் சாபத்தைக்
காலினால் தீர்க்கவில்லையோ ?
கன்றதனால் விளவெறிந்தும் காளியனைப் போக்கடித்தும்
காலிகளைக் காக்கவில்லையோ ?
சொல்லற்ற கோக்களுக்காய் கோவர்த்தன கிரியையே
தூக்கி நீ காக்கவில்லையோ ?
தூயபதம் வேண்டியுனை சத்தியவத்தருவன் முன்
தோன்றி நீ யாளவில்லையோ ?
வில்லுடன் உனைத் தொழுத குகனுக்கு முன் நீ
மேவியருள் செய்யவில்லையோ ?
விளங்குபுகழ் ஆத்தான் வரதார்ய தேசிகனை
மேவுமெனைக் காத்தலரிதோ ?
கல்வியுளார் வாழ்ந்த திருக்கோளூரி லவதரித்த
கவிக்கருள செய்த தலைவா ?
கார்மருவு சோலைசூழ் குருகைவரு சங்கு சக்ரக்
கையனே மகிழ் மாறனே ?

(5) முன்னமோர் அரியாய் வந்திரணியனை
முனிந்துகிரால் கிழிக்கவில்லையோ ?
முக்தி செலச் சபரிக்கு அருள்செய்து அவள்கையால்
முன் அமுது செய்யவில்லையோ ?
மின்னு மணிமாடங்கள் உனையடைந்த குசேலர்க்கு
விளங்கவருள் செய்யவில்லையோ ?
வென்றியுடை ஏனமாய் அன்றிலகு கோட்டிலே
மேதினியைத் தரிக்கவில்லையோ ?
[அல்லது வென்றியுடை ஏனமதாய் அன்றுலகையிடந்ததை யுன்
கோட்டிலே வைக்கவில்லையோ ?]
மன்னவனுக் கருள்புரிந்து மராமரங்களே ழெய்து
வாலியையுங் கொல்லவில்லையோ ?
மாநிலத்தை ரக்ஷிக்க வயிறுதனிலே யடக்கி
மாமருள் செய்யவில்லையோ ?
கன்மமொழி தமிழ் வேதம் காசினிக் கருள்செய்தாய்
காதலடியேனை யரிதோ ?
கார்மருவு சோலைசூழ் குருகைவரு ஞானமுத்திரைக்
கையனே மகிழ் மாறனே ?

[illegible] |
[illegible] ||

ஸ்ரீ நம்மாழ்வார் ஸ்துதி ஸம்பூர்ணம்.

### ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் மாணிக்கம்

தூப்பில் எனும் ஊர்தனில் நம் தொல்லைகளைப் போக்கிட வென்றவதரித்து
மாப்புகழோடொண் கவிகள் வன்மையுடனருளி நமை உய்யக்கொண்டு
நாப்புகரில் ஸர்வ தந்த்ரஸ்வதந்திர ரென்றிது முதலாவிருதும் பெற்ற
மாப்புகழ் வேங்கடநாத தேசிகரே வளமிகு மாணிக்கமாம்.

### ஸ்ரீமந் மணவாள மாமுனி வைடூர்யம்

சீருடைக் குருகை தன்னில் சிறந்த சேஷாம் சமாகச்
சீருடனவதரித்துச் சேதனருஜ்ஜீவிக்கச்
சீர்திகழ் ரத்னமாலை சீர்திகழ் நூற்றந்தாதி
சீருடன் செப்பும் காந்த வரமுனை வைடூர்யமேனி

# THE UBHAYA VEDANTA PRAVARTANA SABHA, BANGALORE.

## Thirty-fourth Year's Conference.

The Thirty-fourth year's Conference of the above Sabha took place, as usual, in the Sri Narayanaswami Temple at Melkote, on the 7th May, 1935, at about 3. 30 p. m. under the presidency of Sri. U. Mahamaho padhyaya Panditaratnam Mahavidvan Lakshmipuram Srinivasacharyar. A large number of people, including many ladies, had assembled to witness the prize-giving ceremony.

After the reading of the report by the Honorary Secretary, Rao Bahadur R. Narasimhacharyar, M. A., prizes were distributed by the Chairman to the successful candidates in the Sabha Examinations held at Melkote for four days from the 3rd to the 6th of May, 1935, in the Sanskrit College, as usual, under the superintendence of the Principal of the College and the Honorary Secretary.

Of the 108 candidates that sent up applications, 71 appeared for the Examinations; of whom 62 were successful, the places represented by them being Melkote, Mysore, Seringapatam, Krishnarajapet, Srirangarajapuram, Shantigrama, Malleswaram, Bangalore City, Sriperambudur, Tiruneermalai, Karpangadu and Tiruvadi. The corresponding figures for last year were 111, 73 and 65 respectively. Five candidates passed in the Higher Grade, two in the Vedanta Branch, one in the Divyaprabandha and two in the Veda Branch; Eleven in the Intermediate Grade, five in the Divya Prabandha Branch and 6 in the Veda Branch; and 46 in the Lower Grade -- five in the IV year subjects, 5 in the III year subjects, 12 in the II year subjects and 24 in the I year subjects.

The Sabha maintains three Pathasalas, one each at Malleswaram, Bangalore City and Shantigrama, from all of which candidates appeared and passed the examinations.

The prizes ranged from Rs. 45/- to Rs 5/- the total amount awarded to the successful candidates together with the Special Money Prizes being Rs. 795/-. The Trustees of Sriman Dewan Bahadur M. O. Parthasarathy Iyengar's Charities have, as in the previous year, generously made a grant of Rs 100/- for six special psizes to be awarded to the successful candidates, two of Rs. 30/- each for the Higher Grade, two of Rs. 15/- each for the Intermediate Grade and two of Rs. 5/- each for the Lower Grade. The M. K. Tirumalachariar Prize of Rs. 25/- was awarded to the best candidate in the Divya Prabandha Branch and the S. Venkataranga Iyengar Prize of Rs. 25/- to a candidate in the Veda Branch. Five teachers who trained students for the Sabha Examinations were given honoraria amounting to Rs. 120/-.

Annual Grants were, as usual, received from His Holiness Sri Parakalaswamigal, His Holiness Sri Vanamamalai Swamigal, H. H. the Maharaja of Mysore, the Muzrai Department of Mysore and Srimathi Mandayam Alamelammal's Charities, Madras. Of the donations received from gentlemen and ladies during the year, one of Rs. 500/- from Sriman K. V. Desikacharyar, L. C. E., deserves special mention.

Books were also presented by the Chairman, Pandit Jaggu Singra Iyengar, Sriman A. Krishnaswamy Iyengar, B. A., Sriman Rao Bahadur M. A. Tirunaranacharyar, B. A., M. L., Madras, Sriman Rao Bahadur V. Ranganatham Chettiar, Madrs, and the Sabha.

After the prize-giving was over, impressive speeches bearing on Visishtadvaita were delivered by Vidvan Devasikhamani Ramanujacharyar and the Chairman.

The proceedings were brought to a close at about 5-30 p. m. with a voteof thanks to the Chair and prayers for the long life and prosperity of H. H. the Maharaja of Mysore.

Malleswaram, 10th May, 1935.

R. NARASIMHACHAR,
Honorary Secretary.

ஸ்ரீ:

# மீமாம்ஸா ஸங்க்ரஹம்.

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்]

[ஸம்-23 ஸஞ் 11, பக்கம் 704 தொடர்ச்சி]

## நான்காவது அத்தியாயம்.

(134) மூன்றாவது அத்தியாயத்தில் எது சேஷம்; எது சேஷி அதாவது எது அங்கம்; எது முக்கியமானது என்று விசாரிக்கப்பட்டது. அந்த ஸம்பந்தம் ஏற்பட்ட பிறகு எது ப்ரயோஜ்யம்; எது ப்ரயோஜகம் என்று தெரியவேண்டும். அவைகள் இந்த நாலாவது அத்தியாயத்தில் விசாரிக்கப்படுகின்றன. காய்ச்சினபாலில தயிரைச் சேர்த்து, ஆமிக்ஷாவை உண்டுபண்ணுகிறார்கள். அப்போது வாஜிநம் என்பதும் உண்டாகிறது. இவைகளில் எது பாலில் தயிரைச் சேர்க்கும்படி செய்கிறதோ; அது ப்ரயோஜகம். எது ஸாத்தியமாக இருந்தாலும், வேறொன்றுக்காக உண்டான ஸாதநத்தைக் கொண்டு பிழைக்கிறதோ, அது அப்ரயோஜகம் இங்கே வாஜிநம் பாலில் தயிரைச் சேர்க்கும்படி செய்கிறதில்லை. அப்படிச் செய்கிறது ஆமிக்ஷா; அதுதான் ப்ரயோஜகம் வாஜிநம் ப்ரயோஜகம் அன்று.(சா-346)

முக்கியமானதெல்லாம் அங்கத்துக்கு ப்ரயோஜகம் அன்று, தர்சபூர்ணமாஸ இஷ்டியில் புரோடாசத்தை உண்டுபண்ணும்போது உண்டாகும் உமியை நடு கபாலத்தில் வைத்து, நிருருதி மூலையில் எறிந்து விடுகிறார்கள். இந்த வியாபாரத்துக்குக் கபாலம் அங்கம். ஆனால் அது கபாலத்தைக் கொண்டுவரும்படி செய்யவில்லை. அதுக்கு ப்ரயோஜகம் புரோடாசம். முக்கியமானதுதான் (சேஷி) அங்கத்துக்கு ப்ரயோஜகம் (சாஸ்-345)

### முதல் பாதம்

(135) ப்ரயோஜகம் இருவகைப்படும் – யாகம் என்றும், யஜமாநனுக்கு வரும் பலன் என்றும். ஆகையால் விதிக்கப்படும் வியாபாரம் எதற்காக – யாகத்தின் பொருட்டாகவா, அல்லது யஜமானன் பொருட்டாகவா என்று விசாரிக்கப்படுகிறது. அந்த வழியாய் ப்ரயுக்தியும் விசாரிக்கப்படுகிறது– எது ப்ரயோஜகம், எது ப்ரயோஜகம் அன்று என்று. பாவனையால் எப்படி அபூர்வம் உண்டாகும் என்கிற தேட்டத்தைத் தீர்ப்பது ஆ[illegible] (யாகத்தின் பொருட்டு). மற்றது, ஸாதகமோ, பலனோ, புருஷார்த்தம் (யஜமானன் பொருட்டு) (சா-347)

(136) உதாரணம்:—(1) தர்சபூர்ணமாஸம் புருஷார்த்தம்: அவை களால் ஒரு க்ரதுவும் புஷ்கலமாகிறதில்லை. அவைகளே க்ரதுக்கள் (அதி-2-வர்ணகம்-1)

(2) "சமஸேநாவ: ப்ரணயேத், கோதோஹநேந பஶுகாமஸ்ய" என்று ஒருவாக்யம் இருக்கிறது. இதின் பொருள்—சமஸத்தாலே ப்ரணீதை வைக் கொண்டுபோய் வைக்கவேண்டியது பசுமாடுகளை ஆசைப்படுகிற வனுக்கு மாடு கறக்கிறபாத்திரத்தாலே' என்று. கோதோஹநத்தாலே கொண்டு போய் வைப்பது க்ரதுவின் பொருட்டு அன்று; இது இல்லாமலே சமஸத்தாலே கொண்டு போய் வைத்து, க்ரதுவை முடிக்கலாம். ஆகை யால் அது புருஷார்த்தம். (அதி-2-வர்ணகம்-3)

(3) பணம் ஸம்பாதிப்பது புருஷார்த்தம். இது க்ரத்வர்த்தமாயிருக் கக் கூடாது. அப்படி இருந்தால் உயிரோடிருப்பதே முடியாது. க்ரதுவே உண்டாகாது. புருஷார்த்தமாயிருந்தால், இந்த உலகத்தில் ஸாகம்கிடைக்க க்ரதுக்களையும் செய்வன். க்ரத்வர்த்தமும் புருஷார்த்தத்துக்கள் அடங்கி யிருக்கிறது. பணத்தை இன்னவழியாய் ஸம்பாதிக்கவேண்டியது என்று விதியிருக்கிறதே யென்றால், அது நியமவிதி; ஒருவன் தானகவே பணம் ஸம்பாதிப்பன். அதற்கு விதி வேண்டியதில்லை. விதித்த வழிதவிர, வேறு வழியாய் ஸம்பாதிக்ககூடாது என்று கருத்து. (அதி-2-வர்ணகம்-4)

பணம் ஸம்பாதிப்பது புருஷார்த்தம் என்பது ப்ரத்யக்ஷத்தாலே தெரி கிறது. க்ரத்வர்த்தம் என்று விதியைக்கொண்டு அநுமாநம் பண்ணவே ண்டும். ப்ரத்யக்ஷத்தைக் காட்டிலும் அநுமாநம் துர்பலம் (சாஸ்-349)

(137) 'அக்நீஷோமீயம் பஶுமாலபேத' என்றுஒருவாக்யம். இதின் பொருள் 'அக்நீ ஷோம தேவதைக்கு கொடுக்கவேண்டிய பசுவை உபாகர ணம்பண்ண வேண்டியது' என்று 'இங்கே பசு உபாதேயம்'. 'பசும்' என் கிற சொல்லில் இருக்கும் விபக்தி ஒன்று என்கிற ஸங்க்யையைச் சொல்லு கிறது. அதை யாகத்துக்கு அங்கமாக விதிக்கிறதா? அதை விதிப்பதில் கருத்தா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—"பஶும்" என்கிற சொல்லில் ப்ரக்ருதி பசுவைச் சொல்லுகிறது; ப்ரத்யயம் ஒன்று என்கிற ஸங்கியையை. இரண்டும் ஓரேபத மாயிருப்பதால், வேறு பதத்தின் உதவியைத் தேடாமல் பசுவுக்கும் ஒன்று என்கிற ஸங்கியைக்கும் ஸம்பந்தம் 'பசும்' என்பதைக் கேட்டவுடனே தெரிகிறது. யாகமானது "ஆலபேத" என்கிற வேறு சொல்லாலே சொல் லப்படுகிறது. அதையும் 'பசும்' என்பதையும் சேர்த்து வாக்யம் என்கிற



ப்ரமாணத்தால் ஸங்க்யைக்கு யாகத்துடன் ஸம்பந்தம் சொல்லவேணும். ச்ருதி வாக்யத்தைக் காட்டிலும் பிரபலம். இப்படி ஒன்று என்பது யாகத் துக்கு அங்கமில்லாமையால், இரண்டு பசுக்களைக்கொண்டோ, பலபசுக்களைக்கொண்டோ, யாகத்தைச் செய்யலாம்.

ஸித்தாந்தம்:—'பஶும்' என்பது ஒரு பதமாயிருந்தாலும், ப்ரக்ருதி பசுவைச் சொல்லுகிறது; ப்ரத்யயம் கர்மம் என்கிற காரகத்தையும், ஒன்று என்கிற ஸங்கியையும் சொல்லுகிறது ஸங்கியை ப்ரக்ருதியைக் காட்டிலும் கிட்ட இருக்கும் காரகத்துடன் முதலில் சேர்கிறது. காரகம் என்பது கிரியைக்கு ஸாதகமாயிருப்பது. அது வழியாய் ஸங்க் யைக்கு கிரியையோடு ஸம்பந்தம் வருகிறது. அந்த கிரியை எது என்றால், கிட்ட இருக்கிற பதத்தாலே காட்டப்பட்ட யாகம். ஆகையால் ஒன்று என்கிற ஸங்கியை யாகத்துக்கு அங்கம். அதுக்கு உருவமில்லாதபடியால், யாகமாகிய வேலையைச் செய்யமுடியாது. அதைச் செய்வதற்காக அதற் குத் தகுந்த திரவியம் வேண்டியது. அது கிட்ட இருக்கும் பசு. ஆகை யால் இந்த யாகத்தை ஒரே பசுவைக்கொண்டுதான் செய்யவேண்டியது. (அதி - 5)

(138) கீழ் பாராவில் விசாரித்த வாக்யத்தில் பும்லிங்கத்தை விதிப் பதில் கருத்தா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—இல்லை. உலகத்தில் லிங்கமில்லாத மரத்தை வ்ருக்ஷ: என்று ஆண்பாலாகவும், ஆண்பாலான ஈயை 'மக்ஷிகா' என்று பெண்பா லாகவும், சொல்லுகிறது வழக்கம், ஆகையால் சொற்களின் பொருளில் லிங் கத்தைச் சொல்லுவதில கருத்து இல்லை. யாகமாகிய வியாபாரமும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஸமாநம்.

ஸித்தாந்தம்:—பெரியவர்கள் ப்ரயோகத்தாலே எப்படி பசு என்கிற ஜாதியும், அது ஒன்று என்பதும், 'பசு' என்கிற சொல்லுக்குப் பொருள் என்று ஏற்படுகிறதோ, அப்படியே லிங்கமும் ஏன் சொல்லுக்குப் பொரு ளாகக்கூடாது? வ்ருக்ஷ:, மக்ஷிகா - என்கிற சொற்கள் ஸாது (ஸரியானவை கள்) என்று சொல்வது அவைகளின் அர்த்தத்தைக் கொண்டு அன்று;— பெரியவர்கள் பிரயோகத்தின் பலத்தாலே. வியாபாரமானது ஆணுக்கும், பெண்ணுக்கும் ஸமம் என்று சொன்னது பிசகு, ஆண்பசு விஷயத்தில் வித்தியாஸமிருக்கிறது. ஸம்ஜ்ஞபநமான பிறகு ஆப்யாயநம் செய்யும் போது, சொல்லும் மந்திரத்தில் "சேப:" (ஆண்குறி) என்கிற சொல் இருக்கிறது. ஆகையால் லிங்கம் விவக்ஷிதம் (அதி - 6)

(139) ஒரு வியாபாரத்தால் இரண்டு பதார்த்தங்கள் உண்டாகும் போதும், அல்லது வேறு இரண்டு வியாபாரங்கள் செய்யப்படும் போதும், எதுக்கு எது ப்ரயோஜகம் என்று 9-வது முதல் நான்கு அதிகாணங்களில் விசாரிக்கப்படுகிறது.

(1) காய்ச்சின பாலில் தயிரைச் சேர்த்தால், ஆமிக்ஷாவும் வாஜிநமு முண்டாகின்றன. தயிரைச் சேர்ப்பதற்கு எது ப்ரயோஜகம். "தப்தே பயஸி தத்யாநயதி, ஸா வைச்வதேவ்யாமிக்ஷா" என்று வாக்கியம். அதில் "ஸா" (அது) என்கிற சொல் முன்னால் சொல்லப்பட்டதைச் சொல்லுகிறது. அது பால், அதை ஆமிக்ஷா என்று சொல்லுகையால், ஆமிக்ஷா என்பது பால்தான்; வேறு திரவியம் அன்று, ஆமிக்ஷா யாகத்தைச் செய்யும் போது சொல்லுகிற மந்த்ரம் "போக்கியமான பாலே சாப்பிடட்டும்" என்று சொல்லுகிறது. பாலின் ரஸமும் ஆமிக்ஷாவில் இருக்கிறது; வாஜிநத்தில் இல்லே. ஆகையால் பாலே கட்டியாகப் பண்ணுவதற்கு தயிரை அதில் சேர்க்கிறது. ஆமிக்ஷாதான் ப்ரயோஜகம், வாஜிநம் அப்போது கூட உண்டானது. அதை ஸகந்நிஷ்டாதி என்று சொல்லுகிறது. (அதி - 9)

முதல் பாதம் முற்றிற்று.

---

இரண்டாம் பாதம்

(140) விதிக்கப்பட்ட கர்மமானது அர்த்த கர்மமா? அல்லது ப்ரதிபத்தி கர்மமா என்று விசாரிக்கப்படுகிறது. அர்த்த கர்மமாவது-யஜ்ஞம் கொடுக்கவேண்டிய பலனே உண்டுபண்ணுவதற்காக அதற்கு உதவிசெய்யும் கர்மம். யஜ்ஞத்துக்குச் செய்யவேண்டிய உதவியைச் செய்த பிறகு வேறு உபயோகமில்லாவிட்டால், உதவிசெய்த பதார்த்தங்களை எறிந்துவிடவேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால், யாகங்களைச் செய்யுமிடத்தில் புழக்கத்துக்கு இடமில்லாமல் போகும். அந்த பதார்த்தங்களை எப்படிச் செலவழிக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. இது ஒருவிதமான ஸம்ஸ்காரம். உலகத்திலும் இதைப் பார்க்கலாம். ராஜா வெத்திலே போட்டுக்கொள்ளும்போது தம்பலத்தைத் தங்க பாத்திரத்தில் உமிழ்கிறான். இப்படி உபயோகப்பட்டதைச் செலவழிப்பதற்கு ப்ரதிபத்தி கர்மம் என்று பெயர். (அதிகா-4)

(141) தர்சபூர்ணமாஸத்தில் "ஸஹசாகயா ப்ரஸ்தரம் ப்ரஹரதி" என்று ஒரு வாக்கியமிருக்கிறது. அதின் பொருள்—"கிளேயோடு கூட



ப்ரஸ்தரத்தை எரித்துவிடுகிறது" என்று. கிளையை அக்கினியில் கொளுத்திவிடுவது அர்த்த கர்மமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—அர்த்த கர்மம். "ஸூக்தவாகேந ப்ரஸ்தரம் ப்ரஹரதி" என்கிற வாக்யத்தைப்பற்றி விசாரம் செய்யும்போது, ப்ரஹரணம் என்கிற சொல் யாகத்தைச் சொல்லுகிறது என்று தீர்மானிக்கப்பட்டது. ப்ரஸ்தரத்தின் ப்ரஹரணம் யாகமானால், அத்துடன் சேர்ந்த கிளையின் ப்ரஹரணமும், யாகமாகவேணும். அது அர்த்தகர்மம். பூர்ணமாஸ இஷ்டியிலும் இந்த யாகத்தைச் செய்ய கிளையைக் கொண்டுவரவேண்டியது.

ஸித்தாந்தம்:— முன் விசாரம் செய்யும்போது ப்ரஹரணம் என்கிற சொல் யாகத்தைச் சொல்லுகிறது என்று சொல்லவில்லே. மந்த்ரம் ஒரே தேவதையைச் சொல்லுவதால். அந்த தேவதையையும் ப்ரஸ்தரமாகிய திரவியத்தையும் வைத்துக்கொண்டு யாகம் என்று முடிவு செய்தது. கிளே விஷயத்தில தேவதையில்லே ஆகையால் யாகமுமில்லே. ப்ரஹரணம் என்கிற சொல் தன் பொருளான பதார்த்தத்தை எறிந்து விடுவதைத்தான் சொல்லுகிறது. கிளே செய்யவேண்டிய வேலே கன்றுகளை மேய்ச்சலுக்கு ஓட்டுவது, அது ஆகிவிட்டது. வேறு வேலேயில்லே. அதை வேதம் ஆஹவநீயத்தில் போடும்படி விதிக்கிறது. ஆகையால் அதின் ப்ரஹரணம் ப்ரதிபத்தி கர்மம். (அதி-4)

"ஸஹசாகயா" என்று சொல்லப்பட்ட சேர்க்கை ப்ரஹரணத்தில் மாத்திரம். யாக விஷயத்தில் இல்லே. (சா - 370)

(142) அக்னிஷ்டோமத்தில் "க்ரீதே ஸோமே மைத்ராவருணாய தண்டம் ப்ரயச்சதி" என்று ஒரு வாக்யம். இதன் பொருள்—'ஸோமத்தை வாங்கின பிறகு(யஜமானன் வைத்துக்கொண்டிருந்த)தண்டத்தை மைத்ராவருணனுக்குக் கொடுக்கிறான்" என்று. இது அர்த்தகர்மம். இதற்குப் பின்னாலும் வேலே இருக்கிறது. மைத்ராவருணன் நின்றுகொண்டு புரோநுவாக்யை என்கிற மந்திரங்களைச் சொல்லி ஹோதா முதலானவர்களே யாஜ்யாவைச் சொல்லும்படி ஏவும்போது, அந்த தண்டத்தை ஊன்றிக்கொள்ளவேண்டியது. ப்ரதிபத்தி கர்மமானது செய்யவேண்டிய வேலேயைச் செய்து இனி வேலேயில்லாத திரவியத்துக்கு ஸம்ஸ்காரம். அர்த்த கர்மம் இனி வேலே செய்யவேண்டியதற்குச் செய்யப்படும் ஸம்ஸ்காரம். இரண்டாவது ஸம்ஸ்காரம் முதலாவதைக் காட்டிலும் உயர்ந்தது. (அதி - 6)

(143) மேலே மூன்று அதிகரணங்கள் ப்ராஸங்கிகம் (i) 'ஸமே யஜேத' என்று ஒரு வாக்யம். யாகத்தை எங்கேயாவது செய்யவேண்டியதாகையால்

இடம் தானாக ஏற்படும். அதை விதிக்கவேண்டியதில்லை. விதியின் ப்ரயோஜனம் ஸமமல்லாத இடத்தில் பண்ணக்கூடாது என்று காட்டுவது. ஆகையால் இது நியமவிதி.

இப்படியே காலத்தை விதிப்பதும், ருத்விக்குக்களின் ஸங்க்யையை விதிப்பதும், த்ரவ்யத்தை விதிப்பதும் நியமவிதிகள். (அதி - 9)

(ii) "வாயவ்யம் ஶ்வேதமாலபேத பூதிகாம:" என்கிற வாக்யத்தில் பசுவுக்கு வெளுப்பு என்கிற குணம் விதிக்கப்படுகிறது. அதுவும் நியமவிதி. வெள்ளையைத் தவிர வேறு வர்ணம் ஏற்படலாம்; அது கூடாது என்று வெள்ளை வர்ணம் விதிக்கப்படுகிறது. (அதி - 10)

(iii) அவஹநநத்தை விதிப்பதும் நியமவிதி. நெல்லை அவஹநநம் பண்ணாமல் நகத்தால் உமியை உரிக்கலாம். இந்தப்பக்ஷத்தில் அவஹநநம் விதிக்கப்படுகிறது. இப்படி மற்ற ஸம்ஸ்கார விதிகளும். (அதி - 11)

இரண்டாவது பாதம் முற்றிற்று.

---

## மூன்றாவது பாதம்.

144 கீழ் இரண்டு பாதங்களில் க்ரது ப்ரயுக்தி விசாரிக்கப்பட்டது; இப்போது பல ப்ரயுக்தி விசாரிக்கப்படுகிறது.

"யஸ்ய பர்ணமயீ ஜுஹூர்பவதி, ந ஸ பாபம் ஶ்லோகம் ஶ்ருணோதி" என்கிற வாக்யம் அநாரப்ய அதீதம். அதில் சொல்லப்படும் பலன் அர்த்தவாதம். எப்படியென்றால் ப்லன் உண்டு பண்ணப்படுகிறது. அதை உண்டு பண்ணுவதாக இந்த வாக்யம் காட்டவில்லை. அது இருக்கிற விஷயத்தைச் சொல்லுகிறது. ஆகையால் இங்கே விதி க்ரத்வர்த்தம் க்ரத்வத்தமானதற்கு யாகத்தைச் செய்விப்பதைக் காட்டிலும் வேறு பலன்களின் தேவையில்லை. ஆகையால் "ந ஶ்ருணோதி" என்கிற சொல்லை "ந ஶ்ருணுயாத்" (கேட்கவேண்டாம்) என்று மாற்றினாலும், அதற்குப்பலன் உண்டு என்று சொல்லமுடியாது. (அதி-1)

மேலே சொல்லப்போகிறபடி இது க்ரத்வர்த்தமாயும் புருஷார்த்தமாயும் இருக்கலாமே என்றால்; பதில்—இரண்டையும் விதிப்பதானால், வாக்யபேதம் ஏற்படும். (சாஸ்த்-378)



(145) ப்ரணீதா விஷயத்தில் "கோதோஹநேந பஶுகாமஸ்ய ப்ரணயேத்" என்று ஒருவாக்யம். அதின் பொருள் "நிலையாயிருப்பதை ஆசைப்படுகிறவனுக்கு மண் பாத்திரத்தில் ப்ரணீதா என்கிற ஜலத்தை கொண்டு போய் வைக்கவேண்டியது என்று. இந்த ஆசையில்லாதவனுக்காகச் செய்யப்படும் நித்யப்பிரயோகத்திலும் மண் பாத்திரத்தை வைத்துக்கொள்ள வேண்டுமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—வைத்துக்கொள்ளவேண்டும். அதிலும் ஒரு பாத்திரம். வேண்டியதுதானே. ஒருகேள்வி—உலகத்தில் அகப்படும் ஏதாவதொன்றை வைத்துக் கொள்ளலாமே. மண் பாத்திரத்தையே வைத்துக்கொள்ளவேண்டும் என்கிற கட்டாயமில்லையே என்று. பதில்-வேதம் சொல்லுகிறவேலையில் அது சொல்லாத பாத்திரத்தைக் காட்டிலும் அதனால் சொல்லப்பட்டபாத்திரம் கிட்ட இருக்கிறது.

ஸித்தாந்தம்:—ஆசையுள்ளவனுக்கு மண்பாத்திரம் விதிக்கப்படுகிறது அது ஆசையிருந்தால், தகுந்தது. இல்லாவிட்டால் நித்யப்ரயோகத்துக்குத் தகுந்தது அன்று. பாத்திரத்தின் தேட்டம் 'சமஸேநாப: ப்ரணயதி' என்று நித்யப்பிரயோகத்தில் விதிக்கப்பட்ட வாக்யத்தால் தீர்கிறது. (அதி-2)

(146) அக்நிஹோத்ரவிஷயத்தில் "தத்நா இந்த்ரியகாமஸ்ய ஜுஹுயாத்" என்று ஒரு வாக்யம். அதின் பொருள்—இந்த்ரிய சக்தியை ஆசைப்படுகிறவனுக்கு தயிரால் ஹோமம் செய்யவேண்டியது—என்று. கீழ் சொன்னநியாயப்படி தயி (தயிர்) நித்ய பிரயோகத்துக்குக் கூடாதென்று ஸந்தேஹம் உண்டாகும். "தத்நா ஜுஹோதி" என்று வேறு வாக்யம் இருக்கிறது. ஆசை இல்லாதவனுடைய நித்யமான ஹோமத்துக்கு தயிர் விதிக்கப்படுகிறது.. ஆகையால்ஒரேதிரவியம் ஒரு வாக்கியத்ததால்நைமித்திகத்துக்கும் வேறு வாக்யத்தால் நித்யத்துக்கும் திரவியமாக இருக்கலாம். (அதி-3)

(147) அக்நிஷ்டோம யாகத்தைச் செய்ய தீக்ஷை செய்து கொண்டவனுக்கு அந்நம் சாப்பிடுவது இல்லை. அதற்குப் பதிலாக வ்ரதம் சொல்லப்படுகிறது. "பயோவ்ரதம் ப்ராஹ்மணஸ்ய, யவாகூ ராஜந்யஸ்ய ஆமிக்ஷா வைஶ்யஸ்ய" என்று இங்கே ஒருபலனையும் இவ்விதமான விரதத்துக்கு நிமித்தமாகச் சொல்லவில்லை. ப்ரகரணம் என்கிற பிரமாணத்தால் அந்த வ்ரதம் க்ரதுவுக்கு அங்கம். இன்னாருக்கு இன்னவிரதம் என்று ஏற்படுவதற்காக, பிராமணன் முதலான ஜாதிகளைச் சொன்னது (அ-4).

இந்த வாக்யத்தை க்ரது ப்ரகரணத்தில் படித்திருப்பதால, சொன்ன வ்ரதம் க்ரதுவிற்கு உபகாரம் செய்கிறது என்று கொள்ளவேணும். என்ன உபகாரம் என்றால், க்ரதுவைச் செய்கிறவனுக்கு ஒரு ஸம்ஸ்காரத்தைச் செய்வது (சாஸ்–380)

(148) 'விச்வஜிதா யஜேத'' என்று ஒருவிதி. அதின்பொருள்–விச்வஜித் என்கிற யாகத்தைச் செய் என்று. இதைச்செய்வதற்குப்பலன் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனபோதிலும் பலன் உண்டு என்று கொள்ள வேண்டும். ஏன் என்றால் விச்வஜித் என்கிற யாகத்தாலே, செய்யவேண்டியது என்று சொன்னால் எதை யென்று கேள்வி உண்டாகிறது. வாக்யத்தில் குறைவு இருக்கிறது. அதைத் தீர்ப்பதற்காக, ஒரு பலனைச் சொல்லும் பதத்தை வாக்யத்தில் சேர்க்கவேண்டியது. அப்படிச் செய்தால் அந்தப் பலனை ஆசைப்படுகிறவன் யாகத்தைச் செய்வன் அப்படிச் செய்யா விட்டால், பலனை ஆசைப்படுகிறவன் இல்லாமையால், யாகம் செய்யப்படாது. விதி வீணாய்ப்போய்விடும். ஆகையால் பலன் இருக்கிறது என்று கொள்ளவேணும். (அதி–5)

(2) பலன் இருக்கிறது என்று கொள்வோம். அது என்னபலன்? இதுதான் பலன் என்று சொல்லக் கூடாமையால், எல்லா பலன்களும் கிடைக்கும் என்று கொள்ளலாமா! கூடாது வாசவம் (ஸாவவு) என்கிற நியாயத்திலே பலன் ஒன்றாகவே இருக்கவேண்டும் (அதி–6)

ஒரு பலனால் வாக்யத்தின் குறையைத் தீர்க்கலாம். வேறு பலன்களைக் கொள்ளக்கூடாது (சா–392)

(3) அந்த ஒருபலன் எது என்றால், அது ஸ்வர்க்கம். என்று கொள்ளவேணும் என்றால், பசு, பிள்ளைகுட்டி முதலானவைகளைப் போல், அதில் துக்கக்கலப்பு இல்லை. அது அளவில்லாத ஸுகம். ஆகையால் அதையே எல்லாரும் தேடுகிறார்கள். (அதி–7)

(தொடரும்).

ஸ்ரீ:

# க டி த ங் க ள்.

## ஒரு யோகீச்வரரின் நிர்யாணம்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

நிகழும் வைகாசிமீ 9உ புதன்கிழமை தினம், மயிலாப்பூரில் பஹுகாலமாக வஸித்து வந்த ஸ்ரீ வரதராஜ யோகீச்வரர் என்னும் ஒரு விஷ்ணு பக்தர் இந்த விபூதியிலிருந்து திரோதானம் அடைந்தார் என்பதை நாம் நமது ஸுஹ்ருத்துக்களுக்கு மிக்க சோகத்துடன் விஜ்ஞாபனம் செய்துகொள்ளுகிறோம். ருஜுவான விஷ்ணு பக்தர்களுள் அவர் ஒருவர்; அவருடைய மஹிமையையும் அவரிடமிருந்த பகவத் ப்ரீதியையும் அவருடன் நெருங்கிப் பழகினவர்களே அறிவார்கள்.

பஹுகாலம் வரையில் அவர் மற்றை ஸாமாந்ய ஜநங்கள் போல ஜீவநோபாயத்தைத் தேடுவதில் ப்ரவர்த்தித்திருந்த போதிலும், வார்த்தக காலத்தில் ஏதோ ஒரு புண்ய கர்ம பலமாக ஸதாசார்ய கடாக்ஷம் பெற்று, அவரிடம் மந்த்ர க்ரஹணம் க்ரந்த காலக்ஷேபம் உபயாநுஷ்டாநம் முதலியவைகளை முறை ஒன்றும் தவறாது செய்துகொண்டு பாக்கி காலம் முழுமையும் ஆத்ம ப்ரயோஜநமாக நித்ய கர்மாநுஷ்டாநம் பகவதாராதநம் பகவத் கதா ச்ரவணம் த்வயோச்சாரணம் முதலியவைகளாலேயே கழித்துக்கொண்டு வந்தார். பால்யத்தில் அவர் லோக வ்யாபாரத்தில் இருந்துகொண்டிருந்த காலத்திலேயே அவருக்குப் பத்நீ வியோகம் நேர்ந்தது. அவருக்கு அப்பொழுது சிறு வயதாக இருக்கையிலும் அவர் மற்றுமொரு தார பரிக்ரஹம் செய்துகொள்வதற்கு அபிப்ராயம் கொள்ளாமலே வாநப்ரஸ்தாச்ரமி ப்ராயராகக் கேவலம் தபஸ் வ்ரதம் முதலியவைகளால் தேஹத்தைச் சோஷித்துக்கொண்டே வர்த்தித்து வந்தார். அவர் புஜித்தது முழுமையும் தாபஸர்களுக்கு உசிதமான அந்நமே. தீர்த்தாடநத்தையே ஒரு கர்ம யோகமாகக் கைப்பற்றினவர். அதிலும் கங்கா ஸ்நாநத்திலும் பதரீ நாராயணன் ஸேவையிலும் மிக்க ஆவலுள்ளவர். இரண்டு மூன்று வர்ஷ காலம் பதரியிலும் ஹரித்வாரத்திலுமே வஸித்து வந்தார். அந்திம காலத்தில் ஸ்ரீ ரங்கநாதன் அவரை விசேஷித்துக் கடாக்ஷித்துத் தனது ஸமீபத்தில் அகண்ட காவேரீ தீரத்திலேயே இரண்டு மூன்று வர்ஷகாலம் ஏகாந்த வாஸத்தை அவருக்குச் செய்வித்து, பிறகு ஒரு மாஸ காலம் அவரை ஸ்ரீரங்கத்தில் தனது திருவடிவாரத்திலேயே வைத்துக்கொண்டு தனது நித்ய ஸேவையாலும் நித்ய கைங்கர்யத்தாலும் விசேஷித்து அநுக்ரஹித்து, கடைசியில் தனக்கு அதிமாத்ரம் ஸ்வாதுவான வஸ்துவாகத் திருவுள்ளம் பற்றி விட்டான். இம்மாதிரியான பாக்யம் யாருக்கு நேருமோ!

பால்யத்தில் இவர் வித்யா க்ரஹணம் செய்துகொண்டிருந்த பொழுது, விசேஷித்த ஜ்ஞாநத்தாலும் ஆத்ம குணங்களாலும் நிறைந்துள்ள ஒரு ஆசார்யோத்தமரிடத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையைக் கற்கும்படி நேர்ந்தது. அப்படி அவர் அதைக் கற்றது ஸ்வல்ப காலமாக இருந்தும், அந்த ஆசார்யனுடைய ப்ரீதி புரஸ்க்ருதமான அநுக்ரஹத்தால் அவருக்கு அந்தப் பாஷையில் ஆழ்ந்த ஜ்ஞாநம் உண்டாயிற்று. இந்த ஜ்ஞாநம், பிறகு இவர் வேதாந்த சாஸ்த்ரத்தை அப்யஸிக்க ப்ரவர்த்தித்த பொழுது இவருக்கு மிகவும் உபகாரகமாக இருந்தது. இவர் உபயுக்தங்களான அம்சங்களெல்லாவற்றிலும் விசதமான ஜ்ஞாநத்தைப் பெற்றவர். ஸாமாந்ய சாஸ்த்ரங்களில் இவருக்கு அதிக பரிசயமில்லை யாயினும், ஸுஹ்ருத் ஸல்லாப காலங்களில் " [illegible] " என்று இவர் விஷயங்களை விசாரிக்கும் ரீதி அதீவ விசித்ரமாகவே இருக்கும். சிற்சில காலங்களில் இவருக்குப் பகவத் ஸாக்ஷாத்காரமும் நேர்ந்தது அத

னால் அவர் ஆனந்தாநுபவம் செய்து வந்ததை அவருடைய அந்தரங்க ஸஹ்ருத்துக்கள் அறிவார்கள்.

ஸ்ரீ பாகவத ஸப்தாஹ பாராயணம் என்னும் மஹாயஜ்ஞத்தை அநுஷ்டிப்பதில் அவருக்கிருந்த கௌதூஹலம் இவ்வளவென்று சொல்ல முடியாது, ப்ரதி ஸம்வத்ஸரமும் ஒவ்வொரு ஸ்தல விசேஷத்தில் அந்த யஜ்ஞத்தை அங்கங்கிருந்த ப்ரபுக்களைக்கொண்டு சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டுள்ள முறைகளுள் ஒரு அம்சத்திலும் குறைவின்றிக்கே நடத்தி வந்தார். சென்ற வர்ஷத்தில் மாம்பலத்தில் அந்த உத்ஸவம் நடைபெற்ற பெருமை அதிமாத்ரம் விலக்ஷணம்; அது ஒரு பொழுதும் மறக்கத்தக்கதல்ல. இந்தப் பாராயண காலங்களில் அவருக்கு அற்பாற்புதங்களான பகவதநுபவங்கள் நேர்ந்ததை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். இவர் சிறந்த புண்யாத்மா. இவரை இன்னும் கொஞ்ச காலம் நாம் அநுபவியாமல் இழந்துவிட்டோமே என்பதே நமது அளவற்ற சோகம். இவருடைய மஹிமையை உள்ளபடி அறிந்த சிலர் இவரைப்பற்றி சில ச்லோகங்கள் செய்திருப்பதை நாம் இவ்விடத்தில் வரைகின்றோம்.

(1)

[ஸ்ரீ. உ.வ. அரசாணிப்பாலை சடகோபாசார்யரால் செய்யப்பட்டவை]

[illegible]

(2)

[மற்றுமொரு ஸ்நேஹிதரால் செய்யப்பட்டவை]

[illegible]



[illegible]

ஶ்ரீ:

ஶ்ரியை நம:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

[illegible]

## ஸம்பாதகரின் குறிப்புக்கள்

நமது தேசத்தில், பாலர்களாயிருக்கும் புருஷ ப்ரஜைகளுக்குப் போல, ஸ்த்ரீ ப்ரஜைகளுக்கும் ஸ்வல்ப காலமாகப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு வித்யாப்யாஸமும் செய்விக்கப்பட்டு வருகின்றது என்பதை எல்லாரும் கவனித்திருக்கலாம். ஸ்த்ரீகளின் இந்தப் வித்யாப்யாஸம் பற்றி பேசுகிறவர் பலருண்டு. 'பெண்களுக்கு வித்யையே கூடாது; அது அவர்களுக்குத் தீங்கையே விளைவிக்கும்' என்பது அவர்களின் நினைவு. இப்பொழுது செய்யப்பட்டுவரும் ஏற்பாடு போதாதென்றும், இன்னும் இந்நாட்டிற்கு அதிகமாகப் பெண்பிள்ளைகளுக்குப் பாடசாலைகள் ஏற்படவேண்டுமென்றும் பெண்பிள்ளைகளும் புருஷப்பிள்ளைகள் போலவே உயர்ந்த படிப்புப் படித்தல் வேண்டுமெனறும் ஆசம்ஸிப்பவர்களும் பலருண்டு. இவைகளுள் எது நடைசியில ஜகத்திற்கு ஹிதமாகும் என்பதை ஒருவரும் சரியானபடி அறிந்தவரல்லர். பெண்களுக்குப் படிப்பு என்பதே கூடாதென்று வாதிப்பவர்கள், பெண்களும் சேதநர்களென்பதையும் அவர்களுக்கும் அந்தச் சைதந்யத்தின் அபிவ்ருத்தி உத்தேச்யம் என்பதையும் மறந்தே அம்மாதிரி வாதிக்கிறார்கள். நிற்க, இந்த ஸம்ஸாரத்தில் தம்பதிகள் பரஸ்பரம் உண்மையான விச்வாஸத்துடன் அநுகூலர்களாக நடந்துகொண்டு இல்லற வாழ்க்கையை யதாசக்தி ஸுகப்ரதமாகச் செய்து வரவேண்டுமென்றால், அவ்விருவர்களும் தம் தமக்குத் தகுந்த வித்யைகளை அப்யஸித்து அந்த வித்யைகளினால்

பெறக்கூடிய ஸம்ஸ்காரத்தைப் பெற்றவர்களாயிருத்தல் வேண்டுமென்பது அவச்யமே. தக்க பூயிஷ்டமான இந்த ஸம்ஸாரத்திலும் ஸுக காலமும் கொஞ்சம் கொஞ்சமுண்டு. அப்படிப்பட்ட ஸுகத்திற்கு உபகாரகமாயிருக்கும் ஜ்ஞாநப்பயிற்சியை ஸர்வதா நிஷேதிப்பது உசிதமாகுமோ? ஆனால், இந்த ஸ்ருஷ்டியில் ஒவ்வொரு வ்யக்தியும் அவரவர் கர்மத்திற்கு அநுரூபமான ஒவ்வொரு தர்மத்தையும் வ்ருத்தியையும் அவலம்பிக்கும் படியாகவே ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஸ்த்ரீகளுடைய வ்ருத்தியும் தர்மமும் புருஷர்களுடைய வ்ருத்தியையும் தர்மத்தையும் எல்லா அம்சங்களிலும் ஒக்கவையல்ல. ஆகையால் இவர்களுக்குச் செய்விக்கப்படவேண்டிய பயிற்சி முறைகள் வேறுபட்டவனவாக இருப்பதே க்ரமத்திற்கு ஒத்ததாகும். புருஷர்களுக்கு எம்மாதிரியான வித்யாபிவ்ருத்தியைச் செய்து வருகிறோமோ அம்மாதிரியே ஸ்த்ரீகளுக்கும் வித்யையைப் பூர்ணமாக எவ்வித பேதமுமின்றிக்கே கொடுத்தல் வேண்டுமென்று வாதிப்பது உசிதமாகமாட்டாது. ஸ்த்ரீகளுடைய ஸ்வாபாவிகமான தர்மங்களுக்கு ஒக்கபடி அவர்களுடைய வித்யாப்யாஸத்தை நாம் சீர்படுத்தி வருவதே உசிதமாகும்.

இப்பொழுது நமது பாடசாலைகளில் படித்து, பி. ஏ. பரீக்ஷைகளில் தேறியிருக்கும் ஸ்த்ரீகளுட் சிலர் தமக்கு விவாஹம் வேண்டாமென்று நிஷேதித்தும், மற்றும் சிலர் தமது குல தர்மங்களைத் துறந்து தமது தாய் தகப்பன்களைப் பரித்யஜித்து தேசாந்தரங்களில் வஸிக்கத்துணிந்தும், வேறுசிலர் எல்லா மதஸ்தர்களாலும் நிந்திக்கப்பட்டுள்ள ஸ்வேச்சா வ்ருத்தியை அவலம்பித்தும் இவ்வாறு நடந்து வருகிறார்களென்பது உண்மையே. ஆனால், இவையெல்லாம், நம்மால் கீழ்க்கூறப்பட்டுள்ள சீர்பாடு இல்லாததனால் வரும் தீமைகளே அன்றி படிப்பினால் மாத்ரம் வரும் தீமைகளல்ல.

“ அநாதிவாஸநாவாஸிதே ஸ்ம்ஸாரே ... ”

என்கிறபடி, அநாதிகாலமாக ஸம்ஸரித்து வந்து அதன் பலமாக ப்ரபலமான ஜந்மாந்தர வாஸனைகளைப் பெற்றிருக்கும் நமக்கு பாஹ்ய நிரோதங்களிராவிட்டால் மந்மதாவேகம் நிக்ரஹிக்கப்பட்டு நிற்குமென்பது ஸாத்யமாகுமோ? கேவலம் அப்பக்ஷர்களாகவும் வாயுபக்ஷர்களாகவும் இருந்த விச்வாமித்ர பராசரர் முதலான மஹர்ஷிகளும் சிற்சில ஸமயங்களில் மோஹத்தை அடைந்தார்கள் என்பதை நாம் கேட்டதில்லையோ! ஆகையால், மந்மதாவேகம் உந்மஸ்தகமாகும் காலம் வரும் முன்னமேயே பால்யத்திலேயே மாதா பிதாக்களே பாலர்களுக்கு விவாஹத்தைச் செய்வித்தும், அவரவர்களுடைய தர்மங்களுக்கும் வ்ருத்திகளுக்கும் அநுகுணமாக அவரவர்களுடைய வித்யாப்யாஸத்தைப் பரிஷ்கரித்தும், பெரியோர்களான சாஸ்த்ரகர்த்தாக்களால் விதிக்கப்பட்டும் நிஷேதிக்கப்பட்டுமுள்ள மார்க்கங்களுக்கு உள்ளடங்கி நடந்து வரும்படியும், இம்மாதிரி நிரோதங்களெல்லாவற்றையும் சரிவரப் பாதுகாத்து வந்தால், இப்பொழுது நேர்வது போல, பரபுருஷர்களுடன் மாதா பிதாக்களுக்குத் தெரியாமலே ஏதோ ப்ளேனில் தேசாந்தரத்திற்கு ஓடி விடுவது முதலான அச்ரேயஸ்ஸுக்கள் ஒருகாலும் ஸம்பவிக்கமாட்டா. ஸ்த்ரீகளின் வித்யாபிவ்ருத்திக்காகப் பரிச்ரமப்படும் நமது பெரியோர்கள் இந்த விஷயத்தைச் சற்று கவனிப்பாராக.



നേശ്വരേശ്വരയോർഭേദാഭിധാനാ ചാതുർവ്യൂഹ്യേ । തദാനീം ഉത്പത്ത്യസംഭവോ ദോഷഃ പ്രാപ്നോതി।

അത്രോച്യതേ.—

ന ഭവതി തദപ്രതിഷേധഃ। ഉത്പത്ത്യസംഭവസ്യാപ്രതിഷേധഃ പ്രാപ്നോത്യേവ। അപ്യുത്പത്ത്യസംഭവോ ദോഷഃ പ്രകാരാന്തരേണ കഥം? കിം വാസുദേവാദിനാ നാമ്നൈതേ വാസുദേവാദയഃ സമാനസ്വഭാവാ ഭിന്നാ ഏവേശ്വരാശ്ചത്വാരഃ। ഉത സമാനസ്വഭാവസ്യ ഭഗവതശ്ചത്വാരോ വ്യൂഹാസ്സമാനസ്വരൂപാ ഇതി॥

നാദ്യഃ । അനേകേശ്വരകല്പനാവൈയർഥ്യാച്ച । സിദ്ധാന്തഹാനേശ്ച ।

---

ஆகையினால் இந்த உத்பத்யஸம்பவம் என்கிற தோஷம் ஸம்பவிக்காது என்கிற இந்த பூர்வபக்ஷத்திற்கு ஸமாதானம் சொல்லப்படுகிறது ‘ ததப்ரதிஷேதஃ ’ என்று.

இந்த தோஷம் வேறு விதமாக உண்டாகிவிடுகிறபடியினால் உத்பத்ய ஸம்பவம் என்கிற தோஷத்திற்கு நிஷேதம் ஏற்படமாட்டாது.

அது எப்படி உண்டாகிறதென்றால் :

இந்த வாஸுதேவன், ஸங்கர்ஷணன் ப்ரத்யும்நன் அநிருத்தன் என்கிற நான்கு பெயர்களும் ஸமானமான ஸ்வபாவத்தை உடையவர்களான வெவ்வேறு ஈச்வரர்களாகையினால் இவர்கள் ஒரு ஆத்மாக்களல்ல என்று அபிப்ராயமா ?

அல்லது ஸமானமான ஸ்வபாவத்தை உடையவர்களாயும் ஒரே பகவானுடைய அவதாரங்களான நான்கு வ்யூகங்கள் என்று அபிப்ராயமா.

முதல் கக்ஷியில் அனேகம் ஈச்வரர்களை கல்பிக்கவேண்டியதில் ப்ரயோஜனமில்லையாகையினால் அது ஸம்பவிக்காது. இது ஒரே ஈச்வரனை அங்கீகரிக்கிற ஸித்தாந்தத்திற்கும் விருத்தமானது.

ந த்விதீய: । வாஸுதேவாதே: ஸங்கர்ஷணாத்யுத்பத்த்யஸம்பவாதிஶயாபாவாச்ச । ஸாதிஶயத்வம் ஹி கார்யகாரணயோர்த்ருஶ்யதே ।

ந ச பஞ்சராத்ரஸித்தாந்திபி: வாஸுதேவாதிஷு ஏகஸ்மிந் ஸர்வேஷு வா ஜ்ஞாநைஶ்வர்யாதிதாரதம்யக்ருத: கஶ்சித் விஶேஷோऽப்யுபகம்யதே ।

விப்ரதிஷேதாச்ச:—

விப்ரதிஷேதஶ்சாஸ்மின் ஶாஸ்த்ரே பஹுவித உபலப்யதே । குணகுணித்வகல்பநாதிலக்ஷண: ஜ்ஞாநைஶ்வர்யஶக்திபலவீர்யதேஜாம்ஸி குணா: ஆத்மாந ஏவைதே பகவந்தோ வாஸுதேவா இத்யாதி தர்ஶநாச்ச ।

---

இரண்டாவது கக்ஷி ஸம்பவிக்காது. வாஸுதேவாதிகளைக் காட்டிலும் ஸங்கர்ஷணன் முதலானவர்களுக்கு வித்யாஸத்தை அங்கீகரிக்காததினால் வாஸுதேவன் முதலானவர்களிடமிருந்து ஸங்கர்ஷணாதிகள் உண்டாகிறார்கள் என்று சொல்ல முடியாது.

காரணத்தைக் காட்டிலும் காரியத்திற்கு ஏதாவது ஓர் அதிசயமிருக்க வேண்டியது என்பது ப்ரஸித்தமல்லவா.

பஞ்சராத்ரஸித்தாந்திகளினால் வாஸுதேவன் முதலான நான்கு ரூபங்களுக்குள் ஒரு ரூபத்திலாவது அல்லது எல்லா ரூபங்களிலாவது ஜ்ஞானம் சக்தி முதலிய குணங்களுடைய தாரதம்யத்தினால் ஏற்படக்கூடிய ஏதாவது ஒரு பேதம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதோ? அப்படி அங்கீகரிக்கப்படவில்லையே.

விப்ரதிஷேதாச்ச-இந்தப் பஞ்சராத்ர சாஸ்திரத்தில் குணங்கள் குணிகள் இவைகளை கல்பிப்பது முதலியதான பல விரோதமும் காணப்படுகிறது. ஞானம், ஐச்வர்யம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ் இவைகள் குணங்கள். இவைகள் பகவானான வாஸுதேவன் என்கிற ஆத்மாக்கள் தாம் என்பது முதலான விருத்த வசனங்கள் காணப்படுகின்றன.



வேதவிப்ரதிஷேதஶ்ச பவதி । வேதேஷு பரம் ஶ்ரேயோऽலப்த்வா ஶாண்டில்ய: இதம் ஶாஸ்த்ரமதீதவாந், இத்யாதி வேதநிந்தாதர்ஶநாத் ।

அந்யே து, விஜ்ஞாநாதிபாவே வா தத‌ப்ரதிஷேத:, விஜ்ஞாநஶப்தோ ஜீவவாசக: । அத்ர ஜீவாதீநாமுத்பத்திர்ந ப்ரதிஷித்யதே । கிம் து ஸங்கர்ஷணாதீநாம் ஜீவாதிபாவ உச்யதே । ஜீவாத்யதிஷ்டாத்ருத்வம் ஜீவாதிபாவ: । அத: தச்சாஸ்த்ரப்ராமாண்யப்ரதிஷேதோऽஸங்கத இதி ஶங்காயாம்: । விப்ரதிஷேதாச்ச-ஏவம் ஜீவோத்பத்தியாதே பரிஹ்ருதேऽபி பாஞ்சராத்ரதந்த்ரஸ்ய நாஸ்த்யேவ ப்ரம: । ஶ்ருதிவிப்ரதிஷேதகாரண வாதமுக்தமேதாஸ்து தத்வ

---

வேதத்தைப்பற்றிய தூஷணமுமிருக்கிறது.

சாண்டில்யர் என்கிற ருஷியானவர் உயர்ந்த ச்ரேயஸ்ஸை வேதங்களில் அடையாமல் இந்த பஞ்சராத்ர சாஸ்திரத்தை அத்யயநம் பண்ணினார் என்று சொல்வதால் வேதவிருத்தமான விஷயத்தை இந்த பஞ்சராத்ர சாஸ்திரம் சொல்வதாக முடிவதால் இது வேதத்தை நிந்திக்கிறது.

வேறே சிலர் இந்த ஸூத்ரங்களுக்கு வேறு விதமாக வ்யாக்யானம் பண்ணுகிறார்கள். (ஸூ) (விக்ஞா-த:) விக்ஞாந சப்தமானது ஜீவனைச் சொல்லுகிறது. இங்கு ஜீவன் முதலானவர்களுக்கு உத்பத்தி சொல்லப்படவில்லை. வேறு என்னவென்றால் ஸங்கர்ஷணாதிகள் ஜீவாதிகளுக்கு அதிஷ்டாதாக்கள் என்கிற விஷயம் சொல்லப்படுகிறது. ஆகையினால் பஞ்சராத்ர சாஸ்திரத்திற்கு ப்ராமாண்ய நிஷேதம் உண்டாகாது என்று சங்கையின் தாத்பர்யம்.

(ஸூ) விப்ரதிஷேதாச்ச—இப்படி ஜீவனுடைய உத்பத்தியைச் சொல்லுகிறதாகிற தோஷமானது பரிஹரிக்கப்பட்டாலும் பஞ்சராத்ர மதத்தை அங்கீகரிக்கக்கூடாது.

[illegible]

[illegible]

[illegible]

ஏனென்ருல், அதில் வேதத்திற்கு விருத்தமான ஈச்வரன் ஜகத்திற்குக் காரணம் என்று சொல்வதாலும், தப்தங்களான சங்கம் சக்ரம் இவைகளினுல் அடையாளம் செய்துகொள்வதை மோக்ஷத்திற்குக் காரணமாகச் சொல்வதினுலும் வேத விரோதம் ஏற்படுகிறது.

ஆகையினுல் பஞ்சராத்ர மதமானது ஸமஞ்ஜஸமல்ல என்கிருர்கள். அந்த பக்ஷத்தில்

ஸ்ரீ பஞ்சராத்ர சாஸ்திரத்தில் வாஸுதேவன் ஸங்கர்ஷணன் முதலிய நாலு வ்யூஹங்களைச் சொல்லுகிறதான அனேகம் ப்ரகரணங்கள் காணப்படுவதால் இப்படி ஈச்வர ரூபியான ஸங்கர்ஷணனை ஜீவனுகச் சொல்வது விருத்தமாகையினுலும் ஜீவன் முதலிய சப்தங்களுக்கும் ஏதாவதொரு வ்ருத்தியினுல் வ்யூஹரூபமே அர்த்தமென்று வ்யக்தமாக ஏற்படுவதாலும் இந்த விஷயத்தை ஆசார்யன் நன்கு கவனிக்காமல் சொன்னுர் என்கிற ஆசார்யனிடத்தில் இல்லாத ஓர் தோஷத்தை வெளியிட்டது முதலான ஆசார்ய த்ரோகமாகும்.

வேதாசார்யனை வ்யாஸ பகவானுலேயே பஞ்சராத்ரத்தில் நான்கு வ்யூஹங்களும் சொல்லப்பட்டிருப்பதாக பாரதத்தில் சொல்லி இருப்பதால்,



[illegible]

நாராயணீயே:—

[illegible]

ப்ரஹ்ம ஸூத்திரத்திலும் விஜ்ஞாநாதி பாவே வா என்று அந்த விஷயத்தை வெளியிட்டிருப்பதாலும் வேதவ்யாஸ பகவான் தம்முடைய பஞ்சராத்ர விமர்சத்தை நன்கு வெளியிட்டிருந்தும் அந்த வ்யாஸ பகவானுடைய பஞ்சராத்ரத்தில் விமர்சமில்லாத தன்மையை இவர்கள் வெளியிட்டதனுல் அந்த வ்யாஸபகவானிடத்தில் இவர்களுக்கு த்வேஷம் தோற்றுவதால் அதே இரண்டாவதான த்ரோஹமாகும்.

மோக்ஷதர்மத்தில் எந்த ஸங்கர்ஷண ரூபியான ப்ரபுவானவர் வாஸுதேவனிடத்தில் உண்டான மாத்திரத்திலுலேயே தனக்குச் சரீரமான ஸர்வ ஜகத்தையும் நியமித்துக்கொண்டிருக்கிருரோ ஜீவனுக்கு அதிஷ்டான தேவதையான அந்த ப்ரபுவானவர் சேஷன் எனறும் சொல்லப்படுகிருர்.

நாராயணீயத்தில்—

அந்த பகவானுனவர் தன்னுடைய கார்யங்களினுல் ஸநத்குமாரர் என்கிற தன்மையை அடைகிருர்.

ப்ரளயகாலத்தில் எந்த பகவானிடத்தில் ஸர்வப்ராணிகளும் ப்ரளயத்தை அடைகின்றனவோ மனஸ்ஸுக்கு அதிஷ்டான தேவதையான அந்த பகவானுனவர் ப்ரத்யும்நன் என்று சொல்லப்படுகிருர்.

அந்த ப்ரத்யும்நனிடத்தில் உண்டானவராயும் ஸர்வ ஜகத்துக்கும் கர்த்தாவாயும் ஸர்வகார்யங்களுக்கும் உபாதான காரணமுமான அந்த ஈச்.

[illegible]

[illegible]

[illegible]

வரன் அநிருத்தன் என்று சொல்லப்படுகிறான். பஞ்சராத்ர சாஸ்திரத்தில் சொல்லப்படுகிற கர்மங்களினால் அவனே ஆராதிக்கப்படுகிறான்.

அசையும் பொருள்களும், அசையாப் பொருள்களுமான ஸர்வ ஜகத்தானது அவனிடத்திலேயே உண்டாகிறது.

ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற குணத்ரய ஸம்பந்தமில்லாதவனாய் ஞானம் முதலான ஆறு குணங்களை உடையவனாய் ஸர்வ ஜகத்துக்கும் ஆத்மாவாய் யாதொரு வாஸுதேவன் இருக்கிறானோ அவனே ஸர்வ ஜகத்துக்கும் ஆதிகாரணமென்று அறியத்தகுந்தவன்.

இங்கு ப்ரகரணத்தை அநுஸரித்து பகவான் என்கிற பதத்திற்கு மூலகாரணமென்று பொருள்.

அந்தப் பர வாஸுதேவன் என்கிற ரூபத்திலிருந்து ஜீவனுக்கு அதிஷ்டாதாவான ஸங்கர்ஷணன் என்கிற ஈச்வரன் உண்டாகிறான் என்றும்,

அந்த ஸங்கர்ஷண ரூபத்திலிருந்து மனஸ்ஸுக்கு அதிஷ்டான தேவதையான ப்ரத்யும்நன் உண்டாகிறான் என்றும்,

அந்த ப்ரத்யும்ந ரூபத்திலிருந்து எவன் உண்டாகிறானோ அவன் அஹங்கார தத்வத்திற்கு அதிஷ்டாந தேவதையான அநிருத்த ரூபியான ஈச்வரனென்றும் சொல்லப்படுகிறான்.

அந்த அநிருத்த ரூபியான என்னிடத்திலிருந்துதான் ஸ்தாவரம் ஜங்கமம் என்கிற பிரிவுள்ள ஜகத்தானது உண்டாகிறது.



[illegible]

[illegible]

[illegible]

ஷை க்ரந்தத்திலேயே மற்றொரு இடத்தில்

பகவானுடைய 4-வது மூர்த்தியான யாதொரு வாஸுதேவமூர்த்தியுண்டோ அதானது சாச்வதனான ஆதிசேஷனை ஸ்ருஷ்டித்தது அந்த சேஷனே ஸங்கர்ஷணனென்றும் சொல்லப்படுகிறான்.

அந்த சேஷரூபியான ஸங்கர்ஷணனே ப்ரத்யும்நனை உண்டாக்கினான். அந்தப்ரத்யும்நனிடத்திலிருந்தே அநிருத்தன் என்கிற நான் உண்டானேன்.

இப்படியே என்னுடைய ஸ்ருஷ்டியானது ஒவ்வொரு கல்பங்களிலும் உண்டாகிறது.

அந்த அநிருத்தனான என்னிடத்திலிருந்து (ஸ்ருஷ்டி) அந்தகாலத்தில் ஆதியான தாமரைப்பூவில் ஜனித்தவனான ப்ரஹ்மா உண்டானான் என்பது.

இப்படி வ்யூஹங்களும் அதினுடைய உத்பத்தியும் அந்த வ்யூஹங்கள் ஜீவாதி சப்தங்களினால் சொல்லப்படுகையும் அங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த ப்ரகரணத்தில் ஜகாந்த்யம் முதலான பஞ்சராத்ரார்த்தம் சொல்லப்படுவதால் இதுவும் பஞ்சராத்ரார்த்தங்கள் என்று அறியப்படுகிறது.

வைகானஸர்கள் எப்படிச் சொல்லுகிறார்கள் பாஞ்சராத்ரிகர்கள் எப்படிச் சொல்லுகிறார்கள் என்கிற கேள்வியினுடைய பதிலில் பஞ்சராத்ரத்திலும் சொல்லப்படும் தன்மையை ஸ்பஷ்டமாகவே சொல்லுகிறார்.

[illegible] ॥

[illegible]:—

[illegible] ॥

[illegible] ॥

நாராயணீயே [illegible]:—

[illegible]।

[illegible] ॥

[illegible] ॥

---

பாரதத்தில் பலபடியாக பஞ்சராத்ரத்திலுடைய ப்ராமாண்யத்தைச் சொல்லி இருப்பதால் வ்யாஸர் பஞ்சராத்ரம் அப்ரமாணமென்று ப்ரம்ஹஸூத்ரத்தில் சொல்லுகிறார் என்று பாரதவிருத்தத்தைச் சொல்வதாக இவர்கள் கல்பிப்பது மூன்றாவதான த்ரோஹம்.

இந்த விஷயம் பீஷ்ம பர்வத்தில் சொல்லப்படுகிறது.

ஸங்கர்ஷண பகவானால் பஞ்சராத்ரத்தில் சொல்லப்படும் விதியை அனுஸரித்து எந்த கர்மாவானது சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்த கர்மங்களைக் கொண்டு தங்கள் தங்கள் கர்மானுஷ்டானங்களை நித்யம் அனுஷ்டிக்கிறவர்களாயும் பஞ்ச ஸம்ஸ்கார ரூபமான லக்ஷணங்களை உடையவர்களுமான பிராமணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன் இவர்களினால் பகவானானவன் அர்ச்சிக்கவும் ஸேவிக்கவும் படுகிறான். ஸேவையாவது அர்ச்சனை தவிர மற்றும் கைங்கர்யங்களைச் சொல்லுகிறது.

நாராயணீயத்தில் 157-வது அத்யாயத்தில் ப்ரம்மசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்யாஸியாக இருக்கிறவன் எந்த மனிதன் பயனை அடைய விரும்புகிறானோ அவன் எந்த தேவதையை பூஜிக்கவேண்டியது?

அவனுக்கு எந்தக் காரியத்தினால் ஸ்திரமான ஸ்வர்க்கமான துண்டாகும்? எந்தக் காரியத்தினால் பரமஸ்ரேயஸமென்கிற மோக்ஷமுண்டா



[illegible]

[illegible] ॥ [illegible]

[illegible]

[illegible] ।

---

[illegible]—வேதங்கள் சொல்லுகின்றன. அப்படி பகவானைக் கல்யாணகுணங்களுக்கெல்லாம் இருப்பிடமாகச் சொல்லும் ச்ருதி வாக்யங்களாவன - "[illegible]" [எவன் எல்லாவற்றையும் அறிகிறானோ, ஸர்வ ப்ரகாரத்தாலும் அறிகிறானோ], "[illegible]" [அவனுடைய சக்தி அளவற்றது, பலவகைப்பட்டது] "[illegible]" [ஜ்ஞானம் பலம் முதலிய கல்யாணகுணங்களெல்லாம் அவனுக்கு ஸ்வபாவத்தாலேயே உண்டு], "[illegible]" [அவன் ஸத்யகாமன், ஸத்ய ஸங்கல்பன்] இவை முதலியவைகளே.

50. பகவானுக்கு ஸ்வபாவத்தாலேயே கணக்கற்ற கல்யாண குணங்கள் உண்டு என்று சொன்ன பிறகு, அந்தக் குணங்களுள் சிலவற்றைப் பற்றிப் பேசப் புகுகிறவராய், முதலில் 'ஜ்ஞானம்' என்று சொல்லப்படும் குணத்தைப் பற்றி விசாரிக்கிறார். அந்த விசாரமென்னவென்றால், 'பகவானுக்கு ஸ்வரூபமே ஜ்ஞானமென்று சொல்லப்படுகின்றதே! அவனுடைய குணமும் ஜ்ஞானமென்று சொல்வது எப்படி ஸங்கதமாகும்? ஒரே வஸ்து குணமாகவும் குணியாகவும் எப்படி இருக்கக்கூடும்?' என்று சிலர் செய்யும் ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்வதே. இதைப்பற்றி நமது ஸித்தாந்தம் சொல்வதாவது—'பகவானுடைய ஸ்வரூபம் ஜ்ஞானமே; ஆனால் அவனுக்கு ஜ்ஞானம் என்ற குணமுமுண்டு. ஒன்றை ஸ்வரூப ஜ்ஞானமென்றும் மற்றொன்றை தர்ம ஜ்ஞானமென்றும் சொல்வார்கள். இப்படியே ஜீவன்களுக்கும் ஸ்வரூப ஜ்ஞானமென்றும் தர்மபூத ஜ்ஞானமென்றும் இரண்டு ஜ்ஞானங்கள் ஒத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஸ்வரூப ஜ்ஞானத்தால் "நான்" என்னும் அறிவு ஏற்படுகின்றது; தர்மபூத ஜ்ஞானத்தால் மற்றைப் பொருள்களின் அறிவு ஏற்படுகின்றது. பகவானுடைய விஷயத்தில் இரண்டு ஜ்ஞானங்களும் விபு [அதாவது-எங்கும் வ்யாபித்து நிற்கும்]; ஜீவனுக்கோவென்றால், ஸ்வரூப ஜ்ஞானம் அணுமாத்ரம், தர்மபூத ஜ்ஞானம் விபு. ஜீவன்களுடைய தர்மபூத ஜ்ஞானம் கர்மமடியாக ஸங்கோச விகாஸங்களை அடையும், பகவானுடைய தர்மபூத ஜ்ஞானத்திற்கு அம்மாதிரியான ஸங்கோச விகாஸங்கள் இல்லை. இவையெல்லாம் உபநிஷத்துக்களிலிருந்தும் ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களிலிருந்தும் தெரிய வருகின்றன.

ஒரே ஜ்ஞானம் எப்படி குணமாகவும் குணியாகவும் இருக்கக்கூடும் என்னும் சங்கைக்கு ஒரு த்ருஷ்டாந்தத்தைக் கொண்டு ஸமாதானம் சொல்லுகிறார். ப்ரகாசத்தை

தேஜோபிரேவ விஶ்வமபரோக்ஷமுதீக்ஷஸே த்வம்
ரக்ஷா த்வதீக்ஷணத ஏவ யதோ(அ)கிலஸ்ய ॥ ௫௦.

ஜ்ஞாநாத்மநஸ் தவ ததேவ ச தர்மமாஹு:
தேஜோமயஸ்ய ஹி மணேரிவ தர்மதேஜ: ।

யே ஸ்வரூபமாயுடைய ஸூர்யன் முதலிய வஸ்துக்களிடம் இம்மாதிரியான ஸ்திதியை நாம் காண்கிறோம். அவைகளின் ஸ்வரூபம் குணம் இரண்டும் தேஜஸ்ஸே. ஒன்று விசேஷ்யமாகவும் மற்றொன்று அதற்கு விசேஷணமாகவும் இருக்கின்றதன்றோ? அம்மாதிரியே பகவானுடைய ஸ்வரூபமாகிற ஜ்ஞாநம் விசேஷ்யமாகவும், தர்ம பூத ஜ்ஞாநம் அதற்கு விசேஷணமாகவும் இருக்கக்கூடும். இதுதான் ஸமாதாநம். இது ஸம்பந்தமாக மற்றுமொரு ஆக்ஷேபமும் சிலரால் செய்யப்படுவது உண்டு. 'ஜ்ஞாநம் என்பது த்ரவ்யமாகையால் அது எப்படி தர்மமாக இருக்கக்கூடும்? என்பது தான் அந்த ஆக்ஷேபம். தர்மமெல்லாம் அத்ரவ்யமாகவே இருத்தல் வேண்டும் என்னும் நியமமில்லை. 'எது ஆச்ரயிக்கப்பட்டிருக்கின்றதோ அது தர்மி, எது ஆச்ரயித்திருக்கின்றதோ அது தர்மம்' தர்ம பூதஜ்ஞாநம் த்ரவ்யமாயிருக்கையிலும் தர்மிஜ்ஞாநத்தை ஆச்ரயித்தே அது இருக்கிறபடியால் அது தர்மமாகின்றது.

(ப - ரை) ஜ்ஞாநாத்மந: – ஜ்ஞாநத்தையே ஸ்வரூபமாயுடைய உனக்கு, ததேவ – அந்த ஜ்ஞாநத்தையே, தர்மம் – தர்மமென்று, ஆஹு: – சொல்லுகிறார்கள். தேஜோமயஸ்ய – தேஜஸ்ஸை ஸ்வரூபமாயுடைய, மணே: – ரத்நம் முதலிய ப்ரகாச வஸ்துவுக்கு, தேஜ ஏவ – தேஜஸ்ஸே, தர்மதா ஹி – தர்மமாகின்றதன்றோ? தேஜோபிரேவ – தர்மமாகிற அந்த ஜ்ஞாநத்தாலேயே, த்வம் – நீ, விஶ்வம் – [உன்னைத் தவிர்த்த மற்ற] எல்லாவற்றையும், அபரோக்ஷம் – ப்ரத்யக்ஷமாக, உதீக்ஷஸே – பார்க்கிறாய்; யத: – எந்தக் காரணத்தால், அகிலஸ்ய – ஸகல வஸ்துக்களுடையவும், ரக்ஷா – ரக்ஷையானது, த்வதீக்ஷணத ஏவ – உன்னுடைய கடாக்ஷத்தாலேயே ஏற்படுகின்றதோ.

ஜகத்தில் ஸகல பதார்த்தங்களுடைய ரக்ஷணமும் பகவத் கடாக்ஷத்தாலேயே ஏற்படுகின்றது என்பது ஸித்தம். ஆகையால், ரக்ஷையைப் பெற்றுள்ள இந்தப் பதார்த்தங்களை பகவான் கடாக்ஷிக்கிறான் என்று ஒத்துக்கொள்ளுதல் வேண்டும். கடாக்ஷிப்பது என்பது தர்மமாயுள்ள ஒரு ஜ்ஞாந விசேஷத்தாலேயே ஸம்பவிக்கவேண்டுமாதலால், பகவானுக்கு தர்மமாக ஒரு ஜ்ஞாநமுண்டு என்பது நிச்சிதமாகின்றது.

51. முன் பகவானுடைய ஸ்வரூபத்தை நிரூபிக்குமிடத்தில், அவனுடைய ஆநந்தம் அளவற்றது என்பது சொல்லப்பட்டது. (24-வது ச்லோகத்தைப் பார்க்க)



தே யே ஶதமிதி பராம்பராயா ப்ரவ்ருத்தா
நைவேஷ வாங்மநஸகோசர இத்யுதாஹ ॥ ௫௧

ஆநந்தம் ஶ்ருதிரியதீதி யௌவநாத்யா
ஸங்க்யாதும் தவ வர்த்திதம் ஸமஸ்தகுணைகநிஷ்டம் ।

இப்பொழுது, அந்த ஆநந்தம் குணமுமானதால், அவனுடைய குணங்களை நிரூபிக்கும் இவ்விடத்திலும் அது மறுபடியும் விவரிக்கப்படுகின்றது.

[ப - ரை] தவ – உன்னுடைய, வர்த்திதம் – வளர்ந்துகொண்டிருக்கும், ஆநந்தம் – ஆநந்தத்தை, யௌவநாதிகுணைகநிஷ்டம் – யௌவநம் முதலிய குணக்கூட்டங்களையிட்டு, இயாநிதி ஸங்க்யாதும் – அது இந்த அளவு உடையது என்று பரிச்சேதிப்பதற்காக, உத்யதா – ஆரம்பித்த, ஶ்ருதி: – வேதமானது, தே யே ஶதமிதி – 'அப்படி நூறுகொண்டது, அப்படி நூறுகொண்டது' என்று, பராம்பராயா – மேன்மேல் வரிசையாக, ப்ரவ்ருத்தா – பெருக்கிப் போகும் ப்ரவ்ருத்திகளைச் செய்துகொண்டு, 'நைவேஷ வாங்மநஸகோசர:' இதி – 'இந்த ஆநந்தமானது வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் ஒருகாலும் எட்டக்கூடியதாகமாட்டாது' என்று, உதாஹ – உத்கோஷித்துச் சொல்லிவிட்டது.

தைத்திரீய உபநிஷத்தில் ஆநந்த வல்லியில் இந்த உத்கோஷத்தைக் காணலாம். "யுவா ஸ்யாத் ஸாதுயுவாத்யாயக:" என்று ஆரம்பித்து, "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்று அவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் விவரணத்தை 24-வது ச்லோகத்தின் உரையில் காண்க.

52. 'ஆநந்தகுணம் அளவற்றது' என்று கீழ் ச்லோகத்தில் விவரிக்கப்பட்டது. அம்மாதிரியே பகவானுடை மற்றை குணங்களும் அளவற்றவை என்பது இந்த ச்லோகத்திற் சொல்லப்படுகின்றது. உபநிஷத்துக்களெல்லாம் கம்பீரமான அர்த்தத்தை உடையவையாதலால், அவை, விஷயங்களை மிகவும் சதுரமாகவும் ஸூக்ஷ்மமாகவும் கோடிகாட்டிவிடும். தைத்திரீயத்தில் ஆநந்த குணத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதெல்லாம் மற்றை குணங்களைப்பற்றியும் சொல்லப்பட்டதாக நாம் அறிதல் வேண்டும்.

[ப - ரை] சதுரயா – ஸமர்த்தையான, தயா – அந்த ஆநந்த வல்லியால், ஏவம் – கீழ் சொல்லியிருக்கும் ப்ரகாரம், யௌவநாத்யா: – யௌவநம்

வ்யாக்யாதாஸ் தவாவதிமவதீர்ய குணா:
வாசாமகோசரமஹிமாந ஏவ || ..

ஸம்வர்த்தவதீம் அவிதும் நிரபிஜ்ஞஜ்ஞாம்
சித்ராம் ச கர்மணீ யதாகர்மமேவ நியச்சந் |

முதலிய, தவ ஸர்வே குணா: - உன்னுடைய குணங்களெல்லாம், ஸஹ விபூதிபி: ஸஹ - ஸகல விபூதிகளுடனும், அவதிம் அவதீர்ய - அளவை மீறிக்கொண்டு, வாசாமகோசரமஹிமாந ஏவ - வாக்குக்கு எட்டாத அளவு பெரியதான மஹிமையை உடையவையாக, வ்யாக்யாதா: - விவரிக்கப்பட்டவை ஆகின்றன.

ஸர்வே குணா:—ஜ்ஞாநம் முதலிய பரத்வ ஸூசகங்களான குணங்களும், ஸௌந்தர்யம் வாத்ஸல்யம் முதலிய ஆச்ரயணோபயுக்தங்களான குணங்களும், இவையெல்லாம் இவ்விடத்தில் குறிக்கப்படுகின்றன.

ஸர்வவிபூதிபி:— பகவானுடைய விபூதிகளும், அவனுடைய குணங்கள் போல அளவற்றவை. நித்ய விபூதியிலுள்ளவை, லீலா விபூதியிலுள்ளவை, சேதநாசேதந வர்க்கங்கள், இவையெல்லாம் இங்கு விவக்ஷிதம்.

யௌவநாத்யா:—இவ்விடத்தில் யௌவநத்தை ப்ரதாநமாகக் கூறினது, மாநுஷாநந்த நிரூபண ப்ரகரணத்தில் "யுவா ஸ்யாத்" என்று ச்ருதி யௌவநத்தை ப்ரஸ்தாவித்திருப்பதைக் காரணமாக உடையது. இம்மாதிரியே "பூமிஸ் ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத்" என்று பூமியைப் பற்றி ப்ரஸ்தாவித்திருப்பது விபூதிகளை ஸ்மரிப்பிக்கின்றது என்றும் சொல்லக்கூடும்.

வாசாம்— 'வாக்குக்கு எட்டாமலிருக்கும் மஹிமையை உடையவை' என்று சொல்வது, மநஸ்ஸுக்கும் எட்டாமல் இருக்கின்றனவென்பதை உபலக்ஷிக்கின்றது.

53. லோகத்தில் 'பகவத் ஸங்கல்பம்' என்று வ்யவஹரிக்கப்படும் ஸங்கல்பமானது, பகவானுடைய ஜ்ஞாநத்தின் விசேஷமே. இதை 'இச்சை' என்றும் 'ஈக்ஷணம்' என்றும் வேதாந்திகள் வ்யவஹரிப்பார்கள். "ததைக்ஷத பஹு ஸ்யாம்" [அந்த ப்ரஹ்மம் ஸங்கல்பித்தது - 'பஹுவாக ஆகக் கடவேன்'] என்னும் வாக்யத்தில் 'ஐக்ஷத' என்னும் சப்தம் 'ஸங்கல்பித்தது' என்னும் அர்த்தத்திலேயே ப்ரயோகிக்கப் பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட ஸங்கல்பத்தின் அளவற்ற பெருமை



ஸங்கல்பாத் க்ருமி த்ருஹிண ப்ரபேத பேதாம்
ப்ராஜீஜநஸ் ஸக்ருதீக்ஷணமாத்ரேண || ௫௩

யைப்பற்றி இந்த ச்லோகம் பேசுகின்றது. இந்த லோகத்திலுள்ள ஜீவராசிகள் எண்ணிக்கையற்றவை; அந்த ஜீவராசிகளால் செய்யப்பட்டுள்ள கர்மங்களும் அதி மாத்ரம் விசித்ரங்கள். அந்தந்தக் கர்மங்களுக்குத் தக்கபடி அவரவர்களுக்கு கரண களேபராதிகளைக் கொடுத்து, இந்த ப்ரபஞ்சம் முழுவதையும் ஸ்ருஷ்டிப்பதாகிற வ்யாபாரத்தைப் பகவான் எவ்வித பக்ஷபாதமும் தவறுதலுமின்றிக்கே ஒரு ஸங்கல்பத்தால் மாத்ரம் ஒரு க்ஷணத்தில் செய்கிறானென்றால், அவனுடைய ஸங்கல்பம் எப்படிப்பட்ட பெருமையை உடையது என்பதை ஸ்வல்பம் அறியலாம். ஸ்ருஷ்டிக்கு முன் ப்ரளய காலத்தில், ஜீவராசிகளெல்லாம் ஸூக்ஷ்ம தசையென்று சொல்லப்படும் ஒரு அவஸ்தா விசேஷத்தை அடைந்து எவ்வித ஜ்ஞாநமுமின்றிக்கே அசேதந ப்ராயர்களாகக் கிடக்கின்றார்களென்றும், அப்படிப்பட்ட துர்த்தசையை அடைந்திருக்கும் ஜீவன்கள் மீது பரம க்ருபையுடன் பகவான், கேவலம் தனது ஸங்கல்ப மாத்ரத்தாலே அவர்களுக்கு ஸ்தூல தசையைக் கொடுத்து விபாகார்ஹர்களாகவும் அவரவர்களுடைய கர்மங்களுக்குத் தக்க ஜ்ஞாந விகாஸத்தை உடையவர்களாகவும் செய்து ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறானென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இவ்வித வ்யாபாரத்தை லீலை போல செய்யும் அந்த ஸங்கல்பத்தின் மஹிமையை யாரால் பரிச்சேதித்துப் பேசக் கூடும்?

[ப - ரை] ஸம்வர்த்தவதீம் - ப்ரளய தசையை அடைந்ததாகவும், நிரபிஜ்ஞாம் - அநுபவ ரூபமான ஜ்ஞாநமற்றதாகவும், அஜ்ஞாம் - ப்ரத்யபிஜ்ஞா ரூபமான ஜ்ஞாநமற்றதாகவுமிருக்கும், அவிதும் - ஜந்துஜாதமெல்லாவற்றையும், கர்மணி சித்ரே ச - அந்தந்த ஜந்துக்களால் செய்யப்பட்டுள்ள கர்மங்கள் அதிமாத்ரம் விசித்ரங்களாக இருக்கையிலும், ஸக்ருதீக்ஷணமாத்ரேண - ஒரு தடவை ஸங்கல்பிப்பதாகிற ஈக்ஷையால், யதாகர்மம் - அந்தந்தக் கர்மங்களுக்குத் தக்கபடி, நியச்சந் - நியமநம் செய்துகொண்டு க்ருமி த்ருஹிண ப்ரபேத பேதாம் - புழு முதலாக சதுர்முக பர்யந்தமான பேதங்களை உடைத்தாயிருக்கும், ஏநாம் - இந்த ப்ரபஞ்சத்தை, அபேதம் - எவ்வித பக்ஷபாதமுமின்றிக்கே, ஸங்கல்பாத் - ஸங்கல்பித்த க்ஷணத்திலேயே, ப்ராஜீஜந: - ஸ்ருஷ்டித்தாய். அஹோ - ஆச்சர்யம்.

இந்த ஜகத் வ்யாபாரத்தில் பகவானிடம் ஏதாவது ஸ்வல்பம் வைஷம்யமாவது நைர்க்ருண்யமாவது ஸம்பவிப்பதற்கு ப்ரஸக்தி உண்டோவென்று சங்கித்துக் கொண்டு அவ்விதம் ஒருவித தோஷத்திற்கும் அவனிடத்தில் ப்ரஸக்தியே இல்லையென்று "வைஷம்ய நைர்க்ருண்யே ந, ஸாபேக்ஷத்வாத்" என்னும் ஸூத்ரத்தால்

அஸ்தம்யதுத்யதுபசயதபசயதி சைவம்
ஶஶ்வத் ஶிதிலம் ஜங்கமம் ஸ்திரஞ்ச |
விஶ்வம் விசித்ரமவிலக்ஷணவீக்ஷணேந
விக்ஷோபயஸ்யநவதிர் பத ஶக்திரைஶீ || ௫௪

ஸ்வேவப்ரகாரபரிணாமக்ருதவ்யவஸ்தம்
விஶ்வம் விபர்யஸிதுமுத்பவயிதும் ச ஶக்த: |

---

ஸ்ரீவ்யாஸர் நிர்ணயித்திருக்கிறார். ஜகத்தில் சிலர் ஸுகிகளாகவும் மற்றும் சிலர் துக்கிகளாகவும் இருப்பதைப் பார்த்தால் அம்மாதிரி ஒரு சங்கைக்கு இடம் உண்டாகலாம். ஆனால் அப்படிப்பட்ட வ்யத்யாஸங்களெல்லாம் அந்தந்த ஜீவன்களுடைய ஜந்மாந்த்ர கர்மங்களைச் சார்ந்து நிற்கிறபடியால் அவன்மீது எவ்வித தோஷசங்கை செய்வதற்கும் இடமில்லை என்பது ஸித்தாந்தம். ஸர்வஜ்ஞனாகவும் ஸர்வசக்தனாகவும் கருணாநிதியாகவுமிருக்கும் பகவானுடைய வ்யாபாரத்தில் என்ன தோஷம் ப்ரஸங்கிக்கக்கூடும்!

54. ஆரம்பம், ஸங்கல்பம், இவைபோல பகவானுடைய சக்தியும் அளவற்றது என்று சொல்லுகிறார்.

[ப-ரை] அஸ்தம்யத – நாசத்தை அடைந்துகொண்டும், உத்யத – உத்பத்தியை அடைந்துகொண்டும், உபசயதி – வ்ருத்தியை அடைந்துகொண்டும், அபசயதி – க்ஷயித்துக்கொண்டும், ஏவம் – இம்மாதிரியே, ஶஶ்வத் – ப்ரபுவாகவும், ஶிதிலம் – ஒருவித ஸம்பந்தமுமற்றதாகவும், ஜங்கமம் – அசையும் பொருளாகவும், ஸ்திரம் – அசையாப்பொருளாகவும், விசித்ரம் – [இம்மாதிரி] பலவகைப்பட்ட, விஶ்வம் – ஸகல வஸ்துக்களையும், அவிலக்ஷணவீக்ஷணேந – ஏகரூபமான ஸங்கல்பத்தாலே, விக்ஷோபயஸி – கலக்குகிறாய் [ஸ்ருஷ்டிக்கு அநுகுணமான மாறுதலை அடையும்படி செய்கிறாய்]. பத – ஆச்சர்யம். ஐஶீ ஶக்தி: – ஈச்வரத்வமடியாக இருக்கும் [உன்னுடைய சக்தியானது], அநவதி: – எல்லையற்றதே.

அஸ்தம்யத—இவ்விடத்தில் 'யத' என்பதற்கு 'அடைவது' என்பது பொருள். ஸ்திரம் – ஜங்கமம் ந பவதீதி (சலிக்கும் தன்மை உடையதல்ல).

55. இனி, அவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தைப் பற்றிப் பேசுகிறார். 'எதை நினைத்தாலும் அதைச் செய்யக்கூடிய ஸ்வாதந்த்ர்யமுள்ளவன் அவன். அவனை 'ஏன் நீ இதை இவ்விதம் செய்தாய்'? என்று கேட்பதற்கு ஒருவருமில்லை. அப்படிப்



க்ஷாந்த்வா ஸ்வபாவநியமம் கிமுதீக்ஷஸே த்வம்
ஸ்வாதந்த்ர்யமைஶ்வரமபர்யநுயோஜ்யமாஹு: || ௫௫

---

பட்ட ஸ்வாதந்த்ர்யம் அவனுடையது என்று சொல்லுகிறார். 'அவன் ஏன் கர்மாநுகுணமாகவே ஜந்துக்களுக்குக் காண களேபரங்களையும் சுக துக்கங்களையும் கொடுக்கின்றான்? ஏன் அசேதனங்களுக்கு ஸ்வரூபாந்யதாபாவமாகிற பரிணாமமென்றும், சேதனர்களுக்கு ஸ்வபாவாந்யதாபாவம் மாத்ரமேயென்றும் இம்மாதிரியான நியமங்களுக்குக்கட்டுப்பட்டும் நடக்கின்றான்? இச்சிக்கும் ப்ரகாரம் அவன் அவைகளைச் செய்யலாகாதோ?' என்று ஆக்ஷேபிக்கலாம். அவ்விதம் அவன் ஒரு நியமத்தை ஸங்கல்பித்துக் கொண்டு அந்த நியமத்தை அவன் அநுவர்த்தித்துவருவதே அவனுடைய ஸ்வாதந்த்ர்ய மஹிமையைக் காட்டுகின்றதன்றோ? அப்படி அவன் அநுவர்த்திப்பது மற்றொருவனுடைய நிர்பந்தமடியாக சேர்ந்தால், அப்பொழுது ஸ்வாதந்த்ர்யம் பங்கமடைகின்றதென்று சொல்லக்கூடும்; அது தனது இச்சையாலேயே சேரும்பொழுது, அதை ஸ்வாதந்த்ர்ய பங்கத்திற்குக் காரணமென்று எவ்விதம் சொல்லக்கூடும்? இவ்விதமான நியமம் அவனுடைய இச்சையாலேயே ஏற்படுகின்றது என்பதும் இம்மாதிரியான நியமமொன்றுக்கும் கட்டுப்படாமலே அவன் வ்யாபாரங்களைச் செய்யக்கூடியவன் என்பதும் அவனுடைய வ்யாபாரத்தில் இன்னும் ஒரு அம்சத்தை ஆலோசித்துப்பார்த்தால் விளங்கும். ஜகத் வ்யாபாரத்தில் வ்யக்திகள் தோறும் செய்யப்படும் வ்யாபாரம் ஒரு அம்சம். அதுபோல், ப்ரளயாவஸ்தையில் இருக்கும் சேதநாசேதந ஸமூஹத்தை ஸ்ருஷ்டி அவஸ்தைக்குக் கொண்டுவருவதும், ஸ்ருஷ்டாவஸ்தையில் இருப்பதை ப்ரளயாவஸ்தைக்கு நயிப்பிப்பதும் அந்த வ்யாபாரத்தில் மற்றொரு அம்சமே. இது எல்லா சேதநர்களுக்கும் ஒரே காலத்தில் செய்யப்படும் வ்யாபாரமாகையால், இது அவர்களுடைய கர்மமடியாகச் செய்யப்படுகின்றதென்று சொல்வது ஸாத்யமில்லை; ஆனால், கேவலம் பகவானுடைய நைஸர்க்கிகமான க்ருபையால் அவனுடைய இச்சையால் மாத்ரம் காரணமாகச் செய்யப்படும் வ்யாபாரம். அவன் ஸங்கல்பிக்கும் காலமே ஸ்ருஷ்டி காலமாகவும், அவன் ஸங்கல்பிப்பதே ப்ரளய காலமாகவும் ஆகின்றது. சேதநர்களுடைய கர்மத்தின் அநுஸரணம் என்பது இந்த ஸங்கல்பத்தில் இல்லையாதலால், இது அவனுடைய நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தை விளக்குவதற்குப் போதுமான நிதர்சனம்.

[ப-ரை] ஸ்வேவப்ரகாரபரிணாமக்ருதவ்யவஸ்தம் – ஸ்வரூபத்தில் பரிணாமமென்றும் ஸ்வபாவத்தில் பரிணாமமென்றும் இம்மாதிரியான ஒரு வ்யவஸ்தையை உடைய, விஶ்வம் – ஜகத்தை, விபர்யஸிதும் – ப்ரளயத்தை அடையும்படி செய்வதற்கும், உத்பவயிதும் ச – ப்ரளயாவஸ்தையில் இருப்பதை ஸ்ருஷ்டி தசைக்குக் கொண்டுவருவதற்கும், ஸ்வபாவநியமம் – கர்மாநுகுணமாகவே வ்யாபாரங்களைச் செய்யவேண்டும் என்னும் நியமத்தை, க்ஷாந்த்வா – அவலம்பித்துக்கொண்டு, த்வம் – நீ, கிமுதீக்ஷஸே – கொஞ்சமாவது ஆலோசிக்கிறாயோ? ஐஶ்வரம் ஸ்வாதந்த்ர்யம் – ஈச்வ

ஸம்வர்த்தஸம்வர்த்தகஸூர்யஸஹஸ்ரஸ்ய
உஸ்ரம் தமிஸ்ரயதஜஸ்ரவிஹாரி ஹாரி।

---

ரனு: இருக்கும் உன்னுடைய ஸ்வாதந்த்ர்யத்தை, அபர்யநுயோஜ்யம் - விசாரணைக்கு அநர்ஹமாகவே, ஆஹு: - [வேதாந்தம் படித்தவர்கள்] சொல்லுகிறார்கள்.

ஸ்வரூபஸ்வபாவபரிணாமக்ருதவ்யவஸ்தம் — 'ஸ்வரூப' என்பதற்கு 'ஸ்வரூபம்' என்பதும், 'ஸ்வபாவ' என்பதற்கு 'ஸ்வபாவம்' என்பதும் பொருள். ஜீவன் நித்யனாகையால், அவனுடைய ஸ்வரூபத்திற்கு ஒருபொழுதும் மாறுதல் என்பது இல்லை; அவனுடைய தர்மபூத ஜ்ஞானம் மாத்ரம் கர்மத்துக்குத் தக்கபடி மாறுதலை அடைகின்றது. இதை 'ஸ்வபாவத்தில் மாறுதல்' என்று சொல்வார்கள். அசேதந வஸ்துவுக்கோவென்றால், மாறுதல் எல்லாம் அதன் ஸ்வரூபத்திலேயே ஏற்படுகின்றது. இவ்விதம் 'சேதந வர்க்கத்திற்கு ஸ்வபாவத்தில் மாத்ரம் மாறுதலைச் செய்யக்கூடும். அசேதந வர்க்கத்திற்கு ஸ்வரூபத்திலேயே மாறுதலை அமையும்' என்று ஒரு வ்யவஸ்தை உண்டு. அந்த வ்யவஸ்தைக்குக் கட்டுப்பட்டே பகவான் ஜகத் வ்யாபாரத்தை நிர்வஹித்து வருவதால், அவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தை நிரங்குசமென்று எவ்விதம் சொல்லலாமென்று ஒரு சங்கை ஏற்படலாம். இந்த வ்யவஸ்தையை அவனே செய்துகொண்டிருக்கிறபடியால், அம்மாதிரியான சங்கைக்கு அவகாசமில்லை என்பது ஸமாதாநம்.

56. 'தேஜஸ்' என்று சொல்லப்படும் குணத்தைப்பற்றி பேசுகின்றது இந்த ச்லோகம். இதர வஸ்துக்களை அபிபவிக்கும் ஸாமர்த்ய விசேஷத்தைத் 'தேஜஸ்' என்று சொல்வார்கள். இந்தக் குணம் மற்றை குணங்கள் போல அளவற்றதாக இருப்பது மாத்ரமின்றிக்கே, ஒருவித வைலக்ஷண்யத்தையும் உடைத்தாயிருக்கின்றது என்பது விவரிக்கப்படுகின்றது. லோகத்தில் பதார்த்தங்கள் பெரும்பாலும் ஆநுகூல்யத்தையோ ப்ராதிகூல்யத்தையோ ஸ்வபாவமாக உடையவைகளாகக் காணப்படுகின்றன. ஸூர்யனுடைய தேஜஸ் எல்லாருடைய கண்களுக்கும் கூச்சத்தை உண்டாக்கக்கூடியதாக இருக்கின்றதென்பதும், சந்த்ரனுடைய சந்த்ரிகை எல்லாருக்கும் ஆஹ்லாதகரமாக இருக்கின்றதென்பதும் அநுபவஸித்தம். பகவானுடைய தேஜஸ்ஸோ இந்த விஷயத்தில் விலக்ஷணமாக இருக்கின்றது. அது பகவத் பக்தர்களெல்லாருக்கும் அநுகூலமாகவும் மற்றவர்களுக்கு ப்ரதிகூலமாகவும் இருக்கின்றது என்பதே வைலக்ஷண்யம்.

[ப - ரை] ஸம்வர்த்தஸம்வர்த்தகஸூர்ய — ப்ரளய காலத்தில் ப்ரஜ்வலித்த கடுமையை அடைந்திருக்கும் கிரணங்களை உடைய, ஸஹஸ்ரஸ்ய - ஸூர்யனுடைய, உஸ்ரம் - கிரணத்தை, தமிஸ்ரயத - அந்தகாரத்தைச் செய்யக்கூடியதாகவும், அஜஸ்ரவிஹாரி - எப்பொழுதும் ப்ரகாசித்



தொலைவில்லி மங்கலந் தென்திருப் பேரை
வைகுந்தந் தென்குளந்தை சிரீவர மங்கையே
யுலைவில் திருப் புளிங்குடி வரகுண மங்கை
யுயர்திருக் கோளிவற்றின் முறைமுறையே யுள்ளார்
நலமுறுமா வரவிந்த லோசனன்னு
மகர நெடுங்குழைக் காதன் கள்ளர்பிரான்
பலமாயக் கூத்தன் றேவபிரான் காசின்
வேந்து விசயா சனனெனிக ரொன்றில்லா 82

திருவைத்த மாநிதி பென்றெவரும் போற்றுந்
திகழு மிந்தத் திருநாமம் தரித்ததேவர்
மருவுற்ற மணிக்குழைபாய் குருகூரண்டை
மன்னுமிந்தத் திருப்பதிகண் மகிழ்ந்து பாராய்
பெருகுற்ற குறுங்குடியிற் பிறந்த நம்பிப்
பெருமா னீண்ட பொன்மேனி யனுமந்த
வுருவுற்ற வும்பர் பிரானையனு சந்த
வுத்தமனை யெழுபதின்ம ருச்சித் துள்ளார். 83

இம்மாய னருகணைந்த வார்க்கு முன்ன
மிட்டரிய வையமவன் சாபந் தீர்த்தா
னம்மாய னனந்தபுர பற்பநாப னலங்கு
மணிச்சுடிகை யோராயிரமார் சேட
னம்மாமென் போகமெனுஞ் சேக்கை மீதே
யங்கயிலை யிசையமர் கார்முகிலோன் றென்னச்
செம்மாந்தே யறிதுயிலி லுலகங் காக்குஞ்
சேக்கையிதிற் றிருவுளமேற் சேர்தி யென்றாள். 84

வேறு

அன்றணைந்து ணாதயன் மஞ்சம்மனு குற்றான்
முன்னுடலை முழுதும்முள மோராற வுருற்றான்
கொன்னுருமூ முலகந்தனை யென்றேயறை குவராற்
பின்னுளியும் பிறர்வீறையும் பேசற்கடி யிட்டாள் 85

திருவண்பரி சாரத்திரு வாழ்மார்பனித் தேவ
னரியன்னவன் றென்காலக ரையப்பன்னறி குறியாற்
திருமூழிக்க ளத்தார்குடக் கூத்தனிந்தத் திருமான்
மருவுந்திருப் புலியூரதி பதியாமந்த மாயன். 86

திருச்செங்குன்றூ ருறைவானிவன் சிற்றாயனென் றுரைப்பா
ரிருக்குந்திரு நாவாயவ னெழினாரண நம்பி
யுரைக்குந்திரு வல்லவாழி லுறையுங்கோ னவனிவனே
பெருக்குந்திரு வண்வண்டூரின் கேசவனிப் பெருமான். 87

காணாயவன் வாட்டாற்றினுட் கண்வளரெம் பெருமான்
மாணாரிவன் வித்துவக்கோட் டம்மானை மலியு
மேணார்திருக் கடித்தானத்தி னிலகுமப்பவ னிவனே
பேணாய்திரு வாரன்விளை பெருகும் பரவனே. 88

வெவ்வேறர விந்தத்திரு மிடையப்பிறங் கிவர்கள்
செவ்வாய்மட மயிலேபதின் மூவர்விறல் செறியு
மெவ்வாயிலுந் தெங்கேசெறி கேரளத்திலி ருப்போ
ரிவ்வாரணர்க் குள்ளேநினக் கியையாயவ னெவனோ 89

என்றேயவ ளிசைத்தாளிவ ளின்றோழிடம் பெயர்ந்தா
ளொன்றேகட னசைத்தோடுமந் தாகினியு முலையா
நன்றேயருள் படியிற்பல நாடுங்கடந் தயலே
சென்றேகிடு செயலேயெனப் புயலேய்செறி குழலாள். 90

சகியேயிவன் கலுழ்த்தரங் கிணியின்கரை சாரும்
முகிலாருயர் மாடத்திரு வைந்தைபுர முதல்வன்
புகலார்தெய்வ நாதனெனும் புனிதத்திரு நாமன்
மகவானிவன் பதசேவையை யிகவாதொரு நாளும் 91

சேடீயிவன் றிருக்கோவலூர் சிவனுந்தேக லீசன்
பீடாருன்றன் பெருந்தந்தையர் மூவர்க்கிடை கழியில்
வாடாமல ரவளோடுத ரிசனம்முனம் வழங்கா
நாடாவுவ ரிசைபாடலு நன்றேன்றருள் புரிந்தான் 92

திரிவிக்கிர மத்தேபொரு திருத்தாள்புவி மணக்கும்
மருவிக்குல வுறுமற்றது மாகம்மலர்க் கரங்க
ளருகித்திசை யலங்குந்திக ழங்கந்திரு வுளமேன்
மருவித்தனி மகிழ்வாயஃதொன் றேமிகுந் துளதால் 93

இலவத்திதழ் மானேயிவன் கச்சிப்பதி யிடையே
நிலவத்திகி ரியினம்புயன் விழிசாதக நிதமுங்
குலவத்திரு முதமோடுபே ரின்பப்பெயல் கூரு
கலவித்திரும் பெருந்தேவியி னணுகும்வர தன்காண் 94



இன்றும்மிவன் கார்காலம தெழிலிக்குறு மெழிலா
லன்றந்திசை முகனூற்றிய வயமேதவேள் வியினே
துன்றுந்திகழ் ஹோமம்புரி குண்டந்தனி லெழுபோழ்
தோன்றுஞ்சவி யுடனன்றொளிர் கிற்கிற்பது முணராய் 95

உளமேவிவ னொருமார்பக மொன்றிங்கென வுவளும்
இளவாதெதி ரயனோக்கினள் கிளரும்புவி யொருவ
ருளமொன்றிடை யொன்றிற்பின ருயர்வாயதொன் றதுவே
கொளுகென்றெதி ருறுகிற்கினுங் குறுகாததை யன்றோ 96

மணிமேனியிவன் வெஃகாவுழி மன்னந்திரு மன்ன
னணியாருமுன் பெரியப்பன்மு னறையுந்திரு மொழியின்
வுணாகணை யுடனேயுடன் வந்தானது முதலிம்
மணிமேசொன்ன வண்ணஞ்செய்த பெருமாளென்று மொழிவார் 97

இத்தேவனின் மலரின்கர மினிதிற்பிடிப் புறினீ
யெத்தேமொழி சொலினுந்தடை யின்றிச்செயு மெனவு
மத்தேயெழில் வாயாளய லகன்றாள்பெருங் குறுகும்
புத்தேரிருந் திங்கட்கலை யுமையேயுளம் புகுமோ 98

பரமேசுர விண்ணகரன் பாடகமு முறைவோ
னருமாதிருத் தண்காவிளக் கொளிநீரகத் தானே
திருமாவேனுக் கையாளரி திகழ்காரகத் தேவன்
சொரிமாநிலாத் திங்கட்குண்டந் துலங்குந்துள வத்தோன் 99

கார்வானகத் துள்ளான்றிருக் கள்வனுமூ ரகத்தான்
பேராமலென் னெஞ்சினுளா னட்டபுயப் பெருமான்
சீராரிவ ராங்குள்ளவர் திகழ்கின்றவித் தேவ
ரூரார்மதி யுணிசேர்முக முடையாயுணர் கிற்பாய் 100

திருநின்றவூ ரிறைவன்னிவன் றிருப்புட்குழி யவனே
திருநீர்மலை யிவனப்பான் றிருவிடவெந் தையனும்
மருவிந்திருக் கடன்மல்லையிம் மணவாளனம் மாமன்
பெருகுங்கடி காசலத்திற் பிறங்குந்தக்கா னென்ப 101

கேளாயிவன் றிருவவ்வுளூர் கிளரத்திகழ் பெம்மான்
வாளாரரி வழியாயிவர் வளரம்புய மார்போ
டாளாகுவ ரெவரேனுமோ ரமலற்புணர் கெனலுங்
கேளாவிவன் வாளாவகல் கிற்கப்புகர் தருமால். 102

வேறு

சோதியின் மயமாய்த் துலங்கு வைகுந்தத்
தனைபெருந் தகளறுஞ் சேடன்
மேதகு முருவாம் வடமலைக் குவட்டின்
மிளிர்சுர தருவினிம் மேலோன்
பாதமே பரவு மேதினி யவரின்
பலபடும் புறத்தகப் பிணியின்
காதர மகன்று களிப்புறற் கன்றே
வவனியி லவதரித் திலகும் 103

பரிமளத் தலர்மேன் மங்கையின் மார்ப
மொழிவறப் படிந்துறும் பண்பான்
மருவுறுந் திருமி லாசனென் றொருபேர்
மருமலர்ப் படப்பையெப் பகலும்
பெருகுறப் பெருகுங் காவிரி யரங்கப்
பெருமணற் குன்றினிற் பிறபூங்
கருமுகி றனக்கு மிவற்குமோர் சிறிதும்
வேறுபா டின்றெனக் கருதாய் 104

அங்கயற் கண்ணி யருவியின் னாவ
மமர்ந்திருஞ் சாமிபுட் கரணிப்
பங்கயப் பரிமளத் திளம்பவனந் தவழ்தரச்
சுமன தக்தி ரன்சன்
பொங்குறும் புனித வேங்கடப் பொருப்பின்
றடத்திலிப் புங்கவற் கரசின்
செங்கையிற் பற்றி யுலாவரு மின்பந்
தினந்தின நுகர்கெனத் தெரித்தாள் 105

சூடியே கொடுத்த சுகமொழி யவளுஞ்
சொலற்கரும் வேங்கடத் துறைவான்
பிடுறு மாங்க ளஞ்சமே யெனினு
மவன்வயிற் பெருகிய விழைவிற்
றொடொழு திவனை யகன்றன ளினிய
சருக்கரை சுவை மிகுங் கழையை
யாடிய விரத மெனினுநீர் வேட்கை
யவராதே விழைகுவ ராமல் 106



மின்கருங் குடிலா ளகைமிளுய் நின்றன்
மிளிர்கடை விழிசிறி திவன்மே
லன்புடன் படிக வழகுறுஞ் சாளக்
கிராமமா வரைமிசை யலங்கு
நன்னிலக் குமிநா ராயண னிவனிந்
நானில விபணியி னனுகு
மன்பினர்க் கபவருக் கமாமழி யாப்பண்
டமின்ன ருளுட னருளும் 107

கருநிறத் திந்தி வரக்கண யிந்தக்
கார்வண விண்டுவின் புரியின்
மருவி மாமல ராளொடு மணமாலை
யுடலெலா னான்றுறத் துயில்கை
விரிகருஞ் சவியார் மணிவரை யொன்று
வெண்ணறு மருவிநாற் புறமும்
பெருகுறப் பிறங்கும் பண்பினைப் பொருவும்
பெட்பினிற் கடைகணித் தருள்வாய் 108

அனிச்சமென் மலரின் மிதிப்பினும் பனிக்கும்
மடியிணை யம்புயத் தணங்கின்
மனத்திரு மலருண் மனந்துறு மளியிம்
மாய வனைமிக மென்னும்
வனத்தினுட் சூதபு ராணிகள் முகமா
யறமெலாம் வண்டவ மிழைக்கும்
முனித்திரள் கேட்ப மொழிந்தரு ளந்தை
மோகமா யிவன்கரம் பிடிப்பாய் 109

ஆரணத் தந்தத் தாய்பவர்க் கொன்றா
வலங்குமிவ் வம்புய வழியோன்
வேரினைப் பலத்தின் வீட்டிருஞ் சாளி
யினெழிற் றடத்தினின் விரும்புஞ்
சீரினைத் தருகண் டம்மெனு கழ்கக
ரத்திடைத் திருச்சிலை களிக்குங்
காரெனக் கிளரும் வண்புரு டோத்தமன்
கருத்துக ந்துநீ காணாய் 110

தொண்டைவாய் மயிலே தோய்கவிப் பெருமான்
றொளெனத் தோழியாங் கிசைப்பக்

கண்டனை யளிக ணீலமென் றெண்ணி
யலமரக் கடிமலர்க் கரத்தாள்
விண்டன ளவனை யகன்றனள் காள
கண்டமென் பெடையகம் விழையுந்
தண்டலைத் தலைமாந் தளிரினைத் தணந்தோர்
தளிரினை ததைதலுந் தகுமோ 111

இளம்பிடி நடையா யிப்பரந் தாமன்
வதரியி னரனொடுங் கினையா
வளம்படு தவத்தின் வைகிமுற் குணமே
வளர்தர விரண்டையும் வாட்டி
யுளம்பதர் தனதி னென்றுற நோற்கு
முத்தமற் குண்மைநா டோறும்
விளம்புறும் வண்ணம் வீற்றிருந் திருநா
ராயணன் விருப்பினுக் குதியால் 112

காரகிற் புகையுண் டிருமணங் கமழுங்
கதுப்பினு யித்தடங் கண்ணன்
சிறுறு நெடிய சிங்கவேள் குன்றிற்
சுரநர ரொருவருஞ் செறியா
தாரவே யுள்ளி யடவிர ணியனை
யடர்த்தவெம் சீற்றமுந் தணிந்தே
போரி மானத் திலகுறு நாசிங்
கப்பிரான் பெட்பினுக் குகவே. 113

நினைந்தன வருளு மைந்தருச் சினையி
னீழலா ரம்பையர் கணமு
மனந்தளர் வெய்தக் குமுறமிங் கார
சிங்க மூர்த்தியு முமைதியா
தினந்தனுக் கிடுக்க ணிழைத்தவெம் பகையை
யிர்ந்தவா றுகிரொடும் பிருதி
யெனுந்திருப் பதியி னிலகிடு மினிய
வெம்பிரா னிவன்றனை மலைப்பாய் 114

வெங்கதிர் மரபின் முனைக்கினுந் தன்னொன்
விறலென விளங்குமிப் பெருமான்



பொங்குவெண் டயரத னெனுங்கட லிற்பூத்
துலக ருளனை யெனுமா
மங்கள சனகி யெனுமணி றுறந்து
மங்கையர்த் திரளையோ ரனுவா
யங்கலு மூளங்கொண் டயோத்தியி னெலோ
ளளித்தகா குத்தனென் றறிவாய் 115

இத்திரு மலர்க்க ணெம்பிரா னட்டம
கிடிக ளின்பமும் பருகி
யுத்தர மதுரை மாமகளிப் படுத்தோ
னுளக துந்துபி யுனைந்து
பெற்றிடுங் கண்ணன் புதுமணப் பெண்ணி
னின்பமே பெட்டிடும் பெருமான்
சித்திர மனையா யிவன்புய முயங்குஞ்
செழுநற வருந்துதல் சிறப்பாம் 116

பூதனை சகடு மருதிவை சிசுவாய்ப்
பொலிகையிற் சிதைதரப் பொடித்தான்
காதலி னிவன்றன் வனப்பெனுங் கடலிற்
படிந்ததைக் கடக்கலா தந்நாள்
மாதரா ளொருகோ வலன்மனைக் கிழத்தி
மாழ்கியே மாய்தர வவளின்
றீதறு முயிரைத் திருடிய கள்வன்
வெண்ணெயின் றிருட னிவனே 117

வேறு

துவரைவா யெண்ணிரண் டாயிரந் தோகையர்த்
துவரித ழின்னமிழ் தொருங்குணுந் துப்பினு
னவிரிழை யன்னமே நீயுமிவ் வாயனின்
றுவரறு மின்பமே யொண்ணுமே யுண்பையால் 118

காண்டியித் தேவதே வன்றனைக் கண்முகப்
பிண்டபூ மாதினிந் திரையினின் னகைநிலா
[illegible]ண்டெழும் வெண்டுளிப் படலமோ டம்புதத்
தோண்டிகழ் தன்றிரு மேனியெங் கணுமுறல் 119

நிலவா னெங்கணு மிமிர்நிலாக் கற்றையு
மேலுறும் முடிசெமு கங்களும் மிலகுறும்

15896

[illegible] றெவர்களுங் கூறிடப்
பாலிரும பரவையிற் பள்ளிகொள் பரமனே 120

இத்திரு மாயன்வை குந்தமா வெழினகர்
நித்தர்முத் தர்தொழ நிலவுசெங் கேமியா
னைத்தலூ காதிக ளுதலிலா யிலேகுமிழ்
தத்துவெண் ணுரைமுதற் ரும்பல வெழுவபோல் 121

இம்முதற் பொருளினின் றெழுமரன் கேசனுஞ்
செம்மையப் பொருளிலோர் நித்திலஞ் சிவனுமா
லம்மலர்க் காமுன இவனதை யாயுதக்
கைம்மலர்த் திருவிரல் கருத்தினிற் பற்றுக. 122

என்றவ ளியம்பலுங் குடிலகே சத்திவ
ளொன்றுசெங் குமுதமா இகளொரீஇ யோதிம
மன்றலா ரம்புய மன்னுமா றரியலாக்
துன்றுரு தொருவினு மின்னிறு ளரங்கமுன் 123

கண்டதைச் சிலதியுங் களிமிகக் கழறுமா
லொண்டொடீ யித்திக ழுவணகே தனனயன்
கொண்டமா தவசினுக் களவுறுங் கூர்பயன்
மண்டருந் தனமினன் மரபினர்க் கொன்றமே 124

மலயவெற் பின்றமா மங்கையின் மடியெனக்
குலவரங் கத்திடைக் கிளிர்மதிப் பொய்கையின்
தலைபிர ணவவிமா னத்திருட் டதைமணி
குலபணிப் போகமாங் குளிர்நறுஞ் சேக்கைமேல் 125

யோகநித் திரைசெயா வுலகினைப் புரந்திடும்
போகவை குந்தமா புரியினின் றுறியிம்
மாகடற் புவிமிசை மன்னினன் மலர்மக
ளாகனர்ச் சைக்குனே யாதியிவ் வனந்தனே 126

தாரகைக் குழுவினந் தன்காள் போலுமாப்
பாரகப் பருப்பதங் களில்வட மேருபோ
லிருறும் மணிகளுட் கவுத்துப நிகரெனக்
கூர்தரு மிவன்குணங் குறிப்பதற் கார்கொலோ 127

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்ரிகை.

வருஷச் சந்தா: ரூ. 3
தனிப் பிரதி: அணா 5

## குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றை ம் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, ராமஸ்வாமிதெரு, மாம்பலம், சென்னை" ன்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டும்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதார ளுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத் திலும் இரண்டாவது மூன்றாவது தேதிகளுக்குள்ளாகவே ஸஞ்சிகைகளெல் லாம் தபாலில் சேர்ப்பிவிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 5 அல்லது 6 தேதி ளுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேரா விட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதை உடனே மானேஜருக்குத் தெரி விக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாமலிருக்கும் சந்தா தாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத் திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம்; தியாகராயநகர் போஸ்ட்,
மதிராஸ்.

**Registered No. M. 916.**

# Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Iudian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company published a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is about to be issued.

Shares in the Company of Rs. 50 each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

| | | |
|---|---|---|
| *Sriman* | V. V. Sreenivasa Iyengar, B.A., B.L. | *President* |
| " | K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate. | *Genl Secy.* |
| " | R. Kesava Iyengar., M.A., B.L. | *Exec: Secy.* |
| " | T.D. Sreenivasachari, M.A , B.L. | " |
| " | S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate. | *Treasurer.* |
| " | N.T. Shamanna, Solicitor. | *Director* |
| " | M. Sudarsana Iyengar, Merchant. | " |
| " | C.V. Venktaramana Iyengar, B.A , B.L. Coimbatore. | " |
| " | T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore. | " |

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamanta Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.